" அடிமுத லகுந்த லீருயின வை ஐய மறுத்து நோக்கி,
வடிநெடுங் கண்ணிஞர்தம் வாட்கையும் மக்கள் பேரும்.
கடிமலர் மீது வாழும் காரணம் படப்பை யெல்லாம்
படிமிசை யோர்க்குச் சொன்ஞேம் பனிப்பில்லார்க் கொள்வுரென்றே "
என்பது.

யாதொரு ஸ்ரீகளுக்குப் பாதத்தினின்று சிரசுமட்டும் லட்சணம் சொல்லு வோம் என்றவாறு.

திருத்தகு பாதம் செம்மையுடையதாயஞ்சாரியவசி
இருத்தகு விரலு தம்மில் பொருந்த, மூனறுயர்ந்து மணமோ
பொருத்தகங் கடையவாகி புறவடி தசைக்கு மாகில்
லருத்தமும் போக்குந்தானும் மாலவனோர் நிற்கு மென்றே.

End :

ஸ்ரீகளுக்கு (9) வயதிற்கு மேல் புருஷருக்கு (16) வயதிற்கு மேல் அள (ள) ந்து பார்ப்பதென்றறியவும். அவரவர் கையினாலே மூக்கு நாலங்குல மானால் செல்வம், அழகுண்டு. இதில் நீண்டால் கனயோகம். குறைந்தால் அரப்போகம். தனமும், ஸ்ரீமுகமும் கையும் வாயும் 27-க் குறியும் வழியாயிருக்கும். சுழியும், மறுவும், வடுவும் தான் காணுமிடத்தி லும், காணாதவிடத்திலும் இருக்குறதும் பலிக்கும். புருஷ லட்சணம் முற்றும்.

(கு-பு)—

இந்நூல், ஸ்ரீலட்சணம் புருஷ லட்சணம் தாய் அமைந்துள்ளது. பிழைகள் மலிந்துள.

R. No. 1801.

சீவ வாசகம்.

JĪVA VĀCAKAM.

Foll. 74—90. Extent, 180 granthas.

Complete.

This is a work on philosophy explaining the difficult problems of attaining final salvation to the Jīvātmā. This is same as the manuscripts described under R. No. 1799.

Beginning :

சோதிஆதி ஆகாயசுத்தனித்த ரூபமாய்
போதியாத போதகனனை வோதுகின்ற பூரணம்
வீதியாகவே மவரது வீணதண்டி லூடுபோய்
ஆதினாதற் பாதமென்ற அறிந்துணர்ந்து கொள்ளுமே. (க)
அந்த வாசனுயரம் சங்க வாசனுயரம்
ஆறிரண்டு மூன்று கொடி கொணவாச னுயரம்
இந்த வாச னேக போகமான தெந்த
வாசலில் யெம்பிரானிருக்கும் வாசல் எந்த வாசல் காணுமோ.
வேஷமுந்தி வந்துதோ விசார முந்தி வந்துதோ
மாடமும் மடப்புறம் மண்டபத்தில் மந்திரம்
கூட நின்றுலவி யெருதி கொண்டன நிதிறைய்.
காடுமேடு மென்பர்கள் மிகறுத்தழிந்து மாள்வரே.
அந்தி ரத்தி னென்றுமா யகண்டவீதி ரெண்டுமாய்
செந்தணலில் மூன்றுமாய் சிறந்த அப்பு நாலுமாய்
உந்தி ஈரைந்துமாய் ஓடுகின்ற நாயகம்
இந்த வாறறிந்த பேர்கள் ஈசனுகன் ஈசனே.

(உள)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு R. 1799-ஆம் எண்ணில் வந்துள்ள நூ களிலொன்றாய், சித்தாந்த வேதாந்தக் கருத்துக்களைச் சீவனுக்கு எடுத்துரைக்கின்ற முறையில் அமைந்துளது. எழுத்துப் பிழைகளுள. நீளமான எழுத்தாக அமைந்துளது. முற்றுப்புளது.

R. No. 1802.

நெஞ்சறி விளக்கம்.

NEÑCAṚI VIḶAKKAM.

Foll. No. 91—107. Extent, 160 granthas.

Complete.

This is a philosophical work by one Gaṇapatī Dāsar. This is same as the manuscript described under D. 189 & R. Nos. 72 and 1250.

Beginning :

வஞ்சக மனத்தி னுளை மாற்றிய பெரியோர் தாளில்
கஞ்சமா மலரிட் டேற்றுங் கணபதி தாசன் சொன்ன
நெஞ்செறி விளக்க மான நீதினூல் நூறும் பாட
குஞ்சர முகத்தின் மூல குருபரன் காப்ப தாமே.

End :

நித்தியப் பேறு தொன நெஞ்சறி விளக்க நூறு
பத்தியாய் மனத்தி லெண்ணிப் படித்ததன் பலன்கண் டோர்கள்
முத்திமே ஞான மீரி மூவர்க்கு முதல்வ னாகி
சத்தியு மசாவமுந் தோன்றும் தற்பபர மனத்தில் சார்வார். (ள)

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல் முதலிலும் இறுதியிலும் உள்ள செய்யுட்களால் கணபதி தாசர் என்பவர் இயற்றியதென்று தெரிகிறது. இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 189-ஆம் எண்ணிலும், மூவருடக காட்லாக்கு 72, 250 எண்களி லும வந்துள்ள பிரதிகள் போன்றதே. இது முற்றுமுளது.

R. No. 1803—1821 (one codex).

Palm leaf. 13¼ × 2¼ inches. Foll. 143. Lines, 15 on a page. Tamil, fair Old. Extent, 4,403 granthas.

Presented in 1948–49, by Mṛdaṅgam Subbaiyar, Chattapuram village, Kalpatti (P.O.), Palghat.

R. No. 1803.

நயன விதி.

NAYANAVIDHI.

Foll. 1—16. Extent, 900 granthas.

Incomplete.

This is an incomplete work. About 87 verses.

This describes the various diseases of the eye, the cause for those diseases and the remedy.

End :

இளநீர்ப் பாலும் நன்னாரி யிலுமிச்சம் மதுரம் கெந்தம்
வளம்பெற நெய்தல் நல்லெண்ணை மருவும் நாபிபதமாய்க்
[காய்ச்சி
மலையுங் கண்ணில் வாத்துவிடில் வந்த சுக்கிரனோடிவிடும்
தெளியுங் கண்ணோய் தொண்ணூற்றாரும் செய்யயிளநீர்
[எண்ணெயிதோ.

(கு-பு)—

இந்நூல், கண்ணிலுண்டாகும் நோய்கட்குக் காரணங்களையும் அவைகளை ஆய்ந்து தீர்க்கும் வழிமுறைகளையும், மருந்துகளையும் கூறிச் செல்கிறது. 87 பாட்டுக்களை உடைத்தாகின்றது. முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. இறுதியில் செய்யுள் முறையிலேயே நோய் நீங்கும் வகைகளைக் கண்ணோய் 96-க்கும் சொல்லப்படுகிறது. எழுத்துக்கள் நன்கு அமையப் பெறவில்லை. இந்நூல் போலவே நயன வைத்திய விதி, கண் வைத்தியம் என்ற பெயர்களில் வேறு நூல்கள் இங்கு உள்ளன.

R. No. 1804.

குருநாடி.

GURUNĀḌI.

Foll. 17—24. Extent, 225 granthas.

Incomplete.

This is same as that was described under No. D. 1920.

(கு-பு) :—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1920-ஆம் எண்ணின் பிரதியில் வந்துள்ளதேயாகும். இதில் 66 செய்யுட்களே காணப்படுகின்றன. ஷை பிரதியில் 107 செய்யுட்கள் காணப்படுகின்றன.

R. No. 1805.

அகத்தியர் தருக்கம்.

AKATTIYAR TARUKKAM.

Foll. 25—27. Extent 85 granthas.

Complete.

This is a medicinal work in verses written by Agattiyar in the form of question and answers. This is very interesting work describing the various ways acquiring knowledge on medicine and imparting it to students.

Beginning :

சீர்பொருந்தும் சாத்திரமும் மருந்துவைப்பு
தேவியங்க மானபொருள் பலதுகு சொல்லி
யேர் பொழுது மெழுத்தாணி ஓலை அம்மி
யியலான கருவிமுதல் பையயுஞ் செப்பு
கூர்பொழுதும் சாததிரங்கள் சொன்ன ராகுல்
குருவாகு மவருடனே யெதுக்க வேண்டாம்
தார் புகழுஞ் சாத்திரங்கள் சொல்லி விட்டால்
சண்டாளர்ப் பையுடனே வாங்கு வாயே. (க)

பறையாதே அவருடனே யெதுக்க வேண்டாம்
பணி ரெண்டு பிழை நீக்கி தர்க்க னூலை
குறையாம லுரைத்துநீ விருது வாங்கி
கொள்ளவே யவருடைய கிருவம் போனுல்
நிறையாகச் சீடராய் வந்தா ராகுல்
நேர்மையாய்ப் பாகளுசொல்லி விருது யீய்ந்து
துறையாக யிந்நூலை யுரைத்துச் சொல்லி
சூட்சமா யவர்மன தறிந்துசொல் வீரே. (உ)

End :

கருத்துறவே வாதி மகன் வயித்தியம் செய்தால்
கடைகெட்ட நோயாளி பணிய வேண்டும்
கருத்துறவே மனதுவர நடக்கவேணும்
கழுதைபோல் இருந்தாக்கால் பலியா தப்பா
கருத்துறவே வாதிமகன் வந்தா னுகுல்
கனகனுல் வார்த்தை சொல்ல வேணும்
கருத்துறவே யிதுக்கலவே சித்தர் சாரம்
கண்டிதமாய் நடந்துவர நடந்து கொள்ள. (கஉ)

வநதுகூறி வயித்தியரே சொல்லக் கேளும்
வயித்தியர்க்கோ கண்மூன்று தலையும் நான்கு
நீதமுடன் சரீரமார் கையயே யாறு
நிமிஷத்தில் இதையறிந்து கொள்ளானே யாகில்

யிதுவறிந்து சிகிச்சைசெய்தால் வயித் யனுகும்
யில்லாவிட்டால் மடையாநீ மாடு மேச்சி
சேதம்வர மனிதரைக் கொல்லச் செய்வான்
செத்தசவ மாகுமடா நீசெய் மருந்தே. (௩௩)

(கு-பு)—

இந்நூல். வினுவெழுப்பி விடையிறுக்கு முகத்தான் அமைந்த காரணத்தால் 'தருக்கம்' எனப்பட்டது. வைத்திய சம்பந்தமான பொருள்களை நன்கு அறிந்து ஏற்ற சீடனுககுப் போதித்து வருமுறைகளையும் கூறுகிறது. செய்யுள் நடையிலானது. பூ ற்றுமுளது. 33 செய்யுட்களைக் கொண்டது. அகத்தியர் கூறியதாக ஏட்டு முகப்பில் வரையப்பட்டுளது. முடிவு தெரியவில்லை.

R. No. 1806.

பதார்த்த குண சிந்தாமணி.
PADĀRTTA GUṆA CINTĀMAṆI.

Foll. 28—38. Extent, 280 granthas.

Incomplete.

This is a medicinal work in 247 verses. This describes efficiencies of the various m dicinal herbs for disease. This is same as the manuscript described und‿r D. Nos. 1957 and 1958.

Beginning :

அரக்கீரை சன்னிகபம் ஆனகுளிர் காய்ச்சல்
பறக்குமிகு தீப்பந்தைப் பண்ணும்—உருக்கமுடன்
நல்லகுளுத்தி சிறுக்கீரை நாபியனல் தணிக்கும்
சொல்லளவே யனல்போம தொத்து. (1)
தண்டுக்கீரைக் குணங்கேளீர் தானருந்த நீர்க்கடுப்பம்
நின்றநாடி குன்றும் நிசமாக—கண்டிடவே
யிளங்கீரை பிணிக்கு மெதுவாகு மென்றும்
விளம்புதிரி தோஷம்போம் விடடு. (௨)

End :

மேவும்பால் வாயுவாம் மிககரிவாம் செந்தேனும்
தாவும்தீ பனமாம் சர்க்கரையும்—மேவும்
மெய்க்கழகாம் நெய்யும், விரைந்துபோ சீப்பிருல்
உயிர்க்கடுத்தது நாலு முறை. (246)

(அடைப்பம் விரை)

அடைப்பம் விரைதன்னி லதனு லெழுதிடலு
மடல்பெரிய கடல்பூவை மாத்திவிடும்—சடக்கெனவே
புண்மேல் கொளுப்புகளும் போகுமென் றேதெளிந்தும்
முண்மேல் மொழியாய்நீ மதி. (247)

(கு-பு)—

இந்நூல், வைத்திய சம்பந்தமான இலை, கீரை, காய், வேர், பழம், செடி, கொடி முதலான தாவரப் பொருள்களுடைய குணங்களை விளக்கமாகக் கூறுகின்றது. இது, மருத்துவ நூலாராய்ச்சியார்க்கு மிகப் பயன்படும். 247 பாடல்களே உள்ளன. இறுதியில் 'அகத்தியர் வண்ணம்' என்ற தலைப்பில் ஒரு மருந்து வகை விளக்கப்படுகிறது. இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1957, 1958-ஆம் எண்களில் வந்துள்ள நூல்களினும் வேறுபாடுடையது.

R. No. 1807.

கருவூரார் நொண்டிச்சிந்து.
KARUVŪRĀR NOṆḌICCINDU.

Foll. 39—40. Extent, 56 granthas.

Incomplete.

This is an incomplete work on medicine written by some unknown author.

Beginning :

சீர் வளர் திருமருவும் செங்கண்மால் செய்ய உந்திக் கமல மதனி
[லுதித்தோன்
பார்தனிலே படைத்த மானிடர்க்குப் பண்பா னுடிவகை பகர்ந்
[திடவே
கரிமுகன் பதம் போற்றிக் கலைமகள் காரணத்தால் பரிபூரணத்தால்
குருபர சிலாக்கியத்தால் நாதர்கள் கூறிய வாக்கிய பாக்கியத்நால்
முத்தமிழாராய்ந்து கற்றுணர்ந்தோர் முன்னூலுரைத்தபடி
[யிந்நூலிலே
சித்தறிவாளருக்குத் தெரிவறச் செப்புகின்றேன் நொண்டிச்சிந்து
மானிடரெனப் பிறந்தோர் உருப்பினில் வந்த பிணி தெரிய
[வகையது கேள்
தானெடுத் துரைக்கிறேன் நாடியின் சாத்திரமும் அதில்
[சூத்திரமும்
சொலப்பெரிய உந்தியின் கீழ் சுழிதனில் சுருதினை யெழுத்தினைத்
[தோய்ந்து பத்தும்
பலப்பல நாடியெனும் நரம்பெல்லாம் பண்பாய் யூரி முடிபோல்
[கீழ் மேலாய்
எகிடும் வாதபித்தம் ஐயமும் இடையது வாதம் பின்கலையே
[பித்தம்
சுழிமுனை ஐயமாகும் அதனிட சூத்திர சாத்திரம் சொல்லக்
[கேளாய்

* * * * * *

End :

* * *

(கு-பு)—

இந்நூல், வைத்திய சம்பந்தமான வாதம், பித்தம், ஐயம் முதலான வைகள் உடலில் தோன்றி தன்னின் மிக்கு நிற்கும் நிலைகளைக் கூறுகின்றது. முழுவதுமில்லை. சிறுபான்மையே உள. பிழையுள.

R. No. 1808.

வைத்திய நூல்.

VAIDDIYA NŪL.

Foll. 41—58. Extent, 506 granthas.

Complete.

This is a medicinal work in 200 verses written by some unknown author. This is complet e. This describes the way of the preparation of various medicine.

Beginning :

தெளிவான அப்பிரகச் செந்தூரங் கேளு
திறமான அப்பிரகம் சுத்தி செய்து
வளியான செப்புனெரிஞ்சிச் சாத்தி லரட்டி
மைந்தனே சட்டிக்கு ளடைபோல் தட்டி
நெளியாக அப்பிரகம் மேலே வைத்து
நேராக அடைதன்னை மேலே வைத்து
அளியாத சட்டிதானங் கொண்டு மூடி
அப்பனே கெசபுடந்தான் போடு போடே. (1)

End :

போடெடுக்க செந்நூரம் அறுண்மை போலும்
புகட்டவே நவலோகம் பத்து மாத்து
ாடெடுத்து நாளொன்றுக் கனுபா னத்தில்
பணவிடைதான் நாள்தொறுமங் கொண்டா யாளுல்
காடெடுத்த நோயெல்லாம் ஓடிப் போகும்
காயசித்திரம் கருதொட்டுச் செய்து பாரு
ஆடெடுத்த யிடையனம்போல் திரிய வேண்டாம்.
அறையுறேன் இன்னமொன்று ஆண்மை தானே. (200)

(கு-பு)—

இந்நூல், வைத்திய சம்பந்தமான செந்தூரம், கட்டு, மாத்திரை முதலான மருந்துகளைக் கூறி அவைகளைச் செய்து முடிக்கும் முறைகளையும் கூறுகின்றது. 200 பாட்டுக்களே உள. முற்றுப்பெற்றதாகத் தெரிகின்றது.

R. No. 1809.

வைத்திய நூல்.
VAIDDIYA NŪL.

Foll. 59—75. Extent, 506 granthas.

Incomplete.

This is another medicinal work written by some unknown author. This is incomplete.

Beginning :

சவுரியக் குழம்பு.

சறுவேசுரனுர் சகலமும் படைத்த அறுமறை முனிவர் யாவரும் புகழக் குறுவருளாலே குழம்பு சூரணத்தைத் திருவருளாலே செப்புறேம் கேளீர்.

. . . .

கற்பித்த கடுக்காய் கடுகிந் துப்பு
நற்பெருஙகாயம் நல்ல வெங்காரம்
மெய்ப்புள்ள சூதம் மேவு மனேசிலை
திப்பிலி தாரம் கருஞ்சீரகத்துன்.

(கு-பு)—

இந்நூல், வைத்திய சம்மந்தமான நூல்வகையைச் சேர்ந்தது. இது அகவற்பா முறையில் பல நூறு அடிகளான் ஆக்கப்பட்டுள்ளது. எழுத்துப் பிழைகளுண்டு. முடிவு பெற்றதாகத் தெரியவில்லை. செந்தூரம், பற்பம் முதலானவைகளைப்பற்றிக் கூறுகிறது. ஆசிரியர் இன்னரென அறியக் கூடவில்லை. அடியெண் பாட்டெண் கொடுக்கப்படாமல் தனித்தனியே கூறிச்செல்கிறது.

R. No. 1810.

சுத்தி முறைகள்.
ŚUDDHI MUṞAIKAḶ.

Foll. 76—78. Extent, 85 granthas.

Incomplete.

This is a work on medicine written by a unknown author. This is same as the manuscript described under D. No. 1868.

(கு-பு)—

இந்நூல், சில சுத்தி முறைகளைப் பற்றிச் சுருக்கிய வளவில் கூறுகிறது. தலைப்பில் பூரண சூத்திரம் என்ற தலைப்புக் காணப்படுகிறது. இதுவும் மேற்படி நூல் போன்று தனித் தனியே பாட்டெண் அல்லது அடியெண் கொடுக்கப்பெருமல் கருத்தை மட்டிலும் தெரிவித்துச் செல்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 1868-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. No. 1811.

மூலிகைக்குணம் (அறுபது).
MŪLIKAI-GUṆAM (Aṟupatu).

Foll. 79—81. Extent, 85 granthas.

Incomplete.

This is a work on medicine written by some unknown author. This describes the characteristics of some medicinal herbs. This is an incomplete work in 26 verses. This is same work as that described under D. No. 1868.

(கு-பு.)—

இந் நூல் வைத்திய வகையினைச் சார்ந்ததொன்றாய், சில மூலிகைக் குணங்களை எடுத்தியம்புகிறது. 26 பாட்டுக்களே உள. முடிவில்லை. மூன்று ஏடுகளே உள. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 1868-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது.

R. No. 1812.

அவத்தைக்குறி.
AVATTAI-K-KUṞI.

Fol. 82 only. Extent, 25 granthas.

Incomplete.

This is a work on Nāḍi astrology written by some unknown author. The title is guessed from the verses.

(கு-பு.)—

இந் நூல் முதலில் " தொந்தித்த நாடி மூன்றின் சூட்சமும் " என ஆரம்பித்து, " சந்தித்த அவத்தை நாடிச் செய்கையைச் செப்புவேனே " என்று கூறுவதிலிருந்து இந் நூலின் பெயர் அவத்தைநாடி என்று தெரிகிறது. ஏடு ஒன்றே உளது. முடிவுபெற்றதாகத் தெரியவில்லை.

R. No. 1813.

நாடிவகை அறிதல்.
NĀḌIVAKAI AṞITAL.

Foll. 83—84. Extent, 50 granthas.

Incomplete.

This is another work on Nāḍi astrology. This is same as the work described under R. No. 1812. Author is not known.

(கு பு)—

இந்நூல், நாடி பார்த்து நோய் வகையறியும் விதங்களை எடுத்துரைக்கின்றது. மேல்வந்த நூலோடு ஒப்பவைத்து எண்ணத்தக்கது. முற்றுப் பெறவில்லை.

R. No. 1814.

தட்சிணாமூர்த்தி முப்பூ 50.

DAKṢIṆĀMŪRTI MUPPŪ AIMPATU.

Foll. 85—88. Extent, 84 granthas.

Complete.

This is a work on medicine written by Dakṣiṇāmūrti. This describes the ways of curing several diseases. It also indicates the means of becoming a good doctor.

Beginning :

வாதமும் பித்த மொன்றாய் சூலை
வகைகேளு மவர்கான் கைகால் வத்தி
தட்டும் வேத்தினை யழச்செய் துடம்பில்
தத்திடும் சுத்திடும் புண்ணுப வேதணிக்கும்
சலங்கட்டில் தணிக்கும் மெய்யில் குணத்தைத்தான்
சாத்திய நாள் வழி யிளைக்கும் இருண்டிடுமே
அதிகாச வாதம் ஆன வைத்தியத்தில்
பொதிகை ஐம்பதில் புகலுவேன் முப்பூவை
துதிகை வாரணத்தான் பாதந் தொழுது
மென்னாளும் போத்தி கதிபெற வாணி [பாதம் காப்பு. (க)

மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை
வயித்தியம தாக்கியே விரித்துச் சொல்லி
சி(ஜெ) யமான கணபதியும் கந்தன் தானும்
சிவனுமையாள் பார்வதி ஸிருவாணி தானும்
நயமாக வெப்போதும் முன்னே நின்று
நாடறிப முப்பூவை நயந்து கேட்க
வயமாகச் சொல்லுகிறே னைம்ப துக்குள்
வயித்தியரே எப்போதும் வணங்கிக் கேளே. (உ)

End :

காலான வயித்தியத்தை உந்தி யாக
கைம்முறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான நேர்முடைய பரம னுவாய்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருமகள் செயல்கள் பத்தும்
சிந்தையிலே களங்கமற்ற சாத்தனுவான்

நாலான மணிபத்தும் பிரம்மன் சொன்னார்
நம்முடைய முனிவன்மொழி நாடி முற்றே.

பொதிகை ஐம்பதும் முற்றும் 50.

(கு-பு)—

இந்நூல், வைத்திய நூல் வகையைச் சார்ந்தது. வாதபித்த ஐயங்களை முறையே விளக்கி, வைத்தியஞ்செய்வதற்குரிய முறைகளையும் ஒருவாறு புலப் படுத்துகிறது. சிற்சில எழுத்துப் பிழைகளுமுள. முற்றும் உளது. ஆசிரியர் தட்சிணமூர்த்தி என்று தெரிகிறது. இறுதி ஏட்டில் " அகத்தியர் அஞ்சு " என்ற தலைப்பில் சில பாட்டுக்கள் காணப்படுகின்றன.

R. No. 1815.

அகத்தியர் வைசூரி வாகடம்.
AKAṬṬIYAR VAISŪRI VĀKAṬAM.

Foll. 89—94. Extent, 170 granthas.

Complete.

This is a work on medicine written by the sage Agastiya. While indicating the methods of curing several other deseases, it **deals** specially with small-pox.

Beginning :

பூரணமாய் நீதி நிறைந்த சோதி பாதம்
போற்றிசெய்து தினந்தினமும் புகழ்ந்தங் கேத்தி
காரணமாய் மாலயனுந் தேடிக் காணாக்
கடவுளர் பதம்போற்றி கருணை பெற்ற
ஆரணமால் மருகனென்னும் முருகன் கந்தன்
அடியிணையைப் போற்றிசெய்து அன்பி னாலே
வாரணமும் மதம்பொழியும் ஐங்கரனை நித்தியம்
மனோகரமாய் வணங்கியே போற்றி போற்றி. (1)

எத்தியே போற்றி நீ பின்பு கேளாய்
இதமான வைசூரியென்றும் குருநோ யென்றும்
வாத்தியதோர் போடகமாய் அம்மை யென்றும்
அழவாகனால் வருசூழப் பிறந்த ரோகம்
சாத்தியதோர் அசாத்தியமும் சாத்தியமுங் கூட
தருவாக இவர்களுக்குள் பிறந்துதானே
பாத்தனுகில் அவரவர்கள் பேரைக் கேட்கில்
பரிவாக இருநான்கு மூன்று மாமே. (2)

End :

முத்தான வயர்களைந்து கடுப்புக் கண்டால்
முறையாகச் செய்வதொன்றை முறையைக் கேளு
சுத்தான குடங்க ரெண்டு மூன்றி னுள்ளே
தோய மெல்லாம் மேலிடவே யிருத்துப் போட்டு

தான் சேரட ஞதுவே யெல்லாம்
பணைப்பிச் சட்டிதனில் வழித்துப் போட்டு
தேத்தாவின் விரையதனு லாலுள் தெய்த்துத்
தெளியவே தேயிருத்துச் செய்யச் செய்யே. (82)

கடுப்புக்கு.—வில்வப் பழச் சத்தைக் கிழாயமிட்டு இதில் கிராம்பு, அதிவிடயம் வகைக்கு விராகன் எடை ஒன்று வறுத்துப் பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும். மாம்பருப்புத் தயிரிலாவது நீச்சுத்தண்ணீயாவது கொடுக்கத் தீரும். மாதுளம் விரை வறுத்துச் சோற்றுடனே தயிரில் கொள்ளத் தீரும். (87)

பேதிக்கு.—மாம்பட்டை, சுக்கு, வில்வப்பழத்தோடு இதைச் சமனி கிழாயமிட்டு விடைவறுத்துப் போட்டுக்கொடுக்கப் பேதி தீரும். மாதுளம்பூ வறுத்து வீ(1) சிலே முடிந்துபோட்டுக் கிழாயம் இரும்பைக் குழப்பிக் கொடுக்கத்தீரும். பேதி 29-உம் தீரும். பசுவின் பால் படி (1) இதில் போட்டுப் பாகாய்க் காய்ச்சிக் கொடுக்க நீர் கொள்ளும்.

வைசூரி முற்றும்.

(கு-பு)—

இந்நூல், வைத்திய விஷயங்களைக் குறிப்பதோடன்றி அம்மை நோயுண்டாகும் விதமும் அது தணிக்கும் விதமும் முறைமாறி நடந்தால் அதனு லுண்டாகும் மற்ற நோயினையும் குறித்துக் கூறுகின்றது. முற்றுமுளது. சில எழுத்துப் பிழைகளுள. அகத்தியர் இயற்றியதாகத் தெரிகிறது.

R. No. 1816.

அகத்தியர் அகராதி.
AKATTIYAR AKARĀDI.

Foll. 95—103. Extent, 250 granthas.

Complete.

This is a work giving the meaning of difficult words used in medical science written by Agastiya. This is same as the work described under R. No. 192.

(கு-பு)—

இந்நூல், வைத்திய மூலிகை, சரக்கு முதலிய அருஞ் சொற்களுக்குப் பொருள் கூறிச் செல்கிறது. முற்றுமுளது. அகத்தியர் இயற்றியதாகக் கூறப்படுகிறது. வைத்திய முறையில் அமைந்த செய்யுள் நூல்களைப் படித்தறியப் பயன்படும். மூவருடைக் காட்லாக்கு 192-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுள்ளது.

R. No. 1817.

சட்டைமுனி நிகண்டு.
ŚAṬṬAIMUNI NIGHANṬU.

Foll. 104—115. Extent, 338 granthas.

Incomplete.

This gives the names of the various medicinal herbs and contains 358 verses.

(கு-பு)—

இந்நூலில், வைத்தியம் முதலியவற்றின் மூலிகைகட்குப் பெயர் கூறப்பட்டிருக்கிறது. ஓலைச் சுவடியில் முற்றும் என எழுதியிருந்தாலும் 358 செய்யுட்களே பெற்றுள்ளனவாதலின் இதற்கு முன்னுள்ள நூல்களை நோக்க, இந்நூல் முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை.

R. No. 1818.

தட்சிணாமூர்த்தி விநோதம் 43.

DAṬCIṆĀMŪRTI VINŌDAM.

Foll. 116—118. Extent, 85 granthas.

Complete.

This describes briefly many wondrous actions. The author is Dakṣiṇāmūrti.

Beginning :

முத்தான முன்னூத்தில் விநோத மெல்லாம்
முதிர்ந்தபின்பு நாற்பத்தி மூணுஞ் சொன்னேன்
கர்த்தாவைத் தியானித்துக் கண்டு பாத்து
கதிரவே மூலத்தில் மனதை வைத்து
விதார மாகவேதான் பாடி வைத்த
விநோத மிதைச்சோதித்து விளையாடிக் கொண்டு
உத்தாரந் தந்திடுவான் தனக்குத் தாய்தான்
உண்மையாய்க் கண்டிந்த வித்தைப் பாரே.

End :

வாறான திந்தமுறை வகையைக் கேளு
வைப்பான நாலுபத்து இரண்டே யாகும்
காறான அதிலொன்றும் தப்பே யில்லை
கைக்கடனென்றால் காணாது கருதிப் பாரு
தூறான எருக்கொண்டு செய்து பார்த்துத்
துடியான வேதமுனி சாஸ்திரத்தில் சொன்னார்
பேறான பெருக்கலையாய் ஆய்ந்து பார்த்து
பேர்பெறவே சொன்னதிந்த பாடல் முற்றே.

முற்றும். (43)

(கு-பு)—

இந்நூல், பல விநோத ஜால வித்தைகளைக் குறித்துச் சொல்வதால் தட்சிணாமூர்த்தி விநோதம் என்ற பெயர் பெற்று விளங்குகிறது. சுருக்கமாய் உளது. நாற்பத்து மூன்று செய்யுட்களே உள்ளன.

R. No. 1819.

சித்தர் ஆரூடம் (நொண்டிச்சிந்து.)

SIDDHAR ĀRŪḌAM (Noṇḍiccindu).

Foll. 119—139. Extent, 590 granthas.

Complete.

This work describes the different varieties of snakes and gives also the antidotes of snake-poison. In the end the work gives the methods of curing cow-diseases. This is same as the manuscript described under R. No. 174 (*b*).

Beginning :

விருத்தம்

அத்திமா முகவன் செய்ய அடியிணைக் (கமலம்) [போத்தி] போற்றி
சித்திரா ரூடம் தன்னிற் செப்பின பொருளை யோர்ந்து
சுத்தமாய் எவர்க்கும் தோன்ற சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தக ரருளி னாலே தமிழினில் விளம்ப லுற்றேன்.

நொண்டிச்சிந்து

திருமருதூர் வளரும்-நாக லிங்கர்
சீர்பாத கமலமென் சிரத்தில்வைத்து
மருவிய சித்தராரூடப் பொருளினை
வகுத்துச் சொல்லுகிறே னிந்த மகிதலத்தில்
புண்டரீகத்தி லுறைவோன் படைத்ததில்
பொல்லாத விஷஞ் செந்து வெல்லாமுமே
விண்டுரைக்கக் கேளுமினி நல்ல பாம்பு
விரியன் வழலை கொம்பேறி மூக்கன்
சாரணக மூக்கன் புடையன் மண்டெலி
சவடி மயக்குறு மண்ணுளி சாரை.

(கு-பு)—

இந்நூல் பாம்பின் பிறப்பு, வளர்ச்சி, அதன் பிரிவுகள், முதலான வற்றையும், அவை கடித்தால் நீக்குதற்குரிய மருந்து வரிசைகளையும் எடுத்துச் சொல்லுவதோடு இறுதியில் பசுக்கள் முதலானவற்றிற்கும் நோய்தீர்க்கும் மருந்துவகைகளையும் எடுத்துச் சொல்கிறது. பிழையுள. முற்றுமுள. மூவருடக் காட்லாக்கு 174-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக் கிறது.

R. No. 1820.

கொக்கோகம் (வசனம்).

KOKKŌKAM (Vasanam).

Fol. 140 only. Extent, 28 granthas.

Incomplete.

This is a prose work written by some unknown author describing the four types of women and their characteristics.

(கு-பு)—

இந்நூல், நால்வகை சாதிப் பெண்களின் குணாகுணங்களையும் உறுப்புக்களையும் எடுத்துச் சொல்கிறது. ஒரே ஏடுமட்டும் உளது.

R. No. 1821.

இராமதேவர் பட்சிணி.

IRĀMADĒVAR PAṬCIṆI.

Foll. 141—143. Extent, 55 granthas.

Incomplete.

This is an incomplete work written by Rāmadēvar on Rasavāda (alcohol). This is same as the manuscript described under D. No. 2334.

(கு-பு)—

இந்நூல், இரசவாத சம்பந்தமான வகையினைச் சார்ந்தது. முற்றுமில்லை. இருபது செய்யுட்களே உள்ளன. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2334-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. No. 1822—1830 (one codex).

Palm leaf. $8\frac{1}{4} \times 1\frac{1}{4}$ inches. Foll. 172. Lines 8 on a page. Tamil, injured, Old. Extent, 1,028 granthas.

Presented in 1948–49 by the Headmaster, M.D.T. Hindu College High School, Tirunelveli, through the District Educational Officer, Tirunelveli.

R. No. 1822.

கணிதாமிருதம்.

GAṆITĀMIRUTAM.

Foll. 1—108. Extent, 648 granthas.

Complete.

This is a mathematical treatise. This is same as the work described under R. No. 557.

(கு-பு)—

இந்நூல், ரூவருடக் காட்லாக்கு 557-ஆம் எண்ணின் பிரதியில் வந்துள்ளதேயாகும். முற்றுமுளது. பிழைகளுள.

R. No. 1823.

சோதிடக்குறிப்பு.

SŌTIḌAKKUṞIPPU.

Foll. 109—110. Extent, 12 granthas.

Incomplete.

This is an astrological work. Mentions the work to be done on certain times according to the position of the stars.

(கு-பு)—

இந்நூல், இரண்டு ஏடுகளாலாயது. சில நட்சத்திரங்களின் காலங்களில் செயத்தகும் காரியாசித்திகளைப் பற்றிக் கூறுகிறது.

R. No. 1824.

இலக்கின பலன்.

ILAKKINA PALAN.

Foll. 111—118. Extent, 48 granthas.

Complete.

This is a treatise on astrology. It foretells the fortunes of persons born under the different lagnas. This is same as the work described under D. No. 1991.

Beginning :

மேஷலக்கினமே யானால் விளம்பிய பலனைக் கேளாய்
நாடிய சபல னாகும் ஞானி பித்தராமறு மாலாஞ்
சாடிய நல்ல கண்ணன் தயாபர னிவனே யாவான்
தேடிய புத்தி மானே திகள் சிதெந்திரிய னாமே
திரியவே நல்ல பிள்ளை திட்டமாய்ப் பெறுவன் மெய்யே.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1991-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு இலக்கினத்திலும் பிறந்தோர்களெய்தும் பலாபலன்களைக் கூறிச் செல்கிறது. முற்று முளது. முப்பது செய்யுட் களாலாகியது. பழுதுபட்டுளது. பிழைகளுள.

R. No. 1825.

நவக்கிரக துவாதச பாவ பலன்.

NAVAGRAHA DUVĀDAŚA BHĀVA PALAN.

Foll. 119—149. Extent, 186 granthas.

Complete.

This is an astrological treatise written by some unknown author. This is same as the work described under D. No. 2007.

(கு-பு)—

இந்நூல், மேஷம் முதலிய ஒன்பதும் பன்னிரண்டு இடங்களுக்கும் செல்லுகின்ற காலத்துண்டாகும் பலாபலன்களைக் கூறிச் செல்லுகின்றது. சோதிடக் குறிப்புக்குப் பயன்படும். முற்றுமுள.

R. No. 1826.

சோதிடக் குறிப்பு (இராசாதிகாரம்).

ŚŌTHIḌAKKUṞIPPU (Irājādhikāram).

Foll. 150—153. Extent, 20 granthas.

This is an astrological work by some unknown author. It foretells the fortunes when the planets are in the asending position. This is same as the work described under D. 2007.

(கு-பு)—

இந்நூல், ஒன்பது இடங்களுக்குமுள்ள இராசாக்கள் உச்ச நிலையில் இருக்கும் காலங்களில் கொடுக்கும் பலாபலன்களைச் சொல்லுகிறது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2007-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. No. 1827.

கௌளிக் காதல்.

GAUḶIK KĀTHAL.

Foll. 154—158. Extent, 30 granthas.

Complete.

This work with the name Gauḷik Kāthal written by some unknown author describes the fortunes and misfortunes when that bird cries in particular directions.

Beginning :

திருமாலே யிரவிநாள் வசகீழ் மூல
திசைமுக மாய் ஒளிந்தபலன் செப்பக் கேளு
கருநிறமாம் பல்லியதின் குலமோ சூத்திரன்
கருணையுண்டாம் கீழ்த்திசையி லுறைதகுமாகில்
அரியதொரு ராசபலன் ராசவார்த்தை
அழகுபெறு மன்னர் மொழியின்னிய வார்த்தை
பிரியமுடன் தென்கிழக்கி லுரைக்கு மாகில்
பெருக மரசாண் டெனவும்பேசுங் காலே. (1)

End :

வடமேற்குத் திசையதனி லதிக லாபம்
வடக்குவருந்திசை யதனில் சரச வார்த்தை
திடப்படவே வடகிழக்கு மரணஞ் சொல்லும்
திசைப்பலனைக் கொங்கணஞர் செப்புங் காலே
உளப்படவே யீசனுட தேச மிந்த
உலகுதனில் குறுமுனிவன் உரைத்த நூலின்
நடப்படவே பார்த்துறையும் நல்லோர் தம்மால்
நாதர்களே இந்நூலை நவின்று பாரே. (௩)

(கு-பு)—

இந்நூல், கௌளிக்காதல் என்று பெயர் பெற்று, கௌளி எந்தெந்தத் திசையில் சொன்னால் என்னென்ன பலன் உண்டாகும் என்பதைப் பற்றிக் கூறிச் செல்லுகிறது. இறுதியில் 'தும்மல் காதல்' என்பதும் உள்ளது.

R. No. 1828.

மாரக தசையறியும் வகை.

MĀRAKADAŚAI AṚIYUM VAKAI.

Foll. 159—160. Extent, 12 granthas.

Incomplete.

Same work as that described under D. No. 2007.

This work written by same unknown author foretells about the fortunes of persons born under particular Lagnas.

(கு-பு)—

இந்நூல், மேஷ முதலாக உள்ள இலக்கினங்களில் பிறந்தோர்க்கு ஏற்படும் மாரக்காதி விதிகளைக் கூறிச் செல்லுகிறது. இரண்டு ஏடுகளே உள்ளன. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2007-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. No. 1829.

சோதிடநூற் குறிப்பு.

ŚŌTIḌANŪṞ KUṞIPPU.

Foll. 161—164. Extent, 24 granthās.

Complete.

Same as the work described under D. No. 2713.

This is another astrological treatise written by same unknown author.

(கு-பு)—

இந்நூல், நான்கு ஏடுகளாலாகி சோதிட விஷயமான கிரகங்கள் ஒன்றுக்கொன்று நின்றுபார்க்கும் பார்வை முதலானவைகளைக் கூறிச் செல்கிறது. டிஸ்கிருப்ட்டிவ் காட்லாக்கு 2713-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது.

R. No. 1830.

துவாதச பாவக பலன்.

DUVĀDAŚA BHĀVAKA PALAN.

Foll. 165—172. Extent, 48 granthas.

Incomplete.

Same as the work described under D. No. 2007.

This is an astrological work.

(கு-பு)—

இந்நூல், பாவகப் பலன்களை இலக்கின முறைப்படி கூறிச் செல்லும் ஓர் சோதிடக் குறிப்பாகும். முற்றுமில்லை. பழுது அதிகமாய் உளது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2007-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. No. 1831.

திருவாய்மொழி.

TIRUVĀYMOḺI.

Palm leaf. 14 × 1¼ inches. Foll, 50. Lines, 8 on a page. Tamil, injured. Old Extent, 400 granthas.

Presented by the Headmaster, M.D.T. Hindu College High School, Tirunelveli, in 1948–49.

Incomplete.

This is same as the work described under R.No. 58.

இந்நூல், ஆழ்வார் பன்னிருவருள் சடகோபர் என்பார் இயற்றியது. மூவருடக் காட்லாக்கு 58-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில் முதல் பத்தும் இரண்டாம் பத்தில் பத்தாம் பதிகமும், எட்டாம் பத்தில் ஒன்பதாம் பதிகமும், ஒன்பதாம் பத்தும், பத்தாம் பத்தும் உள்ளன.

R. No. 1832.

திரிபுரை மாலை.

TIRIPURAI MĀLAI.

Palm leaf. 8¼ × 1¼ inches. Foll, 16. Lines, 4 on a page. Tamil, fair. Old. Extent, 40 granthas.

Purchased in 1948–49 from Māriyāyi 25, Sannidhi Street, Tiruvānai-k-Kāf, Trichirappalli.

Complete.

This is written by some unknown author. This is similar to the work described under R. No. 350.

Beginning :

காப்பு

சித்தி தரும் பரகெதியு முண்டாகும் நல்ல செல்வ முண்டாம்
புத்திதரும் புகழ் பெருகும் கழல் தரும் பொற்பாதர்
முத்திதரும் திரிபுரை மாலைதன்னை முனிந்துரைக்க
சத்திதரும் தந்திமுக வேளை நாயகன் காப்பாமே.

மாதரி வீரி பயிரவி காமி வாலை குண
பூதரி யோக புரந்தரி காரணி பொற்கிரிவாள்
கீதரி மந்திர சடாட்சரி யென்றுமென் நெஞ்சகத்தில்
ஆதரவாய்நின் றுதவுந் திரிபுரை அம்பிகையே. (1)

End :

சித்த முனைத்துதித் தேத்துவ தெல்லாம்நின் பாதமதில்
மெத்த நெருப்பிட் டெரித்ததுவோ மேதினியில்
குத்தங்கள்கோடி செயினும் பொறுத்தெனைக் கொண்டருள்
[வாய்
சித்திர ஞானப் பொருளே திரிபுரை சிவசத்தியே. (41)

முற்றும்

(கு-பு)—

இந்நூலில், திரிபுரையம்மையின்பேரில் பாடப்பெற்ற தோத்திரப் பாக்கள் அடங்கியுள்ளன. பிழைகள் உள.

R. No. 1833.

கமலையுலா (திருவாரூருலா)

KAMALAIYULĀ (Tiruvārurūlā).

Palm leaf. 5¼ × 1⅝ inches. Foll, 31. Lines, 13 on a page. Tamil, injured. Old. Extent, 244 granthas.

Presented in 1948–49 by Sri H. H. Arunanditambirān of Kasi Mutt, Tiruppanandāl, Tanjore district.

Complete.

This is written by Kavi Vīrarāghava Mudaliyār. This gives the anecdote of the love of all the girl in the seven stages beginning with Pēdāi, towards [illegible] the presiding deity of Tiruvārūr. This work has been published.

Beginning :

கமலைக் கருள்செய் கமலைத் தியாகேசர்
கமலைத் திருவுலாக் காப்பாங்—கமலைவயல்
மீதாவி வேழமுக மீன்குதிக்கு மிப்பதியினா
வாதாவி வேழ முகவன். (1)

பாந்தளணியணிந்த பாலொத்த மென்மொழியாள்
காந்தாதி யாகேச ருலாக் காப்பாகும்—பூந்தாளிற்
போற்றுரைத்த வாரணமே பொற்சிலம்பால் கைச்சிமெட்டு
மாற்றுரைத்த வாரணமே வந்து.

End :

மெய்க்குவளைத் தார் விழை இன்றேன்—கைக்குநவா
யென் று திருத்தேர் நிலையளவு மேத்தெடுத்துத்
துன்று கழுநீர்த் தொடை பெற்றாள்—நன்று
வினைப்பகையுங் காமத்து விற்காமன் செய்ய
முனைப்பகையும் கூட முடித்தாள்—தனைப்பலரிந்தே
யிவ்வா றெழுபருவத் தெல்லோரு முன்போத
வுய்வா ரவனிக்குடன்போதச்—சைவ
வழி போந்தான் றூதாய்ப் பாவையார் —மாடத்
துழிபோந்தான் போந்தா னுலா. '

தியாகேசப் பெருமான் பேரில் கவி வீரராகவ முதலியார் அருளிச் செய்த கமலையுலா. திருவாரூரிலிருக்குஞ் சிவாலயமுனி கோத்திர குகத்திர வங்கி பாரம்பரியனாகிய வீணை வாத்திய பாத சாஸ்திர சிவாகமபுராணாதி விசார்த்த ஒத்தியப் பண்டார குரு புத்திரனாகி மாவடுகநாத பண்டாரத்தின் ஞான வைசுவரியனாகிய காழி காவலப் பண்டாரம் .. .. கவி வீரராகவ முதலியார் பாடல் கமலையுலா வென்றறிக.

(கு-பு)—

இந்நூல், திருவாரூர் எனப்படும் கமலை என்ற ஊரில் எழுந்தருளியிருக்கும் தியாகேசப் பெருமான் உலாவரும்போது பேதை முதலான ஏழு பருவப் பெண்களும் அவர் மீது காதல் கொண்டதாகச் செய்யப்படும் உலா என்ற பிரபந்தமாகும். முழுதுமுள்ளது. அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 1834.

பூதசுத்தி.

BHŪTA ŚUDDHI

Palm leaf. 13 × 1½ inches. Foll. 4. Tamil, very much injured. Old. Extent 15 granthas.

Presented in 1948–49 by Sri H. H. Aruṇandi-t-tambirān, Kāśi Mutt, Tiruppanandāḷ, Tanjore district.

Complete.

This is same as the work described under D. No. 578. It describes the Particular worship of the Lord by which the senses are controlled.

(கு-பு)—

இந்நூல், பஞ்சேந்திரியங்களைத் தூய்மைப்படுத்தவேண்டிச் செய்யும் பூசையைப்பற்றியது. மிகப்பழுதுபட்டுளது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 578-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. No. 1835.

புராணப் பிரவசன மாலா.

PURĀṆA-P-PIRAVACANA MĀLĀ.

Palm leaf. 15¾ × 1 inch. Foll. 24. Much injured. Old. Manippiravāḷam.

Presented in 1948–49 by Sri H. H. Arunaṇdi-t-tambiran of Kāśi Mutt, Tiruppanandāḷ, Tanjore district.

Complete.

This is a work written by some unknown author giving the merits and excellences of the Purāṇās.

(கு-பு).—

இந்நூல், பிரசங்கியானவன் புராணங்களின் அருமை பெருமைகளை விளக்கமுற எடுத்துரைப்பது போன்று அமைந்துளது. மணிப்பிரவாள நடையிலுள்ளது. மிகப் பழுதுபட்டுளது.

R. No. 1836—1839 (one Codex.)

Palm leaf. 11¾ × 1½ inches. Foll. 31. Lines, 6 or 5 on a page. Tamil, injured. Old. Extent, 150 granthas.

Presented in 1948–49 by Sri H. H. Aruḷnandi Tambiran of Kaśi Mutt, Tiruppanandāḷ, Tanjore district.

R. No. 1836.

சிவ பராக்கிரமம்.

ŚIVA PARĀKKIRAMAM.

Foll. 1—9. Extent, 35 granthas.

Complete.

This is same as the work described under D. No. 304.

(கு-பு)—

இந்நூல், சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறுகிறது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 304-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதேயாகும். அதனைக் காண்க. இதன் கீழ்ச் சிலபுராணங்கள் அரங்கேற்றப்பட்டவிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

R. No. 1837.

விசுவபுராணம்.

VIŚUVAPURĀṆAM.

Foll. 9—25. Extent, 80 granthas.

Incomplete.

This is an incomplete work describing history of Viśvakarma. This is same as that described under D. No. 463. Many purāṇic stories are included in this.

Beginning :

ஆதியில் ராம ஞுதன் அகிலமும் அடைக்க வேண்டி
சோதியுஞ் சகல மாகி சுயம்பிர காச மாகி
நீதியாய் அணுக்க ளெல்லாம் நிறைந்திட வேணு மென்று
காதலாய் நினைந்து யீசன் கருத்தினி லுதித்த தன்றே. (1)

. . . . . .

. . . . .

End :

இவ்வித மெழுபத் தொன்று யியம்பின மொழியி னாலே
திவ்விய மைந்த ரெல்லாம் திருக்கற்க கூடினார்கள்
செவ்விதழ் காளி தன்னைச் சிரதிக்குங் கூத்த னுக்குத்
திவ்விய ஒட்டக் கூத்தன் செழுநாமம் கிடைத்த தன்றே. (85)

(கு-பு)—

இந்நூல், விசுவகர்மாவினது சரித்திரத்தைச் செய்யுள் வடிவில் கூறிச் செல்கிறது. சிலபிழைகள் இடையிடையே உண்டு. இதில் பல புராணக் கதைகள் இடையிடையே காணலாம். டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 463-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளது. உரைநடை வடிவில் காணப்படுகிறது. முற்றுமில்லை. பழுதுபட்டுள்ளது.

R. No. 1838.

வீரசம்பவம்.

VĪRASAMBHAVAM.

Foll. 26—29. Extent, 32 granthas.

Incomplete.

This work describes the valour of the nine heroes a theme taken from the Kandapurāṇa.

Beginning :

இது ஞானப்பிரகாச னென்னும் சிவசமயாசாரியார் அவருக்குச் சிவ பெருமான் அருளப்படி செய்த வீரசம்பவத்தில்,

நவவீரர் உற்பத்தியும் வேத்தியும் வேட்டஞ் செயித்தும், கைலாயத்தை விட்டுப் பூமிக்குவந்ததும் இவர்கள் அரசுறும் தன்மையும் இயம்புகின்றது.

இந்திரன் அரசுறுமல் இடறுசெய் சூரன் றன்னை
நந்தல்செய் திடவே யெண்ணி நாரதன் நந்தி யோடு
யிந்தணி யீசர்க் கோதி யெழிலுமை மணந்த பின்னல்
மைந்தர்கள் உதிக்க வேண்டி மனத்தினுள் நினைந்து தோன்ற.

(1)

End :

தேவ வாத்திய முழங்க தேவர்பூ மாரி பெய்ய
ஆவலாய் அரம்பை யர்கள் அருநட கீதம் பாட
ஆவலா......... டிகள் பன்னி ஆலாத்தி பல்லாண் டோதத்
தேவர்கோன் மகளைக் கந்தன் திருமணஞ் செய்தா னன்றே. (19)

(கு-பு)—

இந்நூல், கந்தபுராணத்தின் ஒரு சில பகுதிகளின் கருத்தினை எளியசெய் யுள் வடிவாக வமைத்துப் பாடப்பெற்றது. நவ வீரர்களின் வீரத்தை எடுத்துக்காட்ட வெழுந்தது. முழுதுமில்லை. பழுதுபட்டுளது.

R. No. 1839.

அனுபவ வைத்திய முறை.

ANUBHAVA VAIDDIYA MUṞAI.

Foll. 30—31. Extent, 10 granthas.

Incomplete.

This work describes one medicine that cures all kinds of diseases. Author is not known.

(கு-பு)—

இந்நூல், இரண்டேடுகளாலாகி, வைத்தியக் குறிப்பாகச் சகல மேகத் துக்கும் எண்ணெய் ஒன்று கூறப்பட்டிருக்கிறது.

R. No. 1840.

அர்த்த பஞ்சகம்.
ARTHA PAÑCAKAM.

Palm leaf. 16 × 1½ inches. Lines, 8 on a page. Much injured. Old. Maṇippiravāḷam. Extent, 406 granthas.

Presented in 1948–49 by Sri N. K. Rangachariar, 26, Tirumalai Pillai street, Rayappettai, Madras-14.

Incomplete.

This is same as the work described under R. No. 49 (*d*).

(கு-பு)—

இது மூவருடக் காட்லாக்கு 49(d))-யில் வருணிக்கப்பட்டதைப் போன்றது.

R. No. 1841.

நீதிச் செய்யுட்கள் (உரையுடன்).
NĪTIC CEYYUṬKAḶ (WITH COMMENTARY).

Palm leaf. 15 × ¾ inches. Foll. 4. Lines, 4 on a page. Tamil, injured. Old. Extent, 15 granthas.

Presented in 1948–49 by Sri N. K. Rangachariyar, 26 Tirumalai Pillai street, Rayappettai, Madras.

Incomplete.

This contains only 5 verses of unknown authorship. Maxims are collected and given in a verse form.

(கு-பு)—

இந்நூல், பல நீதிகளைத் தொகுத்துரைக்கும் பண்பில் அமைந்தது. ஐந்து பாட்டுக்களே உள்ளன. முழுதுமில்லை.

R. No. 1842.

கொக்கோகம் (உரையுடன்).
KOKKŌKAM (WITH COMMENTARY).

Paper. 11 × 9¾ inches. Foll. 26. Lines, 20 on a page. Tamil, good. New. Extent, 325 granthas.

Restored in 1948–1949 from a manuscript described under D. No. 2716.

Incomplete.

This is same as the work described under D. No. 2716. This is written by Varatuṅga Pāṇḍiyan who was the brother of Ativīrarāma Pāṇḍiya.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2716-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ள நூலையே பிரதி செய்விக்கப் பெற்றதாகும். அதனைக் காண்க.

R. No. 1843—1835 (one codex).

Paper, $13\frac{1}{2} \times 8\frac{3}{4}$ inches. Foll. 43. Lines 26 on a page. Tamil, good. New. Extent, 350 granthas.

R. No. 1843.

உரோமரிஷி சுருக்கம்.
URŌMAṚIṢI CURUKKAM.

Foll. 1—3 (*a*). Extent, 20 granthas.

Restored in 1948-49 from a manuscript described under R. No. 175.

Incomplete.

This is same as the work described under R. No. 175.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதையே பிரதி செய்விக்கப் பெற்றதாகும்.

R. No. 1844.

அகத்தியர் கலைஞானச் சுருக்கம்.
AKATTIYAR KALAIÑANAC CURUKKAM.

Foll. 3*b*—4*b*. Extent, 15 granthas.

Incomplete.

This is same as the work described under R. No. 175.

Restored in 1948-49 from a manuscript described under R. No. 175 of the Triennial Catalogue of Tamil manuscripts, Volume II.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதையே பிரதி செய்விக்கப்பெற்றதாகும். அதனைக் காண்க.

R. No. 1845.

அகத்தியர் சூத்திரம்.
AKATTIYAR SŪTTIRAM.

Foll. 5 (*a*)—7 (*a*). Extent, 20 granthas.

Restored in 1948-49 from a manuscript described funder R. No. 175.

Complete.

This is same as the work described under R. No. 175.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியையே பிரதி செய்விக்கப் பெற்றதாகும். குறிப்புக்கு அதனைக் காண்க.

R. No. 1846.

சூரியானந்தர் சூத்திரம்.
SŪRIYĀNANDAR SŪTTIRAM.

Foll. 7*b*—9 (*a*). Extent, 16 granthas.

Restored in 1948—49 from a manuscript described under R. No. 175.

Complete.

This is same as the work described under R. No. 175.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப் பெற்றதாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1847.

போகர் சூத்திரம்.
BŌGAR SŪTTIRAM.

Foll. 9 *b*—12 (*a*). Extent, 25 granthas.

Restored in 1948–49 from a manuscript described under R. No. 175.

Complete.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப் பெற்றதாகும். குறிப்புக் காண்க.

R. No. 1848.

சட்டைமுனி பூரண சூத்திரம்.

ŚAṬṬAIMUNI PŪRAṆA SŪTTIRAM.

Foll. 12 *b*—16(*a*). Extent, 30 granthas.

Restored in 1948–49 from a manuscript described under R. No. 175.

Complete.

This is same as work described under R. No. 175.

(கு-பு)—
இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப்பெற்றதாகும்.

R. No. 1849.

தட்சிணாமூர்த்தி ரசமணி.

DAKṢIṆĀMŪRTTI RASAMAṆI.

Foll. 16 (b)—18. Extent, 20 granthas.

Restored in 1948–49 from a manuscript described under R. No. 175.

Complete.

(கு-பு)—
இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப்பெற்றதாகும்.

R. No. 1850.

அகத்தியர் வழலை.

AKATTIYAR VAḺALAI.

Foll. 19 (a)—23. Extent, 40 granthas.

Restored in 1948–49 from a manuscript described under R. No. 175.

Complete.

(கு-பு)—
இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப்பெற்றதாகும்.

R. No. 1851.

அகத்தியர் யோகம்.

AKATTIYAR YŌGAM.

Foll. 24—26. Extent, 25 granthas.

Restored in 1948–49 from a manuscript described under R. No. 175.

Complete.

(கு-பு)—
இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப் பெற்றதாகும்.

R. No. 1852.

அகத்தியர் மெய்ச்சுருக்கம்.

AKATTIYAR MEYCCURUKKAM.

Foll. 27—34 (a). Extent, 60 granthas.

Restored in 1948–49 from a manuscript described under R. No. 175.

Incomplete.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப் பெற்றதாகும்.

R. No. 1853.

சட்டை முனி தர்க்கம்.

ŚAṬṬAI MUNI TARKKAM.

Foll. 34 (*b*)—36 (*a*). Extent, 15 granthas.

Restored in 1948-49 from a manuscript described under R. No. 175.

Incomplete.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியைப் பிரதி செய்விக்கப் பெற்றதாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1854.

ஆத்திசூடிவெண்பா.

ĀTTICŪḌI VEṆPĀ.

Foll. 36 (*b*)—40. Extent, 35 granthas.

Restored in 1948–49 from a manuscript described under R. No. 175.

Incomplete.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 175-ஆம் எண்ணின் பிரதியிலிருந்து பிரதி செய்விக்கப் பெற்றதாகும்.

R. No. 1855.

பாவை யகவல்.

PĀVAI AKAVAL.

Foll. 40 (*a*)—43. Extent, 30 granthas.

Restored in 1949–50 from a manuscript described under D. No. 2149.

Complete.

This describes briefly the methods of performing Yogic-feats. This is written probably by Tiruvaḷḷuva Nāyanār. This is same as the work described under D. No. 2149.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2149-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதையே பிரதி செய்விக்கப்பெற்றதாகும். திருவள்ளுவர் வகுத்ததாக முதலேட்டில் இருக்கிறபடியால் திருவள்ளுவ நாயனாரே ஆசிரியராகக் கொள்ள இடமிருக்கிறது. இந்நூல் யோகம் செய்யும் வழிகளைக் கூறுகிறது. மிகச் சுருங்கிய அளவிலுள்ளது. கருத்தைத் திட்பமுற எடுத்தியம்புகிறது. முற்றுமுளது. இதனையே தனிப்பாடல் என்ற தலைப்பில் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு எண் D-359-ல் காணலாம்.

R. No. 1856.

கவிச் சுவடி.
KAVIC CUVAḌI.

Paper, 9¾ × 11¼ inches. Foll. 1—3. Lines 20 on a page. Good. New. Tamil. Extent, 25 granthas.

Complete.

Restored in 1949–50 from a manuscript described under D. No. 353.

This is a collection of verses of different authors.

(கு-பு)—

இந்நூலில் காணப்படும் பாடல்கள் தனித்தனியே பலர் பாடியனவாகக் காணப்படுகின்றன. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 353-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதையே பிரதி செய்விக்கப் பெற்றதாகும்.

R. No. 1857.

பாரத வசனம்.
BHĀRATA VACANAM.

Paper, 9¾ × 11¼ inches. Foll. 37. Lines 20 on a page. Tamil. Good. New Extent, 464 granthas.

Restored in 1949–50 from a manuscript described under D. No. 444.

Incomplete.

This contains the end of Aśvamēdhayāga Parva and from Āśrama Parva to Svargārōhaṇa parva of the Mahābhāratam.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 444-ஆம் எண்ணின் பிரதியைப் பிரதி செய்விக்கப் பெற்றதாகும். அதனைக் கண்டு கொள்க. இதில் அசுவமேத யாகப் பருவத்தின் இறுதிப் பாகமும் ஆசிரம பருவந் தொடங்கி சுவர்க்காரோகண பருவம் வரையிலும் உள்ளன.

R. No. 1858.

பாரதம்.

BHĀRATAM.

Paper. 11¼ × 9¾ inches. Foll. 130. Lines 20 on a page. Tamil. Good. New. Extent, 3,250 granthas.

Restored in 1949-50 from a manuscript described under D. No. 534. Complete.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 534-ஆம் எண்ணின்கீழ் வந்துள்ளதை பிரதி செய்விக்கப் பெற்றதாகும். அதனைக் காண்க.

R. Nos. 1859 & 1860 (one codex).

Paper, 11¼ × 9¾ inches. Foll. 63. Lines 20 on a page. Tamil. Good. New, Extent, 750 granthas.

R. No. 1859.

தேவாரம் (உரையுடன்).

TĒVĀRAM (with commentary).

Foll. 1—25. Extent, 300 granthas.

Restored in 1949-50 from a manuscript described under D. No. 1137. Incomplete.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1137-ஆம் எண்ணின் பிரதியைப் பிரதி செய்விக்கப் பெற்றதாகும். அந்நூற் குறிப்பினைக் காண்க.

R. No. 1860.

பாண்டவர் வனவாசம்.

PĀṆḌAVAR VANAVĀSAM.

Foll. 26 (*a*)—63. Extent, 450 granthas.

Restored in 1949-50 from a manuscript described under D. No. 2265. Incomplete.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2265-ஆம் எண்ணின் பிரதியைப் பிரதி செய்விக்கப்பெற்ற தாகும். ஆண்டுக் காண்க.

R. Nos. 1861 and 1862 (one codex).

Paper, 11¼ × 19¾ inches. Foll. 74. Lines 20 on a page. Tamil. Good. New. Extent, 812 granthas.

R. No. 1861.

பூஜாவிதித் திரட்டு.

PŪJĀVIDHI-T-TIRAṬṬU.

Foll. 1—19. Foll. 20 to 23 are left blank. Extent, 238 granthas.

Restoted in 1949–50 from a manuscript described under D. No. 2343. Complete.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2343-ஆம் எண்ணின் பிரதியைப் பிரதி செய்விக்கப் பெற்றதாகும்.

R. No. 1862.

கைமுறை வைத்தியம்.

KAIMUṞAI VAIDDIYAM.

Foll. 24—74. Extent, 574 granthas.

Restored in 1949–50 from a manuscript described under D. No. 2384. Complete.

This is similar to the work described under D. No. 1978.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2384-ஆம் எண்ணின் பிரதியைப் பிரதி செய்யவிக்கப் பெற்றதாகும். அக்குறிப்பில் காண்க.

R. No. 1863.

விரோதி பரிகாரம்.

VIRŌDHI PARIHĀRAM.

Paper. 11¼ × 9¾ inches. Foll. 41. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 820 granthas.

Transcribed in 1949–50 from a manuscript of K. Rangaswami Aiyyangar, Siruvalur, Chingleput district.

Complete.

A work belonging to Vaisṇavite Sect. Authorship is unknown.

(கு-பு)—

இந்நூல், 1949–50-ஆம் ஆண்டில் K. இரங்கசுவாமி ஐயங்கார் (சிறுவளூர்-செங்கற்பட்டு) அவர்களிடமிருந்த ஓலைச் சுவடியிலிருந்து பிரதி செய்விக்கப் பெற்றதாகும். இந்நூல் வைணவ சம்மந்தமானது, வைணவ சம்பிரதாயங்களின் புற நிந்தனைக்குப் பரிகாரமாக அமைந்திலங்குகின்றது. முற்றுமுளது. மணிப் பிரவாள நடையிலாகியது.

R. Nos. 1864 and 1865 (one codex).

Paper. 11¼ × 9¾ inches. Foll. 26. Lines 20 on a page. Tamil. Good. New. Extent, 520 granthas.

R. No. 1864.

சோதிட நூல் (உரையுடன்).
SŌTIḌANŪL (with Commentary.)

Foll. 1—6. Foll. 6—8 are left blank. Extent, 105 granthas.

Restored in 1949-50 from a manuscript described under D. No. 2713.

Incomplete.

This is an astrological treatise.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2713-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ள பிரதியைப் பிரதி செய்விக்கப் பெற்றதாகும். பிறவற்றை அதனில் காண்க.

R. No. 1865.

கண்ணிநுண் சிறுத்தாம்பு.
KAṆṆIṈUṆ CIṞUTTĀMPU.

Foll. 9—26. Extent, 415 granthas.

Restored in 1949-50 from a manuscript described under D. No. 678.

Complete.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 678-ஆம் எண்ணின் கீழுள்ள நூலைப் பிரதி செய்விக்கப்பெற்றதாகும். அதனைக் காண்க.

R. No. 1866.

கௌளிக் காதல்.
GAUḶIK KĀTAL.

Palm leaf. 7 × 1 inches. Foll. 1—28. Lines 4 on a page. Tamil. Fair. Old. Extent, 65 granthas.

Presented in 1949-50 by Sri Palaniswamy Kaundar, Puliyampatti, Palani taluk.

Complete.

This is an astrological work written by Bhāskaran in 56 verses This is similar to the work described under R. No. 354.

Beginning :

போர்கொண்ட கொங்கை அபிராமி பாத மலரருளால்
பார்கொண்ட கோள்நிலை ஆருடக் காதலைப் பாஷ்கரனார்
சீர்கொண்ட பாடலிற் சிந்துந் திவலையைத் தேர்ந்துரைக்கக்
கார்கொண்ட குஞ்சரத் தைங்கரன் பாதம் கருதுவனே. (1)

கருதிய சோதிட நூலாய்ந்து காரியங் கண்டுரைப்பார்
விருதிலைப் பண்டிதத்துக்கு மீதுண்மைஇம் மேதினியில்
பருதிமுத லொன்பது கோளும் பல்லி பகர்குறலா
லறிதரி திண்ணம் வருங்காரியஞ் சொல்லு
[மாண்மைகொண்டே (2)

End :

ஆமாறு நாடகத்திற் றொன்பது மதிக்கை யஞ்சுசேய்
மாமால்புகர் முப்பது மறையோனைந் தாகுமந்த னெட்டாந்
தாமாரி வீழா வீரேந்து துண்டனைச் சாற்றுதற்கு
பாமாலை யோரிரு பத்தைந் திசையும் பாடுவரே.

(கு-பு)— (56)

இந்நூல், சோதிட விஷயமானது. இது போன்ற நூல் 'பள்ளி சாத்திரம்' என்ற பெயரிலும் உள்ளது. இதனை இயற்றியவர் பாஸ்கரர் என்பவர். செய்யுளடிகளால் ஆக்கப்பெற்றது. 56 செய்யுட்களே உள்ளன. பல்லி சொல்லிய நேரத்தில் ஒன்பது கோள்கள் நிற்குமிடத்தைக்கண்டு உண்டாகும் பலன்களைச் சுருக்கிக் கூறுகின்றது.

R. Nos. 1867 to 1869 (one codex).

Palm leaf. 13¼×1 inches, Fol. 20, Lines 7 on a page. Tamil. Injured. Old. Extent, 175 granthas.

Presented in 1949–50 by Sri Palaniswami Kāuṇḍar, Puliyampatti, Palani taluk, Madurai district.

R. No. 1867.

நீலகண்ட மாலை (ஐம்பது).

NĪLAKANṬA MĀLAI (Aimpatu).

Foll. 1—11, Extent, 95 granthas.

Complete.

This is a valuble work on medicine in 50 verses written by Dakṣiṇāmūrtti. It gives the description of many medicines curing various diseases. It gives also some medicines that cure all sorts of diseases.

Same work as that described under R. No. 267 ante :—

Beginning :

நாடியதோர் அகண்ட பரிபூரண மாய
நாதமுதல் கணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர்— — — — — எமைப்பெற்ற
ஆத்தாளும் நாவுதனில் குடிகொண் டேதான்
பாடியதோர் வைத்தியம் அனேக நூலோடே
பகர்ந்தெடுத்துப் பாடினேன் பலநூ லுக்கும்
தேடியதோர் பூதன் சூத்திரத்தில் நன்றாய்
தீட்சையோடு கருக்குரு மந்தர மிதாமே. (1)

தானான ஞானமது பத்து நூறு
தனைக்குறுக்கி ஒருநூறு சாந்தஞ் சொன்னேன்
தேனான வாதமது லெட்சங் காப்பு
செப்பினேன் இரண்டுகாண்ட திறமா யப்பா
பானான யிதைக்குறுக்கி இருநூறுஞ் சொன்னேன்
பாங்கான வயித்தியத்தில் இரண்டுலட்சஞ் சொன்னேன்
கோனான இதைக்குறுக்கி லட்சஞ் சொன்னேன்
கூறியதி லப்போதிற் கூறி னேனே. (2)

End:

கண்டக்கால் வாதமெல்லாம் கீழப் போட்டும்
கருவான சவுக்கார மகிமை தன்னில்
விண்டக்கால் நசித்திடுவாய் நூல்கொ டாதே
வேதாந்த ஞானியென்றால் ஈயான் பாருத்
தொண்டுசெய்வார் பதினாறு வருஷங் காத்தால்
சோதித்த பின்பீவாய் சொன்னேன் சொன்னேன்
சண்டமா ருதம்போலே வெளிய தாகச்
சாத்தியதோர் வயித்தியம் ஐம்பதுவு முற்றே. (50)

தட்சிணாமூர்த்தி யருளிய நீலகண்ட மாலை வைத்தியம்
ஐம்பதும் முற்றும்.

(கு-பு)—

இந்நூல், வைத்திய விஷயமானது. தட்சிணாமூர்த்தி இயற்றியதாக வுள்ளது. கைமுறை வைத்தியமாகச் செந்தூரங்களுக்கெல்லாம் தலை யாய செந்தூரமும், கற்பம், கண்டமாலை, கரப்பான், வாதம், கர்ப்ப நோய் முதலானவைகட்கு மருந்து செய்யும் முறையும், கொடுக்குமுறை

யும் கூறிச் செல்கிறது. ஒரே மருந்தில் பல நோய்களைக் கண்டிக்கும் மருந்துகளையும் கூறி வருகிறது. முற்றுமுளது. 50 செய்யுட்களாலாகியது. பழுதுபட்டுளது. சுருக்கமாக, தட்சிணாமூர்த்தி செய்த வைத்திய நூல்கட்கெல்லாம் பொதுச் சூததிரம் எனக் கொள்ளலாம். இந் நூல் மூவருடக் கேட்டலாக்கு, 267-ஆம், எண்ணில் வருணிக்கப்பட்டது. காண்க.

R. No. 1868.

லோகமாரண சூத்திரம்.

LŌKAMĀRAṆA SŪTTIRAM.

Foll. 12—16. Extent, 35 granthas.

Complete.

This is a work on medicine called Lōkamāraṇasūtra written by Agastiya.

Beginning :

கேளப்பா நவலோக மாரணந்தான்
கெடியான வயித்திய மிருநூற் றைந்துந்
தேளப்பா கொட்டுதல் போலிந்தச் சூட்ச
சூத்திரஞ் சொல்வேன் இரும்புக்குத் தாரங்கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத் துக்கு
மால் தேவி வெடியுப்பு வெள்ளை சீனம்
சூளப்பா செம்புக்குக் கெந்தி வங்கஞ்
சூதமொடு துருதவெள்ளை சார மூன்றே. (1)

End :

மஞ்சளு மிருவகையும் பலவிதங் கூட்டிப்
பாங்குடனே அரைத்து எண்ணெயிலே சேர்த்துத்
தஞ்சமுள எண்ணெய்தனைக் காய்ச்சி மூழ்கச்
சகலபிணி தீர்ந்துவிடுஞ் சஞ்சீவியாமே. (20)

நாமப்பா பற்பமுதல் தூலத் துக்கு
நன்றாகக் கருக்கிடையும் பாகஞ் சொன்னேன்
நாமப்பா வெளிதோணச் சொன்னோம் பாரு
நலமுள்ள இருபத்தி யொன்று முற்றே. (21)

அத்தியர் இருநூறுள் சுகலோக மாரணம் முற்றும்.

(கு-பு)—

இந்நூல், அகத்தியரருளிய (லோக மாரண சூத்திரம்) என்ற வைத்திய நூலாகும். அகத்தியரருளிய இருநூற்றைந்துக்கும் பொதுச் சூத்திரமாகச் செய்யுள் இருபததொன்று லாக்கப்பட்டதென முன்னிரண்டு செய்யுளடிகளால தெளிவுறுகிறது. முற்றுமுளது. சிதைந்துளது.

R. No. 1869.

வைத்தியச் சில்லறை.

VAIDDIYA-C-CILLARAI.

Foll. 17—20. Extent, 45 granthas.

Presented in 1949–50 from Sri Palanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Palani taluk Madurai district.

(கு-பு)—

இந்நூல், அகத்தியர் குழம்பு, வாய்வு, வயிற்றுவலி, இவற்றிற்குக் கஷாயம், சூட்டுக்கு மருந்து, வயிற்றுவலிக் குளிகை, சகல ரணத்துக்கு எண்ணெய் முதலியவைகளைப்பற்றிக் கூறுகிறது.

R. No. 1870.

வசிய மந்திரம்.

VAŚIYA MANTIRAM.

Palm leaf. 7 × 1 inches. Foll. 1—14. Lines, 4 on a page. Tamil. Good. New. Extent, 20 granthas.

Presented in 1949–50 from Sri Palanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Palani taluk, Madurai distrcit.

Complete.

This is a work on magic written by some unknown author. Gives the mantras which when pronounced enchant people.

(கு-பு)—

இந் நூலில் பலவிதமான வசிய மந்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில், சில மந்திரங்கட்குச் சக்கரங்களும் உள்ளன. நன்றாக உளது.

R. No. 1871.

இருது பலன் (வசனம்).

IRUTU PALAN (VACANAM.)

Palm leaf. × 1 inch. Foll. 1—1[illegible]. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 50 granthas.

Presented in 1949–50 from Sri Palanisāmi Kounḍer, Puḷiyampaṭṭi, Palani taluk, Madurai district.

Incomplete.

An astrological treatise written by some unknown author. This is similar to the work described under R. No. 1990.

(கு-பு)—

இந்நூல், சோதிட வகையினைச் சார்ந்ததாய், பெண்கள் இன்னின்ன காலத்திலே ருதுவானால் இன்னின்ன பலாபலன்களை அடையக்கூடும் என்று கூறப்பட்டிருக்கிறது. முற்றும் முடிந்ததாகத் தெரியவில்லை. பழுது பட்டுள்ளது.

R. Nos. 1872 and 1873 (one codex).

Palm leaf. 6½ × 1 inches. Foll. 1—16. Lines 4 on a page. Tamil. Good. New. Extent, 64 granthas.

Presented in 1949–50 by Sri Palanisvāmi Kaundar, Puliyampatti, Palani taluk, Madurai district.

R. No. 1872.

துடி நூல்.

TUDI NŪL.

Foll. 1—9. Extent, 32 granthas.

Complete.

This foretells the fortune according to the throbbing of ones different limbs and hence the title. Author is not known.

Beginning :

சிறப்புப் பாயிரம்
(வெண்பா)

ஆராயுஞ் செந்தமிழா லாயப் பயனெடுத்துச்
சீரார் துடி நூலைச் செப்பவே—காரார்
களத்து விநாயகன் காத்தருளும் பூத
களத்து விநாயகன் காப்பு.

(இந்நூல், ஆசிரியர் பெயரும், இந்நூற் பெயரும், இந்நூல் வந்த வழியும், இந் நூலளவு முணர்த்துகிறது.)

மன்னன விக்கிர மாதித்தன் சொல்வழிப்
பன்னிரண் டொருநூல் விருத்தப் பாவின்
றுன்னு சீர்துடி நூலைத் தொகுத்தனன்
நன்னிலம் புகழிராம நாதன் றனே.

(விருத்தம்)
நூல்

சீருடனே துடிக்கி லுச்சி யிடரே நீங்கும்
சிறந்த உச்சி வலந்துடிக்கி லச்சஞ் சொல்லும்
பேருடனே யுச்சியிடம் பெருமை யாகும்
பின்றலையே துடிக்கில் சத்ருக்க ளுண்டாம்
சார்புடனே தலையடங்க றுடிக்கு மாகில்
தலைவனாற் பெருமை சம்பத்து முண்டாம்
நேருடனே நெற்றியிடந் துடிக்கு மாகில்
நேர்வார்த்தை சம்பத்து நிறையவாமே.

End :

கூறுவலப் புறவடியிற் றுடிக்கியாங்
கோதிடப் புறவடியே வழக்காய் வெல்லு
மூறும்வல துள்ளங்காற் பொருள்வக கூடு
மூன்றுமிட துள்ளங்காற் பிணியாய் மீளும்

காறுமணி கழற்கணைக்காற் சிவிகை யேறுங்
காலவிர லிரைந்ததனிற் றுடிக்கு மாகில்
நாறு மலர்த் திருமகளுஞ் சேரும்வேணு
நன்மையுமுண் டாம்வாழ்வும் நற் சீராமே.

(கு-பு)—

இந்நூல், மனிதனுக்கு வரும் எதிர்காலப் பலன்களை அவனது உறுப்புக்கள் துடிக்கின்றவாற்றான் உணர்த்துகின்ற காரணத்தினால் "துடிநூல்" என்னும் பெயர் பெற்றது. முற்றுமுளது. 16 செய்யுட்களாலாகியது.

R. No. 1873.

தும்மல் நூல் (மூலமும் உரையும்) முதலியன.
TUMMAL NŪL (MŪLAMUM URAIYUM), etc.

Foll. 10—20. Extent, 32 granthas.

Seems to be incomplete.

This is a work describing the effects of his coughs in particular direction and in particular time.

Beginning :

சிறப்புப்பாயிரம்
(இன்னிசை வெண்பா)

நூலோர் மனிதருக்கு நோக்கி யறிவுடைய
நூலோர் மொழிந்ததும்ம நூலைப்—பயிலுதற்கு
நித்தன் றிருமகளும் நீளங்கு பாச
கத்தன் நினைப்படியே காப்பு.'

இந்நூல், ஆசிரியர் பெயர் முதலியனவற்றை யிவ்வேட்டிற்கு மேலேட்டுக்காரர் குறியாததனாலே நாமுமிங்கணங் குறிக்கப்பட வில்லாதநாயினும் மேலோர் சொல்லியது மெய்யன்றி வேறில்லை. ஆகவே இதுவே யிலக்கணமாகக் கொண்டு தெளிக. தேவி சகாயம், பு-மீ. பழனிச்சுவாமி சகல குற்றமும் தடிந்தாட் கொள்க.

நூல்
(விருத்தம்)

நாயிறு கிழக்குத் தும்மல் நலமிலைத் தென்கிழக்குத்
தீயெழுந் தெற்கு நன்று சிறப்பிலை நிருதி கேடு
நேயமாம் மேற்கு மிக்க நிலவட மேற்கு நன்று
ஞாயிறு வடக்கு லாபம் நவின்ற வீசான்யம் தீதே.

(இ-ள்) ஆதிவாரத்தில் தானிருக்கு மிடத்திற்குக் கிழக்குத் திசையில் தும்பினால் நன்மையில்லை. அக்கினி மூலை தீக்கலகம், தெற்கு—நன்மை. நிருதி மூலை சிறப்பில்லை. மேற்கு—கேடுண்டாம். வாயுமூலை நன்று. வடக்கு இலாபம், ஈசான்ய மூலை—தீமையுண்டாகும்.

End :

காரிதான் கிழக்குத் தென்கீழ் மூலையுங் கரும மாகா
சீருறு தெனற்குத் தென்மேன் மேற்குடன் வாயுவு செப்பும்
பேரிகை முழக்கத் தோடே பெரியவர் வரவுங் கூறும்
மாரியும் வரண்டு போகும் வடதிசை வடகீழ் மூலை, எ.

(கு-பு)—

இந்நூல், ' தும்மல் நூல் ' என்ற பெயரால் ஏழு பாட்டுக்களாலாகியது. முடிந்ததாகத் தெரியவில்லை. எந்தத் திசையில் தும்மினுல் என்னென்ன பலன் உண்டாகும் என்பதைப் பற்றிக் கூறிச் செல்கிறது. இதற்குப் பிறகு இன்னின்ன முகமாயிருந்து கொண்டு இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதும் தில்லையம்பூர் சந்திரசேகர கவிராசரா லியற்றப்பட்ட வருடாதி நூலுள் பல்லி, காகசை, மூஞ்சூறு, தும்மல் இவற்றின் பலனும், பதினாறு திக்குப் பல்லிக்காதலும், ஆந்தைக்காதலும் சகுன சாத்திரமும் ஆகியன கூறப்பட்டுள்ளன.

R. Nos. **1874—1876** (one codex).

Palm leaf. 7 × 1 inches. Foll. 1—21. Lines. 7 on a page. Tamil. Fair. Old. Extent, 184 granthas.

Presented in 1949-50 by Sri Paḷanisāmi Kaunḍar, Puḷiyampaṭṭi, Paḷani taluk, Madurai district.

R. No. **1874.**

இரத்தினச் சுருக்கம்.

IRATTINACCURUKKAM.

Foll. 1—5. Extent, 44 granthas.

Complete.

Similar to the work described under D. No. 35.

Beginning :

விநாயகர் வணக்கம்.

ஆயிழையா ரெண்ணுன்கு வயதினுக் குவமை
யாயினவ லங்கார மாமிரத்நத்—தூய
சுருக்கந் தனைப்பகரத் தொந்திவயிற் றைந்து
கரக்குஞ் சரமுகனே காப்பு. (1)

உள்ளடிக்கு.

சூத்திரம்.

அம்புயஞ்சு ணக்கணுக் கனிச்சமாந் தளிரணைச்
செம்பஞ்சு முயல்வயின் செயலை யுள்ளடிக்கே. (2)

End :

கட்டளைக் கலித்துறை.

அலங்கார ரத்தினச் சுருக்கந் தனைக்கற் றறிபவர்சொற்
றலங்காரம் போலும் புலமைக் கியல்பென்று சொல்லுவர்நாய்
இலங்கார வாணி கிருபா கடாட்ச மி விருபெறுக்
கலங்கார் சபைக்குக் குறிப்பா லுதாரணங் காட்டுவரே. (34)

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 35-ஆம் எண்ணில் குறிக்கப்பெற்ற கருத்துக்களையே அதே பெயரில் சூத்திர மூலமாகப் பாடப்பட்டுள்ளது. முற்றுமுளது.

R. No. 1875.

உவமான சங்கிரகம்.
UVAMĀNA SAṄKIRAHAM.

Foll. 6—13. Extent, 70 granthas.

Complete.

This contains all the similes by which a lady's limbs are described. This is same as the work described under D. No. 41.

Beginning :

கடவுள் வணக்கம்.

அவயவ மின்னார்க ளனங்கன் றெருழிற்கு
மூவமான சங்கிரக மோதக்—கவுளடிக்கட்
இந்துமத வருவிச் செங்கட் புகாவதனத்
தைந்துகரத தன்காவ லாம்.

உள்ளடிக்கும் கால் விரல்களுக்கும்.

வசைமனை மாந்தளிர் முயலின் வயிறுஞ் செடிலை யனத்தூவி
சுனகனுக்குஞ் செப்பஞ்சு துகடீ ரனிச்ச மிவைமடவார்
வினவுள் ளடிநேர் பெருங்காலின் விரல்க டனக்கு மஞ்சண்முளை
யனவென் றுரைப்பர் துவர்க்கொம்பு மாமென்று வந்து சொல்
[வாயே. (2)

End :

சுடரான மதிக்கிரணம் பாய மாதர்
துடித்து நொந்து வாய்புலம்பி யலைவார் பூவின்
மிடரான குயிற்றெனிக்க மோக மீறி
மேவிவிட்ட வாடவர்மே லாவி செல்வார்
துடரான தென்றன்மேன்மேற் றுவும் போது
தூக்கமில்லை நோக்கிமனம் வெவ்வே றுவாள்
படருகின்ற கடற்றெனித்தால் மோக மீறிப்
பயத்தை யுற்றுச் சயனம்போய் படுப்பார் காணே.

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல், பெண்களின் அவயவங்கட்குக் கூறும் உவமைகளை வர்ணிப்ப தாகும். சூத்திரப்பாக்களாலாகியது டிஸ்கிருப்டிவ் காடலாகு 41-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டது இதுவே. முற்றுமுளது. இறுதி ஏட்டில் அகப்பொருளைத் தழுவிய இரண்டு பாட்டுக்கள் உள.

R. No. 1876.

சிதம்பரப் பாட்டியல் (பொருத்தவியல்).

CIDAMBARA-P-PĀṬṬIYAL (Poruttaviyal).

Foll. 14—21. Extent, 70 granthas.

Incomplete.

This contains Poruttaviyal, a part of the work Cidambara-p-pāṯṯiyal which has been already published.

(கு-பு)—

இந்நூலில், சிதம்பரப் பாட்டியல் என்னும் நூலினுள்ள ஒரு பகுதி யான பொருத்தப்பாட்டியல் மட்டுமே உள்ளது. இந்நூல் அச்சியற்றப்பட் டுளது. இதில் இப்பகுதி முற்றுமுளது.

R. No. 1877.

வைத்திய முறை (வசனம்).

VAIDDIYAMUṚAI (Vacanam).

Palm leaf. 11½ × 1¼ inches. Foll. 16. Lines, 6 on a page. Tamil. Very-much. injured. Old. Extent, 80 granthas.

Presented in 1949-50 by Sri Paḻanisāmi Kaunḍar, Puḷiyampaṭṭi, Paḻani Taluk, Madurai district.

Incomplete.

This is a work on medicine.

(கு-பு)—

இந்நூல், வைத்தியமுறைகளை ஒருவர் அனுபவப்பட்டவாறே எடுத் துரைக்கின்றது. ஆனால், நூல் மிகமிகப் பழையதாய் உள்ளதால் எதிர் பார்க்கும் பலன் கிடைக்காது.

R. No. 1878.

குவலயானந்தம்.

KUVALAYĀNANDAM.

Palm leaf. 17 × 1¼ inches. Foll. 1—150. Lines, 8 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,200 granthas.

Foll. 1 and 2 ; 10—41 ; 95—138 are left blank.

Presented in 1919-50 by Sri Paḻanisāmi Kaunḍar, Puḷiyampaṭṭi, Paḻani Taluk, Madurai district.

Incomplete.

This is a translation of Kuvalayanandam by Māṇikka Vācaka Tampirāṉ.

(கு-பு)—

இந்நூல், (குவலயானந்தம்) என்னும் பெயருடையதாய் வடமொழியி லுள்ள 'குவலயானந்தம்' என்ற நூலின் மொழி பெயர்ப்பாக அமைந் துளது. இதை இயற்றியவர் மாணிக்கவாசகத் தம்பிரான் என்பவர். மிகவும் சிதிலமாக உள்ளது. முற்றுமில்லை. இடையிடையே பல ஏடுகள் காணப்பெறவில்லை.

R. No. 1879 and 1880 (one codex).

Palm leaf. 11 × 1¼ inches. Foll. 1—20. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 360 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kauṇḍar, Puḻiyampaṭṭi, Paḻani taluk, Madurai district.

R. No. 1879.

சிவ புண்ணியத் தெளிவு.

ŚIVA PUṆṆIYA-T-TEḶIVU.

Foll. 1—12. Extent, 215 granthas.

Complete.

This work by an anonymous author describes the ways of worshipping various Śiva temples. The above topic is said to be a theme of dialogue between Śiva and Nandi.

Beginning :

காப்பு.

பழகிய பதித்துவப் பான்மை யெய்தவும்
முழுகிய பசுத்துவ முற்று நீங்கவு
மொழுகிய மும்மதத் தொளிகொண் ஞானமா
ரழகிய பிள்ளையா ரடிகள் போற்றுவாம்.

சபாநாதர் வணக்கம்.

உலகினு முயிரினு மொன்றி நின்றருள்
குலவிய வொழியுயிர் குறிக்க வைந்தொழி
லிலகிய மன்றினு ளெழினடஞ் செய்வோன்
வலமிகு மலரடி வழுத்து வாமரோ.

. . . . . .

ஆதியில் நாதி சச்சி தானந்த வமலன் றனே
யோதிய விமல ஞான முணர்வுயிர்க் குறைமை நோக்கிச்
சோதிசேர்க் கருணை மேனி தொடக்குப்பின் னருளாற் கூறு
நீதிசேர் காமி காதி நிறைமொழி யிருபத் தெட்டாம் (20).

End :

உத்தம மத்திம அதம தேசிகராவன்.

(வேறு)

ஆகமத்தி லிருபத்தையாயிர நற்சுலோக மறிந்த
தேசிக னைகநிட் டனெம்பதி னுயிரந்தான்
மோகமறவா ராய்ந்த தேசிகன் மத்திமனே
முறைமையிணு லோரிலக்க முயன்றவ னுத்தமனே.
யேகனம லேசனருள் காமிக முண்ணுகவியம்
பிடுயிடு மிருபத் தெட்டாக மத்துமிஃதே
பாகமிகு சாராற் சாரம் எனவோ ரியலைப்
படித்துணர்ந்தோ னியல்களெல்லாம் படித்துணர் பண்டிதனே.
(143)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல், சிவபுண்ணியத் தெளிவு என்ற பெயரான் சிவாலயங்களில் சென்று தரிசிக்கும் முறைகளைச் செவ்வனே எடுத்துக் கூறுகின்றது. இந்நூலைச் சிவன் நந்திகேசுவரர்க்கு உரைத்துக் கொண்டிருந்ததாகவும், அதில் சிந்திய கருத்தே இந்நூலாகப் பாடப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முற்றுமுளது. மிகமிகச் சிதலமாயது.

R. No. 1880.

புட்பவிதி.

PUṬPAVIDHI.

Foll. 13—20. Extent 145 granthas.

Complete.

This is a work written by Gñānprakāśa describing the different ways of adorning the Lord with various flowers. This is same as the work described under R. No. 1357.

(கு-பு)—

இந்நூல், ஞானப்பிரகாசர் என்பவரால் இயற்றப்பட்டது. இறைவனை வழிபடும்போது அணியத்தக்க பூ முறைகளை எடுத்தியம்புகிறது. முற்றுமுளது. மிகச் சிதிலமாயது. மூவருடக் காட்லாக்கு எண் 1357-இல் வந்துள்ளதேயாகும்.

R. No. 1881.

சினய்யங்கார் பேரிற்கும்மி.

SĪNAIYAṄGĀR PĒRIṞKUMMI.

Palm leaf. $8\frac{1}{4} \times 1$ inches. Foll. 1—52. Lines, 4 on a page. Tamil. Fair. Old. Extent, 312 granthas.

Presented in 1949-50 by Śrī Paḻanisami Kauṇḍar, Puḻiyampatti, Paḻani taluk, Madurai district.

Complete.

This work in the form of Kummi narrates the way in which the East India Company behaved towards one, Cīna Aiyangār, Tahsildar of South Paḷani. Style is simple. This work gives an idea of the sufferings of Indians under British Rule.

Beginning :

ஆனைமுகன் ஆறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணுடு. (1)
சீர்கொண்ட தென்பழ னுபுரித் தாசில்தார்
சீனய்யங்கார் தீரன் மீதில்
பார்கொண்ட கும்மிதமிழ்ப் பாட நல்ல
பார்பதித் தாயே அருள்செய் வாயே.
சிந்தை மகிழ்ந்துநான் சீனய்யங் கார்மீதில்
சீருடனே கும்மிப் பாட்டுரைக்கத்
தந்திமுக னேகண பதியே யுந்தன்
தாளிணை மேன்மேலுங் காப்பாமே.

End :

வானவர் விண்ணவர் தான்வாழி யின்னம்
மதுரை மீனுட்சிதான் வாழி
தானவர் சத்திசிவன் வாழி தமிழ்ப்
பாடினவன் இளைதான் வாழி— (201)
நீணிலம் புகழும் கும்பினியார் வாழி
நெல்லீசன் துரை தான்வாழி
சீனய்யங் காருடன் வாது செலுத்திய
சின்னத் தம்பிதீரன் தான்வாழி (202)
பாடிப்படிப்பவர் தான்வாழி யின்னம்
பழனிச் சீமையார் தான்வாழி
கூடிய பேர்களும் அப்புநகர் வாழி
குடிகளனை வோருந் தான்வாழி. (203)

(கு-பு)—

இந்நூல், கம்பெனியார் ஆட்சி இந்தியாவிலிருக்கும்போது தென்பழனி தாசில்தாராயிருந்த சீனய்யங்காரிடம் கம்பெனியார் நடந்துகொண்ட விதங்களைப்பற்றிக் கும்மிமெட்டில் எடுத்துரைக்கின்றது. சில எழுத்துப் பிழைகள் உள. நடை நன்றுகவுளது. இதனுல் பிரிட்டிஷார் ஆட்சி அனுபவங்களை அறியலாம். முற்றுமுளது.

R. Nos. 1882 and 1883 (one codex).

Palm leaf. $9\frac{1}{4} \times 1\frac{1}{4}$ inches. Foll. 1—11. Lines, 5 on a page. Tamil. Fair, Old. Extent 55 granthas.

Presented in 1949–50 by Sri Paḷanisāmi Kauṇḍar, Puliyampaṭṭi, Paḷani taluk, Madurai district.

R. No. 1882.

அகத்தியர் சித்தாதி எண்ணெய்.

AKATTIYAR SIDDHĀDI EṆṆAI.

Foll. 1—4. Extent, 20 granthas.

Complete.

This is a medicinal treatise written by Agastiya. This describes a medicine by name Ciddhādi Eṇṇai that is a curer of all types of diseases.

Beginning :

சீர்சிறந்த உடல்தனிலே கவுசை ரோகஞ்
சிரசுகளிற் குடியிருந்த மற்ற ரோகம்
பார்தனிலே விழுந்தெழுந்த சூலை ரோகம்
பம்பரம் போலாடுகின்ற நீராம்பற் கட்டி
நீரிழிந்த கற்கூடு நிர்மலத் தின் கட்டு
நேரான சொறியோடு ரணங்கள் தானும்
பேர்பெரிய பெரும்பாடு நாவ டைப்பு
பின்னுமொரு கிரந்தியொடு மேகந் தானே.

End :

பேரிட்ட சித்தாதி எண்ணெய் தன்னை
புலத்தியனே பூஜைசெய்து பூரணமா யெவர்க்கும்
நேரிட்ட சிறியோர்க்கு மாகும்
நிலைமையாய்ப் பத்தியங்கள் நீகூட் டாதே
வாரிட்ட யிந்நூலை வெளிவி டாதே
வாங்காதே தோஷத்தை வாங்கி டாதே
காரிட்ட பண்டிதங்கள் கருத்தாய்ப் பார்த்து
கண்டுகொள்ளு யிவ்வெட்டு கடாக்ஷ முற்றே.

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூலில், அகத்தியர் செய்ததாக "சித்தாதி எண்ணெய்" என்ற பெயரில் சகல ரோகங்கட்கும் மருந்து வகைகள் கூறப்பட்டுள்ளன. முற்றுமுளது. சுருக்கமானது.

R. No. 1883.

அகத்தியர் குளிர்ச்சி எண்ணெய்.

AKATTIYAR KUḶIRCCI EṆṆEI.

Foll. 5—11. Extent, 35 granthas.

Complete.

This is a complete work on medicine written by Agasthiya.

(கு-பு)—

இந்நூலும் மேல் வந்துள்ள நூல் போன்றதே. பழுதுபட்டும் பிழையா கவும் உளது.

R. No. 1887.

சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்).

CIDAMPARAPPĀṬṬIYAL (with commentary).

Palm leaf. 8 × 1 inches. Foll. 1—73. Lines, 5 on a page. Tamil. Injured Extent, 300 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kaundar, Puliyampatti, Palani taluk, Madurai district.

Incomplete.

This work has already been published. It contains Poruttaviyal and Marabiyal with commentary. The published text does not have the commentary of these two parts.

(கு-பு)—

இந்நூல், அச்சியற்றப்பட்டுள்ளது. சிதம்பரப் பாட்டியலின் பொருத்த வியல், மரபியல் இவை இரண்டிற்கும் முழுதும் உரை உளது. அச்சிடப் பெற்ற நூலில் இவையிரண்டியல்கட்கும் உரையில்லை. உரை வகுக்கும் முறை நன்றாக உள்ளது.

IRATTINAC CURUKKAM.

Foll. 1—14. Extent, 70 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kaundar, Puliyampatti, Palani taluk, Madurai district.

Complete.

This work in 41 beautiful and elegant verses, describes Lord Śiva in detail. Hence it differs from other works of the same title. Author is not known.

Beginning :

அத்திமுகத் துத்தமனை
நித்தம் நினை சித்தமே.
(கலித்துறை.)

சோருந் துகிலும் வளைகல நாணுந் துணிந்துமட
லூருந் தொழிலு மொழிகூர் பசலையு மோடரிக்கண்
ணீருங் கிளியும் பருமணக் கூடலும் நின்றரற்ற
மூருந் தனியு மறைபொன் நெஞ்சமு மூண்டெனபரே.

End :

கங்கையும் வில்வமும் என்பு மரவுங் கடுக்கையும்வெண்
டிங்களுந் தும்பையு மாறு மெருக்குந் திகழ்ந்தறுகும்
பங்கய னன்னத் துருவாகி நாடிப் பரிந்தறியா
வெங்கள் பிரானபவ மூச்சடை மீதினி லோபெற்றதே.

(கு-பு)—

இந்நூல், 'இரத்தினச் சுருக்கம்' எனப் பெயர் பெற்றதாயினும் இப் பெயர் பெற்றுவந்த முன்னூல்கட்கும் இதற்கும் வேறுபாடு காணப்படுகின்றது. இது சிவபெருமானைக் கேசாதிபாதமாக வருணிக்கிறது. செய்யுள் நடை உயர்ந்தது. முடிவு பெற்றதாகக் காணக்கூடாதாயினும் 41 செய்யுட்களே பெற்றுளது. ஆசிரியர் பெயர் தெரிந்திலது.

R. No. 1888.

கந்தர் கலிவெண்பா.
KANDAR KALIVEṆPĀ.

Palm leaf. 7¼ × 1 inches. Foll. 1—21. Lines, 6 on a page. Tamil. Fair. Old. Extent, 79 granthas.

Presented in 1949–50 by Sri Paḻanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Paḻani taluk, Madurai district.

Complete.

This is a work written by Kumara Guruparar. This work has been already published. This is same as the work described under D. No. 301.

(கு-பு)—

இந்நூல், குமரகுருபரர் இயற்றிய கந்தர் கலிவெண்பா வெனும் பெயருடையது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 301-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டுளது. முற்றுமுளது. அச்சிடப்பெற்றது.

R. No. 1889.

சிந்தாமணி குணவாகடம்.
CINTĀMAṆI GUṆA VĀKAṬAM.

Palm leaf. 11¼ × 1¼ inches. Foll. 1—114. Lines, 9 on a page. Tamil. Injured. Old. Extent, 1,825 granthas.

Presented in 1949–50 by Sri Paḻanisāmi Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai district.

Complete.

The first 25 folios of the manuscript deals with Nāḍi astrology. From the 26th folio to the end the manuscript deals with many medicines and antidotes and hence will be very useful for physicians. The latter part on medicine is a translation in Tamil of the original in Sanskrit.

Beginning :

ஆதியங் கடவு ளாணை அடியிணை போற்றி செய்து
தீதுறு வியாதி தன்னைத் தெளிவுட னறிய வேண்டிக்
கோதிலா நல்லோர் பேசுங் குணமிகு பாடந் தன்னை
நீதிசேர் படியின் மீதே நெறியுட னுரைத்தார் மேலோர். (1)

சொன்னதோர் குணங்கள் தன்னைத் தொகுத்துநீ ரறிய வேண்டிப்
பின்னையுங் குணவ ளுகிப் பேசிய குணபா டத்தை
வண்மையா யறி (நோ) ளுர் சொனன மறுபடி மருந்து தானு
மின்னமும் குணபா டத்தை யியல்பிளு லறிநது கொள்ளே. (2)

* * * *

ஆயு (ள்) ர் வே தந்தன்னி லட.வுள வடநூல் தன்னைத்
தாயெனக் கண்டு கொண்டு தமிழினுல் விரிப்ப தற்கு
மாயமால் மருகோன் மிக்க வல்லபை யிடத்தோன் கங்கை
காயமாம் பரமா னந்தக் கணபதி வணக்கஞ் செய்வாம். (5)

End :

தேளென வெறிந்து சற்றே திருகுன்ம மியங்கு மாகில்
வேளெனும் விளிய ளோடே மிக்கதோர் மய்ய லாகி
வாளெனும் விழியா ளோடே மருவிநீ வந்தா யென்று
கோளரி குன்றில் மேவும் குருமுனி யருளிச் செய்தான். (8)

நாடிவகை விருத்தம் முற்றும்.

சங்கம் வேர்க் கற்பம் (வசனம்).

(கு பு)—

இந்நூல், சிந்தாமணி குணவாகடம் என்னும் பெயர்த்தாய், முதலில் 25 ஏடுகள்வரை நாடி நிதானம், நாடிவகை முதலியனவற்றை விருத்தப் பாக்களால் தெளிவுற எடுத்துரைக்கின்றது. 26-ஆம் ஏடுதொடங்கி முழுதும் பலப்பல வியாதிகட்கு மருந்துசெய் வகைகளும் அதனை அருந்து முறைகளையும் அதனால் தீரும் நோய்களையும் முறையானே எடுத்தியம்புகிறது. இந்நூல் பெரிதும் வைத்திய நிபுணர்கட்குப் பயன்படும். இது வடமொழியிலுள்ள ஆயுர்வேத நூலைத் தழுவித் தமிழில் செய்யப்பெற்றதாக முதலில் குறிக்கப்பட்டுளது. முற்றுமுளது. சிறசில பிழைகளுமுள. பழுதுபட்டுளது.

R. No. 1830.

ஆறெழுத்தந்தாதி.
ARELUTTU ANTĀDI.

Palm leaf. 7¼ × ¼ inches. Foll. 1—54. Lines, 4 on a page. Tamil. Fair Old. Extent, 250 granthas.

Presented in 1949–50 by Sri Paḷaṇisāmi Gouṇḍar, Puḷiyampaṭṭi, Palani taluk, Madurai district.

Complete.

This is a complete work of an anonymous author; its other name being Ṣaḍakṣaravandāṭi. This is same as the work described under D. No. 1228.

(கு-பு).—

இந்நூல், மூவருடக்காட்லாக்கு, 1228-ஆம் எண்ணில் வந்துள்ளதே யாகும். இதற்கு மற்றொரு பெயர் "சடக்கர வந்தாதி" என்று தெரிகிறது. இது முற்றுமுள்ளது.

R. No. 1891.

வைத்தியச் சில்லறை.
VAIDDIYAC CILLARAI.

Palm leaf. 8¾ × 1 inches. Foll. 1—22. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 30 granthas.

Presented in 1949–50 by Sri Paḷanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Palani taluk, Madurai district.

(கு-பு)—

இந்நூல், பலவித வைத்தியமுறைகளையும் மந்திர வகைகளையும் எடுத்துக்கூறுகிறது. பழுதுபட்டுளது. பிழையுளது.

R. No. 1892.

பிள்ளைப் பிணி வாகடம்.
PIḶḶAIP PIṆI VĀKAṬAM.

Palm leaf. 7 × 7 inches. Foll. 1—154. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 770 granthas. Printed.

Presented in 1949–50 by Sri Paḷanisāmi Gouṇḍar, Puḷiyampaṭṭi, Paḷani taluk, Madurai district.

Complete.

This is a treatise on medicine dealing with the causes and methods of curing the various diseases of children. This work has been already published. This is same as that described under R. No 1797.

Beginning :-

முதல் திங்கள்

கெற்பந் தரித்த முதல் மாசத்துக்குக் கொல்லி யெனும் பேயணை யும் ; அதன்குணம் :—கெற்பத்தை உதிரமாய்ச் சாய்க்கும். இதற்குப் பலி:— ஏழு பிடி நெல்லரிசியும் இலைக்கறியும் பல கறியுமாக்கிப் பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்புடன் முறத்திலிட்டு அந்தியில் நாற்சந்தியில் வைக்கவும்.

இரண்டாந் திங்கள்.

சோதி யென்னும் பேயணையும், அதன் குணம் :—கெற்பத்தை உதிர மாகக் குடிக்கும். இதற்குப் பலி—இரட்சியும் உதிரமும் நாற்சந்தியில் பேயின் பேர் சொல்லிவைக்கவும். வயிற்று வலியுண்டானால் செங்கழு நீர், கொட்டி, ஆம்பல் இந்த மூன்று வகைக் கிழங்கும் பசுவின்பால் விட் டரைத்துப் பாலில் கலக்கி மூன்று நாள் கொடுக்கவும்.

End :

சூலைக்கட்டுக்கு மருந்து

கோழிக்காரம், வெற்றிலை, தும்பைத்தழை, சங்கங்கொடி, கொழிஞ்சிக் கொடி இவையெல்லாம் வறுத்துத் தூளாக்கி ஒருபிடி வி(ள)ழக்கெண்ணெ யில் (மெய்க்கவும்) [வைக்கவும்]. சிலுப்பா மரத்துப் பட்டையும் ஈரவெங்காய மும் தயிருடன் கூட்டி (மெய்க்) [வைக்]கவும். விழிம்பிச் சாறு காய்ச்சித் துவளை போடவும். வில்லைச் சிராய், வெப்பூலாம்வேர், நஞ்சுண்டாம் வேர், விழாமரத்துச்சிராய், பாலைத்தழை இவையெல்லாம் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கட்டி(யாம்) (விடவும்).

(கு-பு)—

இந்நூல், ‘ பிள்ளைப் பிணி வாகடம் ’ என்னும் பெயர்த்து. பிள்ளை உற்பத்தியாகிய நாள் தொடங்கி 16 ஆண்டுகள்வரையில் அவற்றிற்கு ஏற்படும் நோய் முதலானவற்றின் குறி, குணம், அது தீர்க்கும் வழி, மருந்து வகை முதலியவைகளை முறையானே எடுத்துரைக்கின்றது. முற்றுமுளது. பிழையுள. பழுதுபட்டுளது. இது போன்ற நூல் அச்சிடப்பட்டுளது.

R. No. 1893.

அனுபவ வைத்தியம்.
ANUBHAVA VAIDDIYAM.

Palm leaf. $8\frac{1}{4} \times 1\frac{1}{4}$ inches. Foll. 1—124. Lines, 8 on a page. Tamil. Injured Old. Extent, 992 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Palani taluk, Madurai district.

Complete.

This is another treatise on medicine written by some unknown author.

(கு-பு)—

இந்நூல், பல அனுபவ வைத்தியமுறைகளைச் சொல்லுகிறது. உட்புறம், வெளிப்புறம் இவைகளிலுண்டாகும் நோய்களின் பெயர்களைக்கூறி அவைகளுககேற்ற நோய் மருந்துகளையும் கூறுகிறது. பழுதுபட்டுளது. முடிவுற்றதாகத்தெரியவில்லை. பிழைகளும் உள. இவைபோன்ற நூல்கள் அச்சியற்றப்பட்டுள்ளன.

R. No. 1894.

கௌசிக சிந்தாமணி.

KAUŚIKA CINTĀMAṆI.

Palm leaf. 11½ × 1 inches. Foll. 36. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 72 granthas. Printed.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kaundar, Puliyampatti, Palani taluk, Madurai district.

Incomplete.

This work has been already published. This is same as the work described under D. No. 1895.

(கு-பு)—

இந்நூல், கௌசிக சிந்தாமணி என்ற நூலிலிருந்து சிற்சில பாடல்களை எடுத்து எழுதப்பட்டதாகும். மூவருடக் காட்லாக்கு, 1885-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுளது. பிழையுளது. பழுதுபட்டுளது. அச்சிடப்பெற்று முழுதும் வந்துளது.

R. No. 1895.

கௌசிக சிந்தாமணி.

KAUŚIKA CINTĀMAṆI.

Palm leaf. 9¾ × 1 inches. Foll. 1—70. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 280 granthas.

Presented in 1949-50 by Sri Palanisāmi Kaundar, Puliyampatti, Palani taluk, Madurai district.

Incomplete.

This is an astrological treatise dealing with Simha lagna. This differs from the published work of the same title.

Beginning :

நல்ல சொற்பொருள் நாளுநடாத்தவும்
யெல்லை காணாரும் பேரின்ப மெய்தவும
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குறி யானை வழுத்துவாம்.

கவி—கௌசிக சிந்தாமணி

நீணில மதனில் மாமறை வதிஷ்டர்
நிகழ்த்திய மொழிதனைக் காண்பாய்
வேணுமென் றுரைத்த கவுசிகர் மொழிந்த

விருத்தம் பன்னீ ராயிரந் தன்னுள்
தோணவே கேட்கும் பலாபலன் தன்னைச்
சோதிட முறைப்படி சொல்ல
வாணி பொற்சரணை மனத்தினுள் நினைத்து
வழுத்தியே அனுதினம் துதிப்பாம்.

திருவளர் மறையோன் செல்வனும் வதிஷ்டர்
செப்பிய மொழிதனக் கிசைய
மருமொழி யுரைக்கும் கவுசிக சிந்தாமணிச்
செய்யுள் பனனீ ராயிரத்தில்
ஒருமுறை யுரைக்கும் சிங்கலக் கினத்தில்
உரைத்திடும் பாகையும் பிரிவு
கருவறிந் துரைக்கும் பலனது கூறக்
கணபதி பதமலர் துதிப்பாம்.

End :

பலனது கேளு லாபமும் திறமாய்ப்
பலித்திடும் பான்மையு முண்டு
செலவது அதிகம் செனித்தநாள் முதலாய்த்
திரவியம் சிறப்புடன் சேர்ந்து
குலமது விருத்தி குருமறை யோர்கள்
கொள்கையாற் றனமது விரயம்
நிலவர மாக வரவுக்கு மிஞ்சி
நீள்செல வதிகமா மன்றே.

(கு-பு)—

இந்நூல், கவுசிக சிந்தாமணீ யெனும் பெயர்த்தாய், பன்னீராயிரத்தில் சிம்ம லக்கினத்தை எடுத்துக்கூறிச் செல்லுகிறது. பழுதுபட்டுளது. பிழைகள் மலிந்துள. முற்றுப்பெறவில்லை. அச்சாகியிருக்கும் இந்தப் பெயர் கொண்ட கவுசிக சிந்தாமணிக்கும் இதற்கும் வேறுபாடு காணப்படுகிறது.

R. No. 1896.

தட்சிணாமூர்த்தி பாடின பெருநூல்.
DAKṢIṆĀMŪRTTI PĀḌINA PERUNŪL.

Palm leaf. 10¼ × 1¼ inches. Foll. 1—121. Lines, 8 on a page. Tamil. Much injured. Old. Extent, 2,400 granthas.

Presented in 1949–50 from Sri Paḻanisāmi Kaundar, Puḷiyampaṭṭi Paḻani taluk, Madurai district.

Incomplete.

This is a work on magic written by Dakṣiṇāmūrtti. This is same as that described under R. No. 259.

(கு-பு)—

இந்நூல், "தட்சிணாமூர்த்தி பெருநூல்" என இருப்பினும், முந்திய "தட்சிணாமூர்த்தி ஜாலம் ஆறுகாண்டம்" என்று மூவருடைக் காட்லாக்கு, 259-ஆம் எண்ணில் வந்துளதேயாகும். முற்றுமில்லை. 121 ஏடுகளே உள்ளன. மிகவும் சிதைந்துள்ளன. ஜாலத்தைப் பற்றியும், வசியம், வைத்தியங்களைப் பற்றியும் கூறுவது.

R. No. 1897.

புலத்தியர் நாடி சாஸ்திரம்.
PULATTIYAR NĀDI ŚĀSTIRAM.

Palm leaf. 13½ × 1½ inches. Foll. 1—107 and 30—91. Lines, 7 on a page. Tamil. Slightly injured. Old. Extent, 2,338 granthas.

Presented in 1949–50 by Sri. Palanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Palani taluk, Madurai district.

Incomplete.

The first ten stanzas of this work deal with Nāḍi astrology as instructed by the sage Pulastya. The latter half, in prose, deals with topics on medicine. Author is not known.

Beginning :

கரிமுக னடியை வாழ்த்தி கைதனில் நாடி பார்க்கப்
பெருவிர லங்கு லத்தில் பிடித்தமூ விரலுந் தொட்டால்
ஒருவிர லோடி வாதம் ஒருவிர லோடிப் பித்தம்
சிறுவிரல் மூன்று மோடில் சிலேட்டும நாடி யாமே. (1)

End :

கேளப்பா நரம்பு தோனு இட்டிய வியாதி மார்க்கம்
கேளப்பா மருந்து மார்க்கம் கேடில்லாப் பாக மார்க்கம்
கேளப்பா பார்த்ததில் கெடுவித வலியின் மார்க்கம்
கேளப்பா தாயின் பாதம் கணேசனைப் போற்று முற்றே. (10)

(கு-பு)—

இந்நூல், புலத்தியருக்குச் சொன்னதாக அமைந்து முன்னே பத்துப் பாடல்களால் நாடி பார்க்கும் முறைமையினைப் பற்றிக் கூறி, பின்னே உரைநடை முறையினில் கற்பம், குளிகை, நசியம், இறுதம், லேகியம், எண்ணெய் முதலிய வகைகளில் மருந்து செய்யும் முறைகளையும் அளவும் அவற்றினைப் பயன்படுத்தும் முறைகளையும் அவற்றால் நீங்கும் நோய்களையும் முறையே உரைத்துச் செல்கிறது. முதலில் 1-107 வரை ஏடுகள் தொடர்ந்தும் பின் 30-91வரை ஏடுகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. பின் காணப்படும் ஏடுகளிலும் வைத்தியமுறை வசனங்களே மேற்சொன்ன வகையானமைந்துள்ளன; அதுவும் முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. சில பாகம் சிதைந்தும், முழுவதும் எழுத்துப்பிழை மலிந்தும் காணப்படுகின்றன.

R. No. 1898.

உள்ளமுடையான் (குறிப்புரையுடன்).

ULḶAMUḌAIYĀN (with commentary.)

Paper. 9 × 7½ inches. Foll. 1—24. Lines, 24 on a page. Tamil. Fair. Old. Extent, 720 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Palani taluk, Madurai district.

This is an astrological and mathemetical treatise with commentary written by some unknown author. This is same as the work described under D. No. 31 (*d*) on page 267 of Śēṣagiri Śāstri's Report No. I.

(கு-பு)—

இந்நூல், உள்ள முடையான் என்னும் பெயர்த்தாய் சோதிட விஷயார்த் தங்களையும் கணிதமாகிய பஞ்சாங்கம் கணிக்குமுறைகளையும் எடுத்தியம்பு கிறது. இது கணித வல்லுநர்க்குக் கணிதம் கணிக்க மிகவும் பயன்படும். இதில், உள்ள முடையான், என்ற மூல நூலின் பாட்டின் குறிப்புக் காட்டி மேலும் பாட்டினை முழுதும் எழுதாமல் பாட்டிற்கேற்ற குறிப்புரைகள் எழுதப் பட்டிருப்பதுடன் உள்ளமுடையான், என்ற பெருநூலில் பரகிதம், கிரகஸ்புடம், கிரகணம், வாக்கிய காரணம் என்ற சிறு முழுப்பகுதிகள் மட்டிலுமே உள்ளன. நன்றாக உள்ளன. இது சேஷகிரி சாத்திரியாரால் தொகுக்கப் பெற்ற அறிக்கையில் 31 (d) ஆ-ம் எண் 267-ஆம் பக்கத்தில் வருணிக்கப் பட்டுள்ளது.

R. No. 1899.

கந்தர் நாடகம்.

KANDAR NĀṬAKAM.

Paper. 8⅝ × 7 inches. Foll. 112. Lines, 20 or 24 on a page. Tamil. Fair. Old. Extent, 2,240 granthas.

Presented in 1949–50 by Śrī Palanisāmi Kauṇḍar, Puḷiyampaṭṭi, Palani ṭaluk, Madurai district.

Complete.

This is same as that described under R. No. 1242.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 1242-ஆம் எண்ணில் வந்துள்ளதே யாகும். இப்பகுதியில் முதலிலிருந்து முற்றுமுளது. தெளிவாக எழுதப்படவில்லை.

R. No. 1900 and 1901 (one codex).

Paper. 8⅝ × 7 inches. Foll. 52. Lines, 30 or 32 on a page. Tamil. Fair. Old. Extent, 2,000 granthas.

Presented on 1949–50 by Sri Palanisāmi Kauṇḍar, Puḷiyāmpaṭṭi, Palani taluk, Madurai district.

R. No. 1900.

வைத்தியக் கிரந்தம்.
VAIDDIYA-K-KIRANTAM.

Foll. 1—19. Extent, 400 granthas.

This is a work on medicine written by some unknown author. Similar works have been described under "Anubhava Vaidyam".

(கு-பு)—

இந்நூல், வீட்டு வைத்திய விஷயத்தைச் சார்ந்தது. வீட்டு வைத்தியர் தான் அனுபவத்திற் கண்டதை எழுதிவைத்துள்ளதாகக் கருத இடமிருக்கிறது. இதுபோன்ற வைத்திய விஷயங்கள் அனுபவ வைத்தியம் என்ற தலைப்பில் மேலே பல வந்துள்ளன. காண்க. இறுதியில் சில ஏடுகளில் சில கலித்தொகைச் செய்யுட்கட்கு அரும்பதவுரைகள் கூறப்பட்டுள்ளன.

R. No. 1901.

வைத்தியக் கிரந்தம்.
VAIDDIYA-K-KIRANTAM.

Foll. 20—33. Extent, 1,600 granthas.

This is a continuation of R. No. 1900. This work deals with topics on medicine.

(கு-பு)—

இந்நூல், மேற்கண்ட நூலோடு வைத்தெண்ணப்படுவதொன்றாகும். இதில் வைத்திய பற்பம், செந்தூரம், சூரணம், முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. மற்றும் சுத்தி முறைகள், குளிகைகள், கடிவகைகள் கூறப்பட்டும், இறுதியில் சில ஏடுகள் பழுதுபட்டும் முடிகின்றன.

R. No. 1902.

வைத்தியக் கிரந்தம்.
VAIDDIYA-K-KIRANTAM.

Paper. $10\frac{1}{4} \times 9$ inches.. Foll. 62. Lines, 34, 44 on a page. Tamil. Fair. Old. Extent, 5,000 granthas.

Complete.

Same work as that described under D. No. 2432.

This is another work on medicine. Author is not known.

(கு-பு)—

இந்நூல், வைத்திய முறையினைச் சார்ந்ததே. நோய்கள் பலவற்றிற்கும் மருந்து முறைகளை அளவுப்படி கூறி, செய்யு முறைகளையும் கூறி, அவற்றால் போக்கும் நோய்களையும் கூறிச்செல்கிறது. இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 2432-ஆம் எண்ணில் வந்துள்ள நூல் போன்றதே.

வைத்தியக் கிரந்தம்
VAIDDIYA-K-KIRANTAM.

Paper. 10¼ × 9¾ inches. Foll. 28. Lines, 38 on a page. Tamil. Fair. Old. Extent, 2,128 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai district.

Complete.

This is a medicinal treatise written by some unknown author. This is same as the above work.

(கு-பு)—

இந்நூல், வைத்திய சாஸ்திரத்தைச் சேர்ந்ததே. இதுவும் பலவித கற்ப வகைகள், மாத்திரை வகைகள், தைல வகைகள் முதலியனவும், சன்னி, வாயு, சுரம், வாந்தி, விக்கல், முதலியவற்றிற்கு மருந்து முறைகளும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இறுதியில் குளிகைவகைகளும், செந்தூரங்களும், சூரணங்களும், பற்பங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

R. No. 1904.

அனுபவ வைத்திய முறை.
ANUBHAVA VAIDDIYA MURAI.

Paper. 9¼ × 7¼ inches. Foll. 14. Lines, 30 on a page. Tamil. Fair. Old. Extent, 610 granthas.

Presented in 1949–50 by Sri Palanisāmi Kauṇḍar, Puliampatti, Palani taluk, Madurai district.

Complete.

This is yet another work dealing with topics relating to medicine written by some unknown author.

(கு-பு)—

இந்நூல், மேல் வந்துள்ள நூலோடொத்தே வைத்திய விஷயங்களைச் சொல்கிறது. சில ஏடுகளில் வைத்தியச் சரக்குகளின் கடினபதங்களுக்கு உரையும் கூறப்பட்டுள்ளன. இந்நூலும் ஏட்டுச்சுவடியைப் பார்த்து எழுதப்பட்டதாக இருக்கவேண்டும்.

R. No. 1905.

அனுபவ வைத்திய முறை.
ANUBHAVA VAIDDIYA MURAI.

Paper. 9¼ × 7¼ inches. Foll. 15. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 300 granthas.

Presented in 1949-50 by Sri Paḻanisāmi Kaunḍer, Puḷiyampaṭṭi, Paḻani taluk Madurai district.

This is a medicinal treatise written on the experience of pandits of vaidya. Author is not known. This is similar to the above work.

(கு-பு)—

இந்நூல், பல பண்டிதர்களிடத்தில் அனுபவத்தில் கண்டவற்றைக் கேட்டு எழுதியதாகக் காணப்படுகிறது. இதில் விஷக்க டிகட்கும், கண்ரோகங் கட்கும், பைத்தியத்திற்கும், வெள்ளை, வெட்டை, வயிற்றுவலி, தலைவலி முதலானவற்றிற்கும், காசம், சுவாசகாசம், மேகநீர் வியாதி இவைகட்கும் வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

R. No. 1906

வைத்தியக் கிரந்தம்.

VAIDDIYA-K-KIRANTAM.

Paper. 8¼ × 6⅜ inches. Foll. 7. Lines, 32 on a page. Tamil. Fair. Old. Extent, 250 granthas.

Presented in 1949-50 by Sri Paḻanisāmi Kaundar, Puḷiyampaṭṭ, Paḻani taluk.

Complete.

Similar to the work described under R. No. 1905

(கு-பு)—

இந் நூல், மேற்கண்ட நூல் போன்றதே. இதில் புண்களுக்கு, வீக்கத்திற்கு, இருமல், க்ஷயரோகம், மேகம் முதலியவற்றிற்கு மருந்துகள் கூறப் பட்டிருக்கின்றன. ஆனால் மேற்கண்ட நூல்களில் ஒன்றில் சொன்னவையே மற்றவைகளிலு மிருந்தாலும் அவற்றின் வேறுபாடுகளைப் படித்துணர்வார் அறிந்துகொள்க.

R. No. 1907.

பெரியாழ்வார் திருமொழி.

PERIYĀḺVĀR TIRUMOḺI (SVĀPADĒSA VURAI.)

Paper. 11¼ × 10 inches. Foll. 192. Lines, 20 on a page. Tamil. Good. New Extent, 5,760 granthas.

Transcribed in 1949-50 from a Manuscript of Sri Lakshminarasimha-cariyar, Siruvalur, Chingleput district.

Incomplete.

This is a commentary on Periyāḻvār Tirumoḻi. Contains many Sanskritized Words.

Beginning :

ஸ்ரீசைலேச குரவேநம :

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் திருமொழி, ஸ்வாபதேசம்.

முதல் சம்புடம்.

ஸ்ரீய : பதியாய் அவாப்த ஸமஸ்த காமனுய் ஸமஸ்த கல்யாண குணத் மகனுய், ஸர்வ ரக்ஷகனுய் இருக்கிற சர்வேஸ்வரனே ரக்ஷ்யமாக நினைத்து திருவவதார விசேஷங்கட்கு மங்களாசாசனம் பண்ணினுர் திருப் பல்லாண்டிலே, "அந்தியம்போதி லரியுருவாகி யரியை யழித்தவனைப் பல்லாண்டு பாடுது" மென்றும் "இராக்கதர் வாழிலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுது" மென்றும் ஸ்ரீ நரசிம்மப் ப்ராதுர் பாவத்துக்கும் ராமாவதாரத்துக்கும் மங்களா சாஸனம் பண்ணி யிருக்கச் செய்தேயும் மாயப் பொருபடை வாணனை யாயிரந்தோளும் பொழி குருதி பாயச் சுழற்றிய வாழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதும் என்றும் . . .

. . . .

(கு-பு)—

இந்நூல், (பெரியாழ்வார் திருமொழி உபதேச வியாக்கியானம்) என்னும் பெயர்த்தாய் ஒன்று முதல் மூன்றும் பத்தின் ஏழாம் திருமொழியரை விசேடமாக உரைவகுத்துச் செல்கிறது. உரைவிளக்கம் நன்முக இருக்கிறது. முற்றுமில்லை. வடமொழிக் கோவைகளை இடையிடையே பெய்துரைப்பினும் படித்துணர்ந்தால் நயமாக இருக்கும்.

R. No. 1908.

சித்தராரூடம்.
SIDDHARĀRŪḌAM.

Paper. 8¾ × 13½ inches. Foll. 50. Lines, 16 on a page. Tamil. Good. New. Extent, 500 granthas.

Restored in the year 1949–50 from a manuscript described under R. No. 938.

Complete.

This is an astrological treatise in verses written by some unknown author. This is same as the work described under R. No. 938.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 938-ஆம் எண்ணில் வந்துள்ளதையே பிரதிசெய்விக்கப் பெற்றுள்ளது. முற்றுமுளது. செய்யுள் வடிவானது. அதன் குறிப்பையுங்காண்க.

R. No. 1909.

ரகஸ்யத்ரயஸாரம்.
RAHASYATRAYASĀRAM.

Palm leaf. 17½ × 1½ inches. Foll. 224. Lines, 8 on a page. Tamil and grantha Injured. Old. Extent, 5,380 granthas.

Presented in 1949–50 by Sri Tātam Aiyaṅgār, B.A., 199, East Uttara Street, Srirangam.

Complete.

This is same as that described under D. No. 2262.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 2262 ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதே. முற்றுமுளது. பழுதுபட்டுளது. தமிழும் வடமொழியும் கலந்து எழுதப்பட்டது. அதன் குறிப்பையுங்காண்க.

R. No. 1910 to 1912 (one codex).

Paper. 11¾ × 9½ inches. Foll. 84. Lines, 20 on a page. Tamil and granthas. Good. New. Extent, 1,800 granthas.

R. No. 1910.

அனந்தாழ்வான் ரகசியம்.
ANANTĀḺVĀN RAHASYAM.

Foll. 1—9 (a). Extent, 170 granthas. Foll. 9 (b)—11 left blank. The other work herein is Tirumuḍikkuṟai Rahasyam.

Transcribed in 1949–50 from a manuscript of Sri. K. Rangasami Aiyangar, Siruvalūr, Chingleput district.

Complete.

This is a work belonging to Vaiṣṇavite cult by some unknown author. The last fol contain yet another work on Vaiṣṇavism called " Tirumuḍikkuṟai Rahasyam."

Beginning :

பட்டர் திருவடிகளிலே ஆசிரயித்து பகவத் பாகவதாசார்ய ப்ரேமையுக்த ராய் சதாசார்ய பரராயிருப்பார் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர், தம்முடைய வாசாரிய ரான பட்டர் திருவடிகளிலே சென்று ஸ்ரீ வைஷ்ணவலட்சண மிருக்கும்படி யெங்ஙனேயென்று கேட்க, பட்டரும் திருமலே அனந்தாழ்வான் சந்நிதியிலே சென்று கேட்டு கேட்டு வாருமென்று அந்த ஸ்ரீ வைஷ்ணவ(ரு) [னை] யனுபபியருள அவரும் திருமலேயேறிப்போய் அனந்தாழ்வானேச் சேவித்து இச் செய்தியை விண்ணப்பஞ்செய்தார்.

அனந்தாழ்வானும் அருளிச்செய்கிறோமென்று ஆறு மாதம் கண்ணழித்து அவர் திருமாளிகையிலே ஸந்ததம் கைங்கரியங்களைப் பண்ணிக் கொண்டு ஆறுமாத மெழுந்தருளியிருந்தார்.

*　　　*　　　◦　　　*

End :

உம்மைப்போலிருக்கும் :—இதுக்குப் பட்டர் அந்த ஸ்ரீ வைஷ்ணவனை நீர்செய்தபடி என்னென்று கேட்க அந்த ஸ்ரீவைஷ்ணவரும் அனநதாழ்வான் ஸந்நிதியிலே செய்த விருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்ய, பட்டரும் மிகவும் திருவுள்ள முகந்தருளி ஸ்ரீ வைஷ்ணவனுனவன் மகா பாகவதர் திருமாளிகையிலே தான் தீர்த்த பிரசாத ஸ்வீகாரார்த்தமாகப்போன சமயத்திலே அவர்களுகந்து....திலே சிறிதும் நெஞ்சழியாமல் அதி பிரீதியுடனே ஸ்வீகரித்துப் போகுவானென்று பட்டர் எல்லார்க்கு மறியலாம் படி யருளிச் செய்தார்.

*　　　*　　　*　　　*

(திருமுடிக்குறை ரகசியம்)

Beginning :

நம்பிள்ளை யொருநாள் திருமுடிக்குறைக் கெழுந்தருளினவளவிலே தம்முடைய ஸ்ரீபாதத்தில் அந்தரங்கரான முதலிகளைப்பார்த்து "பிள்ளைகாள்! உங்களுக்குப் பெருமாளைச் சேவிக்க வேண்டாவோ வென்ன" தேவரீர் ஸ்ரீ பாதமே தேவரீரை யொழிந்து தனித்துப் பெருமாளைச் சேவிக்க ஸ்நேக மில்லை. தேவரீருக்குகந்த விஷயமென்று பெருமாளைச் சேவிப்பதோ மென்று விண்ணப்பஞ்செய்ய தம்முடைய ஸ்ரீ பாதத்தைத் தொட்டு ஆணை யிடுவித்துக் கொண்டு அங்கீகரித்தருளின வார்த்தைகளை யருளிச் செய்தருளினார்.

*　　　*　　　*　　　*

End :

பின்பு எழுந்தருளிக்கச் சொன்ன ப்ரகாரத்தையும் தாமெழுந்தருளி இருந்த ப்ரகாரத்தையும் நிர்ஹேதுகமாக வருளிச்செய்து சாக்ஷாத்கரிப்பித் தருளினார்.

(கு-பு)—

இந்நூல், 'அனந்தாழ்வான் ரகசியம்' என்னும் பெயர் பெற்று வைணவ மதத்தைச் சார்ந்து வந்த நூலாகும். இந்நூலின் இறுதியில் "திருமுடிக்குறை ரகசியம்" என்ற ஓர் சிறு நூலும் முழுவதும் உடைய தாக உள்ளது. இவ்விரண்டுமே திருமாலின் திருக்கல்யாண குணங்களை எடுத்தியம்புவதாக உள்ளது. இவை கிரந்தங்கலந்த தமிழ் நடையா லானது. ஆதலின் இதில் இரண்டு முதலிறுதிகள் எழுதப்பட்டுள்ளன.

R. No. 1911.

திருப்பள்ளியெழுச்சி வியாக்கியானம்.

TIRUPALḶIYEḺUCCI VIYĀKKIYĀNAM.

Foll. 11—24. Extent, 460 granthas.

Transcribed in 1949–50 from a manuscript of Sri K. Rangaswami Aiyangar, Siruvalur, Chingleput district.

Complete.

This is an Commentary written by some unknown author on the Tiruppaḷḷiyeḻucci in the Divya Prabandham.

Beginning :

இவ்வாழ்வராகிறுர் முதலிலே ஸ்வரூப புருஷார்த்த விவேக சூன்யராய் தேகத்திலே ஆத்ம புத்தியைப்பண்ணி ததனுபந்திகளான சப்தாதி விஷயங்களிலே மண்டி தம்மோடு சேர்ந்தாரையும் தத்ஸ்வபாவராக்கிப் போகாநிற்க மாதரார் கயல்கண் என்னும் வலையுள்பட் டழுந்துவேனைப் போகுமேயென்று சொல்லி புந்தியில் புகுந்து தனபாலா தாம் பெருக வைத்த வழகனூரென்கிறபடியே.

*　　*　　*　　*　　*

End :

அடியேனை அளியனென்றருளி மிகவும் நமக்கு சினுக்தன் நென்று கிருபை பண்ணியருளி அசேஷ விருத்தியினுடைய எல்லையிலே நிறுத்தி தேவரீர் அடியேனுக்காக திருப்பள்ளியுணர்ந்தருளி யடிமை கொண்டருள வேணுமென்கிறுர்.

(கு-பு)—

இந்நூல், திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள திருப்பள்ளியெழுச்சிக்கு ஓர் சிறப்பான புதிய விளக்கமான விரிவுரையாகும். முற்றுமுள.

R. No. 1912.

பிரபன்ன கிர்த்தியம்

PRAPANNA KṚTYAM.

Foll. 25 (*a*) —60. Extent, 1170 granthas.

Incomplete.

This is an incomplete work of an anonymous author. This describes the various ways of adoring and meditating on Lord Viṣṇu.

Beginning :

ஜீயர் திருவடிகளே சரணம்

[illegible]
ஜன்ம பூமியாய் [illegible]யாய், [illegible]
[illegible]யாய், [illegible]
[illegible]யாய் [illegible]யாய்

*　　*　　*　　*　　*　　*

End :

அப்படியே சேஷத்துவபாரதந்திரிங்களையுடைத்தான சேதனனே பகவத்யோக்யன் அன்றிக்கேயொழிந்தால் த்யாச்ய னென்று நம்மாசார்யர் கள் அருளிச் செய்யும்படி "22" ஆக பிரபன்னஜனசிந்தாமணி யென்கிற இத்தில் சரீராவசானத்தில் ஜீவன் உத்க்ரமிக்கும்படியும் உத்க்ரமித்து ஸூமா நாசகாசூ நாஹவம்பண்ணி கஉமெரஷ.

(கு-பு)—

இந்நூல், வைணவ மதத்தைத் தழுவியதாய், திருமால் மீது பக்தி சிரத்தையோடிருப்பவர்களை, திருமாலே வணங்குமுறை, தோத்திரிக்கும் முறை ஆகியவைகளை வருணிக்கிறது. முழுதுமில்லை. இது, சிறுவலூர் K. இரங்கசாமி ஐயங்கார், என்பவரிடமிருந்த மூலப் பிரதியிலிருந்து 1949-ஆம் ஆண்டில் எடுத்து எழுதிவைக்கப்பட்ட பிரதியாகும்.

R. No. 1913—1915 (one codex).

Paper. 11¼ × 97 inches. Foll. 51. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 960 granthas.

Transcribed from the manuscript of Sri C. Krishnamurthi Mudaliar Mirasdar, North car street, Sīyāḻi in the year 1949–50.

R. No. 1913.

அட்டப் பிரமாணம்.

AṬṬAPPIRAMĀṆAM.

Foll. 1—7. Extent, 140 granthas.

Complete.

This is a logical treatise written by some unknown author. This explains the different pramāṇas with beautiful similes.

Beginning :

உறுநெறிசேர காண்டவ பிரத்தியட்ச மனுமானமோங்கு புகைக்கண்டு நெருப்புண்டு எனவே யுணர்ந்தனை, மற்றுவமை மறை பசுப்போலெனல். சத்தம் பெரியோர் வாய்ச்சொல் ருத்தாபத்தி மதத்தகுவுடல் கனுலற்றை யுபவாசி . . . .

End :

பிரம்ம சொரூபமாகிய உன்னைத் தவிர வேறல்லவென் றனுக்கிரகம் பண்ணப் அந்தப் படிக்குச் சீடன் சருவாற்ம சொரூபமாகிய பிரம சொரூ பநதானென்றறிந்ததுவே. சம்பவப் பிரமாணம் பிரமாண மெட்டாய் நவிலும. எ.து. இந்தப்படிக்கு அட்டப்பிரமாணத்திலு மாற்மாவை யறியுமாறு வேதங்கூறிய தென்றவாறு. அஷ்டப் பிரமாணம் முற்றுப் பெற்றது.

(கு-பு)—

இந்நூல், அட்டப்பிரமாணமென்னும் பெயர்த்து. பிரத்தியட்சப் பிரமாணம் முதலாக சம்பவப பிரமாணம் ஈருக அட்டப்பிரமாணங்கட்கும் விளக்கங்களும் உவமைகளும் கூறிச் செல்கிறது. முற்றுமுளது. எழுத்துப் பிழைகள் உள.

R. No. 1914.

காமாதி விவரணம்.
KĀMĀDI VIVARAṆAM.

Foll. 8 (*a*)—16. Foll. 17 is left blank. Extent, 160 granthas.

Complete. Not print.

This briefly deals with the psychology of love. Author is not known. This is probably a translation in Tamil of the Sanskrit original.

Beginning :

காமம்—காமத்துக்கு ஏது......தென்ருல் அக்கியானம் சொரூபமே தென்ருல்......அக்கினியில் நெய்விட்டால் விற (ரு) த்தியடையிறது போல நமக்கிருக்கின்ற போகமெல்லாம் உத்தரோத்தரமாய் விற்தியடைய வேணுமென்றும் நமக்கிருக்கின்ற அயிஸ்ப(ஐஸ்வ)ரிய மெல்லா மாருமலிருக்க வேணுமென்று நாலுவிதமாய்ச் சித்தரித்திருக்கிறது.

End :

பலமேதென்ருல் வாதனுக்ஷயத்தினுல் சுத்தமாய் சுபாவமாய் சுகமாயிருக்கின்ற பிரம சொரூபமே நான். நானே சுத்தமாய் சுபாவமாய் சுகமாயிருக்கிற பிரம சொரூபமென்கிற தத்துவக்கியான ரட்சையாயதனுற் செனனமரண சமுசார துன்பம் நீங்கி பிரமானந்த மனுபவிக்கப்படும்.

சற்குரு நாதன் துணை.

(கு-பு)—

இந்நூல், காமாதி விவரணம் என்னும் பெயர்த்து. இது மனோதத்துவங்களை விளக்கிச் செல்கிறது. சுருக்கமாக உளது. முற்றுப் பெற்றது. வடமொழியின் தமிழ் மொழிபெயர்ப்பெனத் தோற்றுகிறது. அச்சிடப் பெறவில்லை.

R. No. 1915.

பிரமகீதை அவதாரிகை.
PIRAMAGĪTAI AVATĀRIKAI.

Foll. 18—51. Extent, 660 granthas.

Incomplete.

This is a philosophical treatise by some unknown author.

Beginning :

(க) கணபதி வணக்கம் .. .. (ங) சுப்பிரமணிய வணக்கம் (ச குரு வணக்கம் .. .. (க) மனந்தேகம் வாதி விகினென்மன்றியினிதில் நிறைவேறும்படியாகவும் இந்நூல் பாரம்பரையாய் விளங்கும்படியாகவு மிதை அனுஷ்டித்தோர்க்கே காக்கிற சித்தமுண்டாகிப் பிரமானந்தம் வரும்படிக்கு இந்நூற் கந்தரங்க தாற்பரியமான சொரூபத்தை, அஷ்ட மூர்த்தமாயுஞ், சலக்ஷண விலக்ஷணமாயுஞ் சுகத சொரூபமாயுந் துதிக் கின்றார். (உ) பரம குருவைத் துதி செய்தல் (ங) தனதாசாரியரைத் துதி செய்தல் (ச) இந்நூல் செய்த வாசாரியரைத் தனது சீடர்கள் துதி செய்தல்.

End :

(யக) எப்படிப்பட்டவன் குருவாவான் எனில்—வாவான்—முமுச்சுவான அவன் இக் குருவுக்குச் செய்யத்தக்கது யாது அப்படிச் செய்ததினாலே பிரயோசனம் யாதெனில்...........

(கு-பு)—

இந்நூல், பிரம்மகீதை அவதாரிகை என்னும் பெயர்த்து. பிரம கீதையிலுள்ள அத்தியாயங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களைப் பிண்ட ரூபமாகத் தனித்தனியே கூறிச் செல்கிறது. எழுத்துப் பிழைகள் உள. முற்றுப்பெறவில்லை.

R. No. 1916.

அகராதி.
AKARĀDI.

Paper. 9¾ × 10 inches. Foll. 1—103. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 1,288 granthas.

Transcribed in 1949–50 from a manuscript of Sri K. Rangaswāmi Aiyangar, Siruvalūr, Chingleput district.

Complete.

This is a Tamil Dictionary written by some unknown author. This contains many errors in spelling.

Beginning :

அகராதி

அட்டாலை—மேல் தளமும், துர்க்குண வாசனையும்

அண்டம்—வழக்கு, சட்டமும், ஆகாயமும், பூமியும்

அவலம்—நிர்மானுஷ்டையாயிருக்கையும். தேகவீடையும்

அளகைக்கோன்—குபேரன்

அர[க்]காம்பல்—செவ்வாம்பல்

அலவன்— ஆண்நண்டு

அகடு—கீழ்வயிறு, முகடு

அக்கறவு—ஓரக்கம்

End :

நோடு—சொல்லுகை
நோக்குகை—ரக்ஷிக்கை
நோன்மை—வலி
நோன்பு—ஸாதனம், பூர்வஜென்ம சுகிருதம்
நொடிக்கை—அடிக்கிற சந்தேகதம்
நோலாது—சாதனானுஷ்டானம் பண்ணாதே
நோற்ற—சேர்க்க
நோம்பியர்—ஆஹுதர்

(கு-பு)—

இந்நூல், தமிழ் அகராதி என்னும் பெயர்த்து. முற்றுமுளது. சிற்சில எழுத்துப் பிழைகள் உள.

R. Nos. 1917–1919 (one codex).

Paper. 11⅓ × 9⅔ inches. **Foll.** 1—75. **Lines,** 20 on a page. **Tamil. Good. New.** Extent, 1,380 granthas.

Trsnscribed from the manuscript of Sri. C. Krishnamurthi Mudaliar, Mirasdar, Śiyāḻi in 1949–50.

R No. 1917.

பகவத்கீதை அவதாரிகை.

BHAGAVAD GĪTAI (Avatārikai.)

Foll. 1—19. Foll. 20 and 21 are left blank. Extent, 380 granthas Complete.

This is a philosophical treatise. Author is not known.

Beginning :

பகவத்கீதை அவதாரிகை
பாயிரம்

(க) நிர்விக்கினமாய் நிறைவேறும் பொருட்டு நூலாசிரியர் விக்கினேசுவரனைத் துதித்தல். (குவன்) இதைச் சொல்லுகிற தென்னத்துக்கெனில்,

(2) நூலாசிரியர் அவதரித்த நகரமும் நாடமும் கூறல்.

(ங) மனவிக்கினம், தேகவிக்கினம், தவாதி விக்கினம், அன்னியில் இந்நூலினிதில் நிறைவேறும் பொருட்டும் இதைப் படிப்போர் கேட்போர்கட்கு ஏகாக்கிரசித்தமுண்டாய் ஞானம் வரும்பொருட்டும் ஏற்புடைக் கடவுளைத் திரிவித காரணத்தினாலே வணங்கத் தொடங்கி இக்கவியில் மூர்த்தமாயும் வாக்கினால் துதித்தல்.

End :

பதினேழாவது, சிரத்தா, திரைய விபாக போக வத்தியாயம்; பதினெட்டாவது சகல சாஸ்திர பரமார்த்த தத்துவ நிர்ணய யோகவத்தியாயம்; ஆக அத்தியாயம் பதினெட்டுக்குச் சுலோகம் சாளகய

(கு-பு)—

இந்நூல், (பகவத்கீதை அவதாரிகை) என்னும் பெயர்த்து. முற்றுமுளது. சிற்சில இடங்களில் இடம் விடப்பட்டுள்ளது. இது சீகாழியிலுள்ள மிராசுதார் திரு. C. கிருஷ்ணமூர்த்தி முதலியார் என்பாரிடமிருந்த பிரதியிலிருந்து பிரதி செய்யப்பட்டிருக்கிறது.

R. No. 1918.

ஆண்டவர் பாடல்கள்.
ĀṆḌAVAR PĀḌALKAḶ.

Foll. 22—61. Foll. 62, 63 are left blank. Extent, 780 granthas.

Complete.

This contains many stanzas in adoration of gods and goddesses. It also describes the ways and means of attaining salvation. Author is not known.

Beginning :

சிவமயம்

கழனி வாசக வென்னுஞ் சிவஸ்தலத்தி லெழுந்தருளியிருந்த முத்து இராமலிங்க தேசிகர் திருவாய் மலர்ந்தருளிய பல கொண்ட விளக்கக் கவிகள்.—

கணபதி வணக்கம்
(நேரிசை வெண்பா)

தோலா னனமுந் துணைப்பசுவு மங்கரமு
நாலாம் புயமருப்பு நாடியே—மேலோர்கள்
கள்ளமறப் போற்றுங் கணபதியை நன்மனமே
உள்ளநிலை யுரைக்க வுன்னு.

(கட்டளைக் கலித்துறை)

சத்தேயென் சித்தொளி யாய்விளக்குஞ் சதாசிவமே
பத்தேபி றந்து பிறந்தே யிந்நாள் வரைப்பட்ட துன்பக்
கொத்தே யகற்றுங் குருவே பிறக்குங் குண குணிக்கும்
வித்தே கழனிச் சிதம்பர மென்னும் விநாயகனே.

End :

மூலப்பகுதி குடிந்து முடியாதுபெறுஞ்
சீலப் பரமசுகஞ் சேர்வ தென்றோ வஞ்சுகமே.
சித்தமிருந்தாள் சிவமிருக்குந் தேகியுள்
அத்தன்மை யின்றிஅவ னுவதென்றோ வஞ்சுகமே
அத்தி பாதிப்பிரிய வாதிவெளி யாயிருந்தால்
சுத்தமிலாச் சீவபாத மெங்கே யஞ்சுகமே.

கிளிப்பத்து முற்றிற்று.

ஆகச் சந்த விருத்தம் உள்பட பதிகம் ய௬. திருவிருத்தம் ௯௱௬.

(கு-பு)—

இந்நூலில் திருநெல்லையம்மன் வணக்கம், கோப்புடையான் வணக்கம், விஷ்ணு வணக்கம், சொரூப வணக்கம், அருளிறை வணக்கம், குலகுரு வணக்கம், முதநி நிச்சயம், தெய்வ நிச்சயம், மனத்திற் கறிவுறுத்தல், பொதுவாகக் கூறியது, புத்திக் கறிவுறுத்தியது, நெஞ்சோடிரங்கல், தெய்வத்தை விளித்தது, இரிப்பத்து, சந்த விருத்தம் முதலியவைகள் அமைந்துள்ளன. பாட்டின் போக்கு மிக நன்முக உள்ளது. ஓலையைப் பார்த்து எழுதியவரால் பல எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன. முற்றுமுள.

R. No. 1919.

சிவதருமோத்திரம்.
SIVADHARUMŌTTIRAM.

Foll. 64—75. Extent, 220 granthas.

Incomplete.

This contains only the eighth Chapter of the work called "Śivadharu mōttiram" described under D. No. 1287.

Beginning :

பாதாளக் குழியி னுசம் பாவிகள் படிவந் தானும்
ஈதவத் தடையு மேன்மை விலைணவ ருடவந் தானும்
பூதலம் பொருந்து மற்றை யுயிர்பொறை தானும் பொற்றை
மாதவ வுதிக்கு மாறு வகையுற வறைகு வாமே. (1)

அருந்துயர்க் குழியி னுழ்வா ராகமே பாவத் தபகும்
பொருந்திய பூதத் தாலே இமைச்திடும் போது தன்னுள்
புரிந்துவி ண புகுவா ராகம் புண்ணியத் தாலே யாகும்
பொருந்திய பூத சாரத் தொருகணப் பொழுது தன்னில். (2)

End :

மருவியுற்றனை நீயே நீயலை மருவி விற்றது மாதா
வாருயிரிருள் வருத்தனை நீயே நீயலையென வெணக்கிய லீவானே
யவன் மாவமுற்றிய வாசார காரணமலிய நற்றவ மாடே
நீடிய வருவரைப் பயிலானு மாதவனருள் அகத்தியனு ராகுமே. (101)

எட்டாவது ஜெனனமரணவியல் முற்றும்.

(கு-பு)—

இந்நூல், சிவதருமோத்திரம் என்னும் நூலின் பன்னிரண்டு இயல்களில் எட்டாது இயலாகிய ஜெனனமரண வியல் ஒன்றினுடைய மூலமட்டிலும் கூறிச் செல்கிறது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1287-ஆம் எண்ணின்கீழ் உள்ள இதே பெயருடைய நூலில் முற்றும் உரையுடன் உளது. அச்சிடப் பட்டுள்ளது.

R. No. 1920.

பாஷ்ய இருதயம்.
BHĀṢYA IRUDAYAM.

Paper. 11¼ × 10 inches. Foll. 1—222. Lines, 20 on a page. Tamil. Good New. Extent, 3,330 granthas.

Transcribed in 1949-50 from a manuscript of Sri C. Krishnamurthi Mudaliar Mirasdar, North Car street, Sīyāḻi.

Complete.

This is a very good commentary of the Bhāṣya. Author is Brahmañāna Vēṅkaṭēśvara svāmigaḷ.

Beginning :

முதலாவது சிஷ்யப் பிரகரணம் *கணபதியை நமஸ்கரித்து, சுப்பிரமணியரை நமஸ்கரித்து, பார்வதீ பரமேஸ்வரனை நமஸ்கரித்து . . . சொல்லுகிறோம்.*

பிரம்ம ஞானியான, வனப்பிரம்ம மாகத்தானே யிருப்பவருமான மகா ஞானியானவன் சகல சோகங்களையுங் கடந்து பிரமானந்தரூபமாகத் தானே யிருப்பவனை இப்படிப்பட்ட மோட்சத்தில் பிரம்ம ஞானந்தான் சாதனம். வெறு சாதனமுமில்லை. பிரம்ம சுகத்துக்கு லட்சணமெது ? சச்சிதானந்தமே லட்சணம்.

End :

பிரம்மமே நித்தியம். பிரம்மோஹம் சுலோகத்திற்கு அர்த்தம்.

குரு பரம்பரை நரநாராயணர், பிரம்மா, வஷிஷ்டர், சக்தி, பராசம், வியாசர், ஜனகர், கௌடபாதர், கோவிந்தயோகி, ஆசார்யசுவாமி, பத்மபாதர், ஹஸ்தகமலர், தோடக ஆசாரி, வார்த்திகாசாரியர்கள்.

(கு-பு)—

இந்நூல், பாஷ்ய இருதயம் என்னும் பெயர்த்தாய் பாஷ்யத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு பிரகரணத்துக்கும் விளக்கங்கள்கூறி விரிவுரையுடன் அமைந்துளது. இது ஆசார்யசுவாமிகள் திருவுளம்பற்றிய இக்கிரந்தத்தைத், தாம்பரவேணி தீர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் பிரம்மஞான வேங்கடேசுவர ஸ்வாமிகள் (பாஷ்ய இருதயம்) என்ற பெயரால் இயற்றியருளினர். பதினெட்டாவது ஸந்நியாஸப் பிரகரணம் முடிய முற்றுமுளது. நூல் நன்குகவுளது.

R. Nos. 1921 to 1925 (one codex).

Paper. 9¾ × 11¼ inches. Foll. 1—96. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 1,395 granthas.

Transcribed in 1949–50 from a manuscript of Sri. C Krishnamurthi Mudaliar, Mirasdar, North Car street, Sīyāḻi.

R. No. 1921.

உபநிடத மூலமும் உரையும்.
UPANIḌATA MŪLAMUM URAIYUM.

Foll. 1—22. Foll· 23 is left blank, Extent, 330 granthas·
Complete.

This is a philosopical treatise by some unknown author. From the last verse it is gathered that one Saubhāgya guru wrote the commentary in 32 verses, on the upaniṣads of the great Vyāsa,

Beginning :

ஸ்ரீ சத்குருப்யோ நம :

மெய்யுடைய வடியார்மேல் விருப்புண்டாண்....கருப்பூர....மே.. [போலென

பொய்யுடைய வருள்போதப் பொருளுடைய....ருளுடையவன் [....றியைத்தாலு

மையுடைய மனத்தாலும் மயக்குடையார் மதங்களைத்
தாமதங்களாக்கும்....
கையுடைய முகமுடையா னக முடையான்றனைக்
கருத்தில் செய்வாம்.

(இ-ள்).—சத்தியத்தையுடைய - அடியார்மேல் விருப்பத்தையுடையவன் கருப்பூரதீபம்போல் - எனது பொய்யுடைந்த போ....அருளிய போதமாகிய பொருளுடையவன். அருளையுடையவன் - பஞ்சேந்திரியங்களாலும் - இருளையுடைய மனத்தாலும் - மயக்குடையவர்......

End :

தம்குருவைப் புகழ்தல்.

இருளகற்று நால்வேதத் துபநிடத மெண்ணான்கி
னெங்கோன் சொன்ன
பொருளதனை நெஞ்சகத்தே சௌபாக்கிய குருவென்றும்
பொருளி னோடு
மருளகற் றும்படிய......த்தமிழ்போலு மதனையொரு
வழியெண் ணான்கா
யருளகத்தி லிருந்துரைத்த வதிசயமே யதிசயமற்
றறிகி லேனே.

(இ-ள்)—

அஞ்ஞானத்தை நிவிர்த்தி பண்ணுகிற நாலுவேதங்களையுடைய முப்பத்திரண்டு உபநிடதத்துக்களிலெடுத்து எங்கள் ஸ்வாமியாகிய வியாச மகாமுனி திருவாய்மலர்ந்தருளிய பொருளினைச் சௌபாக்கிய குருவென்னும் பொருளினோடும் அடியேனுடைய இருதயத்தின் மருட்சி யகலும்படி அமுத்தித் தமிழென்று சொல்லப்பட்ட பாஷையி லப்பொருளை ஒருவழியாய் முப்பத்திரண்டு செய்யுளாக அருளானது உள்ளத்திலிருந்து சொல்லித் தமிழ் அதிசயமே அதிசயமல்லாமல் மற்றோ ரதிசயமறியேன் எ - று.

உபநிடதவுரை முற்றிற்று.

(கு-பு) —

இந்நூல், வேதாந்த நூல் வகையைச் சார்ந்ததாய் உபநிடதம் என்னும் பெயர்த்தாய் உரையும் கூறிச் செல்கிறது. இந்நூலின் இறுதிப் பாடலால் வியாச மகாமுனி நாலு வேதங்களுடைய முப்பத்திரண்டு உபநிடதங்களின் பொருளினைச் சௌபாக்கிய குருவென்பவர் முப்பத்திரண்டு செய்யுளாக இயற்றியருளினர் என்று தெரிகிறது. முற்றுமுளா. ஆங்காங்கே சிதிலமாகிப் புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன. பிழையுமுளா.

R. No. 1922.

ஞான அனுட்டானம்.

ÑĀNA ANUṬṬĀNAM.

Foll. 24—28. Fol. 29 is left blank. Extent, 60 granthas.

Complete.

This describes the daily ritess and observances that a person is ordained to perform. The author is not known.

Beginning :

சத்தினியாத முதிர்ச்சியினாலே ஞானாசாரியனை யடைந்து ஞானதீட்சையைப் பெற்றுச் சிவாகமமும் சிவானுபூதியுமுடைய ஞானவான்களே ஞானமார்க்கம் அனுட்டிக்கக் கடவர். உதயத்துக்கு ஐந்து நாழிகை யென்ன வெழுந்திருந்து கூடின சுத்தி செய்து சென்ற காலந் தோன்றாத சிவானுபோகத்தில் அழுந்தியிருந்து பிரிந்ததற்குத் தேகசுத்தி, தந்தசுத்தி முதலான கிரியாவிதிப்படி செய்து சலத்தைப் பரமார்த்த சாகரமா யெண்ணி நித்திய முத்தராகிய சிவனைத் தியானித்து ஸ்நானம் பண்ணி முடித்து அனுட்டானம் பண்ணும்படி சர்வ கிருத்தியத்துக்கும் சாக்ஷிபூதராகிய சிவனைத் தியானித்து.

* * * *

End :

சிவனுக்குப் பராமுக அர்க்கியங் கொடுத்துச் சென்ற காலந் தோன்றாமல் நின்ற சிவானுபோகத்தைப் பெற்று......ட்டகக் கோயிலில் எழுந்தருளப் பண்ணி, வீமருத்திரருக்கு புட்பஞ்சாத்தி, மடிப்பில் புரோட்சித்துத் தன்குருவை உண்மை நிலையாக ஆசனமூர்த்தி மூலத்தால் அர்ச்சித்து பாத்தியாசமனம் அர்க்கியங் கொடுத்து, திருவடி விளக்கி, கந்தபுட்பங்களால் அலங்கரித்து நைவேத்தியாசமனம் தூபதீபங் கொடுத்துச் செபித்துச் சாத்தவும்.

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல், நித்யானுஷ்டானம் என்னும் பெயர்த்தாய் நித்தியப்படி காலை எழுந்தது முதல் செய்யவேண்டிய அனுஷ்டானங்களைச் சுருக்கி விளக்கிச் சொல்லுகிறது. முற்றுமுளா.

R. No. 1923.

பரமானந்த தீபம்.

PARAMĀNANDA DĪPAM.

Foll. 30—45. Extent, 225 granthas.

Complete.

Contains many verses in adoration of the Divine Being. Author is not known. This work has been already published. But the present work has 21 stanzas in extra.

Beginning :

பரமானந்த தீபம்.

அஞ்செழுத்தி னுருவாகி யறிவுமாகி
யாதிநடு யீறாகி யனாதியாகிச்
செஞ்சடையிற் கொன்றைமல ரணிந்தோனாகித்
தேனாகிப் பாலாகிச் செகமேழாகி
மஞ்சுலவுங் குழலுமையோர் பாகனாகி
மகிழ்ச்சியுட னெனையாண்ட குருவுமாகி
வஞ்சமறத் தொழுமடியா ருளத்தின்மேவும்
வள்ளல்தனைப் புகழ்ந்தேத்தி வணங்குவாமே. (க)

End :

சீர்பெருகுந் தீர்த்தபுரி நந்திகேசன்
றிருக்கோயி னதிக்கடுத்தக் கீழ்பாலாகப்
பார்பெருகு மாதவத்தைப் புரிந்துமேவும்
பரிவுடைய வனுகூல முனிவனெங்கோ
னோர்பெருகுந் தமிழ்ப்பரமா னந்ததீப
மென்றுரைத்த விந்நூலின் பயனுணர்ந்தோர்
பேர்பெருகும் அஞ்ஞானக் கடலைநீந்திப்
பேசரிய மெய்ஞ்ஞானம் பெறுவர்தாமே. (73)

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல், "பரமானந்த தீபம்" என்னும் பெயர்த்து. எழுபத்துமூன்று பாடல்களுள. கடவுளைப் பற்றிய துதிபபாடல்களடங்கியது. பாடல்கள் நன்றாக சுவைநயம்பட வுள. அச்சிடப்பட்டுளது. அச்சிடப்பட்டதற்கும் இதற்கும் வேறுபாடுகளும் இதில் அதனைவிட அதிகமாக 21 பாடல்களும் உள.

R. No. 1924.

நவக்கிரக கக்கிஷம்.

NAVAGRAHA KAKKIṢAM.

Foll. 46—77. Extent, 540 granthas.

Complete :—

This is a work on black magic by the famous sage Agastiya. The last 12 foll contain the index of the contents and also many Cakras. This will be very useful for those who are engaged in that profession.

Beginning :

நவக்கிரக கக்கிஷம்.

அகத்திய சுவாமிகள் அருளியது.

குபேரன் முன்னிற்க.

ஆதார பூஜை.

" (இந்து) ரவிதழலா வெட்டா வெளியொளியா
யநதரங்க மானவரும் பொருளாய்—வந்தகுகா
திக்கு விசையஞ் செலுத்து நவக்கிரகக்
கக்கிஷத்துக் குன்னிருதாள் காப்பு." (1)

பூசையிலே யதிகமென்ன மானத மாம்பூசை
புண்ணியரே செய்வார் கன்மத்தோா செய்யார்
பேசையிலே மனமே பூரணத்தி னிறகும்
பிரபஞ்சத் தோடிருப்பா ரறியப் போகாப்
பாசையிலே சாத்திரத்தின் பொருளைச் சொன்னார்
பத்திமுத்தி வைராகஇய மாகச் செய்வார்
ஓசைபிறந் திடம்பாரு வொளியைப் பாரு
வொன்றுமில்லா வெறும்பாழைப் பூசை பண்ணே. (3)

End :

கண்டுபார் வேதியர்க்கும் பரதேசிக்கும்
கற்றறிந்த பெரியோர்க்குங் கற்புமாதர்க்குந்
தொண்டுசெய்யு மடியவர்க்கும் புவியாள்வோர்க்கும்
துன்மார்க்கத் தொழில்செய்ய நினைந்திடாதே
பண்டுசொன்ன குருமொழியை மறந்திடாதே
பாமாற்றுமாவாய் வீணுய்ப் பகர்ந்திடாதே
விண்டுசொன்ன நவக்கிரகக் கக்கிஷத்தை
மெய்யென்றால் மெய்மயிலும் வேலும் முற்றே. (95)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல், " நவக்கிரகக் கக்கிஷம் " என்னும் பெயர்த்து. இது பல வசிய மந்திரங்களையும் சக்கரத் தியானங்களையும் கூறுகிறது. அகத்தியர் இயற்றிய தாக வுள்ளது. இறுதியில் 12 ஏடுகளில் அட்டவணையும், சக்கரங்களும் விளக்க வுரைகளும் கூறப்பட்டுள்ளன. மந்திர தந்திரம் செய்வோர்க்கு இது மிகவும் பயன்படலாம். முற்றுமுளது.

R. No. 1925.

மகாராசா துறவு.
MAHĀRĀJĀ TUṞAVU.

Foll. 78—96. Extent, 240 granthas.

Complete.

This is a portion of "Vēdānta Śāstraratnāvaḷi" published by Kāśikānanda svāmigaḷ. This is written by Kumāradēva svāmigaḷ. The present work contains some verses that are not found in the published text.

Beginning :

பாயிரம்.

அமரர்கள் பரவுந் திருமுது குன்றி
லாழத்துப் பிள்ளையைச் சிகரிக்
குமரசற் குருவை யிமகிரி ராஜ
குமாரியாம் பெரியநா யகியை
மும்மலமு மொருங்கே யகற்றிடு முக்கண்
முதல்வனைச் சார்ந்தநா யகனை
நமதெனப் படியே முடிந்திடத் தினமு
நாடிநின் றிறைஞ்சிவாழ்த் திடுவாம். (1)

மறைமுடி வதனில் விளங்கிடு மொளியே
மனிதரைப் போலவந் தெனது
சிறைதவிர்த் தாண்ட சிவப்பிரகாச
தேசிகன் றன்னைமற் றவரை
மரைமல ரடியைப் போற்றிடுஞ் சாந்த
நாயகன் றன்னை மற்றவரை
நிறையருள் பெற்ற பழனிமா முனியை
நெஞ்சினு ளிருத்தியே பணிவாம். (2)

திங்களொண் கவிகைத் திகிரியந் திணிதோட்
டிகழ்கடந் றுனைமா ராச
னங்கண்மா நிலத்திற் றுறந்துவீ ட்டைந்தவ
ரியலிக் காதையைத் தமிழா
லிங்குமா தவத்தோ ரிசையுமென் றிசைப்ப
விசைத்தனன் வீடுறக் கேட்டோர்
கொங்கவிழ் பொழில்சூழ்ப் பழமலை யுறையுங்
குமாரதே வென்னுமா முனியே. (3)

சிவன்றிரு வடிவா மைந்து சின்மய வெழுத்தும் வாழி
நவந்தரு நீறும் வாழி நயனநன் மணியும் வாழி
கவின்தருங் குமார தேவன் கழலிணை யிரண்டும் வாழி
யவன்றிரு வடியார் தம்மோ டாருயி பனைத்தும் வாழி.

பாயிரம் முற்றுப்பெற்றது.

நூல்.

தருக்கிளர் நைமிசா ரணியத்திற்
றங்கிய முனிவர்கள் சூதன்
வரப்பணிந் தேத்திக் கதைகள்பற் பலவா
வகுத்துரைத் தனைமகா ராசன்
றிருக்கதை யெங்கட் குரைத்திலை யதுநீ
செப்பெனச் சுருதியிற் சொல்லுஞ்
சுருக்கமில் காதை யிதுவெனத் தொகுத்துத்
தோமறக் கேண்மினென் றுரைக்கும். (1)

End :

அரியது துறவற மல்ல தில்லையான்
மருவிய துறவற மொருவி மன்னனும்
உருகெழு முடிகவித் துலக மாள்வது
பெருவிலை மணியிணைப் பிண்டிக் கீதலே

முற்றிற்று.

(கு.பு)—

இந்நூல் ' மகாராசா துறவு " என்னும் பெயர்த்து. இது, குமாரதேவ சுவாமிகளியற்றியது. ஸ்ரீ கோயிலூர் காசிவாசி—ஸ்ரீ காசிகாநந்தஸ்வாமிகளால் தொகுத்துச் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்ட வேதாந்த சாஸ்திர ரத்னாவளி என்ற நூலில் உள்ள ஒரு பகுதியாகும். முற்றுமுளது. அச்சிடப்பெற்ற நூலில் இல்லாத பாயிரப்பாட்டுக்கள் மூன்று இதிலுள்ளன.

. . . .

R. Nos. 1926 to 1929 (one codex).

Paper. 9¾ × 11¼ inches. Foll. 1—90. Lines, 20 on a page. Tamil. Good. New. Extent, 1,283 granthas.

Transcribed in 1949-50 from a manuscript of Sri Krishnamurthi Mudaliar, North Car Street, Siyāli.

R. No. 1926.

ஞானவாசிட்டத் தலைப்புகள்.

ÑĀNAVĀSIṬṬA-T- TALAIPPUGAḶ.

Foll. 1—33. Foll. 34 and 35 are left blank. Extent, 413 granthās. Complete.

This is an index to the verses of the alphabetically. Author is not known.

(கு-பு)—

இந்நூல், ஞானவாசிட்டம் என்ற நூலிலுள்ள ஒவ்வொரு பாட்டின் முதலடியின் தலைப்புக்களை மாத்திரம் அட்டவணை போலக் கூறிச் செல்கிறது. முற்றுமுளது.

R. No 1927.

ஞானவாசிட்டத் திரட்டுத் தலைப்புகள்.
ÑĀNAVĀSIṬṬAT TIRAṬṬU-T- TALAIPPUGAḶ.

Foll. 36—47. Extent, 125 granthas.

Complete.

This work also gives the first word of the important stanzas of the Ñānavāsiṭṭam. These are not arranged alphabetically.

(கு-பு)—

இந்நூல், ஞானவாசிட்டத்திலுள்ள சில முக்கிய பாடல் தொகுதிக்குப் பாட்டின் முதலடியின் தலைப்பை அகரவரிசையில்லாமல் அட்டவணைபோல அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பக்கம் குறிப்பிடப்படவில்லை. முற்றுமுளது.

R. No. 1928.

மணவாள மாமுனி நூற்றந்தாதி.
MAṆAVĀḶA MĀMUNI NŪṚṚANTĀDI.

Foll. 48—63. Extent, 225 granthas.

Complete.

This work describes the merits and greatness of Maṇavāḷamāmuni.

Beginning :

நீர்வானை நல்கு மணவாள மாமுனி நின்மலன்மேற்
பாருந் தமிழ்ச் சொன் னூற்றந் தாதி பகர்ந்திடென்னை
நாவாழ் திறம்புகழ்ந் தேத்துவ னுன்னையென் னன்னெஞ்சுள் [வாழ்
தேவா வெழுந்திரு வேங்கட நாதமெய்த் தேசிகனே. (க)

செங்கே தகைகமழ் சீரார வாமங்கைத் தெய்வமுனி
பங்கே ருகமலர்ப் பொற்பாதம் போற்றிப் பணிந்தடியே
னங்கே ளெனுமெய் மணவாள மாமுனி நாமத்தினு
லிங்கே யினிய தமிழ்நூற் றந்தாதி யியம்புவனே. (உ)

சீர்கொண்டு நாளுந் துதிநெஞ்ச மேநந் திருமகள்சொன்
ஞர்கொண்ட தண்டுள வச்சர ணுமகிழ்த் தாமனடிப்
பேர்கொண்ட வண்ணலி ராமா னுசமுனி டெய்கழிரு
ளூர்கொண்ட சிந்தை மணவாள மாமுனி யொண்புகழே. (3)

End :

வே.........ரு.........ளம்மணவாள மாமுனி வித்தகனைக்
காதற் பெருக்குடன் யாமுட் கொண்டோமது கண்டுவிரைந்
தோதற்கரிய வொண் பாற்கடல்போல்வளர்ந் தோங்கியந்தே
...............திடும்படி செய்தெம்மை மற்றவன் சீர்
[கொண்டதே. (180)

ஒண்சீல னெந்தை மணவாள மாமுனி யுத்தமனுந்
தணர்ந்த மாமதி யிணக்கதி ராய்த்தழைத் தெங்கணுமன்
விளங்த் தரன்று மார்க்கும்பைங் கூழ்கள் விளைத்திடுநல்
வண்கீர வாமங்கை மாமுனி வாழியெவ் வைகலுமே. (112)

வாழி முற்றும்.

(கு-பு)—

இந்நூல், மணவாளமாமுனிகளின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கின்றது. முற்றுமுளது. பிழைகளுள.

R. No. 1929.

சடகோபரந்தாதி (உரையுடன்).

ŚAṬHAKŌPARANTĀDI (with commentary).

Foll. 64—90. Extent, 520.

Incomplete.

An elegant commentary to 24 verses on the Śaṭhakōparantādi. This work has been already published without commentary.

Beginning :

சடகோபரந்தாதி மூலமும் உரையும்.

தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன்
பாவிற் சிறந்த திருவாய் மொழிபகர் பண்டிதனே
நாவிற் சிறந்தவம் மாறற்குத் தக்கநன் னுவலன்
பூவிற் சிறந்த வாழ்வான் கம்பநாட்டுப் புலமையனே.

இதன் பொருள் :

தேவில்—பிரம்மருத்திரேந்திர தேவர்களிலே
சிறந்த—விலக்ஷணனு
திருமாற்கு—ஸ்ரீயப்பதிக்கு
தக்க—தகுந்த

தெய்வம்—தெய்வங்களிற் சிறந்தமைதோன்ற
கவிஞன்—கவிபாடவல்லபுலவன்
பாவில்—எல்லாப்பாடல்களிலும்.
சிறந்த—விசேஷமான.
திருவாய்மொழி—திருவாய்மொழியை
பகர்—பாடியருளின
பண்டிதனே—நிபுணரான ஆழ்வாரே யல்லது வேறில்லை
நாவில்—அப்படிப் பாடவல்ல நாவினாலே
சிறந்த—உயர்வுகொண்ட
அம்மாரற்கு—அந்தச் சடகோபற்கு
தக்க—தகுந்த
நன்னுவலன்—நல்ல வித்துவான்
பூவில்—இந்த உலகத்திலே
சிறந்தவாழ்வரன்—இராம குணானுபவமாகிய விலக்ஷண சம்பத்தை யுடையவரான
கம்பநாட்டுப் புலமையனே—கம்பநாட்டு ஆழ்வாரென்னும் வித்துவானே யல்லது வேறில்லை.

திருமாலைப் பாடவல்லவர் சடகோபரே; சடகோபரைப் பாடவல்லவர் கம்பநாட்டாழ்வாரேயென்பது கருத்து. (1)

(கு-பு)—

இந்நூலில், சடகோபரந்தாதி என்ற நூலில் உள்ள 24 பாட்டுக்கட்கு மட்டும் உரைஉளது. மற்றுமிதனைப் பிரதி செய்தோரால் பல பிழைகளும் ஏற்பட்டுள்ளன. முழுவதுமில்லை. புள்ளிகள் ஆங்காங்கே அதிகமாக இடப் பட்டுள்ளன. இந்நூலின் மூலம் அச்சிடப்பட்டுள்ளது. உரை இருக்கும் பாகம் வரைக்கும் மிக நன்றாக எளிய நடையில் சிறப்பாக எழுதப்பட்டுளது. முழுவதும் கிடைக்காதது நமது துரதிர்ஷ்டவசமெனக் கொள்ள வேண்டும்.

R. No. 1930.

மூன்று சாதகங்கள்.
MŪNṚU JĀTAKAṄKAḶ.

Palm leaf. 16 × 1 inches. Foll. 1—83. Lines 6 on a page. Tamil. Injured. Old. Extent, 2,050 granthas.

Presented by Sri P. G. Sundaresa Sastriyar, Principal of National College, Trichy, in 1949–50.

Complete.

This is an astrological treatise written by an anonymous author. It is like the Saptarisi nāḍi and it foretells the fortune and misfortune of Male, female and Ali that is neither male nor female.

Beginning :

> இரண்டினில் இந்து கேதும் சேயும் மேஷம் பற்ற
> வருமதுலே மன்ன னிற்க வரும்கன்னி சனியும் மேவ
> அரவுமே தேளி [ல் நிற்க] ஆதித்தன் புதனுஞ் சுக்கிரன். (1)
> மருவிட வில்லில் தானே மகபாலன் துலேயாம் லெக்கினம்
> இந்தவர் கிரகங்கள் மேவ யிசைக்கிறேம்..........ண் தாமும்
> சிந்தையாம் தேவி நோக்கால் செப்பிலன் சிற்றூ ருற்றன்
> நிந்தையில் ஈசன் முருந்தன ளேர்ந்ததாம் அவ்வா ளூரில்
> வந்ததாம் கீழ்மேல் வீதி வரும்இல்லம் தெற்கு நோக்கம். (2)
> இருபாலும் வீடு முண்டு எதிரிலும் இல்லம் சேரும்
> வருமில்லம் சொந்த......லும் வருவதாம் துணைவற்கும் பாகம்
> ஆறுமே கணேசன் வடகீழ் அய்யனும் பிடாரி பெண்ணும்
> மருவிடும் தென்மேல் சாயல் மலிபுண்ணியப் பாடம் தெறகாம் (3)

(கு-பு)—

இந்நூல், மூன்று சாதகங்கள் என்னும் பெயர்த்தாய் சப்தரிஷி நாடி போன்று ஒவ்வோர் ஜாதகங்களைக் கூறி அந்த ஜாதகப்படி பொருந்தியிருப் போர்கட்குப் பலன்களும் கூறுகிறது. நத்தைகள் நீர்நிலைகளின் ஓரங்களில் கால்களால் கீறியிருப்பதுபோல் எழுத்துக்கள் உள்ளதால் அவைகளைச் சரிவரக் காண இயலவில்லை. பெண் சாதகம், ஆண் சாதகம், அலி சாதகம் முதலிய மூன்றுமுள்ள காரணத்தால் இப்பெயர் பெற்றது போலும். சிதிலமாயுளது.

R. No. 1931.

அசுவமேத யாகம் (வசனம்).

AŚUVAMĒDHA YĀGAM (Prose).

Palm leaf. 19 × 1¾ inches. Foll. 1—153. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 3,672 granthas.

Purchased in 1919-50, from Sri Duraisami, Sentamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is an incomplete work describing the performances of the Aśvamēda sacrifice by Dharmaputra. After the war of Kurukṣētra the Aśvamēdha was performed. The author is not known.

Beginning :

செனமே செய மகரிஷயானவர் செனமே செய ராசாவைப் பார்த்துப் பதினெட்டாம் நாள் பாரத யுத்தமும் சொல்லி, பிற்பாடு கேளும் ராசாவே ! என்று சரா சந்தாதி அசுவமேத யாகத்தின் கதை சொல்லும்படி.

சுபமஸ்து, ஸ்ரீமன்—மகாமண்டலேஸ்வரன், அகண்ட மண்டலாதிபன்.

* * * *

ராச்சியபாரம் நடத்திக் கொண்டிருக்கையில் தர்மரானவர் இலேசத்தை யடைந்து . . . . . தம்பிகள் ஐந்நூறெருரு பேரையும் வதை செய்தோமே. ஆகையினாலே நமக்கு நாலு பேரொழிய பின்னுதவி யில்லாமல் போச்சுதே. இந்தக் கருமத்தை என் எத்துகொண்டோம். இந்தக் குலபாதகத்தை எப்படித் தொலைக்கப் போறோமென்று தர்மரானவர் இலேசத்தையடைந்து மனதளர்ந்து விசாருப்படுகையில

* * * * *

End :

அர்ச்சுனன் வில்லை வளைத்துப் பல்லைக் கடித்துப் பாண சரங்களையும் அஸ்திரத்தையும் பிரயோகம் பண்ண பெருலீலையானவள் அத்தனை அஸ்திரங்களையும் ம(ரு) [று] த்து ந(ரு) [று] க்கி யெறிவதைப் பார்த்தான். அருச்சுனன் கால வயிரவன் போலே சீறித் தேரிலே யிருக்கப்பட்ட கெதைகள் . . . . . . சிங்காணிவில், கவண்டி இப்படிக்கொத்த முப்பத் திரண்டு ஆயுதங்களையும் எடுத்துத் தொடுத்துப் பெருலீலை பேரிலே வீசி யெறிந்தான. அந்த ஆயுதங்களைப் பெருலீலையானவள் தனுவணையிலே சாய்நதபடியே கையிலே பிடித்த வில்லைக் குதையை திருப்பித் தட்டி விட்டாள். அந்த முப்பத்திரண்டு ஆயுதங்களும் பெருலீலையினுடைய தேவரின் கீழே மலைபோலே........

முற்றுமில்லை.

(கு-பு)—

இந்நூல், பாரதத்தில் பதினெட்டு நாட்போரும் முடிந்தபின் தருமர் முடி சூடி ஆட்சி செலுத்துகையில் போரில் ஏற்பட்ட பாபங்கள் தொலைய அசுவமேதயாகம் செய்வதைப்பற்றிக் கூறுவதாகும். முதல் தொடங்கி ஆறுவது கதையில் மதனதேசத்து மணிநகரப் பட்டிணத்தைப் பெருலீலை என்ற பெண் ஆட்சியில் அவள் குதிரையைத் தடுத்தாள். அவளுடன் அர்ச்சுனன் தலைமையில் போர் நடந்தது என்ற வரை உளது. முடிவு தெரியவில்லை. பழுதுபட்டுள்ளது. எல்லோருக்கும் புரியும் வகையில் தகுந்தவாறு வசனநடையிலாகியுள்ளது.

R. No. 1932.

மதுரைவீரன் கதை அம்மானை.
MADURAIVĪRAN KATHAI AMMĀNAI.

Palm leaf. 16 × 1 inches. Foll. 1—97. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 1,152 granthas.

Purchased from Sri Duraisami, Sēndamangalam P.O., Nāmakkal taluk, Salem district.

Incomplete.

This is an incomplete historical work. In the form of Ammānai, this deals with the Madurai Vīran during the reign of the famous Tirumalai Nāyakar. This is same as the work described under D. No. 2179.

(கு-பு)—

இந்நூல், சரித்திர சம்பந்தமான, மதுரையம்பதியாண்ட திருமலை நாயக்கர் காலத்திலுள்ள "மதுரை வீரையன்" என்பானது வரலாறுகும். அம்மானைப் பிரபந்தமாகப் பாடப்பட்டுள்ளது. எழுத்துப் பிழைகள் அதிகமாகவுள்ளன. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2179-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கின்ற நூலை யொத்ததாகும். முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. பழுதுபட்டுள்ளது.

R. No. 1933.

கம்பராமாயண சங்கோத்தர விருத்தி
KAMBARĀMĀYAṆA SAṄKŌTTARA VIRUTTI.

Palm leaf. 16 × ⅞ inches. Foll. 1—50. Lines, 4 on a page. Tamil. Fair. Old. Ex e , 125 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is written by Śivañānamunivar. This is same as the work described under D. No. 524.

(கு·பு)—

இந்நூல், சிவஞானமுனிவரால் இயற்றப்பட்டது. முழுதுமுள்ளது. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்து 524-ஆம் எண்ணில் வந்துள்ளதேயாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1934.

மணவாளநாராயண சதகம்
MAṆAVĀḶA NĀRĀYAṆA ŚATAKAM.

Palm leaf. 15½ × ⅞ inches. Foll. 1—35. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 210 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is same as that described under R. No. 767.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 767-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுள்ள நூல் போன்றது. முற்றுமில்லை. அதன் குறிப்பையும் காண்க. அச்சாகியுள்ளது.

R. No. 1935.

இஸ்லாமிய மந்திரங்கள்
ISLĀMIYA MANTIRAṄKAḶ.

Palm leaf 16 × ⅞ inches. Foll. 1—23. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 176 granthas.

Purchased in 1949–50 from Ç. Duraiswāmi, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This contains Urdu hymns in Tamil script that are sung by the Mahamudans on every Friday. Author is not known.

Beginning :

வெள்ளிக்கிழமை சும்மா விபரம் நியத்து :—
உசல்லி சாலாத்து ஆதல் சும்மா
ஒலுவு நாபிலி உறககாய
தைதயினி லிலலிகி அல்லாகு அக்குபரு
உசல்லி சாலாத்து ஆதல் சும்மாஜீது
நாபிலி உறக்காயத்தை யினிலில்லாகி
அல்லாகு அக்குபரு.
உசல்லி சாலாத்து ஆதல்
சும்மா சுன்னத்துச் ஆருபகா
றக்காயத்தை யினி லில்லாகி
அல்லாகு அக்குபரு.

* * * * * *

End :

பன்சுருஞு அல்லலக் கஹமில காபிரின அலாயன்ன அவுலியா அல்லா யிலா கவுபுன் ஒலாகும்—பியேகு சுறுான பிஹக்கி சுபஹான றம்பிக்கறம் புலகிஷ சத்தி அம்மாயே சீபுன் ஒசலாமுன் அல்லமுரு சலீஞுவுல் ஹமது லில்லாகிறம் பில் அயல்.

(கு-பு)—

இந்நூல், முகமதியர் வெள்ளிக்கிழமை தினம் சும்மா தொழுகையின் போது அவர்கள் கடவுளின் பேரில் பாடும் பலவித தோத்திரப் பாட்டுக்கள் அடங்கியது. தமிழ் எழுத்து வடிவில் உருதுமொழிப் பாட்டுக்களாலாகியது. எழுத்துப் பிழைகள் மொழி மாற்றத்தினால் இருக்கும் போலும். முடிவு பெற்றதாகத் தெரியவில்லை. இது சிறிய செய்யுட்டிரட்டாகக் கொள்ளலாம். பழுது பட்டுள்ளது.

R. No. 1936.

கௌளிக் காதல்
GAUḶIK KĀTHAL.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—12. Lines, 4 on a page. Tamil. Much injured. Old. Extent, 12 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

Though the title is Gaulikkāthal, that topic is dealt with in only one folio. The remaining folios contain many Kīrthanas. The work is incomplete. Author is not known.

(கு-பு)—

இந்நூல், "கௌளிக் காதல்" என்றிருப்பினும் இப்பெயர் ஒரு ஏட்டில் மட்டும் குறிப்பிடப்பட்டு மற்ற ஏடுகளில் பலதிறப்பட்ட பாடல்கள் அடங்கியுள்ளன. அவை கீர்த்தனை போலுள்ளன, சிதைந்துள்ளன. முற்றுயில்லை. பிழையுள.

R. No. 1937.

பதினோராம் நிகண்டு.
PATINORĀM NIGHAṆṬU.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—15. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 25 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is an etymological treatise written by some unknown author. This contains the 11th collection of a series of words in Cūḍāmaṇi Nighaṇṭu.

(கு-பு)—

இந்நூல், "சூளாமணி நிகண்டு" என்ற நூலில் பதினோராம் தொகுதியைச் சார்ந்தது. இதில் யகர தொகுதி மட்டும் முற்றுமுள்ளது. மிகப் பழுதுபட்டுளது.

R. No. 1938.

வேணங்காட்டு நங்கை வரலாறு.
VĒNAṄKĀṬṬU NAṄGAI VARALĀṞU.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—6. Lines, 5 on a page. Tamil. Old. Extent, 45 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

This is a collection of songs sung in ancient folk dances and hence is very colloquial. The work is incomplete.

Beginning :

(விருத்தம்)

அன்னம்போல் நடைநடந்து
    ஆடையாபரணம் பூண்டு
மின்னிடை துவள நல்ல
    மெல்லிய லாலாத்தி யேந்த
கன்னிமார் கவரி வீச
    கனரதி அடப்பங் கட்ட
மீனலும் (மகிதலம்) புகழ் வெண்காட்டு நங்கை
    வருகின் றாளே.

End :

என்ன செய்வேன் ஈசனுரே—இப்போ
என்னிடுப்பு நோகுதையோ—ஈசனுரே
எந்தன் புத்தி தடுமாடுதய்யோ—ஈசனுரே.
கண்ணிரண்டு வருகுதய்யோ—ஈசனுரே
குறுகா தன்னடி சேரறுதய்யோ—ஈசனுரே
மயக்கமாய் வருகுதய்யோ—ஈசனுரே
கெறபம் மார்பிலேறி பிறளுதய்யோ—ஈசனுரே
சகிக்கவுமுடியாதையோ—ஈசனுரே
நான்சாமி யென்ன செய்வேன்—ஈசனுரே.

(கு-பு)—

இந்நூல், நாடகசம்பந்தமான பழங்காலத்திய தெருக்கூத்து வகைகளில் பாடப்படும் ஒருவகைப் பாட்டுக்கள் சேர்ந்த நூலாகும். கொச்சைத் தமிழிலுள்ளாயது. சிறிய நூல். பிழையுமா. பழுதுபட்டுளது. முற்றுமிலலை யெனத் தோற்றுகிறது. இவை, தொகுதி நூலிலிருந்து சிதைந்த ஏடுகள் எனத் தோற்றுகின்றன.

R. Nos. 1939 and 1940 (one codex).

Paper $15\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Foll. 1 – 46. Lines, 5, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 8 8 granthas.

Purchased from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

R. No. 1939.

கதைத் திரட்டு.

KATHAI-T- TIRAṬṬU.

Foll. 1—37. Extent, 666 granthas.

Incomplete.

This contains a collection of humorous stories on Tenālirāman, in the court of the famous Kṛṣṇadēvarāya. The collection seems to be incomplete since it contains only one story in the 2nd chapter of the work by name Appāji Kathaikaḷ.

Beginning :

சோழ மண்டலத்தில் சோழ மகாராஜா நாளிலே மனுநீர்த்த நியாயாதிபதியாகிய வசிய னென்கிற சோழிய வேளாளன் மரியாதைராமனுடையான் என்பவன் தீர்த்த தீர்ப்புக் கதைகளும், தொண்டை மண்டலத்தில் இராய வேலூரிலே வசிய னென்கிற துளுவ வேளாள ராயர்களில் கிருஷ்ண மகா தேவராயர்களிலே மந்திரியாக விருந்த நியோகி பார்ப்பான் அப்பாச்சியின் யுக்திக் கதைகளும், அந்தக் காலத்தில் தானே விகட கவியாயிருந்த நியோகிப் பார்ப்பான் தெனாலி ராமலிங்கய்யன் ஆசியக் கதைகளும், கோமட்டிகள் உபாயக் கதைகளும், நாநா விதமாகிய வேடிக்கைக் கதைகளும், ஒரு கதையின் சாரமெல்லாம் ஒரு வாக்கியத்திற் காட்டும்

வாக்கியக் கதைகளும், மூடர்களின் புத்தி விபரீதக் கதைகளும், யுக்தி வார்த்தைகளும், மந்திரங்களும், மல உவாங்கியங்களும், விடுகதைகளும், மடத்தில் புத்தங்களிலும் உள்ள வேடிக்கைக் கதைகளையும் பதிப்பிக்கப் பட்டது. பிலவங்க வருஷம் மார்கழி மாதம் ருஉ-யின் விலை ரூ. ௩.

மரியாதைராமன் கதைகள்.

முதலாவது திருடர்கள் நால்வரும் ஒருவன் மற்றவனை மோசஞ் செய்து நாலுபேர் திருடர் ஒரு பட்டிணத்திலே ஒரு கிழவியின் வீட்டில் இறங்கித் தாங்கள் திருடிப் பொதுவில் வைத்திருந்த உடைமைகளையும் ஒரு தவலையிலே போட்டு மேலே முத்திரையிட்டு . . .

(கு-பு)—

இந்நூல், "கதைத்திரட்டு" என்னும் பெயர்த்தாய் மரியாதைராமன் கதை (முதல் அத்தியாயம்—கதைகள் 21) முற்றிலும் முடிந்து, இரண்டாம் அத்தியாயம், "கதா சிந்தாமணி, இராயர்—அப்பாஜி கதைகள்" என்ற தலைப்பின் கீழ் "முதலாவது–அப்பாஜி முதன் மந்திரி பட்டங் கொடுத்தது" என்று தொடங்கப் பெற்றிருக்கிறது. ஆகவே முற்றிலும் கதைத்திரட்டு முடியவில்லை. பிழைகள் உள்ளன. பழுதுபட்டுளது. அச்சிடப்பட்டிருக்க லாம் எனக் கருதப்படுகின்றது.

R. No. 1940.

கதம்பச் சுவடி.

KADAMBA-C- CUVAḌI.

Foll. 38—46. Extent, 142 granthas.

Incomplete.

This is an incomplete collection of verses on varied topics. This contains only 12 stanzas.

Beginning :

சந்திரனு மீசன் சடையிலொளித் தான்வாணி
வந்தயனு வில்பகுந்தாள் வாணருக்குத்—தந்தை
சிலைப்பிடித்த வில்விசையன் செல்லப்ப வேந்தன்
கலைகொடுத்த வயணமதனைக் கண்டு.
வாய்த்த வயிரபுர மாகளி யம்மைகேள்
ஆய்த்ததொரு அய்யர் வயல்தனில்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காலிங்க ராயர்
குதிரைமா ளக்கொண்டு போ.

* * * * *

தாதாறும் பூங்கடம்ப தாராளான் சண்முகவேள்
வேதாவை முன்சிறையில் மேவவைத்தோன்—தீதரனோர்
தனங்கணெதிர் வாராத சாமிபதம் போற்றில்
வனங்கொடிய கூத்துவரு மா.

* * * * *

End :

சற்புகழை யேவிளங்கத் தாரணியில் வந்துதித்த
கற்பகஞ்சேர் செல்லப்பகுடை கர்ணனுக்கு—நற்புடைய
மானதத் தாளென்று மாருத சோடசவ
தானிவரந் தந்தருள நிதம்.

(கு-பு)—

இந்நூல், பலதிறப் பாடல்களைக்கொண்டதால் "கதம்பச்சுவடி" என்று யிற்று. பன்னிரண்டு பாட்டுக்களே யுள்ளன. முற்றுமில்லை. இறுதியில் பல ஏடுகள் வெற்றேடுகளாக வுள்ளன. சிதிலமாயது. பிழையுள.

R. No. 1941.

நீதிச் செய்யுட்கள் உரையுடன்.

NĪTI-C-CEYYUṬKAḶ (with commentary).

Palm leaf. 15¾ × 1 inches. Foll. 1—4. Lines, 4, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 32 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is printed by name Nīti veṇbā. There is a commentary of five verses in it. The commentary is written in a simple manner.

(கு-பு)—

இந்நூல் "நீதிவெண்பா" என்னும் பெயர்த்தாய் அச்சிடப்பட்டிருக் கிறது. அதில் ரு பாட்டுக்கட்கு மட்டும் உரையுளது. உரைவளம் நயமானது. முற்றுமில்லை. பழுதுபட்டுளது.

R. No. 1942.

சிட்டுக்குருவி ராமாயணம் (வசனம்).

CITTUKKURUVI RĀMĀYAṆAM (Vacanam).

Palm leaf. 16¼ × 1⅛ inches. Foll. 1—39. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 585 granthas

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This work in colloquial Tamil, describes how a small bird got an offspring and how the Lord of the ocean carried it away. Author is not known.

Beginning :

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வெளிய தாக்கும் வேரியங் கமலை நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டெரிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

ஸ்ரீலஸ்ரீ மகா மண்டலேசுபரரான சராசர புத்திராச பரமேசுபரான ஸ்ரீஸ்ரீ வீரபோச ராசாவையன் வரிகள் வீரசிங்காசனத்திலே கொலுவாக இருக்கிற வேளையிலே ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களும் வந்து புடை சூழ்ந்து கொண்டு கொலுவாக இருக்கிற வேளையிலே தருமக் காதைகள், சாத்திரங் கள், சிவபுராணங்கள், நன்னூல் காவியங்கள்

* * * * * * *

சிட்டுக்குருவி நெடுநாளாய்ப் பிள்ளையில்லாமல் மலடாக இருந்தது. கண்ட கண்ட கோவிலுக்குக் காணிக்கைகொடுத்துக் காணாத கோவிலுக்குக் கையெடுத்துக் கும்பிட்டுத் தவசு பண்ணி . . . . . .

End :

சிட்டுக்குருவியைப் பார்த்து நீ மகா புத்திசாலி என்று நீ சொன்ன சபதம் முடித்தாப் போலே சிவபதவியிலே அடைவாய் என்று சொல்லிப் பெட்டுப் பரமேசுரரும் மற்றுமுண்டான தேவர்கள், ரிஷிகள் எல்லோரும் புஷ்ப மாரி பொழிய கயிலாசத்துக்கு எழுந்தருளினார்கள். ஆகையினாலே இந்தச் சிட்டுக்குருவி ராமாயணத்தை எழுதிப் படித்தாரும், இதைக் கேட் டோரும் சிவகதியடைவார்கள் என்றவாறு.

(கு-பு)—

இந்நூல், " சிட்டுக்குருவி ராமாயணம் " என்னும் பெயர்த்து. முற்று முள்ளது. சிதிலமாயது. பிழையுளது. நடை வசனமாக இருப்பினும் கொச்சைத் தமிழிலுலாயது. இதில் பல கிளைக்கதைகள் இடையிடையே வருகின்றன. சிட்டுக்குருவி பிள்ளையில்லாதிருந்து தவஞ் செய்து பிள்ளை யுண்டாக, அதனைச் சமுத்திரராசன் எடுத்துச் செல்ல, இறைவன் அருளால் அதனைத் திரும்பப் பெற்றுச் சபதம் முடித்துச் சிவபதவியடைந்த வரலாற்றைக் கூறுகிறது.

R. No. 1843.

அருணகிரி யந்தாதி (உரையுடன்).
ARUṆAGIRIYANTĀDI (with commentary).

Palm leaf. 16½ × 7 inches. Foll. 1—30. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 120 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This work has been already published. The commentary runs only up to the 59th verse. This is same as that described under D. No. 237.

(கு-பு)—

இந்நூல், "அருணகிரியந்தாதி" என்னும் பெயர்த்து. ஐம்பத்தொன்பது பாட்டுக்களே உரையுடன் உள்ளன. முற்றுமில்லை. சிதிலமாயது. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 237-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ள நூலில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அது அச்சாகியுள்ளது.

R. No. 1944.

இலக்குமி பார்வதி ஏசல்.

ILAKKUMI PĀRVATI ĒSAL.

Palm leaf. 16¾ × 1 1/16 inches. Foll. 1—7. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 35 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This deals with the famous quarrel between Pārvati and Lakṣmi. The manuscript is very injured

Beginning :

முந்திமுந்தி நாயகன் பாதந்துணையே—நல்ல
முடிமே லணிந்துகொண்டு யேசல பாடவே
அந்தமுடன் லட்சுமியும் பார்வதி யுமாய்
ஆவலாய்க் கூடியங்கே யேசல் பாடவே
முன்னும் பின்னும் உங்கள்குலம் நல்ல குலமோ—அடி
மூங்கிலிலே தான்பிறந்தார் உங்கள் சிவனூர்
யென்ன யென்னடிசந்தி சூர்ப்பனகையே—அடி
தூணிலே பிறந்தாரடி உங்கள் பெருமாள்.

End :

பார்த்திப னங்கையினாலே வில்லடி பட்டு
பதுங்கி தளும்பினரே உங்கள் சிவனூர்
வேந்தர் உரலோடு கட்டி வைக்க
விறுவிறென்று முழித்தாரடி உங்கள் பெருமாள்
இந்தப்படி இரண்டு பேரும் தர்க்க மாடவே
யேகாம்ப நாதர்வந்து ராசி பண்ணவே.

(கு-பு) —இந்நூல், இலக்குமி பார்வதி ஏசல் எனும் பெயர்த்தாய் திருமால் சிவபெருமான் இருவர் தம்முடைய புகழை எடுத்துரைக்கும் அளவில் அமைந்ததொரு நூலாகும். முற்றுமுளது. சிதிலமாகியுளது. எழுத்துப் பிழைகளுள.

R. No. 1945.

நவக்கிரக சிந்தாமணி.

NAVAGRAHA CINTĀMAṆI.

Palm leaf. 8½ × 1 inches. Foll. 1—76. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 475 granthas.

Purchased in 1949-50, from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

T is is an incomplete treatise on astrology by some unknown author.

Beginning :

நவக்கிரக சிந்தாமணி இந்தப் பிற பதிஞ்சை சிந்தாமணி பார்க்கிற கிரமம் நாலுமூலை சவுக்கமாய் மெழுகி விநாயகரை வைத்துத் தூப நிவேத் தியங்கொடுத்துப் பூசை செய்து ஒன்பது பலகரை எடுத்துக்கொண்டு கோரின காரியம் ஒன்பது திறம் போட்டு முன்புறம் விழுந்ததைக் கணக்குக் கூட்டிக் கொண்டு பின்புறம் விழுந்ததைத்தள்ளி, கூடின கணக்கை ஒன்பதில் கழித்து மிச்சமானது ஒன்றானால் ஒன்றும் எடு என்றும், பத்திரண்டு மிச்ச மானால் இரண்டாம் எடு இரண்டாம் பததி. மூன்று மிச்சமானால். மூன்றும் எடு மூன்றும் பத்தி. நாலு மிச்சமானால் நாலாம் எடு நாலாம.

*   *   *   *   *

பத்தி ஒன்பது மிச்சமானால் ஒன்பதாம் எடு ஒன்பதாம். இந்தப் பிரகாரமாய்ப் பார்த்தால் பலாபலன்கள் தெரியும்.

End :

இந்தத் தேவதா பூசை பண்ண நல்லதோ ? பொல்லாதோ ?

இந்தத் தேவர் பூசை பண்ண தேசத் தியாகமாகும்.

(கு-பு)—

இந்நூல், சோதிட வகையைச்சார்ந்த "நவக்கிரக சிந்தாமணி" என்னும் பெயர்த்து. பலகரையை உருட்டிப் பார்த்துப் பலாபலன்கள் கூறு வது. முற்றும் முடிந்ததாகத் தெரியவில்லை. எழுத்துப் பிழையுள்ளன. பழுதுபட்டுள்ளது.

R. No. 1946.

திருநீலகண்டன் பள்ளு.
TIRUNĪLAKAṆṬAN PAḶḶU.

Palm leaf. 14—7 inches. Foll. 1—46. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 460 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Seems this is to be incomplete.

This is same as the work described under D. No. 2098. The present manuscript in addition has seven verses. The last few folios contain stōtras on the presiding goddess of Madurai.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2098-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. அவ்வெண்ணில் வருணித்திருப்பதைக் காட்டிலும் ஏழு பாட்டுக்கள் அதிகமாக உள்ளன. நூல் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. குறிப்பு அங்குக் காண்க. மற்றும் இந்நூலில் "ஸ்ரீரங்கர் ஊசல்" எனச் சில செய்யுட்களும், மீனாட்சியம்மை தோத்திரப் பாடல்கள் சிலவும் தனிப்பாடல்கள் பலவுமாய் அமைந்துள்ளன. பழுதுபட்டுளது.

R. No. 1947.

சிறுத்தொண்டன் சிந்து.
CIRUTTONḌAN CINDU.

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—40. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 200 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

complete.

In the form of Kāvaḍic cindu, this work gives the story of the famous "Śiruttoṇḍa Nāyānār". The author's name is not known. This is same as that work described under D. No. 504.

Beginning :

உண்டென்ற பேர்களுக் குண்டேனவே—ஐயர்
உம்மை யென்று எந்தனுக்கு வேறு முண்டோ
சென்றுதிசை வென்றுவரும் பிள்ளையாரே—உந்தன்
சீர்பாதமே தஞ்சம் போற்றி ஐயா
சீரான காசிநகர் தன்னில் வாழும் நல்ல
திகழான காடவர் கோன் ராசனுந்தான்
பேரான சிறுத்தொண்டன் மந்திரியாம்—நல்ல
பிறபலமாய் நாளு மிருக்கையிலே
அந்நாளில் காடவர்கோன் ராசனுந்தான்
ஆசையாகச் சிறுத்தொண்டன் றனையழைத்து.

End :

சிறுத்தொண்டன் மனைவிக்கும் சீராளனுக்கும் சிவகாமி கயிலாச மளித் தனராம்.

(கு-பு)—இந்நூல், சிறுத்தொண்டன் கதையை சிந்துமெட்டில் அமைத்துக் கூறுகிறது. எழுத்துப் பிழைகள் சிறு பான்மை உள. முற்று மிருக்கிறது. பழுதுபட்டுள்ளது.

R. No. 1948.

அர்ச்சுனன் தவம் (நாடகம்).
ARCCUNAN TAVAM (Drama).

Palm leaf. 16½ × 1¼ inches. Foll. 1—70. Lines, 5, 6 on a page. Tamil Injured. Old. Extent, 1,260 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O. Namakkal taluk.

Complete.

This is a drama written by 'Pūsāri Muttan'. This is enacted by common folk in villages.

Beginning :

சீரான விசைய முன்னாள் செயித்த நற்றவசு தன்னை/
ஆராய்ந்து தமிழிலே......நாடகம் என்றுபாட
தாரளமாக வேலன் தரும் வரம் போதித்தாப் போலும்
பேராக நடனம் செய்யும் பிள்ளையார் காப்புத்தானே

பங்கை யர்ச்சுனன் தானும் பரந்தாமன் தனக்கன்பான
திங்கள் தொன்குலத்தோன் பாத்த......சுவேதவர்கனன் கிரீட்டி
சங்கரனந்தனை நோக்கித் தவஞ்செய்யும் கதையைப்பாட
ஐங்கரன் விநாயகன்றன் னடியிணை போற்றி செய்வேன்

பவள மேனியில் பாதி பாற்பதி தனக்கேயந்த
சிவனந்தனை நோக்கி அர்ச்சுனன் செயிந்தோர் தபசைப்பாட
புவன மெல்லாம் திருஷ்டிககும் பிரமனார் டங்கமந்த
தவள வெண்ணீற்றுளம்மன் சரஸ்வதி தாயே போற்றி.

* * * * *

பாத்திடுங்களரி மெச்ச பட்டநா மங்கள் சாத்தி
நேத்தியாய்த் திருத்தி மீசை நெரித்த யாவையுமாகச்
சாத்திரப் படியே யாடித் திங்கனத் திங்கன வென்று
அஷுத்தான் சந்தோஷியுந்தான் அடவுடன் தோன்றினானே.

End :

தந்திமா முகனும் வாழி சரஸ்வதி யம்மன் வாழி
கந்த சுவாமியாரும் வாழி கயிலை ஈஸ்பரரும் வாழி
செந்தாமரை யோனும் வாழி தேவாதி தேவர் வாழி
சந்திர குலத்தோர் வாழி தாரணி யோர்கள் வாழி.

(கு-பு)—

இந்நூல், "அர்ச்சுனன் நாடகம்" என்னும் பெயர்த்து. "பூசாரி முத்தன் சொன்ன புரிதவ நாடகத்தை" என்று விருத்தப்பாவில் வருவதால் பூசாரி முத்தன் என்பவர் இதன் ஆசிரியராக இருக்கலாம் போலும். முற்றும் உளது. எழுத்துப் பிழைகள் உள். சிதலமாயது.

R. No. 1949.

கட்டி மகிபன் பள்ளு.

KAṬṬI MAKIPAN PAḶḶU.

Palm leaf. 16 × ¾ inches. Foll. 1—64. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 512 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete

Like the dispute between Parvati and Lakṣhmi, this work gives the dialogue betwe n two persons by name Mūthapaḷḷi and Iḷaiyapaḷḷi in which Siva and Vishnu are mutually deprecated. The work is complete in 207 verses. Author's name is not known.

Beginning :

மாலூன்று மேழூர் வளர் பழனி வேற் கினிய
மாலுன்றுன் சொல்கட்டி மால்மீதில்—மாலூன்றுன்
சீரான பள்ளேசல் செய்ய தமிழாலுரைக்க
காரான மாமுகவன் காப்பு.

சீர்சேர் பொருளந்தை குலேசன்
பேராகிய வாக்குப் பிரகாசன்
செயல் சேரே மூர் வளநாடன்
திருமகள் வீடன்
யேர் சேர் தென்கடக ஆடாமணி
மேராகிய தமிழ்க் குரையாணி
எங்குந்தன் கீர்த்தி விலாசன்,
இராசர்கள் போசன், பார் சேர் புகழ் மாமதலோலன்
தார்மேவிய பழனி வேல் டாலன், பார்த்திபன்.
கட்டி பூபதி, கிடப்பள்ளேசலேப் பாட
கார்சேர் கருடாசல துரிதன், தோரா நயினுசல
வரதன் கருணைத் திருவாய் மொழி
சொல்வேன் கலிதனை வெல்வேன். (1)

End :

திருவளரரி அரன் தன்னைப் பேதிச்சு
ரெண்டு செப்ப வேண்டாமிது தோஷமா மல்லோ பள்ளி
இருவர் தனேயும் வின்ன பேதங்களாய்ச் சொல்லி
இயம்பினவள் நீ யல்லவோ கலிசைப்பள்ளி
மாலு மரனு மொரு ரூப மன்றியே பேதம்
வருமோ வராது கண்டாயே மூருப்பள்ளி
சால வுன்னுல் வந்த பேதகமன்றியே
என்னுல் தான் வந்ததல்லடி கலிசைப்பள்ளி (204)

* * . . .

கலிப்பா

பானுவெனவேவிளங்கிப் பண்பொருள்கள் கட்டியண்ணன்
தானிலக்கு மேழூர் தழைத்ததிகஞ் சேந்திடவே
தேனுயர் பள்ளேசல்தனைச் செப்பினவர் பாடினவர்
ஆனதமிழ் கேட்பவர்கள் ஆடினவர் வாழியதே.

நயினுசல வரதராசப் பெருமாள் கடாட்சம்.

(கு-பு)—

இந்நூல், 'கட்டி மகிபன் பள்ளு, என்னும் பெயர்த்து. மூத்தபள்ளி, இளையபள்ளி அல்லது எழுர்ப்பள்ளி கலிசைப்பள்ளியாகிய இருவர்தம் தெய்வமாகிய திருமாலையும் சிவனையும் குறித்து இகழ்வது போன்றும் உயர்த்துவது போன்றும் உரையாடுவதாக இலக்குமி-பார்வதி ஏசல் போன்று கலிப்பா, சிந்துவகைப் பாட்டுக்களால் பாடப்பட்டுள்ளது. எழுத்துப் பிழைகள் உள. சிதலமாயுள்ளது. முற்றுமுளது. 207 பாட்டுகக ளடங்கியது.

R. No. 1950.

ஞான மதியுள்ளான்.
ÑĀNA MATIYUḶḶĀN.

Palm leaf. 14½ × 7 inches. Foll. 1—54. Lines, 5 on a page. Tamil. Fair Old. Extent, 540 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is ān incomplete work. This is same as that described under R. No. 938.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு, எண் 938-இல் வருணிக்கப்பட்டிருக் கிறது. முற்றுமில்லை. குறிப்பு அதனைக் காண்க.

R. No. 1951.

முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள்.
MUTTUT TĀṆḌAVAR KĪRTTANAIKAḶ.

Palm leaf. 11½ × 1½ inches. Foll. 1—60. Lines, 8 on a page. Tamil. Fair Old. Extent, 1,440 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk.

Incomplete.—Printed.

This work has been already published. This contains 85 songs of Muthutandavar and 6 songs of Māri Muthu Pillai.

(கு-பு)—

இந்நூல், முத்துத்தாண்டவர் கீர்த்தனம் என்னும் பெயர்த்து. முத்துத்தாண்டவர் பாடல்களாக 85 பாடல்களும், தில்லை விடங்கன் மாரி முத்துப் பிள்ளை பாடிய பாடல்களாக 6 பாடல்களும் உள்ளன. இந்நூல் அச்சாகியுள்ளது.

R. No. 1952.

விடுகவி.

VIḌUKAVI.

Palm leaf. 15¼ × 1⅜ inches. Foll. 1—5. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 10 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.—Printed.

This contains 10 verses on double *enterdre*. These verses are to be found in the published work "Tanippāḍal tiraṭṭu."

(கு-பு)—

இந்நூலில் பத்துப்பாட்டுக்களேயுள. அனைத்தும் சிலேடைப் பாட்டுக்களே. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இப் பாடல்கள் "தனிப்பாடல் திரட்டு" என்ற நூலில் வந்துள்ளன. சிதலமாயது. அச்சாகியுளது.

R. No. 1953.

நாசி கேது புராணம் (வசனம்).

NĀSI KĒTU PURĀṆAM (Prose.)

Palm leaf. 14½ × 1 inches. Foll. 1—38. Lines, 5 on a page. Tamil. Injured Old. Extent, 570 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is a prose work. This is same as the work described under D. No. 423.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 423 ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமுளது. சிதலமாயது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1954.

சந்திரமதி கதை.

CANDIRAMATHI KATHAI.

Palm leaf. 15½ × 1½ inches. Foll. 1—19. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 190 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

In this work an unknown author describes the troubles of Candiramati and Lōkidāsan Style is very colloquial,

(கு-பு)—

இந்நூல், அரிச்சந்திர நாடகம் என்ற நூலின் ஒரு பகு யாகும். விசுவா மித்திர முனிவரிடம் அரிச்சந்திரன் துன்புறுங் காலை சந்திரமதியும் லோகிதாசனும் அல்லலுறும் கதைப்பகுதி மட்டிலும் உள்ளது. இது தெருக்கூத்து மெட்டிலமைந்த செய்யுளாலாயது. எழுத்துப் பிழைகளும் வாக்கியப் பிழைகளும் உள. நடை கொச்சைத் தமிழினாலாயது. சிதல மாயுள்ளது. இது அச்சிடப்பட்டது போலும்.

R. No. 1955.

கட்ட பொம்மன் ஊமையன் வரலாறு.
KAṬṬABOMMAN ŪMAIYAN VARALĀṞU.

Palm leaf. $16\frac{3}{4} \times 1\frac{1}{32}$ inches. Foll. 1—23. Lines, 7 on a page. Tamil. Much injured. Old. Extent, 322 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is an incomplete work describing the patriotic deeds of the famous Kaṭṭabomman and his brother Ūmaiyan, till St. Agnes invited the former to Eṭṭayāpuram. This is same as the work described under R. No. 2440.

(கு-பு)—

இந்நூல், 'கட்ட பொம்மன், ஊமையன் வரலாறு' என்னும் பெயர்த்து. முதலில் இருந்து ஆக்கினீசுதுரை எட்டையாபுரத்தில் இருந்து கொண்டு கட்டபொம்மனை அழைப்பித்தவரை உள்ளது. சிந்தடிகளால் அமைந்தது. எழுத்துப் பிழைகள் சில உள. இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2440-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டதே. மிகச் சிதலமாயது.

R. No. 1956.

நயினாமலை வரதர் தோத்திரம்.
NAINĀMALAI VARATAR STŌTRAM.

Palm leaf. 147 × 7 inches. Foll. 1—13. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 52 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk.

Complete.

This contains 25 verses in praise of Lord Varadaraja presiding at Nainamalai. Author is not known.

Beginning :

நயினுமலை வரதர் பேரில் கருடப்பத்து

அஷ்டதிசை யஷ்டகெச மெட்டுக்கல
அஷ்ட வகிசத்தவுததி
நெட்டுடையுடுத்த புவியண்டகூடம்
நிலமேழு புவன முதலாய்
யெட்டிய யரக்கர்தனை யீறுசெய்யும்
எழிலான நயனகிரிமால்
மட்டிட வுயர்ந்த துடிகெருட னேறி
வரவேணு மெந்தனருகே.

வேதந் தொனிக்க உலகஞ் செழிக்க
வினைதீர அமரர் பரவும்
பாதந் துதித்து நலமான கவிதைப்
பாடிப் புகழ்ந்து தமியேன்
யேதந் துறந்து வளமேவி வாழ்க
யெனையாளு நயனகிரிமால்
மாதங்க மங்கை உழாகெருடனேறி?
வரவேணு மெந்தனருகே.

End :

அயலார்களிடர்கள் புரியாமல்
ஆசா அனுகூல மாகவரிசை
தயவாகி யுதவிசெய் ஆசாமேன்மை
தனதானி யங்கள் மலர்மின்
உயர்நீதி கட்டி மகிபாலன் வாழ்க
உந்தன் கடாட்ச மருள்வாய்
மையினுக ரூபரி கெருடனேறி
வரவேணு மெந்தனருகே.

(14)

Beginning :

(விருத்தம்)

அச்சுதா நிச்சேப லட்சுமீ வல்லவர்
அரகரி நாராயணு
ஆதியே வேத முதலான செகசோதியே
னரட்டாச்சிரம் புகலவும்
சரச்சங்க மன்னர்சபை மெச்சப்பிரபர் தமது
தவறுத மொழிபேசவும்
சகல கலையாக மவித்திர விர்ப்பன்ன னென்று
தரணியோர் கொண்டாடவும்
உச்சிரு மதாகவே கலைமாது மலர்மாது
உன்னுமத் தருள்செய்யவும்!

ஓதப் படிக்காது தியானமொடு பூசிச்சு
உதககதி முத்திதருவாய்
மச்ச கூர்ம வராக நரசிம்மா உதாரவர்ம
ஞுதர் மோதிஞு
மலரினமர் திசை கொளும் நயன மேருக்கினிய
வரதராசக் கடவுளே.

End :

தட்டமாகிய மச்சகூர்ம வராக நரசிங்க
வாமன் ரூபமாய்
சீர்பரசுராம மதி சதாராம பலராம
தேவராய் வட்ட மதுரையூர்
சட்டமிடு கிருஷ்ணு வுதாரராய கற்கியாய்
தக்கதொரு பத்து நுவதாய்
தானவரடங்க மறையோர் மாரின்பமுறு
சதுயுகை விளங்குமரியே
இட்ட முடனூலை முன்னேறும்பு கிடையாகி
வந்தினிது பெறுசெந்துகாள்
தானயிலைசயு முடலுயிருமாய் நிலமுதகை
மங்கி காலி விசும யினவனு நீயே
மட்டுமென் சொல் சிறியநாளுனு முழக்கொண்டு
வாழ்வுதந் தெனையாளுவாய்
மலரினமர் திசைகொளும் நயன மேருக்கினிய
வரதராசக் கடவுளே (11)

முற்றும்

(கு-பு)—

இந்நூல், நயினுமலை வரதராசப் பெருமாள் மீது பாடிய தோத்திரப் பாடல்களைக் கொண்டது. இருபத்தைந்து பாடல்களே யுள. முற்றுப் பெற்றதாகத் தெரிகிறது. எழுத்துப்பிழைகள் உள. பழுதுபட்டுளது. இரண்டு வகையான துதிப்பாடல்களுள்ளமையால் இரு முதல்களும் முடிவுகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

R. No. 1957.

நச்சுப் பொய்கை (நாடகம்).
NACCUPPOYKAI (Drama).

Palm leaf. 15¾ × 7 inches. Foll. 1—38. Lines, 5 on a page. Tamil. Fair Old. Extent, 760 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is a folk drama by some unknown author. It tells us how the Pāṇḍava lost their lives while drinking water in a tank and how their lives were got back after the worship of the Lord of Death,

Beginning :

தவளமாகிரியில் மேலும் தவளமாம் வடிவினனே
தவளமாம் விடையி லேறும் சத்தியோ பாகந்தானே
தவள மரபியோடாரும் திரிந்திடும் அஞ்சடையோர் நானே
பவழமா மேனியானே பணிந்துநா னுரைசெய்வேனே.

விக்கினேசுபரன வருகிறது.

(தரு)

செல்லக் கணபதி வந்தார்—தில்லையில் வாழும்
செல்லக் கணபதி வந்தார்
செல்லக் கணபதி வந்தார் தேசஞ் செழித்து சுந்தர
வெள்ளியினங்கிரியில் வாழும் வினயகர் கொலுவந்தார்.

* * * *

End :

திபுதை

ஐவரும் எழுந்திருந்து அப்புறம் வணங்கள்சென்று
மெய்ம்மொழி துரோபதையும் வீறுடனங்கூட்டிக் கொண்டு
சீக்கிரமாய்ப் பஞ்சவர்கள் ஸ்ரீராமரே நினைந்து கொண்டு
ஆக்கிரமாய்க் காமதேனில் பருவததே ஐவரும் வந்துசேர்ந்தார்.

மங்களம்.

(கு-பு)—

இந் நூல், 'நச்சுப் பொய்கை நாடகம்' என்னும் பெயர்த்து. பாரதக் கதையில் கூறப்படும் பஞ்சபாண்டவர்கள் கானகத்தில் அலைந்து திரிகையில் ஏற்பட்ட தண்ணீர் தாகத்திற்குப் பதில் நச்சுப்பொய்கை நீரையுண்டு மாண்டு போக பிரமதேவர் எமனை வழிபட்டு உயிருண்டாக்க பின ஐவரும் எமராசனை வணங்கி வாழ்த்தினார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. முற்றுமுளது. எழுத்துப் பிழைகள் சில உள. பழங்காலத்தில் தெருக்களில் இராக் காலங்களில் நடக்கும் கூத்துப்பாட்டுக்கள் நடையில அமைந்த பாட்டுகளும் உரையும் கொண்டது.

R. No. 1958.

நெஞ்சறி விளக்கம்.

NEÑCARI VIḶAKKAM.

Palm leaf. 15½ × 7 inches. Foll. 1—26. Lines, 4 on a page. Tamil. Fair. Old. Extent, 150 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is same as the work described under D. No. 189.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, எண் 189-இல் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றும் உளது. பிற அதன் குறிப்பிற் காண்க.

R. No. 1959.

பரமராசிய மாலை.

PARAMARĀSIYA MĀLAI.

Palm leaf. 13 × 7 inches. Foll. 1—46. Lines, 4 on a page. Tamil. Injur d Old. Extent, 184 granthas. Printed.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This work has been already published. This is same as the work under R. No. 538. The present manuscript contains 42 stanzas in addition.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லொக்கு 538-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதில் இருப்பதற்கு மேல் 42 பாட்டுக்கள் இதில் உள்ளன. அதன் குறிப்பையுங் காண்க. இந் நூல் அச்சிடப்பெற்றுளது.

R. No. 1960.

இறைசோல் உல்லாசோபனம்.

IṚIASŌL ULLĀSŌPANAM.

Palm leaf. 15 × 1 inches. Foll. 1—27. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 162 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Slaem district.

Incomplete.

This describes the life history of the Prophet Muhamad Nabi.

The work is incomplete. Author is not known.

Beginning :

பிஸ்மில்லா, ஹிரஹ்மா நிர்ரஹீம் அவுவுது பில்லாஹி
ஆதி முதலான சோதி அதிருவில் அகமேரோக்கி
தூதற எற சூறுல்லாவு சோபனங்கள் செய்து
வேதமிகருசு மாலே மேதினியில் யாவும்
கூர்வதற்குதவி செய்வாய்

யாப்புத்துணை செய்வாயே அஸாவுத் செய்வான். (1)
வாக்கு மரபி யுல்லா நல்ல தென்றே பாஙகில்லொறு
வாகதோனங்குடுத்தார்
வாக்குக் குடுக்கவே புயூக்குக் தானும்
மண்மேல் அடி வயற்படப் பணிந்து
நோக்கும் படியதில் பாதம் வைத்து
நூறு நபி யுல்லா புளுக் கெறினர்
தீர்க்கமுடைய வரபுளுக்கிலே ரதீன
தீன் மூகம்மதேன் டோதியதே.

End :

நண்ணும யேறதசி யோடுத்த பேர்களே
நல்ல அசலான் சேர்வ கறவாதி
பிண்ணுஒரு சாவல் கொம்புடனே ..ணி
வெளிதனில் மோழ் நத்துத்தான்
எண்ணமத் துறப புத்தி தான உருடெக்கு
வார்த்தைகள் பேசிக் கொணடு
தன்னு மதுதனை மறக்க மாட்டான் திருடன்
இவனனென்றே தானுரைத்தார். (52)

(கு-பு)—

இந்நூல், 'எரசூலுல்லா சோபனம்' என்னும் பெயர்த்து. முகமது நபியின் சரித்திரத்தைப் பற்றியது. நடை பழையதாதலின் வாக்கியங்கள் தெளிவுபட எழுதப்படவில்லை. எழுத்துப் பிழைகள் உள. பழுது பட்டுளது. முற்றுப் பெற்றதாக இல்லை.

R. No. 1961.

நாமகிரி ராசாக்கள் பேரில் விருத்தம்.
NĀMAGIRI RĀJĀKKAḶ PĒRIL VIRUTTAM.

Palm leaf. 17 × 7 inches. Foll. 11. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 30 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

This contains many verses describing valient deeds of the Colā king Rajēndra, son of Śrī Raṅga. The work describes his greatness and kingdoms conquered.

Beginning :

செகமீதில் நாமக்கிரி தனிலார்த்தருணீசர்
செய்யமலை காவலருடன் தென் பழனி
வேலாயுதக் கடவுள் நாமகி......திகள் நரசிங்க தேவர்
செண்பகமா தேவிலுயர் மகிமை யுளராசரும்
செயல் புண்ண நாயகியுடன்

செப்பரிய சேர். . . .சோழீசர் நயனகிரி வரதருக்
செயன் விண்ணப்பமதுகேள்
மகபதி தனக்கு நிகர் கூரைகுலவம் முஷன் வளர்தல்.

* * * *

பகர்தல் சைநாடுடைய கூரைகுல யேருவாம்
பனுவல் சீரங்க பூவன் பாலனுகிய
குழுண சற்குண விபேக துரை பார்த்திபன் கீர்த்தி பெற்றோன்
பண்பு ராசேந்திரமுகில் சந்ததி தழைத்திடப்
பாருலகில் மிக வாழியே.

(கு-பு)—

இந்நூலில், சீரங்கராசன் மகன் துரைராசேந்திரன் என்ற சோழ அரசன் மீது பாடப்பட்ட மெய்க் கீர்த்திகளும், புகழ்ப் பாக்களுமடங்கியுள்ளன. இது வரலாற்று ஆசிரியர்கட்கு மிகவும் பயன்படத் தக்கது. இராசேந்திரன் பெருமைகளும் அவனால் ஆண்ட நாடுகளும், உட்படுத்திய நாடுகளும் தெரிய வருகின்றன. சிறிது பழுதுபட்டுளது. ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தங்க ளடங்கிய 16 பாட்டுக்கள் கொண்டது. பாட்டு ஒவ்வொன்றும் முற்றுப் பெற்றேயுள.

R. No. 1962.

உடற்கூறு நூல்.
UḌAṚKŪṚU NŪL.

Palm leaf. 11⅜ × 1 inches. Foll. 1—13. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 125 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

This contains some verses selected from Tirumantiram, and Uḷḷa. muḍaiyān. These stanzas deal with the human body and the acquiring of sins and merits.

(கு-பு)—

இந்நூல், திருமந்திரம், உள்ள முடையான் என்ற நூல்களிலிருந்து சில தனிப்பாடல்களைத் தனித்தனியே எடுத்து எழுதப்பட்டுள்ளது. அது உடலைப் பற்றியும், புண்ணிய பாவங்களைப்பற்றியும் கூறுகிற காரணத்தினால் உடற் கூறு என்று பெயர் வந்தது போலும். சிதலமாயுளது.

R. No. 1963.

வீரபோக வசந்தராயர் பத்திரிகை.
VĪRABHŌKA VASANTARĀYAR PATRIKAI.

Palm leaf. 10 × 1 inches. Foll. 1—44. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 330 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This contains the first copy of the mackenzie works of the title Virabhoga Vasantā·āyār Patrikai. This is same as that described under R. No. 1471.

(கு-பு)—

இந்நூல், வீரபோக வசந்தராயர் பத்திரிகை, என்னும் பெயர்த்து. இதில் முதல் பத்திரிகை முற்றுப் பெற்று இரண்டாம் பத்திரிகையின் இறுதி முடியப் பெருமனுள்ளது. இது மூவருடக் காட்லாக்கு 1471-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கின்றது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1964.

இராம தேவர் சூத்திரம் எண்பத்தொன்று.
IRĀMADĒVAR SŪTTIRAM EṆPATTONṞU.

Palm leaf. 5¼ × 1 inches. Foll. 68. Lines, 4 on a page. Tamil. Much injured. Old. Extent, 306 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O Namakkal taluk, Salem district.

Incomplete.

This is same as the work described under R. No. 197.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 197-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுப்பெறவில்லை. பழுது பட்டுளது. ஏடுகள் முன்னும் பின்னும் மாறியுள்ளன.

R. No. 1965.

எம்பிரான் சதகம்—பொழிப்புரையுடன்.
EMPIRĀN ŚATAKAM (with Poḻipurai).

Palm leaf. 167 × 1 inches. Foll. 1—101. Lines, 4 on a page. Tamil. Injured Old. Extent, 350 granthas.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is written by Gōpālakṛṣṇhnan. This is same as the work described under D. No. 1757 but this is with notes.

Beginning :

ஆழ்வார்கள் பன்னிருவர் பாதம் போற்றி
அரிபத்தன கோபால கிருஷ்ண னென்பாய்
வேள்வியானன்பிறைல் மிகுதி யாலும்
மிக்கதொரு குருகிருபா கடாட்சத் தாலுந்

தாழ்விலா வெம்பெருமான் சதக னூறு'ரு
சாற்றினூர் போற்றியன்பர் போற்று வண்ணங்
கேள்வியா லனுதினமுரன் கீர்த்திப் பார்கள்
கிளர் விட்ணு வைகுணபத் துவராய் வாழ்வார், என்பது.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், சடகோபராழ்வார்,குலசேகரவாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ் வார், பன்னுட்டாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார், பெரும்பூ துாராழ்வார் இத்தகைமையாகிய பேர்களுடைய பன்னிரண்டு ஆழ்வார்கள் பாடலை எந்நேரமும் துதிக்குந் தகைமையாகிய முகுந்த விட்டுணு பத்தனை கோபால கிருஷ்ண னென்னும் நாமமுடைய வரன்பினாலே

* * * *

வைகுண்டத்தைத் தமக்குண்மையாகப் பெற்று வாழ்வார்கள்.

End :

திரிபுரத்திலாச்சியர் பத்தினி யாளான
திறலினூற்ருனவர் வாணவரை விஞ்சி
சகரனைத்து மொரு முகமாய்ப் பொறுத்த தோற்றுத்
துயர்மூரிரப் புத்தாவதாரமாய் நீணி
யரசடியில் வீற்றிருந்து திட்டங்காடம்
அனைவரையும் விரதபங்க மாகவுண்ணி
இருளறவே திரிபுரத்தை யெரித்துமகேநவர்க்
கேதமளித் தருளரியே யெம்பிரானே.

(கு-பு)—

இந்நூல், 'எம்பிரான் சதகம்' என்னும் பெயர்த்து. பொழிப்புரை யுடன் முற்றுமுளது. பழுதுபட்டுளது. எழுத்துப் பிழைகளுள. கோபால கிருஷ்ணன் என்பவர் இதன் ஆசிரியர். டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1757-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டது மிதுவே. ஆனால், அது முற்றுமில்லை. மூலமட்டிலே உண்டு. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1866.

அல்லியரசாணி மாலை.
ALLIYARAŚĀṆI MĀLAI.

Palm leaf. 14½ × 1½ inches. Foll. 1—146. Lines, 6 on a page. Tamil. Injured. Extent, 1,752 granthas. Printed.

Purchased in 1949-50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This work has been published already. This is written by Pukalēndiyār. The manuscript is injured and contains many errors.

Beginning :

முந்தி முந்தி விநாயகனே மொய்குழலாள் சரசுவதியே
கந்தனுக்கு முன்பிறந்த கச்சிக் கண பதியே
எந்தன்வினை தீர்த்தருள்வாய் எனது குருசுவாமி
சிந்தை மகிழ்ந்து திறமாய் வரமருள்வாய்

* * * * *

தர்மருடைய பாரதத்தைத் தானே மிகவடியேன்
போற்றிமிக வெழுத புண்ணியனே முன்வருவாய்
அல்லிக் கதையை அலங்காரம் சொல்வதற்கு
நாவு தவருமல் நல்லகுரல் மங்காமல்

* * * * *

பார்த்து மிகவே பாவாணர் பொற்பாதம்
சேர்த்தித் தமிழுரைத்தேன் தேன்குழலி அல்லியம்மா
பாரதத்தை நாயடியேன் பால்குடிக்கும் பூனைபோல
தன்கதையைப் பாடத் தமிழ்வாணர் தன்னருளால்

* * * * *

புலவர் பொறுத்தருள் பொற்பாதம் நான் பணிந்தேன்
சோழமண்ட லத்தில்மிக தூயதொரு தஞ்சாவூர்
வேளாள ஞன மிக்கதொரு வரசன்
ராமனுத வாத்தியார் நாயடியேன் சொன்னதுதான்
பூலோக மெங்கும் புகழ்பெறவே கொண்டாடி

End :

அரனும் அர்ச்சுனனை அகமகிழ்ந்து கொண்டாடி
தெய்வத்துரையே நீதி சிறக்கவர சாளுமென்றார்
பட்டமும் கட்டி கிரீடமும் தரித்து
அர்ச்சுனற்குச் சோபனம் அஷ்டகன்னிகளும் பாடினர்.

(கு-பு)—

இந்நூல், 'அல்லியரசாணி மாலை' என்னும் பெயரினது. முற்றுமுளது. பழுதுபட்டுள்ளது. எழுத்துப் பிழைகளுள. புகழேந்திப்புலவர் பாடியதாகும். அச்சிடப்பட்டுளது.

R. Nos. 1967 and 1968 (one codex).

Palm leaf. 14½ × ¾ inches. Foll. 1—85. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 850 granthas. 28 folios are wanted.

Purchased in 1949–50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

R. No. 1967.

பழையனூர் நாடகம்.
PALAIYANŪR NĀṬAGAM.

Foll 1—68. Extent, 680 granthas. 8 folios are wanted.
Complete.

This tells the story relating to Nīlan and Nīli. The same work is found under D. No. 505 named Nīliyakṣagāṇam.

Beginning :

கலைகன்று மால்மருகா கற்பகமே கணபதியே
மலைகளூறும் பூங்குழலாள் மலையரையன் மகள்மகனே
பழையனூர் நாடகத்தைப் பழுதறவே நான்பாட
பிழைகளொன்றும் வாராமல் பிள்ளையாரே முன்னடவாய்.
* * * * *

காஞ்சிபுரத்தில் கனகமண்டபத்தில் வாஞ்சியத்துடனேவந்து நின்று ஏகாம்பரவாணரை இறைஞ்சிப்போற்றி மாமருகே வந்து நின்றாள். நின்றவள் தன்னை நேருடன் கண்டு கொன்றையஞ் சடையார் குணத்துடன் அழைத்து எங்கே? எவ்வூர்? எங்கே வந்தாய்? என்றவுடன் உரை செய்வாள். ஐயரே உந்தன் அடியேன் உரைகேள் * * * * *

End :

உரசமுடன் அண்ணூர்பழி உபாயமாய் வாங்கவென்று
சரசமுடன் நீலிசெட்டி தனைத்தொடர்ந்து வந்தகதை
பரவுபுகழ் பழையனூர் நாடகத்தைப் படிப்போரும்
விரைவுடனே கேட்போரும் வீறுபெற்று வாழ்வாரே.

(கு-பு.)—

இந்நூல், 'பழையனூர் நாடகம்' என்னும் பெயர்த்து. நீலன், நீலி என்பாருடைய கதையாகும். வசனமும் பாட்டும் கலந்தது. எழுத்துப் பிழைகள் மலிந்துள. மிகவும் பழுதுபட்டுளது. முற்றுமுளது. இதனை "நீலி யக்ஷகானம்" என்ற பெயருடைய பிரதியில் காணலாம்.

R. No. 1968

சாரங்கதரன் கதை.
SĀRAṄGADHARAN KATHAI.

Foll. 69—118. Extent, 170 granthas. 20 folios are wanted.

Purchased in 1939–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is same as the work described under D. No. 501. This work is described about Sārangadharan who was a prince.

(கு-பு)—

இந்நூல், சாரங்கதாரன் கதை என்னும் பெயர்த்து. முற்றினுமில்லை. மிகவும் பழுதுபட்டுளது. எழுத்துப் பிழைகளுள. இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 501-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 1969.

வீரமாறன் நாடகம்.

VĪRAMĀṞAN NĀṬAKAM.

Palm leaf. 15 × 1⅛ inches. Foll. 1—119. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 2,142 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Incomplete.

This is same as that described under D. No. 470.

(கு-பு)—

இந்நூல், வீரமாறன் நாடகம் என்னும் பெயர்த்து. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 470-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது, முற்றினுமில்லை. தெருக்கூத்துப் பாணியில் கதையும் வசனமும் பாட்டுமாக அமைந்திருக்கிறது. நன்றாக எழுதப்பட்டுள்ளது. பழைய நடையினுலாயது. சிறிது சிதைந்திருக்கிறது.

R. No. 1970.

அர்த்தநாரீசுரர் பேரில் பள்ளேசல்.

ARDHANĀRĪSURAR PĒRIL PAḶḶĒSAL.

Palm leaf. 16 × 1 inches. Foll. 142. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 1,500 granthas.

Purchased in 1949–50 from Sri Duraisami, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is same as that described under R. No. 1944 except some portions in the beginning and the end. Author is not known.

Beginning :

மலைமகளை யிடப்பாகம் வைத்த தேவர்
வாசுகி மேறய்யா மிசை வண்மையாக
நிலையெனவே பள்ளொன்னும் நாடகத்தை
யானுமதி திபண்காசல் முருகற்குளாலப்பாட

அவர்தமிழுக் கவருமை முன்னின்று காக்க
கலைமகள் சண்முகக்கு தேனெங் கோணதயி
கணபதியும் சிவமயமாமக் காப்பதாமே.

என்பது, கலைகாவியம வேதாந்த மார்க்கம் உணர்ந்த பெரியோர்களிலக் கணங்கள் கற்ற மாதவர் நன்கவிதை மொழிவாணர் முன்பு மதுவையும் நான் பாடிய தெய்வாரே வெண்ணெயில் ஆதவன் முனைந்தீபதி காவையே தென்றல் அறுமுகவ ரருளிஞல் வகைவாணர்ந்த சீதனமாம்.

End :

மங்களம் அர்த்த நாரீசுபரர்க்குச் செய மங்களம்
எங்கள் அரவகிரி வாசனுக்குச் சுப மங்களம.

(கு-பு)—

இந்நூல், அர்த்த நாரீசுவரர் மீது பள்ளேசல் என்ற பெயருடையது. மூலருடக் காட்லாக்கு, 1944-ஆம் எண்ணின்கீழ் வந்துள்ளதற்கு மிதற்கும் முதலிலுமிறுதியிலும் செய்யுட்கள் சில வேறுபடுகின்றன. முற்று முளது. பழுதுபட்டுளது. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

R. No. 1971.

உருக்குமாங்கத நாடகம்.
URUKKUMĀṄGATA NĀṬAKAM.

Palm leaf. $16\frac{1}{4} \times \frac{1}{8}$ inches. Foll. 1—81. Lines, 6 on a page. Tamil. Injured Old. Extent, 1,440 granthas.

Purchased in 1949–50, from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Complete.

This is a well known drama. This is same as the work described under R. No. 1716.

(கு-பு)—

இந்நூல், மூலருடக் காட்லாக்கு 1716-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக் கிறது. முற்றுமுளது. அதன் குறிப்பையும் காண்க. சிறிது பழுது பட்டுளது. நாடகமாக அமைக்கப்பட்டுளது.

R. No. 1972.

விக்கிரமாதித்தன் கதை.
VIKRAMĀDHITTAN KATHAI.

Palm leaf. $16 \times \frac{7}{8}$ inches. Foll. 4—85. Lines, 5 on a page. Tamil. Injured Old. Extent, 1,200 granthas. Printed.

Purchased in 1949–50 from Sri Duraisamy, Sendamangalam P.O., Namakkal taluk, Salem district.

Four folios are wanted in the first.

Incomplete.

This has been published already. This contains the story relating to the famous king Vikramāditya. This is only till the story of the girl, Pēśāmadanthai.

Beginning :

அந்தக் கோட்டைக்குள்ளே இந்தப் பிராமணன் போறபோது அவ்விடத் திலேயே ஆசாரமண்டபமும் உப்பரிகை மேடையுமிருந்தது அந்த உப் பரிகைமேலே யந்தப்பிராமணன்...... பார்க்கிறபோது ஒரு கன்னிகை வெகு ரூபலாவண்ணியமான சௌந்தர்ய முடைய பெண் சப்பர கோள மஞ்சனத் தின்மேலே பவனிச்சுக் கொண்டு நித்திரை பண்ணினாள். அவளைக்கண்டு அவள் பேரிலே மோகமாயிருந்த பிராமணன்

* * * *

End :

This is a medicinal treatise containing portions of Dhanvanthari's Śataślōka in Sanskrit. The commentary is written in Tamil. This contains 56 verses only.

(கு-பு)—

இந்நூல் தன் வந்தரி சத சுலோகம் என்னும் பெயர்த்து. வடமொழியில் உள்ள "சத சுலோகி" என்னும் நூலிலிருந்து ஓர் சிறு பகுதியை மட்டும் எடுத்தெழுதப்பட்டிருக்கிறது. வடமொழிச் சுலோகத்திற்குறிகி வடமொழிச் சொற்கட்கு ஓரளவு தமிழுரையும் எழுதப்பட்டிருக்கிறது. தமிழும் வடமொழியும் கலந்து படித்தோர்கட்குத் தமிழ் உரையறிய வசதியளிக்குமிந்நூல். வைத்திய நூல் வகையைச் சார்ந்தது. 56 சுலோக மட்டும் உள்ளது.

R. No. 2199.

பன்னிருநாமப்பாட்டு வியாக்கியானம்.

PANNIRUNĀMAPPĀṬṬU VIYĀKKIYĀNAM.

Foll. 14—31. Extent, 351 granthas.

Restored in 1949–50 from a manuscript described under R. No. 372 (c).

(கு-பு)—

இந்நூல், மூலவருடக் காட்லாக்கு 372-(c)-ஆம் எண்ணின் கீழ் வருணித்திருப்பதைப் பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது. அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2200.

திருக்கச்சூர் 'நொண்டி நாடகம்.
TIRUKKACCŪR NOṆḌI NĀṬAKAM.

Foll. 32—64. Extent, 624 granthas.

Restored in 1949-50 from a manuscript described under R. No. 544.

Complete.

(கு-பு)—

இந்நூல் மூலவருடக் காட்லாக்கு 544-ஆம் எண்ணின் கீழ் வருணித் திருப்பதையே பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது. அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2201 and 2202 (one codex.)

Paper, 13½ × 8½ inches. Foll. 1—184. Lines, 26 on a page. Tamil. **Good. New.** Extent, 4,784 Granthas.

R. No. 2201.

பல கணக்குவகை.
PALA KAṆAKKUVAKAI.

Foll. 1—66. Extent, 1,716 granthas.

Transcribed, in 1949-50 from a manuscript of Annamalai university, (No. 44599).

Complete.

This deals with mathematical problems taken from various works. Author is not known. This is a rare and important treatise on Arithmetic.

Beginning :

எழுத்தாணி லட்சணம்.

ஆராகிலுந் தன்னெழுத்தாணி
அங்குட்டத் தாலிலிந்து
நேராறி லேற்றிலின்னே ......ரர்க்களித்
திடா நின்ற லக்கம்
பேரார்..........மனைவியர் சேர்க்கை
வியாதி தனஞ்சிறுகு
சீராந்திசை கீர்த்தி துஞ்ச லென்றோதி
ஆழ்வரை செப்பிடவே.

ஆயுத லட்சணம்,

அத்திலங்கமடைநீக்கி ஆயுதம் பொருத்தம் பார்க்கில்
உத்ததோர் விரலைவைத்து ஒன்று மூணுக்கக் கொண்டு
அத்துடனேனொன்பான் கூட்டி யறிந்ததோ ரெட்டுக்கிய
வித்தக வியாசர் சொன்ன விரல் முதல் பொருத்தந்தானே.

End :

முன்னிறையில் 16 வருக்கிக்க 256, என்று பின்பு 12-உம் வருக்கிக்க 144, இத்துடன் 50 மாற 7200 இதை 50-உடன் மாற 360000 இதை மட்டு 62 டன் மாற 2160000 என்று வைத்து முன்னிறையில் பெருக்கி வைத்திருக்கிற 256 மட்டான 4-மாற 1024, இந்த 1024-க்கு முன்னிறுத்தின பின்னிறை மாற.

(கு-பு)—

இந்நூல் பல கணக்கு வகை என்னும் பெயரின வாயினும் ஆரிய சூத்திரத்தில் அஞ்சனம், புவனதீபம், கணித ரத்தினம் முதலிய கணித அளவுகளைக் கொண்டும் தமிழில் ஓரம்பம், சௌராலயம், அதிசாகரம், கலம்பகம், திரிபுவன திலகம், கணித ரத்தினம் முதலியவைகளைக் கொண்டும் கூறப்படும் கருத்துக்களைத் தொகுத்துத் தமிழில் எழுதப்பட்டதொரு நூலாகும். எனவே இது பல்வேறு கருத்துக்களைத் திரட்டிச் செய்யப் பட்டதொரு நூலாகும் என்க. எழுத்துத் தெளிவாக இல்லை. கணித நுட்ப அறிவாளிகட்கு இஃதோர் துணைக் கருவியாகப் பயன்படும் எனக் கருத இடமுண்டு. பழமையான கணித முறைகளை இதனால் அறியமுடியும். அச்சிடப் பட்ட நூல்களிலிருந்து திரட்டியதாமென இறுதி எட்டால் தெளிவுறுகின்றது.

R. No. 2202.

வைத்திய சாத்திரம்.
VAIDDIYA ŚĀTTIRAM.

Foll. 67—184. Extent, 3,068 granthas.

Transcribed in 1949-50 from a manuscript of Annamalai university.

This is a work on medicine in verse form with commentary. This is a rare and important work dealing with many knotty problems in medicine. If published, it will be of much use to persons engaged in medical profession.

Beginning :

கரிமுக னடியை வாழ்த்தி கையினில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்திற் பிடித்துட னடவே தொட்டால்
ஒருவிர லோடில் வாத மற்றிருவிரற் றுனே பித்தந்
தெரிவிரல் மூன்றி லோடில் சிலேத்தும் நாடி யாமே.

நாடியே பற்றும் வண்ணம் நலம்பெற உரைக்குங் காலைத்
தேடிய வாத பித்த சிலேத்தும நாடி மூன்றும்
ஓடிய மணிக்க ரத்தே மூவிர லொக்க ; பற்றி
நாடிய தறிந்து சொல்ல நயத்திலே உரைக்க லுற்றும் (2)

உற்றதோர் சுட்டி வாதம் நடுவிர லறுமே பித்தம்
பெற்றதோ ராழி யாசிற் சிலேததும மென்று பேராம்
முற்றுடன் மூன்று மீறிற் சன்னியென் றுரைக்கும் வாதம்
பற்றிக் குளிரும் பித்தம் வெதும்பும் சிலேத்துமம் இளைக்குங்
[காணே.

End :

காரசாரக் குணம்

காரமந்தும் வாத கரமாக்கும் நீர்போகும்
பேர் சொல்ல வாய்வும் பிறவாது—சாரமைந்தும
வெட்டாகும் பித்தம் விளைக்குமே வாய்வுவிடுந்
தப்பில் மூலமறுந் தால்.

தேவதாரத்தின் குணம்

தேவதாரத்தின் செயல்கேளாய் சேயிழையே
தாவுந் திரிதோஷஞ் சாராது மேவும் •
விழிநோய் சிரநோய் வெப்பொடு வாதம்போங்
குளிநீ தயிலமதில் கொள்.

(கு-பு)—

இந்நூல் வைத்திய சாத்திரம் என்னும் பெயர்த்து, வைத்திய சம்பந்தமான அனைத்து விடயங்களையும் பாட்டின் மூலமாகவும் உரைநடை மூலமாகவும் எடுத்துக் கூறுகிறது. சிறந்ததோர் நூலெனக் கொள்ளல் வேண்டும். பிற நூல்களில் கூறப்படாத பெரும்பாலான செய்திகளை இது எடுத்துக்கூறுகின்றது. அச்சியற்றப் பெறவில்லை. அச்சியற்றின் பெரிதும் பயன்படும் பேறுடையது. இது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருக்கும் ஓலைச் சுவடியைப் பார்த்து எழுதப் பெற்றதாகும். முற்றுப் பெற்றதெனத் தோற்றுகிறது.

R. Nos. 2203 and 2204. (one codex).

Paper. 13½ × 8½ inches. Foll. 1—114. Lines, 26 on a page. Tamil. Good. New. Extent, 2,938 granthas.

R. No. 2203.

ஸ்ரீ வைஷ்ணவ தினசரி வியாக்கியானம்
ŚRĪ VAIṢṆAVA DINACARI VIYĀKKIYĀNAM.

Foll. 1—24. Extent, 624 granthas.

Restored in 1949-50 from a manuscript described under R. No. 372 (d).

(கு-பு)—

இந் நூல் மூவருடக் காட்லாக்கு 372 (d) ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதையே பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது ஆகும். பிற அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2204.

நாலடியார் (உரையுடன்).

NĀLAḌIYĀR (with commentary).

Foll. 25—114. Extent, 2,314 granthas.

Restored in 1949–50, from a manuscript described under R. No. 618.

(கு-பு)—

இந் நூல் மூவருடக் காட்லாக்கு 618-ஆம் எண்ணில் வந்துள்ளதையே பிரதி செய்யப்பட்டது. பிற அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2205.

பழநடை விளக்கம்

PAḶANAḌAI VIḶAKKAM.

Paper. 13½ × 8½ inches. Foll. 1—95. Lines, 26 on a page. Tamil and Grantha. Good. New. Extent, 1,235 granthas printed.

Restored in 1949-50, from a manuscript described under R. No. 624.

Incomplete:—

(கு-பு)—

இந் நூல் மூவருடக் காட்லாக்கு 624 ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டதையே பிரதி செய்து வைக்கப்பட்டது ஆகும். பிற அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2206.

பாரதவம்மானை.

BHĀRATA AMMĀNAI.

Paper. 13½ × 8½ inches. Foll. 1—179. Lines, 26 on a page. Tamil. Good. New. Extent, 2,327 granthas.

Restored in 1949-50, from a manuscript described under R. No. 562.

(கு-பு)—

இந் நூல் மூவருடக் காட்லாக்கு 562-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருப்பதையே பிரதி செய்து வைக்கப்பட்டது ஆகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. Nos. 2207 and 2208.

Paper. $12\frac{7}{8} \times 8\frac{1}{8}$ inches. Foll. 1—11. Lines, 26 on a pages. Tamil. Good New. Extent, 45 granthas.

R. No. 2207.

பரமராஸீய மாலை.

PARAMARĀŚĪYA MĀLAI.

Foll. 1—6 (*a*). Foll. 6 (b) and 7 are left blank. Extent, 30 granthas.

Restored in 1949–50, from a manuscript described under R. No. 538.

(கு-பு)—

இந் நூல் மூவருடக் காட்லாக்த 538-ஆம் எண்ணில் வந்துள்ளதையே பிரதி செய்து வைக்கப்பட்டது ஆகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2208.

பரமராஸீய மாலை.

PARAMARĀŚĪYA MĀLAI.

Foll. 8—11. Extent, 15 granthas.

Restored in 1949–50, by a manuscript described under R. No. 539.

(கு-பு)—

இந் நூல் மூவருடக் காட்லக்கு 539-ஆம் எண்ணில் வந்துள்ளதையே பிரதி செய்யப் பெற்றதாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2209.

வைத்திய முறைகள் (கைகண்ட முறை).

VAIDDIYA MUṞAIKAL (Kaikaṇḍamuṟai).

Palm leaf. $10 \times 1\frac{1}{2}$ inches. Foll. 1—100. Lines, 6 on a page, Tamil. Injured. Old. Extent, 1,800 granthas.

Purchased in 1949–50 from Sri Tangavēlu Pillai, Somarasampet, Tiruchirappalli district.

Incomplete.

This is a work on medicine by some unknown author. The first 50 folios contain verses while the latter portion is in the prose form. Topics on medicine are not treated continuously. This work is fit to be published.

Beginning :

சந்தானந்த வயிரவ மாத்திரை

ப்ரரப்பா புலத்தியரே சந்தானந்த
பரிவான வயிரவந்தான் சொல்லக் கேளும்
சேரப்பா திரிகடுகு செகபபு நாபி
திறமான வெரிச்சலோடு பொரிச்சவேழும்
நீரப்பா சமன் கூட்டி பழச்சாருட்டி
நிசமாக நவசாரம் அரைத்துக்கொண்டு
தாரப்பா குன்றிபோல் நீருலநதி
தப்பாமல் செப்பில் வைத்துச் சொல்லக் கேளே. (1)

கேளப்பா இஞ்சிநீர் உள்ளித்தயிலம்
கெடியான முலைப்பாலில கொடுத்தாயானால்
நாளப்பா சன்னிவகை எல்லாம் போகும்
நலமான தேன்கூட்டிக் கொடுத்தாயானால்
தாளப்பா தோஷமென்ற தெல்லாம்போகும்
தப்பாமல் கண்ணிலிடத் தீரும்தீரும்
கேளப்பா வானந்த வயிரவந்தான்
செப்புகிறேன் செகப்புநாலு பொறிதாளெட்டே. (2)

End :

போமப்பா உஷ்ணங்கள் எரிவு காந்தல்
பொல்லாத நீர்க்குத்து குறி அறுப்பு
நாமப்பா அசத்தி ரணம் அசத்திவெட்டை
நாடாது கிராணி யெல்லாம் நளினமாகும்
காமப்பா எலும்புருக்கி காமாலை சோகை
தவறுண்டு போகுமடா பித்தமெல்லாம்
ஆமப்பா அப்பிரகம் போட்டுக் கொள்ளு
அணுகாது மேகனீர் அத்துப்போமே. (176)

அத்துப்போம் தூதுவளைக் கிாகங்கேளு
அப்பனே தூதுவளை யெடைதாமென்று
கத்துப்போம் கண்டங்கத்திரி நலமுள்ளி
கருவான சிறுகாஞ்சொறி ஆடாதோடை
சத்துப்போம் மிளகு திப்பிலி கடுக்காய்
சதுரான துளு வபையும்வகையொன்றுக்கு
நத்துப்போம் பலநாலு இடித்து நைய
நலமாக இருதூணி நீரிலிட்டேட்டே. (177)

முற்றுப் பெறவில்லை.

(கு-பு)—

இந் நூல் வைத்திய முறைகள் என்னும் பெயர்த்து, கைகண்ட முறை யென விளக்கப்பட்டுளது. முதலிலிருந்து 50 ஏடுகள் வரை பாடல்களால் ஆக்கப்பட்டும், மற்றவை உரைநடையால் ஆக்கப்பட்டும் உள்ளது. அவ்வுரை

நடை பாடல்களுக்கேற்ற உரையாக இருக்கலாம். சிதலமாயுளது. பழமை யானது. தொடர்ச்சியாகக் காணப் பெறுமல் தனித்தனியே ஒவ்வோர் மருந்து வகைகளையும் பிண்டம் பிண்டமாகக் கூறிச் செல்கிறது. அச்சிட ஏற்றது.

R. No. 2210.

வைத்திய முறைகள் அல்லது வைத்திய அட்டவணை.
VAIDDIYA MUṚAIKAḶ or VAIDDIYA AṬṬAVAṆAI

Palm leaf. 7½ × 1¼ inches. Foll. 1—206. Lines, 6 on a page. Tamil. Fair. Old. Extent, 2,500 granthas.

Purchased in 1949-50 from Sri Tangavelu Pillai, Somarasampet, Tiruchirappalli district.

May be complete.

This is a work on medicine by some unknown author. It enumerates the various medicinal herbs and gives the proportions in which they should be mixed to prepare certain medicines. This is a rare and important work fit to be published.

Beginning :

வைத்திய அட்டவணை வாத பித்த சிலேட்டும சுரங்கட்கு மருந்துகள்.

சாதி லிங்கம் வீசை 1
பொட்டுலுப்பு வீசை 2
சூடம் வீசை 1

இச் சரக்குவகை மூன்றும் கலுவத்திலே போட்டு லிங்க வொண்ணும் சுத்தி பண்ணுகிற விவரம்.—

மூலைப்பால், எலுமிச்சம் பழச்சாறு, தேன் இந்த மூன்று வகையிலும் சுறுக்குக் கொடுத்து எடுத்துக் கொள்ள சுத்தியாச்சுது. இந்த மூன்று வகைச்சரக்குகளை கலுவத்தில் போட்டு இஞ்சிச்சாறுவிட்டு நன்றுன மை போலாட்டி சிமிளில் வைத்துக் கொண்டு வாத, பித்த, சிலேட்டுமம் ஆகிய மூன்று வகைச் சுரங்கட்கு இஞ்சிச்சாறு, மூலைப்பால் சுறுக்குவிட்டு இவை களில் ஒரு பணா வெடைகொடுக்க உடனே நிற்கும். தாகவறட்சி கண்டால் நாக்கிலே அந்தக் குழம்பைத்தானே தீத்து, உடனே சலம் ஊறும்.

End :

தேதி மழை

ஆனி–10 ; ஆடி–8 ; ஆவணி 6 ; புரட்டாசி–4 ; ஐப்பசி 2 ; கார்த்திகை 1 ; மார்கழி–1; இந்த மாதங்களில் இந்தத் தேதிகளில் மழை பெய்யவேண்டும். இந்தத் தேதிகளில் பெய்தால் அந்த வருடம் மழைக்குக் குறைவேயில்லை.

(கு-பு)—

இந் நூல் வைத்திய முறைகள் என்னும் பெயர்த்து. இது முதலில் வைத்தியச் சரகுகளின் பெயர்களையும் அளவுகளையுங்கூறி அவைகளை முறையானே செய்யும வழிகளையுங்கூறி, அதற்குரிய பத்தியங்களையும் கூறி இறுதியில் அம்மருந்தால் தீரும் வியாதிகளையும் கூறுகிறது. இதற்கு வைத்திய அட்டவணை என மற்றொரு பெயரும் உண்டு. நன்கு எழுதப் பட்டுளது. அச்சிடப்பெறின் பயனுண்டு. மேல் வந்துள்ளதற்கு மிதற்கும் வேறுபாடு உண்டு.

R. No. 2211.

அலங்கார ஆரூடம்.
ALAṄKĀRA ĀRŪḌAM.

Palm leaf. 6 × $1\frac{3}{8}$ inches. Foll. 1—178. Lines, 8, 9 on a page. Tamil. Fair Old. Extent, 2,900 granthas.

Purchased, in 1949–50, from Sri Tangavelu Pillai, Somarasampet, Trichirappalli district.

Complete.

In this, an unknown author explains the fundamentals of the science of astrology.

Beginning :

பார்வதி புத்திரன் தொந்தி பரமேவி
பசன் பிரம்மா விட்டுணு
கார்முகன் கந்தன் பாதம்
கருத்துடன் தெண்டனிட்டு
சீர்பெற கண்ட நூலைத்
தெரிசிக்க வேணுமென்ன
ஊர்மதி உதயங் கொண்டு
உற்றது சொல்ல லுற்றேன். (1)

நல்லதோர் வேதமூர்த்தி
நாரதர் சொன்ன நூலை
வல்லது கிரந்த வாக்கில்
வகுத்திரு மாதந் தன்னில்
சொல்லது தெரியா தார்க்குத்தமிழ்
சொன்னவன் சீருற வேதம்
வல்லவன் கோளி நூலில்
வகுத்தலங் காரந் தானே. (2)

செகத்தினி லுதித்த போது
செல்வமும் பகையும் காண
மிகத்து யரமுந்தா நீத்து
மிகயோகம் மடிப்பு கண்டம்

கலியுகந் தன்னில் நடக்கும்
கருமங்கள் வேதங்கள்

* * *

உண்டான (படி)
(அடியேன் சொன்ன.

விதத்திறு னுள்ள பேர்க்கு
விபரமாய்த் தெரியச் சொல்வேன்

(3)

End :

பூரண ஆயுசு(ள்)

உற்பத்தி யாகி நன்றாய்
உதயாதி பதிக்கு நய்ப்பாய்
நற்பதி சேர்ந்து நிற்க
ஞாயிறு பாரா தாகில்
சற்பதி காரி செவ்வாய்
சரசமாய்க் கோணஞ் சேர
நிற்பது வயது நூறு
நினைவதாய் உரைப்பர் மாதே
மதிபதி அதற்கு நாலில்
மன்னவன் புந்தி சுங்கன்
அதிபதி யதற்குப் பத்தில்
அவரிருந் திடவே நோக்கம்
விதிபதி இரவி காரி
வீரிய செவ்வாய் தானும்
மதிபதி கோண நின்றால்
விதியது நூற தாமே.

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் அலங்காரவாரூடம் என்னும் பெயர்த்து. இது சோதிடத் தன்மையை முறையாகக் கற்க வாதியளிக்கிறது. இன்றியமையாத விடயங்களை எடுத்துக் கூறுகிறது. இது படித்தால் சோதிடம் பார்க்க ஓரளவு போதுமானதாகத் தோன்றுகிறது. அச்சிலில்லை. இயற்றினோர் பெயரும் காணப்படவில்லை. பெரும்பாலும் ஏடுகள் நன்றாக வுள்ளன. முற்று முள்ளது.

R. No. 2212.

விநாயகர் அகவல்.

VINĀYAKAR AKAVAL.

Palm leaf. $7\frac{1}{4} \times 1$ inches. Foll. 1—5. Lines, 5 on a page. Tamil. Fair. Old Extent, 30 granthas.

Presented, in 1949–50, by Sri R. Krishnasami Pilli, Sidda Vaidyar, Santapuram, Tiruchirappalli district.

Complete.

This is same as the work described under D. No. 1624.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1624-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுமுளது.

R. Nos. 2213—2216 (one codex).

Palm leaf. 5¾ × 1 inches. Foll. 1—56. Lines, 5 on a page. Tamil. Fair. Old. Extent, 350 granthas.

R. No. 2213.

கடுவெளிச் சித்தர் பாடல்.

KAḌUVEḶI-C-CITTAR PĀḌAL.

Foll. 1—18. Extent, 113 granthas. printed.

Presented, in 1949–50 by Sri R. Krishnasami Pillai, Santapuram, Tiruchirapalli district.

Complete.

This is a work of Kaḍuveḷi-C-Cittar. Contain 35 stanzas. This has been already published.

Beginning :

கடுவெளி சித்தர் பாடல்.

ஆனந்தக் களிப்பு

பாபம் செய்யாதிரு மனமே—நாளைக்
கோபம் செய்தே யெமன் கொண்டோடிப் போவான்
—பாபம் செய்யாதிருமனமே

சாபங் கொடுத்திடலாமோ—விதி
தன்னை நம்மாலே தடுத்திடலாமோ
கோபந் தொடுத்திடலாமோ—இச்சை
கொள்ளைக் கருத்தைக் கொடுத்திடலாமோ
—பாபஞ் செய்யாதிரு மனமே

End :

எங்கும் சுயம்பிர காசன் அன்பர்
இன்ப மிருதயத் திருந்திடு வாசன்
துங்க வடியவர் தாசன் தன்னைத்
துதிக்கின்ற பதவி யருளுவா னீசன்
—பாபஞ் செய்யாதிரு

முற்றிற்று.

(குபு)—

இந்நூல் அச்சாகியுள்ளது. முற்றுமுளது. 35 பாட்டுக்கள் கொண்டது. இவர் பாடியதாகவே மற்றோர் நூல் மூவருடக் காட்லாக்கு 1837-ஆம் எண்ணில் காணப்படுகிறது. அதில் இரு பாட்டுக்களே உள, அவையும் இவை போல்வனவல்ல.

R. No. 2214.

சுப்பிரமணியர் விருத்தம்.
SUBBIRAMANIYAR VIRUTTAM.

Foll. 19—30. Extent, 45 granthas.

Presented in 1949–50, by Sri R. Krishnasami Pillai, Santhapuram, Trichirappalli district.

This is same as the work described under D. No. 1662. This is a collection of hymns on Lord Subramanyā. This has been already published.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1662-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. இறுதி மூன்று ஏடுகளில் மூன்று சந்தப்பாக்கள் முருகனைப் பற்றியே உள. நடை நன்றாக உள்ளது. அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 2215.

திருப்போரூர் மயில் விருத்தம்.
TIRUPPŌRŪR MAYIL VIRUTTAM.

Foll. 31—42. Extent, 45 granthas.

Purchased in 1949–50 from Sri R. Krishnasami Pillai, Santhapuram, Tiruchirapqalli district.

Complete.

This is a collection of verses describing the Pea-cock that serves as a Vākanā to Lord Subramaṇya of Tiruppōrur. Author is not known. This is similar to the work described under D. No. 1666.

Beginning :

கட்டளைக் கலித்துறை

காரூர் மருமலர் பூஞ்சோறு வாசங் கதிக்குமேபிற்
போரூர் மருவுமணி முருகேசன் பொருவி லம்பொன்
வாரூர் குற வள்ளி மாரன் மயூர வளம் புகல
நீரூர் முகிற் கரி யானனத் தானை நினை நெஞ்சமே.

இரட்டை வாசிரிய விருத்தம்

அண்டரண் டங்களுட னீரேழு புவனங்க
ளதிர நடமாடு மயிலே
அரகா வென்றமரர் பிரமன் முதல் முனிவர்கள்
அர்ச்சிக்க வந்த மயிலே
தண்டையொடு கிண்கிணி சிலம்பொலி முழங்கவே
தாண்டவம் புரியு மயிலே
தர்க்கமிடு சூரனுட னேகநீ ருகவே
சாமிவரு தோகை மயிலே

கண்ட தொரு பேய்பூத பிரமராட்சர் களுடல்
கதறிட மிதிக்கு மயிலே
கரடி புலி யாளியரி மிருகங்க ளியானையுங்
காலாக்கினை கொண்ட மயிலே
தெண்டனிட்டே பணியு மடியவர்க ளீடேற
சேரவே தந்தாளு மயிலே
திருப்போ ரூரில் வளர் கந்தப்பரேறிவரு
சித்திரக் கலாப மயிலே.

(1)

End :

அரிவிட்டுணு பத்தியாய் நினது பாமாலையைப்
பாடினோர் பங்கில்நின் றுடு மயிலே
பரிபுரை யளித்தவெண் முருகரைத் தாங்கிப்
பறந்தாடு கின்ற மயிலே
சுத்த முககாலந் துதிக்கு மானிடர்கடந்
துன்பம் தவிர்க்கும் மயிலே
துய்ய சேவற் பதாகரைப் போற்றியே
சுகமுற் றிருக்கு மயிலே
தொத்தியே வருநெடிய கொக்கினைச் சுட்டியிற்
சுட்டெரித் துண்ட மயிலே
சுரருல குளோர்புனித மலர்மாரி பொழியத்
துதைந்துவிளை யாடுமயிலே
சித்தமகிழ் வாயென்னை யிரட்சிக்க வந்துற்ற
சின்மயா னந்த மயிலே
திருப்போ ரூரில்வளர் கந்தப்ப ரேறிவரு
சித்திரக் கலாப மயிலே.

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் போன்றே மற்றொரு நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1666-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அது தெலுங்கு எழுத்தில் தமிழ் மொழியிலமைந்துள்ளது. அதனினும் இதுவேறுயது. முற்று முளது.

R. No. 2216.

மீனாட்சியம்மை கிளிப்பாட்டு.

MĪNĀṬCIYAMMAI KIḶIPPĀṬṬU.

Foll. 43—56. Extent, 50 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

Some philosophic stanzas supposed to be sung by the goddess Mīnākshiyamman herself. Ideas are expressed in simple and allegoric style. Author is not known.

Beginning :

மதுரை மீனுட்சியம்மன் திருவாய்
மலர்ந்தருளிய கிளிப்பாடல்

ஆதி சிதம்பரத்தே—கிளியே
ஆடி வணங்கிக் கொண்டு
சோதியிலக்கணத்தைக்—கிளியே
சொல்லுகிறேன் உனக்கு
ஆதி மத்தி யந்தமில்லை—கிளியே
ஆனந்த ரூபமடி
சோதியிலே யிருநது—கிளியே
சுத்த வெளி பிறந்தது
வாயுவு மக்கினியும்—கிளியே
வந்தது அப்பு மண்ணு
மேயுஞ் சராசரமுங்—கிளியே
எல்லா முலகமுமே
பேயா முலகத்திலே—கிளியே
பேதம் பிறந்த தடி
தாயு மலடியடி—கிளியே
தன்னை மறந்தானடி
ஐந்து பூத மடி—கிளியே
அண்ட பிண்டாதி களும்
வஞ்சனை யாலே யண்ணே—கிளியே
வந்து மறைத்த தடி

End :

பிரம்ம சிதம்பரமே—கிளியே
பேருன முத்தியடி
மதுரை மீனுட்சி யம்மாள்—கிளியே
மகிழ்ந் துரைந்த தமிழ்
இதமாய்ப் படிப்போர்க்குக்—கிளியே
எல்லா சுகந் தருமே.

முற்றும்.

(கு-பு)—

இந்நூல், மீனுட்சியம்மை கிளிப்பாட்டு என்னும் பெயர்த்தாய் மீனுட்சி யம்மையே பாடியதாக இறுதியடிகளால் தெரிகிறது. கருத்துக்கள் தத்து வங்களை உணர்த்துவதாய் அமைந்துள. சித்நாந்த நூல் வகையைச் சார்ந்தது போலும். முற்றுமுளது. படிக்க நன்றாகவுளது. அச்சாகவில்லை எனத் தெரிகிறது.

R. No. 2217.

சேலம் கைலாசநாதர் சதகம்.
ŚĒLAM KAILĀSANĀTHAR ŚATAKAM.

Palm-leaf. 13 × 1⅛ inches. Foll. 1—108. Lines, 4 on a page. Tamil. Sligtly Injured. Old Extent, 432 granthas.

Purchased, in 1949-50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Complete.

This is a collection of hundred verses eulogising the Lord Kailāsa-nātha of Śēlam composed by Cidambaravāṇar, son of Vasava-liṅgar belonging to the Vīraśaiva cult. The first five pages contain the head lines of the verses.

Beginning :

சேலம் கயிலாசநாதர் சதக வட்டவணை.

* * * * *

காப்பு

சீரார் கயிலாச தேவன்மிசை யான்சதகம்
பாராரும் பைந்தமிழாற் பாடவே—ஏராரு
மிந்துந்திச் செஞ்சடிலத் தெந்தைதரு மைந்துகரக்
கந்தமதத் தந்திமுகன் காப்பு.

கடவுள் வாழ்த்து

சீர்மேவு திங்களணி தேவனே வண்மைபெறு
தில்லைவளர் நடராசனே
செங்கண்மா லயனுநின் னடிமுடிகள் காணமல்
தேடிய மகாதேவனே
தார்மேவு பொங்கர வணிந்த சிவசம்புவே
சங்கரா கங்காதரா
தயாபர விநோதமெய்ஞ் ஞான சொரூபனே
சண்முகனை யீன்ற கோவே.
ஏர்மேவு முப்பத்து முக்கோடி தேவர்க
ளிறைஞ்சிடு மலர்ப்பாதனே
எழின்மிகு கரத்தினில் மான்மழு தரித்தே
எந்தையே எனையாளுவாய்
கார்மேவு சோலையொடு சங்கமர் நதிசூழ்ந்த
கற்பக விராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கைலையங் கிரிவாசனே. (1)

End :

ஆதிகலி நாலாயிரத்துத் தொளாயிரத்
தாகுமுப்பா னிரண்டி
லாயிரத் தேழு நூற் றைம்பத்து மூன்று வருடம்
சகாப்தம் விருந்தியா
நீதிசே ரிரண்டுமே டத்திங்கள் குருவாரம்
நேர்ந்தபனி ரண்டாந்தினம்
நிறைகன்னி திதியைந்தி ேைடமிர்த யோகமிவை
நீடிரே வதிநாளினிற்
சாதியில் வீரசைவன் வசுவலிங்கர்
தரு சிதம்பர வாணன்யான்
சதகமெனு மிப்பனுவல் நின்னடிக் கன்புகொடு
சாற்றின னுவந்தாளுவாய்
காதலுடன் அடியர்தொழு கறைமிடற் றண்ணலே
கற்பக விராச மேவும்
கங்கைபுனை யீசனே மங்கை மகிழ்நேசனே
கயிலையங் கிரிவாசனே. (100)

(கு-பு)—

இந்நூல் கைலாசநாதர் சதகம் என்னும் பெயர்த்து. 100 பாட்டுக்களுடன் வாழிப்பாட்டும் கலந்து 101 பாட்டுக்கள் உள. முன்னைந்து ஏடுகளில் பாடல்களின் தலைப்புக்கள் உள்ளன. முற்றுப்பெற்றது. சிறிது சிதலமாகக் காணப்படுகிறது. ஆசிரியர் பெயர் சிதம்பர வாணன் என்பதாகும். வசுவலிங்கர் மகனார். வீர சைவமரபு. சேலம் நகரிலுள்ள கைலாச நாதரைப் பற்றியன இப்பாடல்கள்.

R. No. 2218.

வில்லிபாரதம் பொழிப்புரையுடன்.

VILLIBHĀRATAM POḺIPPURAIYUḌAN.

Palm leaf. 15½ × 1¼ inches. Foll. 1—345.. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 8,280 granthas.

Incomplete.

This is Bharatha Itihāsa written by Villiputtūrār. This contains only from Udyōgaparva to 14th Pōrccarukkam with famous commentary. The author of this commentary is not known.

Beginning :

படர்ந்த கானகந் திரிந்து மீண்டன்புடன்
பணிந்த பஞ்சவர்க்காகக்
கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக்
கழலிணை சிவப்பேறத்

தொடர்ந்து நான்மறை பின்செல பன்னகத்
துவசன் மாநகர் தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணமென்
நயனம் விட்டகலாதே.

(பொழிப்புரை)

இராச்சியமெல்லாம் விசாலித்திருக்கப்பட்ட காட்டரணியங்களிலே போய்ப் பன்னிரண்டு வருடம் சஞ்சரித்து மீண்டு உபலாபியமென்னும் பட்டணமே வந்து சேர்ந்திருக்கிற பஞ்ச பாண்டவர்கள் சருவ சீபத்யா பரமூர்த்தியான ஸ்ரீ கிருஷ்ண தேவரை நமஸ்காரம் பண்ணி தோத்தரித்து அடியேங்களுக்கு இனிமேல் என்ன புத்தி யென்றுகேட்க கிருஷ்ண சுவாமி திருவுளம் பற்று கிறார். அவர் வாருங்கள் அஞ்சு பேருக்கு மென் னென்ன நினைவு இருக் கிறதோ அதுவெல்லாம் நம்முடனே சொல்லுங்களென்ன தருமராசன் சொல்லுகிறார்.

End :

முற்பொழு தொருபொற் றிகிரியான் மறைந்த
தாழ்வற முனெரி முகத்தி
லற்பொழு தடைந்த வாயிரஞ் சுடரு
மநேகனூ ருயிரஞ் சுடராய்
தற்பொழு திதுவென் றியாவரும் வியப்ப
நாகரா லயம்வலம் புரிந்து
பிற்பொழு தவற்றைக் கவர்ந்துசென்று தயப்
பிறங்கலிற் பிறங்கினன் பெரியோன்.

பதினான்காம் போர்ச் சருக்கம்.
முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல் வில்லிபாரதம் என்னும் பெயர்த்து. இதில் உத்தியோக பருவத்தில் படையெழுச்சிச் சருக்கம் தொடங்கி பதினான்காம் போர்ச் சருக்கம் முடிய எளிய மக்கள் புரிந்துகொள்ளும்படியான பொழிப்புரையுடன் அமைந்துள்ளது. சிறிது சிதலமாயது. உரை எழுதியோர் இன்னாரென்று ஊகிக்கமுடியவில்லை. எழுத்துப் பிழைகள் மலிந்துள. இப்பகுதி முற்றுப் பெற்றுளது.

R. No. 2219.

வில்லிபாரதம் (13, 14-ஆம் போர்ச் சருக்கங்கள்).

VILLIBHĀRATAM (13, 14 Pūrccarukkaṅgaḷ).

Palm leaf. 15½ × 1 inches. Foll. 1—200. Lines, 6 on a page. Tamil. Fair Old. Extent, 3,600 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santhāpuram, Trichy Dist.

Incomplete.

This contains the 13th, 14th Sargās of Villi-Bharata. This is same as the work described under R. No. 2218.

(கு-பு)—

இந்நூலில் உரையுடன் உள்ள 13, 14-ஆம் போர்ச் சருக்கங்கள் மூலவருடக் காட்லாக்கு 2218-ஆம் எண்ணினுள் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிதலமாயுளது.

R. No. 2220.

வில்லிவிபாரதம் பொழிப்புரையுடன்.
VILLI-BHĀRATAM POḺIPPUṞAIYUḌAN.

Palm leaf. 14¾ × 1¼ inches. Foll. 346—570. Lines, 8 on a page. Tamil. Fair. Old. Extent, 5,376 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Incomplete.

In continuation of the work described under R. No. 2218, this gives the portion from the 15th Sarga of the war till the coronation of Dharmaputra.

Beginning :

பதினைந்தாம் போர்ச் சருக்கம்

சித்தசித் தொடீசனென்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவுகண்ட சதுர்மறைப் புரோகிதன்
கொத்தவிழ்த்த சோலைமன்னு குருகையாதி நெஞ்சிலே
வைத்தமுத்தி நாதனன்றி வானநாடர் முதல்வர்யார்

எடுத்ததீப வொளியுமேனை யிருளுமேக வேழுமரத்
தொடுத்ததே ரருக்கர் சோதி தொழுதுதங்க டொழில்கழித்
தெடுத்தகோப மூளநின் றிரண்டுசேனை யரசரும்
கடுத்துளங் கறுத்து வெய்யகண்சிவந்து கடுகினார்.

என்பது :—

தீவிட்டி பகல் வெளிச்சமும் அந்தகார மாகிய இருட்டும் நீங்கிப்போக ஏழு குதிரை பூட்டின ஒத்தை வண்டித் தேரின் பேரிலே உதயகிரி பருவதத்திலே ஆயிரங் கிரணங்களும் பிரகாசிக்க * * *

End :

பாரத யுத்த மெல்லாம் பாங்குடன் படிய லுற்றுப்
பாரதம் பாரமாய் பாங்கனிவர்க் கேட்ப
பாரதம் பிறரை நீங்கிப் பாமகன் குருவின் பாதம்
பரத பூஜை செய்து பலன்மாற் கண்ட ருவார்,
பட்டாபிஷேக முற்றும்.

'(கு-பு)—

இந்நூல் வில்லி பாரதம் என்னும் பெயர்த்து. மூவருடக் காட்லாக்கு 2218-ஆம் எண்ணில் வந்துள்ள நூலின் தொடர்ச்சியே இதனுள் முற்றுப் பெற்றுளது, அஃதாவது அதில் 14-ஆம் போர்ச் சருக்கம் முடிய இருக்கிறது. இதில் 15-ஆம் சருக்கம் தொடங்கி தருமர் பட்டாபிஷேகச் சருக்கம் வரை முடிந்துளது. மேற்கண்ட நூலின் உரையாசிரியரே இதற்கும் உரையெழுதியுள்ளார். இப்பகுதி முற்றுமுளது. உரை உயர்ந்த நடையிலில்லை.

R. No. **2221.**

பாரத வசனம் (அசுவமேத யாகம்).
BHĀRATA VACANAM (AŚUVAMĒDAYĀGAM).

Palm leaf. 14¾ × 11/16 inches. Foll. 1—354. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 2,124 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Complete.

This is a work of unknown authorship. This describes the performance of the Aśvamēda sacrifice by Dharmaputra to remove the sins comitted during the Kurushkētra war. Similar works have been described under D. Nos. 446 and 447.

Beginning :

செனமே செய மகாரிஷியான சுபமஸ்து ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன் அகண்டமண்டலா தீஸ்வரன் ராசா வானவர் செனமே செய ராசாவை பதி ராசன் ராசபரமேஸ்பரன், ராச மார்த்தாண்டன், ராஜ கெம்பீரன் (ராஜபால பாத்து) பதினெட்டு நாள் பார்த்தன், ராசகுலசேகரன், ராஜாதி ராசன் குருகுல வங்குச சந்திர குலத்திலுதித்து யுத்தமும் சொல்லி பிற்பாதி பாண்டு மகாராசாவின் குமாரர், காண்டீபரான பஞ்சபாண்டவர்கள் கண்டு கேளும் ராசாவே யென்று தர்ம புத்திரரானவர் சிங்காசனத்துக் குடையவரான சார்ந்தாதி யசுவமேத யாகம் திரிதராஷ்டிரனுக்குடைய மகிபாலக்குடைய குமாரர்கள் திரியோதனாதிகளின் கதை.

End :

கேட்டோர்கள் எழுதினவர்கள் அஷ்ட ஐஸ்வர்ய சம்பன்னராய் சகல சவுபாக்கியங்களுடைய சகல வசீகரங்களுடனே பூலோகத்திலேயிருந்து வாழ்ந்து அந்திய காலத்திலே வைகுந்தம் அடைவார்களென்று வேத வியாசர் சொல்லுகையில் பகவானுனை கிருஷ்டமூர்த்தியும் சுபமஸ்து. மங்கலாணி பவுந்து என்கிறதாய் சொன்னார்.

(கு-பு)—
இந் நூல் பாரதத்தில் தருமர் யுத்தம் செய்து முடிந்த பின்பு இந்த யுத்தத்திறல் ஏற்படும் மகா பாபங்களுக்குக் கழுவாயாக அசுவமேத யாகம்

செய்ததை எடுத்துக்காட்டுகிறது. முற்றுமுளது. இதுபோன்ற நூல்கள் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 446–447-ஆம் எண்களில் வருணிக்கப்பட்டிருக் கிறது. அவற்றிற்கும் இதற்கும் நடை சில இடங்களில் வேறுபட்டுளது. சிதலமாயது.

R. No. 2222.

அகத்தியர் வாகடம்.
AKATTIYAR VĀKAṬAM.

Palm leaf. $13\frac{1}{8} \times 1\frac{1}{2}$ inches. Foll. 3—73. Lines, 7, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 980 granthas.

Wants the beginning and end.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram, Trichy District.

Incomplete.

This is a work on medicine. Though it is named as Agastiyar Vākaṭam the authorship is doubtful.

Beginning :

* * * *

* * * *

குறித்திடுஞ் சிலேட்டுமநாடி குதிரைபோல் திமிர்ந்து நின்றால்
கறுத்திடும் விழியாய் நல்ல காரிழையாளே கேளாய்
மறுத்திவை பேசவேண்டாம் வயதிவை முடிந்ததென்று
பொறுப்பில்லாத் திங்களொன்றில் புகன்றிடும் மரணந்தானே.

ஆதித்தன் சந்திரன்போல் அந்தித்த நாடி தானம்
பேதித்து நிற்கு மாகில் பெருக்கவே கையிந்து நாடே
சோதித்துக் கண்டுதானும் சுரங்களில் புக்குமாகில்
வாதத்தில் வாய்வுபீடை வந்துற நிற்குந்தானே. (17)

End :

செய்தி யொன்று சொல்கிறேன் புலத்தியனே ஐயா
திறமான ரசலோக செந்தூ ரந்தான்
ஆதியென்ற சூதபற்பம் பலந்தானிரண்டு
அப்பனே லோகமொன்று காந்தமரை தான்கூட
வாதியென்ற லிங்கமரை வெண்கார மரைதான்
வளமான சாரங்கால் நாபி கால்தான்
காதியென்ற கெந்திறல் செந்தூரங் கால்தான்
கனமாகப் பொடிசெய்து அரைப்புக்கேளே. (139)

(கு-பு)—

இந் நூல் ' அகத்தியர் வாகடம் ' என்னும் பெயர்த்து. இருப்பினும் இதில் வரும் மருந்து வகைகள் வேறு பெயரில் மற்றொருவரால் செய்யப் பட்ட நூலில் உள என ஐயுற இடமுளது. இதில் லேகியம், பற்பம்,

மபத்திரை, சூரணம், நாடி பார்க்கும் முறைகள் முதலானவைகள் காணக் கிடைக்கின்றன. முதலில் இரண்டு ஏடுகளும் இறுதியில் பல ஏடுகளும் காணக்கூடவில்லை. சிதலமாயதொரு நூல்.

R. No. 2223.

பலவகை மந்திரங்கள்.
PALAVAKAI MANTIRAṄKAḶ

Palm leaf. 9½ × 1 inches. Foll. 56. Lines, 4 on a page. Tamil. Much injured Old. Extent, 100 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santāpuram Trichy District.

Complete.

This work contains mantras pertaining to black magic. Author is not known.

Beginning :

பெருக்குங் கருணை வராகிதன் மாலையைப் பேசுதற்கு
நெருக்குங் குவிமுலை அம்பிகைபா தம்நிறைந் துமகிழ்ந்
திருக்கும் பரஞ்சுதன் அங்குச பாசங் கொண்டெனதுவினை
கருக்கும் தகைமை விநாயகன் சேவடி காப்பதுவே.

*　　*　　*　　*

*　　*　　*　　*

மெச்சிறத் தைபணியாள மனங்காய மிகவெகுண்டு
கச்சிற் தந்தி புலால்நின் றற்கடித்துதரி
வச்சிற் தந்திமுகப் பனறியாகிய வாய்மடித்துப்
பச்சையிரத் தங்குடிப்பாள் வராகிபரா பரியே. (3)

End :

ஆருதினை செய்தரிச் சித்துத் தமபணிந்தால்
வாராதிரா தல்லவே வந்தவல் பிணிநோய்
தீராதிரா தல்லவே சிறியேனை முகம்
பாராதிரா தல்லவே பரமானந்த பராபரியே.

(கு-பு)—

இந் நூல் பலவகை மந்திரங்கள் என்னும் பெயர்த்தாய் வராகிமாலை 30 பாட்டும், நவரத்தினமாலை 10 பாட்டும், தேட்கடி, பெண் வசியம் முதலிய மந்திரங்களும் உச்சாடணங்களும் சக்கரங்களும் உடையனவாய்த் திகழ்கிறது. மிகவும் சிதலமாயது. எழுததுப் பிழைகள் மலிந்து காணப் படுகின்றன. அனுபவத்தில் கொண்டு வந்தவர்கள்பால் இருந்த சுவடி யெனத் தெரிகிறது.

R. No. 2224.

நளச்சக்கரவர்த்தி கதை.
NALACCAKKARAVARTTI KATHAI

Palm leaf, 13 × 1⅜ inches. Foll. 1—110. Lines, 8 on a page. Tamil. Fair. Old. Extent, 1,760 granthas.

Purchased in 1949-50 from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This is the same as the work described under D. Nos. 421 and 422.

(கு-பு)—

இந் நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 421–422-ஆம் எண்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில் முற்றுமுளது. நன்றாகவுளது.

R. No. 2225.

பிரம்மரிஷி வாகடம்
PIRAMMARIṢI VĀKAṬAM

Palm leaf. 11½ × 1½ inches. Foll. 1—188. Lines, 8, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 300 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete

This is a work dealing with miscellaneous topics of medicine and astrology. It is not uniform in charactor. Probably it is a collection of stanzas taken from different texts. Authorship is not known.

Beginning :

மதுரைவீரன் மந்திரம்

ஓம் அய்யுங்கிலியூ சவ்வூ சவ்வூ கிலியூ
ஓம் வீர நசி-நசி-சிவா-ஓங்கார மதுரைவீர
நசி-நசி-சிவா-உத்தண்ட பொம்மக்காள
மஞோகர நசி-நசி-சிவா
அம்-வீர-நசி-நசி-சிவா
ஆங்கார-மதுரைவீர-நசி-நசி-சிவா
ஆபத்து-வரணும்-மருதை-வீரா-அவ்-உவ்
நசி-நசி-சிவா.

End :

கர்ப்பிணிக்கு ஆண், பெண் குறி.

கெர்ப்பிணியாயிருக்கிறவள் பேர் எழுத்தெண்ணி, இத்தனையென்று கண்டு அந்தத் தொகையும், அன்றைக்கு வரைக்கும் சென்ற திதியு மெண்ணி இதனுடனே ஐந்து கூட்டி ஆக ஏகத்துக்குத் தொகை கூட்டிக்

கண்ட தொகையை ஏழால் பெருக்கி ஒன்பதில் கழித்து மிச்சங் கண்டது ஒன்றேயானால் ஆண் பெறுவாள். இரண்டேயானால் பெண் பெறுவாள் என்று சொல்வது. பெறுகாலத்தில எண்ணெய் கொடுக்க நோட்டம் பார்க்க வலது ராசி ஓடினால் ஆண். இடது ராசி ஓடினால் பெண் என்று சொல்வது.

(கு-பு)—

இந் நூல் 'பிரம்மரிஷி வாகடம்' என்னும் பெயர்த்து. இதில் வைத்தியங்களும், மந்திரங்களும், சக்கரங்களும், இரசவாத முறைகளும், பலவகைகளும் கலந்து எழுதப்பட்டு உள்ளன. நூலாசிரியர் இன்னாரென்று விளக்கமில்லையாயினும் முதலேட்டின் தலைப்பில் 'பிரம்மரிஷி வாகடம்' என எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே பாட்டுக்களும் விரவி வரப் பெற்றுள்ளன. இவைகளை நோக்குமிடத்துப் பலவகை மந்திர நூல்களி லிருந்துப் வைத்திய நூல்களிலிருந்தும் தொகுக்கப்பட்டதொரு நூலோ அல்லது பிரம்மரிஷி வைத்தியம் அல்லது பிரம்ம முனி சூத்திரம் என்ற நூல்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டு எழுதப்பட்டனவோ எனப் பல்வகையானும் ஐயுறும்படி உள்ளது. எழுத்துப் பிழைகள் காணப் படுதலோடு விளக்கமாக எழுதப்படவில்லை. சிதலமாயது. வைத்திய வல்லுநர்களைக்கொண்டு ஆராயின் ஒருவாறு பயன்பெற இடமுண்டு.

R. No. 2226.

ஆருடம்

ĀRŪḌAM (Uḻḻamuḍaiyān).

Palm leaf. $4\frac{1}{2} \times \frac{3}{4}$ inches. Foll. 1—32. Lines, 4 on a page. Tamil. Very much injured. Old. Extent, 64 granthas.

Presented, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Incomplete.

This is a work on astrology dealing with the three types of forecast. This is same as the work described under D. No. 2290.

(கு-பு)—

இந் நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2290-ஆம் எண்ணின்கீழ் வருணிக் கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையும் காண்க. இது உத்தம, மத்திம, அதம ஆருடங்களைக் குறித்துப் பேசுகிறது.

R. No. 2227.

கதிர்காமச் சிந்து.

KATIRKĀMAC CINTU.

Palm leaf. $15\frac{1}{2} \times 1$ inches. Foll. 1—15. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 112 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This is a poem in praise of the God Murukan, as worshipped in Kandirkadirkamam or Kandarmālai near Jaffna in Ceylon. The name of the author is not given.

Beginning :

காப்பு.

சீரார் கதிர்காமச் செந்தூ ரறுமுகவர்
பாராரு மாலைதனைப் பாடவர மேயருள்வாய்
தாரார் குழலுமையாள் தானின்ற தற்பரனே
காராரு மேனிக் கணபதியுங் காப்பாமே.

நித்தமுனைத் துதித்து நீணிலத்திற் கொண்டாட
பத்துலட்சங் கோடிதமிழ்ப் பாடிவர மேயருள்வாய்
அத்தனருள் குமரா ஆயோன் மருகோனே
கர்த்தனேயெங் கள்கண்டிக் கதிர்காம வேலோனே. (1)

End :

ஆறுமுகனே ஆறிரண்டு கையோனே
வேறுவினை வாராமல் வெற்றிதர வேணுமையா
சூரனையும் வேரறுத்த சுப்பிரமணி யத்துரையே
சாருந் தமிழ்ப்பாடத் தயாபரனே வந்துதவாய். (31)

வருகைப்பத்து

காணிக்கை கொண்டு வருவார் சனங்கள்
கர்த்தாவைத் தேடிவருமுன்
ஆணிப் பொன்னுன பழனு புரிக்கு
இடமாக நின்றமுருகா
பூணிக்கை யாக எமதூதர் வந்து
பொருதவே கட்ட வருமுன்
மாணிக்க முத்து மயில்மீதி லேறி
வரவேணு மெந்தன்அருகே. (1)

* * *

(கு-பு)—

இந் நூல் இலங்கையில் உள்ள கண்டி கதிர்காமம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுள்மீது பாடிய தோத்திரப்பாடல்கள் கொண்டது. சிதலமாயது. முற்றுமுள்ளது. பாட்டு நடை உயர்ந்ததாக விளங்கவில்லை.

R. No. 2228.

அகத்தியர் அனுபோக சூத்திரம் முந்நூறு.

AKATTIYAR ANUBHŌKA SŪTTIRAM MUNNŪṚU.

Palm leaf. $11\frac{3}{4} \times 1$ inches. Foll. 1—102. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,900 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Incomplete.

This is same as the work described under R. No. 264.

(கு-பு) —

இந் நூல் மூவருடக் காட்லாக்கு 264-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங்காண்க. முற்றுப்பெறவில்லை.

R. No. 2229.

மாட்டு வாகடம்.

MĀṬṬU VĀKAṬAM.

Palm leaf. 11 × 1⅛ inches. Foll. 1—11. Lines, 7 on a page. Tamil. Injured. Old. Extent, 150 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Though the title is Māṭṭūvākaṭam it deals with various topics. Authorship is not known.

(கு-பு)—

இந்நூல் மாட்டு வாகடம் என்னும் பெயர்த்ததாய்ப் பல நூல்களிலிருந்தும் அனுபவப் பட்டவற்றை யெடுத்து எழுதப் பெற்றது. மாட்டுப் பிணிகட்குச் சில வைத்திய முறைகளே இதில் காணப்படுகின்றன. ஒரு பெரும் நூலிருந்து சிதைந்த ஏடுகள் இவை எனத் தெரிகிறது. சிதலமாயது.

R. No. 2230.

அகத்தியர் மாந்திரீகம் ஐம்பது.

AKATTIYAR MĀNTRĪKAM AIMBATU.

Palm leaf. 9½ × 11 3/16 inches. Foll 1—24. Lines, 5 on a page. Tamil. Fair. Old. Extent, 250 granthas.

Incomplete.

This is same as the work described under R. No. 942 (e).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 942-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. இதில் 48 பாட்டுக்களே உள. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2231.

கொக்கோகம் உரையுடன்.

KOKKŌKAM with commentary.

Palm leaf. 13½ × 1⅛ inches. Foll. 1—104. Lines, 5 on a page. Tamil. Fair. Old. Extent, 2,200 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This is same as the work described under R. No. 1081 (d).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 1081 (d)-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. இது முதலிலிருந்து ஆறு அத்தியாங்கள் வரை முற்றுப் பெற்றுள்ளது. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. **2232.**

ஆரவல்லி அம்மானை.

ĀRAVALLI AMMĀNAI.

Palm leaf. 11⅞ × 1⅛ inches. **Foll. 1—175. Lines, 7 on a page. Tamil. Injured. Old. Extent, 2,500 granthas.**

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

Complete.

This work in the form of Ammānai, gives the story of the marriage of Āravalli Aṇaṅkāmbalvariśai alias Vālammāḷ with Allirājā.

Beginning :

முந்தி முந்தி விநாயகனே முக் கண்ணனூர் தன் மகனே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்னடைவாய்
சத்திக் கணபதியே தையநல்லாள் புத்திரனே
எனதுதுயரம் தீர்க்கும் எம்பிரான் தன்மகனே
வித்தைக்கு நல்ல வேத முடையோனே
புத்தியருள் நீ கொடுப்பாய் புண்ணியரே முன்னிருந்து
அத்திமுகனே யருள் சடையோன் புத்திரனே
செல்வக் கணபதியே செங்கண்மால் தன்மருகா
ஆலடியில் பிள்ளையாரே அரசடி விநாயகனே
வேலடியில் பிள்ளையாரே வேறுவினை வாராமல்
எடுத்த பலகாரம் இன்பமுடன் தான்படைப்பேன்
கச்சாயம் பணியாரம் கற்கண்டு சர்க்கரையும்
அவல் கடலை பொரியுருண்டை அதிரசமுந் தேங்குழலும்

End :

அந்தணர்கள் வாழி அரசர்மக்கள் தாம்வாழி
படிப்போரும் கேட்போரும் பாருலகில் தான் வாழி
ஆலுபோல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுத்தம் முசியாமல் வாழ்ந்திருப்பார்.

(கு-பு)—

இந்நூல் ஆரவல்லி யம்மானை என்னும் பெயர்த்து. முற்று முளது. சிதலமாயது. எழுத்துப் பிழைகள் உள. "ஆரவல்லி அணங்காம்பல் வரிசை" என்பாளுக்கு "வாலம்மாள்" என்று மாயவனூர் பெயரிட்டு அல்லி ராசாவுக்கு மண முடித்து வைத்த கதையை எடுத்துரைக்கின்றது.

R. No. 2233.

வைகுந்த அம்மானை

VAIKUNTA AMMĀNAI.

Palm leaf. 15 × 1 inches. Foll. 1—277. Lines, 7 on a page. Tamil. **Injured.** Old. Extent, 3,900 granthas.

Purchased, in 1949–50, from Sri R. Krishnasami Pillai, Santapuram, Trichy District.

This describes the story of Pāṇḍavās reaching Vaikunta, the place of God Narāyaṇa after ruling Hastināpuram. Verses are in the form of Viruttam and Koccakam. Author is not known.

Beginning :

காப்பு

வாரிசூழ் உலகு தன்னில் மன்னுயிர் துதிக்க வேண்டி
சீரிய தமிழி னாலே தெரிந்துஅம் மானை பாட
ஆரியன் அனந்தராமன் அச்சுதன் கமலக் கண்ணன்
பாரிய மேகவர்ணன் பச்சைமால் காப்ப தாமே.

பார்தனை யளந்த மாயன் பஞ்சவர் சகாயன் தூதன்
மேர்தனை யெடுத்த முன்னாள் விண்மழை தடுத்த மூலம்
சீர்பதம் வணங்கி ஐவர் தெரிந்துவை குண்டம் சேர்ந்த
ஓர்கதை யம்மானை யாக உரைக்கமால் பாதம் காப்பாம்.

கந்தனே செந்தமிழ்க்குக் கணபதியே காப்பாக
எந்தன் சரஸ்வதியே யெப்போதும் வந்துநித்தம்
வந்துதவி செய்ய வாழ்த்துகிறே னிக்கதையை
முந்து பரமீசர் மொழிந்த வசனமிது

செப்புதற்கு லட்சுமியாள் சீதேவி யுண்டாக
இப்புவியில் மாலயனு மெடுத்துரைத்த வேதாந்தம்
மகாபாரதக் கதையாய் வகுத்துரைத்த சாத்திரந்தான்
பூபாலரா யவர் பொருந்துதுரி யோதனனை

வேண்டும் புவியாண்டு விஷ்ணுபுரந் சேர்ந்தகதை
ஒன்று மறியேன் உரைத்தேன் புவிமீதில்
பெரியோர் பொறுத்தருளும் பிள்ளை யிவனெனவே
தெரியாதான் சொன்னமொழி செந்தமிழோர் தான்பொறுப்பீர்

பாவாணர் பாதம் பணிந்துமிக நினைந்து
நாவாணர் சீர்பாதம் நமஸ்கரித்து நாள்தோறும்
சொல்லுகிறேன் அம்மானை துதிக்கை துணையாக

* * * *

End:

தோத்திரம் சொல்லித் தொழுதசென மேசனைத்தான்
வாழ்த்தி விடைகொடுத்த மாமுனிவன் தான்போனான்
வேதவியாசர் விண்ணகத்துக் கேகியபின்
காதால் சென்மேசயன் கண்குளிரத் தான்கேட்டு
இருந்தான் சென்மேசயன் ஏகச்சிங் காதனத்தில்.

(கு-பு)—

இந்நூல், வைகுண்ட அம்மானை என்னும் பெயர்த்து. பஞ்ச பாண்டவர் துரியோதனனுடன் போர் செய்து பின்பு இராச்சியமாண்டு இறுதியில் வைகுண்டம் சேர்ந்தார்கள் என்ற பாரதக் கதையைக் கூறுகிறது. முற்று முளது. சிதலமாயது. விருத்தம், கொச்சகம் என்ற பாட்டு வகைகளால் ஆகியது. நன்றாக உளது.

R. Nos. 2234 and 2235 (one codex).

Palm leaf. $11\frac{1}{4} \times 1\frac{3}{8}$ inches. Foll. 1—120. Lines, 9 on a page. Tamil. Injured. Old. Extent, 2,950 granthas.

Presented in 1949–50. by M. P. Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai district.

R. No. 2234.

அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்.
AKATTIYAR VAIDDIYA RATTINAC CURUKKAM.

Foll. 1—57. Extent, 1,400 granthas.

May be complete.

This is a work on medicine written by the sage Agasthiya. This is as the work described under R. No. 941. Herein the matter is not properly arranged.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 941-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்று முளது. சிதலமாயது. ஏடுகள் சரிவர அடுக்கப்படவில்லை. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2235.

அகத்தியர் வைத்திய வாகடம்.
AKATTIYAR VAIDDIYA VĀKAṬAM.

Foll. 58—122. Extent, 1,550 granthas.

This is same as the work described under R. No. 1197, but gives preparation of some more medicines in addition to those under R. 1197.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 1191-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. இதில் அகத்தியர் முப்பூ ஐம்பதும் அகத்தியர் குழம்பும், வசனத்திலும் பலவித லேகிய மருந்து முறைகளும் அதிகமாக எடுத்துக் கூறுகின்றது. பிற அதன் குறிப்பையுங் காண்க.

R. Nos. 2236 and 2237 (one codex).

Palm leaf. 13⅜ × 1¼ inches. Foll. 1—74. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 1,500 granthas.

Presented in 1949-50 from Sri M. P. Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai district.

R. No. 2236.

கொக்கோகம்.
KOKKŌKAM.

Foll. 4—50. Extent, 1,000 granthas

Complete in 7 chapters.

This is same as the work described under R. No. 1081.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 1081-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. பாயிரம் நீங்கலாகவுள்ளது. பிற அதன் குறிப்பிற் காண்க.

R. No. 2237.

மதநூல்.
MATANŪL.

Foll. 51—74. Extent, 500 granthas.

Incomplete.

This is an interesting work on Śaivite philosophy by some unknown author. Examples are given from the work called "Thirumantiram".

Beginning :

பராபரத் தத்துவம்.

பராபரமாகிய பரமேசு பரனார் தராதலம் படைக்கத் தானினைந் தருளி தனது பதியான பரையி டத்திற் பாத நூபுர வட்டத்திற் பராபரந் தோன்றி பராபரத்திற் பரந்தோன்றி பரத்தில் சிவந்தோன்றி, சிவத்தில் சத்தி தோன்றி சத்தியில் நாதந் தோன்றி, நாதத்தில் விந்துதோன்றி, விந்துவிற் சதாசிவந் தோன்றி, சதாசிவத்தில் மயேசுபரனார் தோன்றி, மயேசுபரத்தில் ருத்திரன் தோன்றி, ருத்திரனில் விஷ்ணு தோன்றி. . . .

End :

ஞானம் சிவமென்னும் அக்கரமோதி யறிந்தால் சந்தம் பிரியாதிருக்கும். ஒரு பதம் வவ் வென்னும் அக்கரம் ஓதியறிந்தால் ஞானவானும். யவ் வென்னு மக்கரம் ஓதியறிந்தால் தானவானும். இதற்குச்சான்று:—

முப்பது மு பது முப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபி
னெப்ப வனைவரு மோட்டெடுத் தவரே.

(கு-பு)—

இந்நூல் சைவாகமத்தில் சேர்ந்தது. பஞ்சபூதங்களால் உண்டாகிய உலகினைப்பற்றியும் அதில் வாழும் ஜீவன்களின் நிலைகளைப்பற்றியும் கூறுகின்றது. முற்றுமில்லை. தான் கூறுகின்ற கூற்றுக்குத் திருமந்திரத்திலிருந்து எடுத்துக்காட்டுத் தருகின்றார் இவ்வாசிரியர். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இறுதியில் சில ஏடுகளில் வைத்தியத்தைப் பற்றிக் கூறப் பட்டுளது.

R. No. 2238.

தத்துவ நூல் (கொக்கோகம்).

TATTUVA NŪL (Kokkōkam).

Palm leaf. 11⅜ × 1 inches. Foll. 1—60. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 900 granthas.

Presented in 1949–50, from Sri M. P. Kauṇḍar, Puliyampaṭṭi, Palani taluk, Madurai District.

Incomplete.

In this, an unknown author gives briefly the ideas contained in the Kokkōkam. First few folios are lost.

Beginning :

* * * * *

இழையராக முயங்குவ ரின்பமும்
மழவுடோகத் தரிவையர் தம்மையும்
அழிவிலாததோர் தத்துவம் யாவையும்
எளிமை யாகவிந் நூலி லியம்புவாம். (11)

மற்றை நூல்முன்னை வல்லவர் தங்களைக்
கற்றை வார்குழல் காமன்றன் தோளினூர்
தெற்று மான்மதிற் றேர்ந்து காத்திறல்
செற்ற காம னெனச்சொலிச் சேர்வரே. (12)

இயல்பி னுறெழும் எண்வகைத் தத்துவ
நயம தாகிய வீரிரு ணன்கினும்
வியநி லாமை கலைகள் விரும்பிய
பயன் தருமிவை பார்த்திடிற் கூறுவாம். (13)

தெய்வ மாமுனி யோடு சிறந்தசீர்
பொய்யில் நாகந் திகழ்நதிரு காநலைதயர்
வெய்ய பூத மியக்கிய ரரக்கிபேய்த்
தையல் தத்துவ மெட்டெனச் சாற்றுவாம். (14)

End :

அரக்கித் தத்துவம்.

அளகமும் மெய்யு நீண்டு அறமிக வடிவு முண்டா
யிளகிய முலையே செப்பு வொத்ததீதார் விரலும் நீண்டு
தளாவிநு நிற்கும் பச்சை சாற்றிட லறிய பெண்ணுள்
அழகினுள் குறையொன் றில்லை அறநல வார்த்தை சொல்வாள.

(கு-பு)—

இந்நூல் தத்துவநூல் என்னும் பெயர்த்தாய் கொக்கோகத்தின் கருத்துக்களைச் சுருக்கிக் கூறவல்லதாய் தெய்வம், இருடி, நாகம், காந்தருவர், பூதர், இயக்கர், அரக்கியர், பைசாசம முதலான எண்வகை கொண்ட தத்துவங்களை எடுத்தியம்புவதாய் அத்தன்மையுடைய பெண்டிரைக் கூடி இன்பம் சுவைக்கும் முறையினை எளிதில் எடுத்து வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. சில மடந்தையர்களை வசியப்படுத்த மந்திரங்களும், சக்கரங்களும் வரையப்பட்டுள்ளன. பொதுவாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூல் எனலாம். முன்னேடு காணப் பெறவில்லை, சிதலமாயது. எழுத்துப்பிழைகள் மலிந்துள.

R. No. 2239.

பல்லி யாரூடம்.

PALLI YĀRŪḌAM.

Palm leaf. $6\frac{5}{8} \times 1\frac{1}{2}$ inches. Foll. 1—11. Lines, 5, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 75 granthas.

Presented in 1949–50, from Sri M. P. Kaundar, Puliyampatti, Palani.

Complete.

This is similar to the work described under R. No. 354.

Beginning :

காப்பு.

வாரண முகத்தோன் பாதம் மலரடி வணங்கிப் போற்றி
தாரணி தன்னில் வாழும் தங்கள் நோய்க்குண மதெல்லாம்
பூரண மாக முன்னோர் புகன்றநூ லடவே யானும்
காரண மாக நின்ற கணபதி காப்புத் தானே.

முந்திய கௌளி தானும் மொழியும்பா றறிய வேண்டி
இந்திரன் றணலோன் கால னியக்கர்கோன் வருணன் வாயு
சந்திர னீச னெனன சாற்றிய திசைக ளெட்டும்
வந்தவா றறிந்த ருக்கன் வருவது வகுத்துச் சொன்னோம.

*   *   *   *

செங்கதிர்த் திசையில் மொழிந்தநால் வரவாம்
செட்டுட னிருந்தஐந் நிநாம்
பங்கமாய் ...யோம் படைகடன் வாருய்
டயிர்மனை பேய்ந்நால் கெடுங்காண்
பொங்கமா யரசரிடஞ் செல்லத் நிதாம்
புத்தியால் ...ந்தநந் நிதாம்
தங்கமாய் மலைவாழ் வேங்கடா சலந்தான்
அருளினல் பாடல்செய் தனனே. (1

End :

சிறப்புடன் கேது திசையினில் மொழிந்தால்
செட்டுடன் ...யிர்மனை யிலையாம்
இரப்பவர் பெரியோ ரெனும் ...டி போக
யெண்ணுமன் காரியந் நிதாம்
கரப்பது பசுநால் காலுள சாம
கதித்தவில இடையவன் வருவான்
திருப்பதி ஒ நநூற் றெட்டுநா லுயர்ந்தகே
திருப்பதி வேங்கடா சலனே.
முற்றும்.

கு-பு)—

இந்நூல் பல்லியாருடம் என்னும் பெயர்த்து. முற்றுமுளது. சிதல மாயது. பிழையுளது. மூவருடக் காட்லாக்கு 354-ஆம் எண்ணில் வந்துள்ள நூல் போன்றது. ஆசிரியர் வேங்கடாசலம் என்பவர் போலும்.

R. No. 2240.

தட்சநாயனுர் வைத்திய அட்டவணை.
DAṬCA NĀYANĀR VAIDDIYA AṬṬAVAṆAI.

Palm leaf. 12 × 1⅜ inches. Foll. 1—78. Lines, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 700 granthas. Printed.

Transferred in 1949-50, from Vānī Pāṭaśālā, Pudukkottai.

Complete.

This is a work dealing with topics on medicine. This has been already printed by this library. The first sixteen folios describe the cure of some diseases. This part is not printed.

Beginning :

தட்சநாயனுர் வைத்திய அட்டவணை.

அருளாசி = குடபாலை கொடிசப்பாலை.
அருட்டலை = கடுகு ரோகிணி.
அதிபரிச்சாய் = வாலுளுவை, அளேசு, வெப்பம், அதிவிடையம்
அச்சகம் = நிரமுள்ளி.
அய்யவிப்ப = சித்திரைத்தை.
அனிச்சை = நாகமல்லி.

End :

வேலை = கடல்.
வேல் = மூங்கில்.
வேழம் = மூங்கில்.
கரும்பு = யானை.
வேற்கொம்பு = சுக்கு.
வேலிப்பருத்தி = உத்தாமணி.
வேகந்தோன்றி = கார்த்திகைக் கிழங்கு.

(கு-பு)—

இந்நூல் தட்ச நாயகர் வைத்திய அட்டவணை யென்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. சிதைவுமாயது. இது, இந்நூல்நிலையத்தில் அச்சிடியுள்ளது. முன்னே பகுதியில் சில வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன. இப்பகுதி அச்சுப்பிரதியில் வரவில்லை.

R. No. 2241.

பதார்த்த குண நிருபணம்.
PĀDARTHA GUṆA NIRŪPAṆAM.

Palm leaf. 14¼ × 1½ inches. Foll. 1—19. Lines, 7, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 160 granthas.

Transferred in 1949-50, from Vāṇī Pāṭaśālā, Pudukkottai.

Complete.

This is a very useful treatise describing the medicinal properties of various substances. Although this work has been printed, there are some stanzas in this manuscript which are not found in the printed edition.

Beginning :

ஆற்றுநீர் பித்தம்போம் அருவிநீர் வாதமுறும்
ஊற்றுநீர் பித்தநேர் ஓடுமே—யேத்தும்
பாரைக் கிணற்றுநீர் பத்தியெரி உஷ்ணமுறும்
ஏரிகுள நீர்ப்பா ரிசை.

குளிர்நீர்.

குளிர்ந்தநீர் வாதபித்தங் கூடுந் தடுமாறும்
மளுந்தநீர் நீர்த்தாக மகலாது—உலாந்து
கண்ணும் கடுக்கைக்கும் கலங்கும் மனோவிர்த்தி
யெண்ண முடம்பிளைக்கு மே.

அல்லி தாமரையுள்ள நீர்.

அல்லிதாம ரையடைந் தழுகியநீர் சொரியுஷ்ணந்
தொல்லைதாகம் நாபி சூலையுறும்—அல்லும்
சீத சுரந்தாபஞ் சிரங்கண்ணோய் வெப்புந்
தந்துதனி லுஷ்ணமிகுந் தான்.

End :

நாவல் பழம்

நாவல் பழம் பித்தம் நயனநேர்பபுஞ் சூடுமே
மேவுங் கிரந்திசில் விடமு மிகும்—பாவி
த . . . . .சன்னியு மிருமல் மிகும்
மலகூட்டும் வாதமுறும் வார்.

(கு-பு)—

இந்நூல் பதார்த்தகுண நிரூபணம் என்னும் பெயர்த்தாய்ப் பதார்த்த குண சிந்தாமணி என்னும் நூலின் கண் உள்ளது போலவே சிற்சில காய், கனி, கிழங்கு, வேர், செடி, கொடி, விருட்சம் முதலான தாவரப் பொருள் களுடைய குணங்களை எடுத்துரைக்கின்றது. வெண்பாவினால் ஆகியது. மிகவும் சிதலமாயது. எழுத்துப் பிழைகள் உள. அச்சுப்பிரதிக்கும் இதற்கும் சிற்சில வேறுபாடு காணப்படுகின்றன.

R. No. 2242.

வைத்திய நூல்.
VAIDDIYA NŪL.

Palm leaf. 13 × 1½ **inches. Foll.** 2—71. **Lines,** 8, 9 **on a page. Tamil. Injured.** Old. Extent, 1,136 granthas.

Folios are wanted in the beginning and end.

Transferred in 1949–50 from Vāṇī Pāṭaśālā, Pudukkōṭṭai.

Incomplete.

This contains about 800 verses dealing with topics on medicine. Still the work seems to be incomplete. The authorship is not definitely known. But this work gives the name, Kuruvaittiyar. It describes the characteristics of different medicinal herbs.

Beginning :

அன்றை நாட் பிதிர் கடங் கடகங்குச மாகையாலே
இற்றை நாளொளித் தாயிந்ரு இதுவுணக்கி யப்போவென்று
பற்றிய பசியினோடு பரிந்துரைத் தார்களுந்த
குற்றமொர் களங்கமாகிக் குருகி யிந்து வின்பால். (10)

இந்துவை இரவிநோக்கி இனியுனை மன்னிக்க மாட்டேன்
எந்த மண்டலத்து ளீச னிணையம தொழுநீ யென்ன
பிந்துவும் பாவவீச னிரங்கியே மறைகளெல்லாம்
சந்திர மவுலியென்னத் தரித்துத்தாண் டவமும்செய்தான். (11)

சந்தியா னடனந்தன்னிற் றதும்பிய கங்கை நீரோ
மந்த மண்டலத்தி லூரி யெழுந்துமு தெங்குஞ்சிந்த
வந்த வானந்த கத்தா லருஞ்சுவை தன ஞய்மாந்தி
இந்திரன் முதலாந் தேவ ரின்பமுற் றுர்களாமாதோ. (12)

தேவர்கள் பசியுந் தீர்ந்து செயமகா தேவனென்ன
மூவரும் பணிந்து நிற்ப முக்கண னுமையாளோடு
மோவறக் கலியி னூறி யுகுத்ததோ டதிகமாம்
பூவுல கத்துள் ளார்க்கும் புல்லற்கும் போகிப்போ மென்றான் (13)

* * * * * * * *

சூதனேதிய சூத்தி ரந்தானமே
யாதியாக வரனரு ளாலரி
யாகும் சத்திரா லோகத்தருக்கும்
பேதியா திந்தப் பொருள் செந்தமிழ். (20)

மந்திர மருந்தொடு மணிபல
தந்திரஞ் செயுள் சம்பிரதாயமு
நிதநியா யங்குரு மொழி நேசித்து
சிந்தை நம்பிட சித்திக்கு மிதெல்லாம். (21)

குருவைத்தியன் கூறிய வேவலுக்
குரியர் வேண்டு முயர் நூலைக் கயிதைத்
தெரிகுவார்கள் மனிதனிற் செனமித்து
நரியும் நாயினும் நன்கடை யாலரே. (22)

பாயிர முற்றும்.

தன்மந் திரிக்கும் தமிழ் முனிக்கும் சித்தருக்கும்
கன்மந் திரிசகவ ன் கட்டுரைத்தார்—நன்மை பெற
வாகடமாம் பாற்கடற்கண் வந்தமருந் தொக்குமே
கூவிடமா மூலிக் குணம்.

வேம்பின் குணம்.

வேம்பிற் பச்சிலை வாதம் விலக்கும் முக்
காம்பு பித்த முடு கொடமுங் காயுவேர்
பாம்புப் பலவிடந் தீர்க்கும் பழம்விதை
தேம்பு மெண்ணெய் பிதைக்கும் பிணியெலாம். (1)

End :

ஈதெலாம் பொடிசெய்து கலவத்தில் தந்து
மாதுளை . . . . . ருவேலுநீர் . . . .
ஓதெனும் பிச்சை ஒண் புளியம்பழம்
சீதளப் பழஞ்சேத் துமைநாலு நாள். (748)

(கு-பு)—

இந்நூல் வைத்தியநூல் என்னும் பெயர்த்து. இறைவனார், தன்வந்தரி, அகத்தியர், சித்தர்கள் முதலானோர்கட்கு உபதேசித்ததைக் குருவைத்தியன் உலகோர் உய்யும் பொருட்டுக் கூறியதாகப் பாயிரப்பாட்டுக் களால் புலப்படுகின்றது. எழுநூறுக்கு மேற்பட்ட பாட்டுக்கள் முற்றுமில்லா திருந்துமே காணப்படுவதால் முழுது மெவ்வளவு பாட்டுக்கள் என்று தெரியவில்லை. முன்னும் சில ஏடுகள் காணப் பெறவில்லை. மிகமிகச் சிதலுற்றுக் காணப்படுவதால் படித்தற் கரிதாகவுள்ளது. எழுத்துப்பிழை களும் உள்ளன. ஆசிரியர் குருவைத்தியரோ அவரல்லரோ என ஐயுற இடமுளது. பலவாறான தாவரப்பொருள்களின் குணகுணங்களையும், அதனால் நீக்கப்படும் நோய் வகைகளையும் எடுத்துரைக்கிறது. வைத்திய முறைக்குப் பயன்படுவதொரு நூல். அச்சியற்றப்படாதது.

R. No. 2243.

சரநூல் (உரையுடன்).
SARANŪL (with commentary).

Palm leaf. 15½ × 1⅛ inches. Foll. 1—72. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 875 granthas.

Transferred in 1949–50, from Vāṇī Pāṭāsālā, Pudukkōṭṭai.

Complete.

This is same as the work described under D. No. 2032.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2032-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிதலமாயது. முற்றுமுளது. பிற அதன் குறிப்புங் காண்க.

R. No. 2244.

விக்கிரமாதித்தன் கதை.
VIKKIRAMĀTITTAN KATHAI.

Palm leaf. 13½ × 1½ inches. Foll. 1—100. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,170 granthas.

Folios from 31 to 64 are wanted.

Transferred in 1949–50, from Vāṇī Pāṭāsālā, Pudukkōṭṭai,

Incomplete.

This is same as the work described under R. No. 1972.

This contains some stories of the King Vikramāditya.

(கு-பு)—

இந்நூல் விக்கிரமாதித்தன் கதை என்னும் பெயர்த்து. இது மூவருடக் காட்லாக்கு 1972-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில் முதல் கதை முதல் நாலாவது கதைத் தொடக்கம் வரையிலும் பத்தாவது கதை தொடங்கி கூடுவிட்டுக்கூடு பாய்ந்த கதை வரையிலுமாக உள்ளன. 31–64-ஆம் ஏடுகள் வரையில் இடையிலே காணப்பெறவில்லை. பிற அதன் குறிப்பையுங் காண்க. சிதலுற்ற காரணத்தால் படிந்நற் கரிதாகவுள்ளது.

R. Nos. 2245 and 2246 (one codex).

Palm leaf. 19½ × 1½ inches. Foll. 1—111. Lines, 7 on a page. Tamil and Grantha. Much injured. Old. Extent, 2,330 granthas.

Transferred in 1949–50, from Vāṇī Pāṭāsālā, Pudukkōttai.

R. No. 2245.

திருமாலை வியாக்கியானம்.
TIRUMĀLAI VIYĀKKIYĀNAM.

Foll. 1—106. Extent, 2,225 granthas.

Complete.

This is same as the work described under R. No. 1137 (d).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 1137-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. சிதலமாயது. அதன குறிப்பையுங் காண்க.

R. No. 2246.

திருப்பள்ளியெழுச்சி பிரதிபதம்.
TIRUPPAḶḶIYEḺUCCI PIRATIPADAM.

Foll. 107—111. Extent, 105 granthas.

Complete.

This is same as the work described under R. No. 520.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 520-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புங் காண்க.

R. No. 2247.

அசுவமேத யாகம்.
AŚUVAMĒDA YĀGAM.

Palm leaf. 16·3/16 × 1⅜ inches. Foll. 281. Lines, 7 on a page. Tamil. Very much injured. Old. Extent, 5,880 granthas. Folios are wanted in the beginning and the end.

Presented in 1949–50, from Sri D. Mutthukumaraswami Mudaliar, Headmaster, Municipal School, Kancheepuram.

Incomplete.

This is same as the work described under R. No. 2247.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2247-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முதலும் இறுதியுமான ஏடுகள் தேவைப்படுகின்றன. மிகவும் சிதலமாய் உள்ளது. எழுத்துப் பிழைகள் உள.

R. No. 2248.

நாலடியார் (உரையுடன்).
NĀLAṬIYĀR (with commantary).

Palm leaf. 12 × 1-1/16 inches. Foll. 1—336. Lines, 5 on a page. **Tamil.** **Much** injured. Old. Extent, 2,[illegible] granthas.

Presented in 1949-50. from Sri D. Muttukumaraswami Mudaliar, Headmaster, Municipal High School, Kancheepuram.

Complete.

This is same as the work described under R. No. 618. This contains, in addition to what is contained in R. No. 618, the commentary for the last 10 verses. The gloss is of unknown authorship.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக் 5 618-ஆம் எணணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கின்றது. அதில் உரையில்லாத இறுதிப் பாட்டுக்கள் பத்துக்கும் இங்கு உரையுள்ளது. மிகவும் பழுது பட்டுளது. முற்றுமுள்ளது. இது யாருடைய உரையென அறியக் கூடவில்லை.

R. No. 2249.

மாட்டு வைத்தியம்.
MĀṬṬU VAIDDIYAM.

Palm leaf. 11¾ × 1¼ inches. Foll. 1-1[illegible]. Lines, 6 on a page. **Tamil.** Injured. Old. Extent, 1,[illegible] granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Aiyar, 28, Boag Road, Mambalam, Madras.

Complete.

This work deals with the curing of the diseases that occur commonly to cows and goats according to the Āyurvēda and the English method. Author's name is not known. This is similar to the work described under R. No. 352.

Beginning :

மாட்டு வைத்தியம்

(இங்கிலீஷில் சொல்லப்பட்ட நும் தமிழில் சொல்லப்பட்டதும்)

1. வயிறு உப்பசம்—க[illegible] த்துத் [illegible] டப்பான்.
2. தினிச்க்கல்—வாயடைப்பான்.
3. கோமாரி—வாய் நோய், கால்நோய்.
4. எரிக்காய்ச்சல்—வ[illegible] டுக் காய்ச்சல்.
5. ஜலபய ரோகம்—விஷகடி நோய்.
6. கொடிறு சன்னி—சன்னி.

7. மண்டையடைப்பான்—நாசியடைப்பான்
8. இரத்தக்கலச மெரிச்சல்—நெஞ்சடைப்பான்.
9. தொண்டையடைப்பான்—தொண்டையடைப்பன் மென்னைக் கட்டு.

வியாதி குறிகள்.

(மூக்கடைப்பான், நெஞ்சடைப்பான்) மூக்கிலிருந்து சளி மிகுதியுண்டா வதோடு கூட சொல்ப காய்ச்சலும் காணப்படுறது. உதறல் திம்மென்றி ருப்பது—காதுகள் மடங்கித் தொங்குதல் தலையிறக்கம் . .

. . . . . .

End :

நோவும் கழிச்சலும் நிற்கிற வரையில் தண்ணீர் காட்டக்கூடாது. ஆட்டுக்குப் பாதி மருந்து வார்க்கலாம். ஆகாரம்—தவிடு பிசைந்து வைக்க வேண்டியது. இரண்டோர் தினத்தில் பச்சைப் புல் போடலாம். ஆனால் மட்டிப்புல் போடாமல் நல்லபுல் போடவேண்டியது.

இப்படிக்கு பிஞ்சின் ஐண்மதா ராமசாமி காங்கய நயினார் எழுதியது.

(கு-பு)—

இந்நூல் நாட்டு வைத்தியம், ஆங்கில வைத்தியம் ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்ட மாட்டு வைத்திய முறையும் ஆட்டு வைத்தியமுமாகும். ஆடு மாடு கட்கு உண்டாகும் காய்ச்சல், கோமாரி முதலான நோய்கட்கு சிறந்ததான வைத்திய முறைகள் உள்ளன. முற்றுப் பெற்றது. சிதைவடையவில்லை. அனுபவத் தில் கொணர்தற்கு ஏற்றது.

R. Nos. **2250** and **2251** (one codex).

Palm leaf. $9\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 1—87. Lines, 7, 8 on a page. Tamil. Injured. Old. Extent, 850 granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

R. No. 2250.

அனுபவ வைத்தியம்.

ANUBHAVA VAIDDIYAM.

Foll. 1—77. Extent, 800 granthas.

Complete.

This is similar to the work described under R. No. 2580. This is a very injured manuscript describing the methods of curing to cough, tuberculosis and other diseases. Author is not known.

Beginning :

பேதி மாத்திரை.

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், நரணிக்காய், நெல்லிமுள்ளி, கடுகு ரோகணி, இந்துப்பு வகைக்கு (விராகனெடை) 2 ; சுத்தி செய்த வாளம் (வராகனெடை) 16 ; இவையெல்லாம் எலுமிச்சம் பழச்சாறிட்டு இரண்டு சாமமரைத்துக் கடலையளவு மாத்திரைபண்ணி வைத்துக்கொண்டு வேண்டிய அனுபானங்களில் பேதிக்குக் கொடுக்கவும்.

End :

வீரிய விருத்திக்கு.

அமுக்கிறுங் கிழங்கு பலம் 8, சுத்தி பண்ணி.... சீனிச் சர்க்கரை பலம் 8 இரண்டும் கலந்து ஓரிலைத்தாமரை.... படி ¼, வல்லாரைச்சாறு படி ¼, பசுவின் நெய் படி ¼, தேன் படி ¼, எல்லாம் சேர்த்து லேகியம் பண்ணிக் கொடுக்கவும். இதுவும் முந்தக்காசு, குள.... ந்த மஞ்சள், நெல்லிப் பழம் இவை நாலும் பொடிபண்ணி தேன்விட்டு அரைத்துக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் சாப்பிடவும். ஆனைபலம் வீரிய விர்த்தியாகும்.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2580-ஆம் எண்ணில் வருவதாயிருப்பது போலக் காணப்படுகிறது. இதில் க்ஷயம், நாக்குப்பூச்சி விழுதல், சன்னி வகைகள், இருமல், காதில் சீழ் வடிதல் முதலான நோய்கட்கு அனுபவத்தில் கண்ட வைத்திய முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. மிகவும் சிதலமாயது.

R. No. 2251.

சமகம் முதலியன.

CAMAKAM, ETC.

Foll. 78—87. Extent, 50 granthas.

This contains Sanskrit words like camakam, for further details, see the Sanskrit part of this Catalogue.

(கு-பு)—

இந்நூல் சமகம் முதலாய வடமொழிப் பகுதிகளைக்கொண்டது. வேத விஷயமானது. சமஸ்கிருத மொழியில் காணவும்.

R. No. 2252.

சரநூல் (உரையுடன்)

ŚARANŪL (with commentary).

Palm leaf. 6¾ × 1-3/16 inches. Foll. 1—116. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 435 granthas.

Presented in 1949—50 from Sri A. M. Gopala Iyer Avl., 28, Boag Road, Mambalam, Madras.

Incomplete.

This contains 49 verses only with a gloss. This is same as that described under D. No. 2032. The commentary differs from that of D. No. 2032 in some places.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2032-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருப்பதாயினும் உரை சிற்சில இடங்களில் வேறுபட்டுக் காணப்படு கின்றது. 49 பாட்டுகளே உள. சிதலமாயது. முற்றுமில்லை.

R. No. 2253.

அகத்தியர் வாகடம் ஆயிரத்தைந்நூறு.

AKATTIYAR VĀKAṬAM 1500.

Palm leaf. 12 × 1½ inches. Foll. 1—295. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 5,000 granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

Incomplete.

This contains only 1,470 Sūtrams written by Akattiyar. This is medicinal treatise dealing with the method of preparing medicines for curing different kinds of diseases. This is same as that described under D. No. 1895.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 1895-ஆம் எண்ணின்கீழ் வருணிக் கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இதில் அகத்தியர் வைத்திய சூத்திரம் 1,500 என்று இருக்க வேண்டியது அகத்தியர் வாகடம் என உளது. மிகவும் சிதலமாயது. சில எழுத்துப் பிழைகள் உள. முற்றுமில்லை. 1,470 சூத்திரங்களே உள.

R. Nos. 2254 to 2259 (one codex).

Palm leaf. 15 × 1½ inches. Foll. 1—258. Lines, 7, 8 on a page. Tamil. Much injured. Old. Extent, 5,903 granthas.

Purchased in 1949—50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

R. No. 2254.

இராமதேவர் 1,000.

IRAMADĒVAR ĀYIRAM.

Foll. 1—168. Extent, 3,696 granthas.

Complete.

This is a treatise in 1,000 stanzas dealing mainly with medicine and incidentally with Yōgam and Ñānam of the siddās. The

preparations of various kinds of medicinal powders, oils, etc., are all described herein. This is same as that described under D. No. 1908. **Author of this work** is Irāmadēvar.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1908-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதனை குறிப்பையுங் காண்க. இதில் முற்றுமுளது. சிதலமாயது. எனினும் 78 என்று குறிக்கப்பட்ட பனை இரு தடவையும் 59 என்று குறிக்க வேண்டிய இடத்து 58 என்ற எண் திரும்பக் குறிக்கப் பட்டும் 136–142 வரையிலான ஏடுகள் மற்ற ஏடுகட்குச் சமமாகத் துவாரம் செய்யப்பட்டுக் கோக்கப்படாமையும் பக்க எண்கள் ஒரு பக்கமே எழுதப் பெறாமல் இரண்டு ஓரங்களில் மாற்றிக் கலந்து எழுதியும், ஓலைகளில் எண்களை எழுதாமல் விடப்பட்டும் உள்ளவை இதன் குறைகளாகும்.

R. No. 2255.

இராமதேவர் பலதிரட்டுச் சூத்திரம்
IRĀMADĒVAR PALATIRAṬṬU SUTTIRAM.

Foll. 169–190. Extent, 425 granthas.

Complete

This is a collection of 103 verses dealing with topics on medicine written by Irāmadēvar. This describes the details of medicines and magics.

Beginning :

மேகத்து எண்ணெய்.

மூவுலகுந் தான்படைத்த முன்னோன் தனைப்பணிந்து
பூவரசன் காயெண்ணெய் பூவுலகில்—மேவக்கேள்
கட்டாக பூவரசங் காயொரு நாலுபடி
திட்டமிகு சங்கன் குப்பி சேர்க—விடகி
முட்ட விருவங் கிழங்குடனே வேண்டுமாடு தோறட்டி
மருவுங் கோனுட் கிழங்கு வண்மையாய்—பெருகரிய
வாத மடக்கி வளரும் சுவகெந்தி
சீதவிளி மூக்குக் கிழங்குடனே—ஓதரிய
கோழியாவாரை புள்ளி கொடிய பெருமரத்தின்
வாடுமிலைக் கள்ளி வகையுடனே—மீளவே
சாருபடி யரையாய் தான் சேர்த்து முன்பாலில்
மீளவடித்து விபரமாய் நாரியரை (கயாஷ வகை)—கேள்
கருத்தாய் உரைப்பேன் காண் உசாவரியபு லார்மூத்தபட்டை
விசேசமாய் வெட்டி பல நாலு விஷமாம்—பெரு மரத்தின்
பட்டை பலம்நாலு பகரக்கேள்—திட்டமுடன்
அமுக்கிறவின் கிழங்கு அஞ்சுபலந் தான்கூட்டு
சமுக்கக்கரு நொச்சி வேர் தந்த பட்டை சமுக்கைமுடன்.

* * * * * * * *

End :

ஐயப்பா சகலகலை சேதி யெல்லாம்
மௌமாக அடக்கிவெகு தெளிவாய்ச் சொன்னேன்
அய்யமென்று நினையாதே புலைபே சாதே
ஆத்தாளோ டனுதினமும் மறவா தேநீ
செய்யாதே நிவினைகளை கெடு நு பாவஞ்
சிறந்தநெல்ல மா ராசனென்று தெளிந்து காணும்
மெய்யான குருபதத்தைப் போற்றிசெய்து
விளம்பினேன் பலதிரட்டுச் சூத்திரந்தான் முற்றே.

(கு-பு)—

இந்நூல் இராமதேவர் இயற்றிய பலதிரட்டுச் சூத்திரம் என்னும் பெயர்த்து. இது வைத்தியம், வசியம், இரஸவாதம் ஆகிய வைகளைப் பற்றிக் கூறுகிறது. இராமதேவர் எழுதியதாக முகப்பில கூறப்பட்டுளது. 103 செய்யுட்களாலாகியது. சிதலமாயது. இந்நூல் வைத்தியர், ரஸவாதி இவர்கட்கு உதவக் கூடியது. முற்றுமுளது.

R. No. 2256.

இராமதேவர் விநோத பட்சிணி 108.

IRĀMADĒVAR VINŌDA PAṬCIṆI 108.

Foll. 191-209. Extent, 200 granthas.

This is same as the work described under R. No. 197.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 197-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது; அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2257.

இராமதேவர் பஞ்சபட்சி.

IRĀMADĒVAR PAÑCAPAṬCI.

Foll. 210-217. Extent, 590 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 947 (f).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 947-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமில்லை. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2258.

இராமதேவர் பட்சிணி ஐம்பது.

IRĀMADĒVAR PAṬCIṆI AIMPATU.

Foll. 218-225. Extent, 200 granthas.

Complete.

This is same as the work described under R. No. 201 (*b*).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 201-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2259.

இராமதேவர் சிவயோகம் பூஜாவிதி இருநூறு.
IRĀMADĒVAR ŚIVAYŌGAM PŪJĀVIDI IRUNŪṚU.

Foll. 226–258. Extent, 792 granthas.

Complete.

This is same as the work described under R. No. 947.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 947-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது. அதன் குறிப்பையுங் காண்க.

R. Nos. 2260 to 2269 (one codex).

Palm leaf. 9⅞ × 1⅜ inches. Foll. 1—204. Lines, 6 on a page. Tamil. Slightly injured. Old. Extent, 1,733 granthas.

Purchased in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road, Mambalam, Madras.

R. No. 2260.

சுந்தரானந்தர் வகார சூத்திரம் 25.
ŚUNDARĀNANTAR VAKĀRA SŪTTIRAM (Irupattaintu).

Foll. 1–7. Extent, 70 granthas.

Complete.

This is a medicinal treatise by Sundarānandar. This is same as that described under R. No. 8 (c).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 8(c)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டுளது. வைத்திய விடயமானது. அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2261.

அகத்தியர் வழலை.
AKATTIYAR VAḺALAI.

Foll. 8–10. Extent, 28 granthas.

Folios are wanted in the beginning and end.

Incomplete.

This is a work on rasavāda by the sage Agastiyā. The matter is not arranged properly.

Beginning :

வாரிவந்து நாழிக்கென்ன நாழி நீர்தான்
வரிசையாய்ப் பானைதனில் வைத்தேத்திக் கொண்டு
சேரிந்த மறுபாண்டத் தடுப்பி லேற்றி
தீயெறித்து வத்தினபின் ரவியில் காய்ச்சி
பாரமுரி தனில்கலக்கி யிருத்து காய்ச்சி
பறிவாக தேசிநீரில் மூன்று பால் காய்ச்சி
சீரிதுதான் பூவுக்கு மூன்றுசுத்தி
செத்துவிட யெத்தொழிலும் சித்தி யாமே.

End :

ஆகுமே நாற்சாம மெரித்து மைந்தா
ஆத்தாளைப் பூசித்து அடுப்பை விட்டிறக்கிப்
பாகுமேல் சட்டித் திறந்து வில்லைதன்னை
பதனமாய் எடுத்து அப்பால் பாருகண்ணால்
வாகுபெற முப்பூவின் குருவின் மார்க்கம்
வையகத்தில் வைப்பறியார் ஆரோ நீதான்
தாகுபெற பெருநூலுஞ் சாத்திரமுஞ் சொன்னோம்
தவறாது குருவழலை சூத்திர மிந்நூலை.

(கு-பு)—

இந்நூல் அகத்தியர் வழலை என்னும் பெயர்த்து. இருப்பினும் இந்நூல் அகத்தியர் செய்த வழலை 16; 30 என்பவைகளின் சிதைவோ என ஐயுறக் கிடக்கின்றது. முன்னும் பின்னும் தோற்றமும் இறுதியும் முறைப்படி காணக் கூடவில்லை. இரசவாத சம்பந்தமுடையது.

R. No. 2262.

அகத்தியர் வகாரம், வாதசூத்திரம் 200.
AKATTIYAR VAKĀRAM, VĀTASŪTTIRAM (Irunūṟu).

Foll. 11–90. Extent, 400 granthas.

Complete.

This is same as that described under R. No. 8 (*b*), 149 (*b*), 275 (*d*) and (l).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கில் 8-b, 149-b, 275-d and l ஆகிய எண்களில் வருணிக்கப்பட்டுளது. முற்றுமுளது. அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2263.

சட்டைமுனி சவுக்காரவைப்பு இருநூறு.
ŚAṬṬAIMUNI ŚAVUKKĀRAVAIPPU (Irunūṟu).

Foll. 91–115. Extent, 250 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 268.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 268-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டுளது. முற்றுமில்லை அதன் குறிப்பையுங் காணக. அதில் சட்டைமுனி சூத்திரம் 200 என்றிருக்க இதில் சட்டைமுனி சவுக்காரவைப்பு 200 என்றிருப்பதனால் இப்பெயரும் அதற்குண்டெனா விளங்குகிறது.

R. No. 2264.

அகத்தியர் திரிபுவனைக் கண்ணாடி.

AKATTIYAR TIRIPUVANAIK KANNĀḌI.

Foll. 116–120. Extent, 55 granthas.

Incomplete.

This is a short treatise on medicine. This contains only 15 verses This is a portion of the first kāṇḍa of the work of the sage Agastiya called Nālukāṇḍm—1,200 This is same as the work described under R. No. 3681.

Beginning :

முதற் காண்டம் முந்நூறில்.

பதமான பரிசுடைய சித்தருக்கு
நடனமிடு பாரின் மீதில்
வறமான நாதமது பூமி யென்றும்
உப்பதுவாம் வழலை யாதி
திறமான வாதிகட்கும் வயித்தியர்க்கும்
குருவதுவாம் தேசந்தோறும்
உழமண்ணில் பூநீறு பிரம்மமென்றும்
உழகுரு உரமு மென்னே. (181)

நீரான நீறுதனில் அருவியைப் போல்
பூமியதில் நீரில் வெள்ளைப்
பாராய நீதுய்ய நிறம்வெண் மதிதான்
பளிங்கு நிறம் படரும் பாரை
சீரான வெடியுப்பு அதில்பிறக்கும்
பொட்டிலுப்பு சீனகாரம்
வேறான வெளிக்கருவு உழனிருப்பு
சவுக்கார உதகமென்றே. (182)

End :

இதுவான தங்கமது புனல்முருங்கைப்
பூநீரால் யெம்ம நீரும்
பரவான யிவைபாக மஞ்சாவது
முந்நூறில் பாகங்கண்டு
அதுவான பற்பமெல்லாம் ஒவ்வொருமூ
லிகை யதனால் அருளுந்செய்கை
மதுவான கோமேதகமும் மேனியதின்
மூலிகையினால் மலரும் பாரே.

(கு-பு)—

இந்நூல் அகத்தியர் அருளிய நாலுகாண்டம் 1,200-இல் உள்ள முதற் காண்டமாகிய 300-இல் உள்ள ஓர் பகுதியென அறிவிக்கப்படுகிறது ஆதலின் மூவருடக் காட்லாக்கு 3,681-ஆம் எட்டுச் சுவடியின்கீழ் உள்ள தெனலாம். ஓர் சிறு பகுதி இது. வைத்திய சம்பந்தமானது. 15 பாட்டுக் களடங்கியுள்ளன.

R. No. 2265.

அகத்தியர் தத்துவம்.

AKATTIYAR TATTUVAM.

Foll. 121–160. Extent, 425 granthas.

Complete :

This is an elaborate treatise on medicine by the sage Agastiya. This work describes medicines like Saṭṭimuni maṟaippu, Koṅgaṇar maṟaippu, etc. Though in the first page it is written " 300 verses ", there are only 116 verses on the whole. Many verses are numbered wrongly.

Beginning :

அந்தோ பதஞான மென்றுந் தத்துவ ஞானத்தைச்
சித்தி பெறுவார் திரிவார் பித்தாரியரே
தத்துவர் அதனையறிந் தெத்தொழிலும் செய்வார்
கத்து சமையங்கள் பலவித்தை யறிவாரே

ஆச்சப்பா விருபத்தைந்து சித்தும்
ஆதியென்ற தட்சிணாமூர்த்தி தானும்
பேச்சப்பா யென்னுடனே நால்வர்க்கும்
பேராக ஆதியிலே யுபதேசித்தார்
நீச்சப்பா செல்வரினும் ஒன்பது பேராச்சு
நிலையான ஒன்பதிலும் நவகோடியாச்சு
ஆச்சப்பா சித்தி யெல்லாம் அடைந்தபேர்க்கும்
மனுஷனல்ல தெய்வம்வணம் காளப்பாரே. (11)

பாரப்பா சித்தியெல்லா மிந்தநூலில்
பண்பாகச் சொல்லி விட்டேன் மற்றநூலில்
நேரப்பா சொல்லவில்லை சித்தரெல்லாம்
நேர்ந்தபடி பலநூலில் கொஞ்சம் சொன்னார்
சாரப்பா சுந்தரநின் னூலைப் பார்த்து
தப்பாமல் வாதமெல்லாஞ் செய்தான்பாரு
ஆரப்பா பிள்ளையென்றால் சுந்தரமே பிள்ளை
அவனுக்கா இந்நூலை அறைந்திட்டேனே. (12)

அறைந்திட்ட வாதசித்தி காய சித்தி
அசையாத யோகமுடன் ஞான சித்தி
உரைத்திட்ட சித்தி யைந்தும் சுந்தரன் சொ
தித்து ஒருநூலா யாயிர முகந்து சொன்ஞன்.
திறந்திட்டான் வழலையுப்புஞ் சவுக்கார வைப்புஞ்
செயமான கடுஙகாரஞ் செப்பாதே சொன்ஞன்
பிறந்திட்ட சுந்தரநா லாயிரமும் பார்த்து
பேராக என்னூலைப் பின்பு பாரே.

(13)

End :

போச்சப்பா பதினெண்பேர் நூல்களெல்லாம்
பொய்யாகிப் போகாமல் தத்துவத்தில் சொன்னேன்
நீச்சப்பா. தத்துவநூல் உலகில் கிட்டில்
நிச்சயமாய்ப்போக சித்தராவார்
ஆச்சப்பா தத்துவத்தை யுணர்ந்தோர் சித்தன
அறியாதான் சுற்றலைந்து அலைவான்பாரு
நீச்சப்பா தத்துவத்தின் நிலைகளெல்லாம்
நிரைநிரையாய்ச் சொல்லுகிறேன் வாதமுற்றே.

(108)

பலநூலில் வாதமருந்து

பாரப்பா சித்தரெல்லாம் காயசித்தி
பாடிஞர் காயசித்தி பண்ணியேற
நேரப்பா வாதசித்தி பண்ணிச் சொல்லி
நிலைத்த பின்பு காயசித்தி பண்ணவேணும்
வாரப்பா வாதம்விட்டுக் காயசித்தி தானும்
செயமதுதான் அரிதரிதுதான் செகத்தில்தானே.

* * * * *

* * * * *

கொள்ளப்பா தேகமது அருணன் போலாம்
குழந்தைமுகம் போலவுந்தான் சிவந்துமின்னும்
விள்ளப்பா நாடியெலாம் முருக்குமேறும்
விரைந்ததிரை சடமிறுகி நரைஉதிர்ந்து முளைக்கும்
தள்ளப்பா கண்ணிரண்டும் சிவந்துபோகும்
தந்தமெலாம் வச்சிரம்போ லிறுகிப்போகும்
கள்ளப்பா மதியமுர்தம் தாரையோடும்
காமப்பால் வெகுவிருத்தி யாகும் பாரே.

(கு-பு)—

இந்நூல் ' அகத்தியர் தத்துவம் ' என்னும் பெயர்த்து. இதில் சட்டை முனி மறைப்பு, சுந்தரானந்தர் மறைப்பு, கொங்கணர் மறைப்பு, கருவூரான் மறைப்பு, தயிலம், மச்சமுனி மறைப்பு, ரசமணி கட்டல், திருமூலர் மறைப்பு, கமலமுனி மறைப்பு, கோரக்கர் மறைப்பு, போகர் பற்பம், பிரம்ம முனி மறைப்பு, வீர மெழுகு, ரோமரிஷி மறைப்பு முதலான வைத்திய

மருந்துகளைப்பற்றிக் கூறுகிறது. இடையில், பலவித வாத மருந்து என்று தொடங்கி எட்டுப் பாட்டுக்கள் உள. முதலேட்டின் தலைப்பில் முந்நூறு என்று எழுதப்பட்டிருக்கிறது. இடையிடை எண்கள் தவருக எழுதப்பட்டுள. ஆதலின் செய்யுட்கள் விடப்பட்டுள்ளன என்று விளங்குகிறது. இதிலுள்ள செய்யுட்கள் 116 ஆகும். வைத்திய நூல் வல்லுநர் படித்தறியத் தக்கது.

R. No. 2266.

அகத்தியர் சூத்திரம்.

AKATTIYAR SŪTTIRAM.

Foll. 161–166. Extent, 60 granthas.

Complete.

This contains 15 sūtras by the sage Agastiya. In these the author explains the medicine called 'Vēmbin kaṟpam' which gives vigour to human persons. Hence the title may appropriately be as Agattiyar kāyasiddi sūttiram.

Beginning :

வேம்பின் கற்பம்.

கழண்ட உடல் இருக்க ஒரு கற்பங்கேளு
கனவருஷ மாயிரந்தான் சென்றவேம்பு
உழன்றந்த யிலைதின்றால் இனிக்குமந்த
உள்ளபடை வேர்தின்றால் துவர்க்கும்பாரு
கழன்றுமற்று இரண்டு திங்கள் இலையைத்தின்று
கைம்முறையாய் இரண்டு திங்கள் கொழுந்தைத் தின்று
வழங்கு மந்த பூவிரண்டு திங்கள் தின்று
மக்களே வேரிரண்டு திங்கள்கொள்ளே. (1)

கொள்ளவே பிஞ்சையொரு திங்கள் கொள்ளு
கொடுவேம்பின் காயையொரு திங்கள்கொள்ளு
வள்ளவே பழத்தையொரு மண்டலந்தான் கொள்ளு
மகத்தான வேர்தன்னைத் தீனீர்வாங்கி
உள்ளவரை மண்டலந்தான் கொண்டு தீர்ந்தால்
ஒராண்டில் தேகமது உறுதியாகும்
களளவிஷம் கடிசூலை வாதசன்னி
கடிந்தோடு மிருமல் குஷ்டம் போமே (2)

முடங்க எண்ட வாதமுடன் சீதசன்னி சூலை
முனையான தனுர்வாதம் பச்சைவாதம்
ஒடுங்குமே சூலையஷ்ட விப்புருதியோடு
ஒடுங்காத மேகமுடன் வெள்ளையூரல்
சடம்வலித்தல் நோயோடு கபால குஷ்டம்
சண்டனென்ற வாதமுடன் கைகால் வெள்ளை
படுமென்பு முதலண்ட மடிப்படு நோதல்
பாரில்நோய் மேனிதிரை பறந்து போமே. (3)

End :

> உண்டபின்பு குளிகைசெய்து சாரணைக ளெல்லாம்
> உறுதியாய் என்மகனே யெல்லாம் தீர்த்து
> விண்டபின்பு ஆயிரத்தெட் டண்டம் பார்த்து
> விளையாடி பேரின்பம் தெரிசித்தேத்தி
> கண்டபின்பு பொதிகை யென்னிடத்தில் வந்து
> காயரசம் எனனிடத்தில் வாஙகி
> தொணடருடன் கூடியே சுகத்தில் வாழ்வாய்
> சுகமான காயசிததி சுருக்கமுற்றே.

(15)

முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல் அகத்தியர் சூத்திரம் என்னும் பெயர்த்து. அகத்தியர் காய சித்தி சூத்திரம் என்னும் பெயரே பொருத்த முடை யது. முற்று முளது. 15 சூத்திரங்களே யுள. சில எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. மனித னின் உடல் வலிமை பெற்றியங்க இந்நூலில் 'வேம்பின் கற்பம' என்ற மருந்து கூறப்படுகிறது. நன்முகவுளது.

R. No. 2267.

கொஙகணர் சரக்குவைப்பு நூறு.
KOṄGAṆAR ŚARAKKUVAIPPU (Nūṟu).

Foll. 167–172. Extent, 60 granthas.

Incomplete.

This is a work on medicine by same unknown author. Though from the first folio of the work, it is gathered that there are 200 verses. 18 verses only are to be found.

Beginning :

> ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
> அகனறுநின்ற பேர்களுடை பாதம் போற்றி
> சோதியென்ற சின்மயத்தி னய்யர் பாதம்
> துலங்கியதோர் ரிஷிகளுடை பாதம் போற்றி
> நாதமென்ற சுந்தரமே சொல்லக் கேளு
> நலமான முறையதுவே திறந்து சொல்வேன்
> நீதியென்ற ஆயிட பாதந் தன்னை
> நினைவுகொண்டு சொல்லுகின்றேன் நிலத்துள் ளோர்க்கே.

(16)

> நிலத்துள்ளோர்க்கு எத்தனைதான் சொன்னால் மைந்தா
> நேராது பொய்யென்பார் சடமேயென்பார்
> நிலத்துள்ளோர் மாய்கையிலே யழுந்தி மைந்தா
> நினைவுக்குள் கலந்துநிற்பர் சையோ கத்தில்

நிலத்துள்ளோர் ஆறுதலுங் காண மாட்டார்
நிதியான சமாதியிலே உரைக்க மாட்டார்
நிலத்துள்ளோர் அமுதத்தைப் பானம் பண்ணார்
நிலையார்கள் குருபதத்தை நேராய்க் காணே. (2)

நேரான காயத்தைச் சுத்தி பண்ணார்
நெடியதோர் பஞ்சவகை தீட்சை காணார்
பாரார்கள் வாதத்தை ஊடு பாய்நது
பாலகனே குளிகையிட்டுக் கவுனம் போகார்
சோருர்கள் ஆயுள்வா மத்தில் தானும்
சித்தத்தி லெப்பூசை செய்வர் திங்கவேண்டி
வாரார்கள் அறுவகையார் தன்னை விட்டு
மைந்தனே சொல்லார்கள் மகிழ்ந்து பாரே. (3)

End :

ஆச்சப்பா கடுகினுடை தைலம் விட்டு
ஐயத்தினுடை தோல்தன்னில் காட்டிக் கொண்டு
பாச்சப்பா நெல்குழியில் மண்டலத்தில் தானும்
பாலகனே பெருங்காயம் வாடை வீசும்
நீச்சப்பா நிலையுமில்லை கரையு மில்லை
நிலையான சட்டமுனி நிகண்டில் சொல்வார்.

* * * * * *

முற்றுப் பெறவில்லை.

(கு-பு)—

இந்நூல், கொங்கணர் சரக்குவைப்பு, என்னும் பெயர்த்து. முற்றுப் பெறவில்லை. இருநூறு பாட்டுக்களென்று முதலேட்டின் தலைப்பில் குறித் திருப்பினும் பதினெட்டுப் பாட்டுக்களே இதில் உள்ளன.

R. No. 2268.

அகத்தியர் பல திரட்டு.
AKATTIYAR PALA TIRAṬṬU.

Foll. 173-197. Extent, 300 granthas.

Complete.

This is a rare and important work in 65 verses containing select verses from the various works of the famous sage Agastiya.

Beginning :

ஆதியந்த மில்லாத பொருளைப் போற்றி
அறைகிறேன் புலத்தியனே யப்பா கேளு
வேதையுடன் வைத்தியமும் மறவு நீக்கி
விள்ளாத கருவையெல்லாம் விளக்கமாக

The first folio reads the title of the work of Vaittiya Cintāmaṇi. It deals with topics on medicine. It begins with 142nd 800th verse only and ends with the verse. Still the work is incomplete.

Beginning :

தன்வந்தரி சிந்தாமணி 1,200 பிரமிய வாதத் தெண்ணெய்

பேசும் பிரமிய வாதத்துள் பெரிய எண்ணெய் தனைக்கேளும்
வாச மிகுந்த மஞ்சளுள்ளி வளருங் கடுக்காய் தாண்டி சுக்கு
நேச மிகுந்த சந்தனமும் நிறங்குங் கோஷ்ட மரமஞ்சள்
வீசுங் கண்ணுற் வாலுளுவைமிக்க வேலம் தேவதாரம். (142)
மிக்க மாசில் இரண்டரத்தை விரும்பு சன்னி யறனுயன்
ஒக்க மதுரஞ் செவ்வள்ளி யுதவும் வசம்பு திப்பிலியும்
தக்கதேக்குச் செண்பகப்பூ தருத்தரு கைச்சேறல் இலவங்கம்
சிக்கென் றிருக்குஞ் சிறுமூலம் சிறுக்கம் பாலை கொத்தமல்லி. (143)

(வேறு)

கொந்தவழுங் குழலாரே யிஞ்சிரத்தங்
குலவுமதம் வசுவாகி சாதிக்காயும்
கந்தநறுஞ் சடைமாஞ்சில் கடலினுரை
கனத்தகுப்பை வேப்பிலை கடுகுரோணி
புந்திதரும் விளாவரிசி தாண்டிக்காயும்
புளிச்சற பிசன் கழுஞ்சிகொண்டு புரிந்தெரான் ருக்கி
இந்தவகை சரக்கெல்லாம் நிரையொன்ருக்கி
இயல்பான வேரினவகை யின்னஞ்சொல்வேன். (144)
சொல்லுவே காதொட்டி காண்ட நொச்சி
துடிவாத மடக்கியா தண்ட மஞ்ஞை
கல்மிக்குக் களப்பதனை வேட்பா வட்டை
கலநிலக்கு மிளநன் ஞரிக்கரை கண்டன்மூலி
சொல்லாரும் வகைகரு வேம்புவேரு
மந்துவளி தமாயிடிந்துப் பின்பு துவாகங் கட்டி
யெல்லவருச் சொன்னதிந்த யிலையின் தூளும்
இதமாக சுருட்டி யெடுத்துக் காட்டே. (145)

End :

அளவே யெண்ணெய் ஆன கிராணி யுபத்திரம்போம்
பழகும் வாழைப்பூச் சாற்றில் பரிவாயிட்டால் பித்தத்தில்
விழையுங் கிருணி மிகத்தீரும் எழுநாள்கொள்ளுமே. (879)
கொள்ளுந் தயிலக் கழிச்சலுக்குக்கூறுமூன்று நாள்கொடுமே
விள்ளு மிதற்குப் பத்தியந்தான் மேவூமத்தி வாழைக்காய்
துள்ளு மீனை விரும்புவிராய் துய்ய வுயிரை நீரிழந்தீர்
கள்ளக் கழிச்ச லுபத்திரங்கள் கடுகி மாறுங் கண்டீரே (880)

(கு-பு)—

இந்நூலுக்குத் தன்வந்தரி வைத்திய செந்தூரம் என்று பெயர் கொடுக்கப் பட்டிருப்பினும் முதலேட்டில் வைத்திய சிந்தாமணி என்று குறிக்கப் பட்டிருக்கிறது. இது வைத்திய சம்பந்தமாகவுளது. இதில் 142 ஆம் பாட்டுத் தொடங்கி 880ஆம் பாட்டு வரையில் உள்ளது. ஆகவே முதல் 141 பாட்டுக்கள் வரை காணக்கூடவில்லை. இறுதியிலும் முற்றுப் பெறவில்லை.

R. No. 2271.

பதார்த்தகுண சிந்தாமணி.
PADĀRTHAGUṆA CINTĀMAṆI.

Foll. 80—102. Extent, 282 granthas.

Incomplete.

This is an incomplete manuscript containing 282 verses only. This is same as that described under D. No. 1957.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1957 ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுளது. இதில் 282 பாட்டுக்களே உள. முற்றுப்பெறவில்லை.

R. No. 2272.

அகத்தியர் அனுபோக சூத்திரம்.
AKATTIYAR ANUBHŌKA SŪTRAM.

Foll. 103-149. Extent, 950 granthas.

Complete.

This is same work as that described under R. No. 264 (*b*). The title "Anubhoka Sūttiram" is more appropriate matter than Karmakāṇḍam.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 264 (b) ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. இதில் முற்றுமுளது. அதன் குறிப்பையுங் காண்க. இதன் தலைப்பேட்டில் 'அகத்தியர் கர்மகாண்டம்' என்று குறிக்கப்பட்டிருப்பினும் 'அனுபோக சூத்திரம்' என்ற பெயரே பொருந்த முடைத்தெனத் தோற்றுகிறது. கர்மகாண்டம் என்பது வேறு.

R. No. 2273.

கொங்கணர் கற்பம்.
KOṄGAṆAṞ KAṞPAM.

Foll. 150—164. Extent, 350 granthas.

Complete.

This is same as that described under D. Nos. 1922 and 2414.

Beginning :

முத்திக் கொண்ட வேதாந்த நந்திகீழாய்
மூலாதாரத் திருந்த கணேசன் பாதம்
பத்திக்கொண்ட சித்தாந்த நாதாந் தத்துள்
பரவியே விந்துவுறும் போக நாதர்
சத்திக்கொண்ட தத்துவங்க ளெல்லாம் பாழாய்
சச்சிதா னந்தவெளி யொளிமே லான
சித்திக்கொண்ட காயசித்தி கர்ப்ப சூத்திரம்
செப்புகிறேன் வெளியாகச் செப்புகி றேனே. (1)

செப்புகிறேன் சட்டமுனி வையர் பாதம்
தெண்டனிட்டுக் கயிலாசஞ் சேரக் கேட்டுச்
செப்புகிறேன் வாசிநெடு மவுனமூலச்
சிவயோக மாதியதாய் மாத்தி கற்பம்
செப்புகிறேன் குளிகையொடு வாமப்பூஜை
திறமாகச் சிதம்பரமாம் எண்வட் டத்துள்
செப்புகிறேன் நாற்பத்தி முக்கோணத்துள்
தெளிவாகச் சட்டுவர்க்க வரணவி காணே. (2)
காணப்பா ஆதார மாறுவர்ணம்
கருப்பிலே மவுனமதாய் எழுத்தைக்கேளு
மூணப்பா உகாரமிட்டு அகாரமாகிப்
பூட்டுவாய் ஓங்காரப் புரியைச் சுற்றி
நாணப்பா கண்டத்தில் சுழித்துள் ளேற்ற
நன்றுக வரைந்திடவே மவுன தீட்சை
ஊணப்பா குங்குமத்தில் சமாதிகேளு
உகாரமிட்டுக கிலிநாத் தோங்காரஞ் சுற்றே. (3)

End :

வணங்குதற்குத் தீட்சைபெற்ற பெரியோர் பாதம்
வாசமாய்த் தொண்டுசெய்து வணக்க மாய்ச்சொல்
பிணங்குதலே காலாகுமடா கர்ப்பச் சூத்திரம்
பேசுவாரெந் நூலுக்குச் சரியொவ் வாது
குணங்காம லாதிதொட்டுக் கைம்முறையாய்ச் சொன்னேன்
கொண்டேற சட்டைமுனி கற்பம்பாரு
மணம்பெறவே கர்ப்பமெல்லாம் வகையாய்த் தோய்த்து
மகத்தான திருமூலர் ஞானம் பாரே. (100)
பாரப்பா கும்பமுனி ஞானதீட்சை
பண்பான பூரணசூத் திரத்தை யன்பாய்
பாரப்பா உரோமரிஷி ஞான சொட்சம் பாரு
பகுந்திட்டேன் கடைக்காண்டம் அந்நூறுந்தான்
பாரப்பா வெட்டவெளி யாகக் கொண்டே
வரைமோட்சக் கெதியுண்டாம பற்று முற்றே. (101)

(கு-பு)—

இந்நூல் 'கொங்கணர் கற்பம்' என்னும் பெயர்த்து. சித்த வைத்திய முறைகளைக் கூறுகின்றது. முற்றுமுளது. டிஸ்கிருப்டிவ் காட் லாக்கு 1922, 2414 என்ற இவ்விரண்டு எண்களிலும் வந்துளவாயினும் அதில் முதலும் இறுதியுமிலாது அமைந்துள்ளது. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2274.

மச்சமுனி எட்டு.

MACCAMUNI EṬṬU.

Fol. 165 only. Extent, 32 granthas.
Complete.

This is a treatise on medicine. This deals with the topics in a brief manner.

Beginning :

பூரணமாய் நின்றுபரா சக்தி பாதம்
போற்றிசெய்தேன் என்தாயே உன்பாதம் காப்பு
தாரணமாய் மானிடர்கள் பிழைக்க வேண்டிச்
சதாசிவனை மனுக்கேட்டு மருந்து சொன்னேன்
காரணமாய் நாதாக்கள் பதினெண் பேரும்
சட்டிவைத்த ரத்தினபெரு நூல்க ளெல்லாம்
வாரணமா யென்தாயே நீயுபதேச சித்த
வைத்தியந்தான் எட்டு பாடினேன் பாரே. (1)

பாரடா யென்குருவுடைய கிருபை யாலே
பாடிவைத்த நூல்களிலே யனேக முண்டு
ஆரடா தட்சிணா மூர்த்தி தானும்
அப்பனே பிணிகளுக்கு எட்டில் சொன்னார்
சேரடா கொங்கணவர் எட்டுக் குள்ளே
திறமான பறவை வக்ரு வைத்தியஞ் சொன்னார்
வாரடா நந்தீசர் எட்டுக் குள்ளே
வயனமதாய் குளிகையது பாடினார் கேளே. (2)

கேளடா மானிடரே யின்னங் கேளு
கிருபை பெற்ற திருமூலர் எட்டும்பாரு
மாளடா கருவூரார் எட்டும் பாரு
மைந்தனே சட்டமுனி எட்டும்பாரு
நாளடா போகருட எட்டும் பாரு
நலமாகத் தோணுமடா வைத்தி யந்தான்
வாளடா பெருநூலில் அலைய வேண்டாம்
வடிவாக யிதுவு மொருட்டுத் தானே. (3)

End :

கேளப்பா பதினெண்பேர் எட்டுத் தானும்
கிருபையா யுன்கிட்டே யிருந்த தானால்
நாளப்பா நோயறிந்து செய்தா யானால்
நலமா யுனைப்போலே வைத்திய னில்லை
மாளப்பா பெருநூலில் மயங்க வேண்டாம்
விரைவாக இந்நூலைத் தேடிப் பாரு
வாளப்பா சட்டைமுனி பாடல் தானும்
மைந்தனே எட்டுக்குள் அடக்க முற்றே. (8)

(கு-பு)—

இந்நூல் மச்சமுனி எட்டு எனும் பெயர்த்தாய் வைத்தியத்தைப் பற்றிக் கூறிச் செல்கிறது. முற்றுமுளது. சுருக்கமானது.

R. No. 2275.

திருமூலர் எட்டு.

TIRUMŪLAR EṬṬU.

Fol. 166 only. Extent, 32 granthas.

Complete.

This is a short treatise on medicine. It describes a medicinal oil.

Beginning :

காந்தி யெண்ணெய்.

தாதாவே நந்திதய வாயுரைத்த மொழி
மாதாவே யென்றாயே மனோன்மணியே
ஆதார மானஅறு முகத்தோ ா றன்பாதம்
வேதாந்த பூரணமும் மெய்ப்பொருளுங காப்பாமே. (1)

ஆமென்ற நாதாக்கள் மனிதருக்கு அறிய வைத்தார்
வைத்தியந்தான் அநேகங் குருவை
தாமென்ற குருவைநூல் கிட்டா தென்று
சாதகமாய்ப் பிரிவு துண்டாய்ப் பாட்டினார்கேள்
கோனென்று விப்படியுந் தெரியா தென்றுங்
குறுக்கி வைத்தால் தினபின்பு யெட்டுந்தானும்
வானென்ற ஒருவனெட்டில் சிக்காதப்பா
மைந்தனே பதினெண்பேர் எட்டும் பாரே. (2)

End :

சாறான மிளகுசுக்கு வெள்ளைப் பூண்டு
சாதகமாய் வகைக்கியது பலமூண தாகும்
கூறான பரங்கிப் பட்டை காசிடைதான் பத்து
கூறுகப் பொடிபண்ணி எண்ணெய் படியிரண்டு
வீறான மெழுகுபத மொருவிரகில் தானும்
விபரமாய் நாளொன்று கால்படிதான் கொள்ள
வேறாக மூன்றுநாள் கொண்டா யானால்
வெகுசுருக்குத் தயிலத்தின் சுருக்குத் தானே. (7)

தானான விதுகளுக்குச் சுத்தியாக
சாதகமாய்ச் சிவாயநம அங்கிரிகிரீம் உரீம்சீ யென்று
கோனான விநாயகன் பூஜை பண்ணிக்
குருவென்று எண்ணெய் தன்னை வைத்துக்கொள்ளு
வீணான வீணருக்கு நூல்கொடாதே
விருதாவா போகுமென்று என்குருதான் சொன்னார்
தானான மேகத்தில் பிறந்த ரோகம்
சதாகுரு எண்ணெயிலே தீருமுற்றே. (8)

(கு-பு)—

இந்நூல் திருமூலர் எட்டு என்னும் பெயர்த்தாய் வைத்திய சம்பந்தமான எண்ணெயொன்றைக் கூறிச் செல்கிறது. முற்றுமுளது. சுருக்கமானது.

R. No. 2276.

அகத்தியர் சாமளாதேவி ஊழிக்காற்றுச் சூத்திரம் பாடல் பன்னிரண்டு.

AKATTIYAR ŚĀMAḶĀDĒVI ŪḺIKKĀṞṞUC CŪTTIRAM PĀḌAL PANNIRAṆḌU.

Foll. 167–168. Extent, 50 granthas.

Complete.

This is same as the work described under R. No. 168 (f).

Beginning :

அண்டரெண்டமாகி நின்ற அருளே காப்பு
ஆனந்த மாகிநின்ற அறிவே காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்று மொன்றாய் நிறைந்து நின்ற
மகத்தான விரவிமதியின் சுடரே காப்பு
சண்டமெனும் மாருதம்போல் ஊழிதன்னை
சாற்றக்கேள் சாமிகள்தன் பாதங் காப்பே. (1)

கேளப்பா ஊழியென்ற காற்றே தென்னில்
கெடியான சாமளா தேவியாலே
காளப்பா மைப்போலே காத்து நிற்கும்
கண்ணுக்குத் தோற்றாது கடினமெத்த
வாளப்பா காற்றினுட விபர மெல்லாம்
வரும்வகையைச் சொல்கிறேன் வகையைக் கேளே. (2)

End :

செப்புவார் முனியென்றும் காளியென்றும்
சிவந்தகன்னி மாரியென்றும் சிவஞே என்றும்
அப்புவார் சித்தத்தால் வந்த நோய்தான்
அப்பனே கருங்கழிச்சல் என்றுஞ் சொல்வார்
தப்புவார் துர்க்கை யென்றுங் கூறுவார்கள்
தாயான சாமளையை யறிய மாட்டார்
ஒப்புவார் பன்னிரண்டைக் கண்டபோது
ஒளிவான உள்ளியது ஒடுக்க முற்றே. (12)

(கு.பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 168-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்று முளது.

R. No. 2277.

அகத்தியர் துடிநூல் சாத்திரம்.

AKATTIYAR TUḌINŪL ŚĀTTIRAM.

Foll. 169–170. Extent, 45 granthas.

Complete.

This is a work to be classified under the series of 'Śaranūl' written by Agastiya. This foretells the fortune and misfortune due to the throbbling of the various limbs of the body. This is a rare and important work.

Beginning :

ஆதியென்ற கைலாச பொதிகை வாழும்
அகத்தியர்தா மருள்செய்த துடிநூல்தானும்
சேதியென்ற நன்மையொடு திண்மை சொல்லும்
தேகத்தில் கண்டுவரும் துடிப்பைப்பாரு
நீதியென்ற சரநூலு மிதற்குச் சொல்லும்
நேராக மனமுரைத்துப் பார்த்துக் காணும்
ஓதியென்ற தமிழ்க்கரசன் சொல்தப்பாது
ஓங்கார கிரிமுகவன் காப்புத்தானே. (1)

உச்சியொடு திருநெற்றித் துடிக்குமாகில்
உகந்துவரு நன்மை மெத்தப் பாரு பாரும்
மச்சியதோர் வலப்புருவந் துடிக்குமாகில்
மருவியதோர் பெருமையுண்டாம் வாழ்வு முண்டாம்
கச்சியதோர் இடப்புருவந் துடிக்குமாகில்
கலந்துவருஞ் செல்வமது காணும்காணும்
அச்சியதோர் வலக்கண் ணிமைமேல் துடித்தால்
ஆகாத வழக்குண்டா மறிந்து கொள்ளே. (2)

End :

சித்தியென்ற இடக்கணுங்கால் துடிக்கு மாகில்
செகமறிய சுத்தமெலாம் நாசமாகும்
அத்தியென்ற வலப்புறங்கால் துடிக்கு மாகில்
ஆட்சித்தான் வேந்தரால் வெற்றி யாகும்
சக்தியென்ற யிடங்குறங்கு முழங்கால் துடிக்கு மாகில்
சாதகமாய் நன்மை யுண்டாம் சார்ந்துபாரு
மத்தியென்ற விடப்புறங்கால் துடிக்கு மாகில்
ஆச்சரிய மிடருண்டா மறிந்து பாரே. (11)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் அகத்தியரால் இயற்றப்பெற்றதொன்று, தேகத்திலுண்டாகும் அங்கத் துடிப்புக்களால் ஏற்படுகின்ற நன்மை தீமைகளைப்பற்றி விவரித்துக் கூறுகின்றது. நன்றாகவுளது. சுருக்கமானதொரு நூல். இது சர நூல் வகையினைச் சார்ந்ததொன்றும். முற்றுப்பெற்றுளது.

R. No. 2278.

அகத்தியர் வைத்தியச் சூத்திரம் முப்பத்தாறு.
AKATTIYAR VAIDDIYA SŪTTIRAM MUPPATTĀṞU.

Foll. 171—178. Extent 150, granthas.
Complete.

This is a work on medicine and astrology. This is same as the work described under D. No. 1904, R. Nos. 166 and 563.

(கு-பு)—

இந்நூல் டின்கிருப்டிவ் காட்லாக்கு 1904-ஆம் எண்ணிலும், மூவருடக் காட்லாக்கு 166, 563-ஆம் எண்களிலும் வருணிக்கப்பட்டிருக்கிறது. இரசவாதத்தையும் வைத்தியத்தையும் பற்றி விவரிக்கிறது. முற்றுமுள்ளது.

R. No. 2279.

அகத்தியர் நீலகண்ட சூத்திரம் ஐம்பது.
AKATTIYAR NĪLAKAṆṬA SŪTTIRAM AIMPATU.

Foll. 179—186. Extent 250 granthas.

Complete.

This is another work on medicine and astrology by the sage Agasthiā. This is same as the work described under R. No. 267.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 267-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிற்சில பாடல்களில் பாடபேதம் காணப்படுகின்றது. முற்றுமுளது. இது இரசவாதத்தையும் வைத்தியத்தையும் பற்றிக்கூறுகிறது.

R. No. 2280.

அகத்தியர் வைத்தியம் முன் ஐம்பது.
AKATTIYAR VAIDDIYAM MUN AIMPATU.

Foll. 187—194. Extent, 200 granthas.

Complete.

This is a work on medicine and Philosophy by the sage Agastiya. The name "Mun Aimpatu" shows the likelihood of another name Pin Aimpatu.

Beginning :

ஆனைமுகத்தை ஐந்துகரன் பாதம் போற்றி.
ஆதியிலே வயித்தியநூல் இரண்டு லட்சம்
மானிலத்தில் வாதசித்தி லட்சங்காப்பு
வகுத்துரைத்தேன் வைத்தியநூல் மார்க்க மெல்லாம்
தானதைத்தா னேதெளிந்து படிக்கத்
தமிழ்பதிறு யிரமாகச் சாத்தும் நூலை
நானுரைத்த ஞயிரத்தன் னூறிற் பேசி
நற்பொருளை யறுநூற்றில் நவின்றிட்டேனே. (1)

நவின்றிட்டேன் பின்னறுநூல் தெளிவோ மெத்த
ஞாயமெல்லாம் பாடிவைத்தேன் கர்மகாண்டம்
குவின்றிட்டே னிருநூற்றைஞ் சொருனூற் றன்பான்
குருமுறைக்கு முப்பூ வைம்பதுவுஞ் சொன்னேன்

துவன்றிட்டேன் வைத்தியநூ லைம்பதுக்குள்
சுளுவாகப் பாடிவைத்தேன் சோலியில்லை
தவன்றிட்டேன் இந்நூல்தான் ஐம்பதுக்குள்
சாற்றுகின்றேன் புலத்தியனே சார்ந்து கேளே. (2)

கேளப்பா விந்நூல்தான் ஐம்பதுக்குள்
கிருபையுள்ள மருந்தெல்லாங் கெட்டியாகும்
தேளப்பா கொட்டுதல் போல் மருந்தின் வேகம்
செப்பினேன் கண்டறிந்து செய்துபாரே. (3)

End :

விட்டுப்போம் பவுத்திரமும் யோனிசூலை
மேகமுதல் சிலவிஷத்தால் வெடித்தபுண்ணு
கெட்டுப்போம் வெடிசூலை கண்டமாலை
கிருமிமுதல் வாதமுதல் கெட்டுண்டேபோம்
கட்டுத்தான சொல்லுகிறேன் முக்கூட் டெண்ணெய்
கண்டிப்பாய் நாலைந்து தரமுருகு
நட்டுப்போம் இந்தநூல் ஐம்பதுந்தான்
நவின்றிட்டேன் வைத்தியமும் ஞானமுற்றே. (1)

(முற்றும்.)

(கு-பு)—

இந்நூல் வைத்தியம், ஞானம் என்பவைகளைப் பற்றிக் கூறிச் செல்கிறது. ஐம்பது பாடல்களால் முற்றுப்பெற்றுளது. முன் ஐம்பது என்ற நூல் போலவே, பின் ஐம்பது என்ற நூலும் இருக்கிறது. நன்குகவுளது.

R. No. 2281.

அகத்தியர் வைத்திய வல்லாதி அறுநூறு.
AKATTIYAR VAIDDIYA VALLĀDI AṞUNŪṞU.

Foll. 195—298. Extent, 2,500 granthas.

Complete.

This is a work on medicine describing the preparation of Lōhiyam, Cūrṇam, Sendūram, etc. This contains 621 verses.

Beginning :

ஆதியா மகண்டபரி பூரணமாய் நின்ற
அகண்டபரா பரத்திருந்த ஐங்கரனே காப்பு
சோதியாம் அறுமுகவன் பாதங் காப்பு
துரியவெளி தன்னில் நின்ற சுந்தரியே காப்பு
வாதியா மென்குருவின் பாதங் காப்பு
மகத்தான பெரியோர்கள் சரணங் காப்பு
பேதியாம் வைத்தியந்தான் அறு நூறாக
பேசுகிறேன் வாணிபதம் பேராங் காப்பே. (1)

காப்பென்ற வல்லாதி சாரத் திலாதி
கருவான வழலையொடு சவுக்காரச் சுண்ணம்
நாப்பென்ற பற்பமொடு தயில மெண்ணெய்
நாடியொடு வியாதிவரும் நாட்டந் தானும்
தாப்பென்ற சூட்சிகர் மருந்து மல்லால்
சாற்றுகிறேன் வடகமொடு குளிகை தானும்
காப்பென்ற யாகஞ்செய் சாலை யோடு
குறிப்பான இருதங்கள் கூறு வேனே. (2)

கூறுவேன் லேகியங்கள் சூர ணங்கள்
குறிப்பான செந்தூரங் கைப்பா கங்கள்
தேறுவேன் நூலகத்தோர் பிணிகள் தீர
செப்புகிறேன் அறிந்துசெயத் தீரும் நோய்கேள்
சீறுவேன் பொருள்மேலே யிச்சைப் பட்டு
தீராத வியாதிகளைத் தீர்ப்பே னென்று
தாறுவோர் கைப்பொருளுக் கிச்சி யாதே
துன்பத்துக் காளாகிச் சுழன்றி டாதே. (3)

End :

உற்றுற்றுப் பார்க்கையிலே ஞான மார்க்கத்
தொளிதானும் கர்மமெல்லாம் ஓடிப் போகும்
சற்றுமனந் தள்ளாதே பலநூல் பாரு
சற்குருவின் பதம்போற்றி நிலையில் நில்லு
மற்றுமிந்தக் கருவெளியில் சொன்ன யானல்
மாமுனிவர் சித்தரிட்ட சாபமெய்தும்
குற்றமற்று நிலையில் நின்றால் சாபமேது
கூடாதே பலகூட்டம் கூறினேனே. (620)

கூறினசொல் மறவாதே தாயைப் போற்றுக்
குணமான வைத்தியத்தைக் கூர்ந்து பாரு
வேறுமொரு பொருளில்லை அடிமுடி தானப்பா
விளங்கிநின்ற காவியத்தில் விளங்கும் பாரு
மாறிநின்று திருடாதே மதம்பே சாதே
மற்றநூல் பொய்யென்று வசனிக் காதே
ஆறுமுகன் பதம்போற்றிக் கையில் நெல்லி
அருங்கனிபோல் சொன்னதிந்த அறுநூறு முற்றே. (621)

(கு-பு)—

இந்நூல் ‘ வைத்திய வல்லாதி ’ என்னும் பெயருடைத்தாய் லேகியம், சூரணம், செந்தூரம், தயிலம், மெழுகு முதலானவைகளைப் பற்றிக்கூறு கிறது. 621 பாட்டுகள் உள்ளன. அகத்தியரியற்றியதாகவுளது. மருந்து செய்யும் முறைகளைக்கூறி, அம் மருந்துண்ணும் முறைகளையும், தீரும் நோய் களையும் கூறிச் செல்கிறது. சிறந்ததோர் வைத்திய நூல்.

R. No. 2282.

வைத்திய சிந்தாமணி வெண்பா.

VAIDDIYA CINTĀMAṆI VEṆBĀ.

Palm leaf. 14¾ × 1¼ inches. Foll. 1—330. Lines 7, 8 on a page. Tamil, very much injured. Old. Extent, 3,800 granthas.

Incomplete.

This is same as that described under D. No. 2421 and R. No. 948 The Present work is incomplete, containing from 11th to 3055th verse. Still, the work contains many verses which are not found in the manuscripts under D. No. 2421 and R. No. 948. A Commentary. of some of the verses is included in the work.

End :

பெருவா ளொாணைகாய் முளனே
பெருமுள் ளிப்பல மொன்று
தருவா ளீர்வெங் காயம்
தானே போடு படியரைதான்
அருவா மெண்ணெய்க் குடிகரைகயிலே
அப்பா மெத்தக் கொடுக்காதே
மருவா மிரண்டு கரண்டிகொள
வழங்கப் பத்தியம் நீகேளே. (3054)

கேளாய் புளியொடு பாகா
கெடியாம் கறியின் வகையாக
வாளாய் பாசிப் பருப்பாகும்
வளர்ந்து மைப்பப் பருப்பாகும்
நாளா முள்ள காசியும்
நலத்தி னங்க ளிரண்டினுக்கும
வேளா முனிவர் சொன்னமுறை
வேத முரைத்த முறைப்பாடே. (3055)

முற்றுப் பெறவில்லை.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2421-ஆம் எண்ணிலும் மூவருடக் காட்லாக்கு 948-ஆம் எண்ணின் கீழும் வருணிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் முற்றுப் பெறுமல் உள. அவைகளிலில்லாத பெரும் பகுதிகள் இதில் உள. இது 11-ஆம் பாட்டு முதல் 3055-ஆம் பாட்டுவரை உள்ளது. இடையிடையே சில பாடல்கட்குப் பொழிப்புரையும் உளது. பிற அதன் குறிப்பைக் காண்க. வெண்பா என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பினும் அம்முறையில் பாடப்படவில்லை.

R. Nos. 2283—2286 (one codex).

Palm leaf. 12¼ × 1⅝ inches. Foll. 1—80. Lines, 6, 8 on a page. Tamil, injured. Old. Extent, 2,085 granths.

Purchased, in 1949—50, from Sri A. M. Gopala Iyer, 28, Boag Road) Mambalam, Madras.

R. No. 2283.

திரு மூலர் கவுன நூல்.
TIRU MŪLAR KAVUNA NŪL.

Foll. 1—13. Extent, 325 granthas.

Complete.

This is a rare and important work on medicine explained by Śaṭṭai muni who acquired that knowledge from Tirumūlar. Similar to the Pennicilin, a tablet is prescribed as the cure of all kinds of diseases.

Beginning :

ஆதியா நின்றமணி யருளே போற்றி
அன்பார்க ளன்பரர்கள் பாதம் போற்றி
சோதியாம் மனோன்மணியாள் பாதம் போற்றி
சுரதிநூல் வகுத்தசரஸ்வதி பாதம் போற்றி
நீதியாம் பரமகுரு முனிவன் பாதம்
நேர்த்தியாய் யான்தொழுது கவுன நூலை
ஊதியான் செப்புகிறேன் வல்லோர்க் கெல்லாம்
உண்மையிது வென்னிலே யுணர்ந்து பாரும். (1)
பாரப்பா யிந்தநூல் போக்கைக் கேளும்
பரமனுடை மருத்துவத்தின் பரிசைச் சொல்வேன்
சீரப்பா சவணருட நூல்க ளெல்லாம்
தேயுமடா இந்தநூலில் வெகுபோக்குண்டு
நாரப்பா ஐங்கோடி நூலருக்கு
ஒதுக்கினேன் இந்த நூலால் வெல்லுதற்குப்
பேரப்பா திருமூல கவுன நூலாம்
பேசுகிறேன சட்டைமுனி பெருமை யாக. (2)

End :

ஒதுங்கி நின்ற நோய்களுக்கு இதுதான் வைரி
உண்மையிது சொல்லி விட்டேன் ஆடும் வித்தை
தியங்கி நின்ற நோய்கட்கு இதுதான் வைரி
செப்பினேன் மக்களே திறமையாக
கயங்கிநின்ற நோய்களுக்கு இதுதான் வைரி
கலங்காதே வைத்தியரே சொன்னே னப்பா
பதுங்கி நின்ற நோய்கட்கு இதுதான் வைரி
பார்முனிவன் சட்டைமுனி பகர்ந்த நூலே. (19)

(முற்றும்.)

(கு-பு)—

இந்நூல் திருமூலர் கவுன நூல் என்னும் பெயர்த்து. இதில் குட்டம், ஈளை, இருமல், ஊரல், சுவாசம், மண்டைக்குத்து வலி, காமாலை, கருங்கிரந்தி, கொலை வலிகள், சன்னி, பவுத்திரங்கள் முதலான நோய்களை யெல்லாம் குணப்படுத்தும் ஓர் மெழுகு கூறப்படுகிறது. ஒரே மருந்தில் பல நோய்கள்

தீரும் என்று கூறப்படுவதால் வைத்திய வல்லுநருக்கு இது மிகவும் பயன் படும். ஆங்கில மருத்துவத்தில் "பென்சிலின்" இருப்பதுபோல தமிழ் வைத்தியத்திற்கு இது உதவும். 19 பாட்டுக்களால் ஆனது. திருமூலர் கூறியதைச் சட்டைமுனி கூறுவதாக அமைந்துளது. பிழைகளதிகம். இறுதியில் திருமூலர் இராஜ குலாந்தகன் மாதநீரை யொன்றும், பூனித மார்க்கண்ட நெயயொன்றும் கூறப்பட்டுள. இவைகளை ஆராய்ந்து பயன் படுத்தின் நன்று.

R. No. 2284.

பிரம்மமுனி சூத்திர வெண்பா ஐம்பது.

BRHMAMUNI SŪTTIRA VEṆPĀ AIMPATU.

Foll. 14—21. Extent, 130 granthas.

Incomplete.

This is an incomplete work containing 47 stanzas only on medicine. Author is not known.

Beginning :

ஆதியோ டந்தமில்லா தானந்த வெள்ளமெனுஞ்
சோதியாம் பூரணத்தைச் சொல்லக்கேள்—ஆதிகுண
மண்டலத்தில் வாசி வளரும் எண்ணடிக்
குண்டலத்தில் தன்பரவும்கொல்ல. (1)

கோலமுடன் போகக் குறிப்பாறி சந்திரனில்
பால நிறமாகும் பருவங்கேள்—சீலமுடன்
அன்னமரை தண்ணீர்கா ப்பட்டனே மண்டலநாள்
திண்ணமிடை சிறப்பரஞ் சீர். (2)

சீரா யுறுமாதஞ் சென்றுண்ணத் தானதுவும்
வாராமல் வாசி வணங்குமே—தாரான
வாத மொடுங்க மனமொடுங்கப் போதமிகும்
வாதஞ் சவுக்கார வைப்பு. (3)

வைப்பாய்நீ பங்குனி சித்திரை மாதமதில்
உப்பாய் வளர்ந்தவு வரப்பூவாம்—தப்பாமல்
பூவெடுப்பாய் நாலுபடி சுத்தநீ ரெட்டில்
மாவெடுப்பாய்ச் சுத்தியிரு வாம். (4)

இதுபூவி ரண்டுக்கும் இருவாய் முறிகல
மதிலே தெளிந்து கட்டுமப்பனே—பதியான
சுண்ண மொருபடியில் சுத்தசலம் நாலுபடி
திண்ணமுடன் நீத்தித் தெளி(வதல்ல). (5)

தெளிவான இரண்டுஞ்சேர் இருத்தொரன் றுக்கி
பளியானப் பாரையுப்பு பாவுநீ—யளியா
திருந்த சலத்தில் இடுபடி யொன்றே
திருந்த வேகாய்ச் சிடுவா. (6)

End :

பொருள்காண வேநந்தி பூட்டினார் வாசித்து
அருள் காணும் வாசி(த்)சித்து மப்பனே—மருவச்
சிவஞான திசைவிதி செப்பினேன் ஐந்நூறு
பவக்குரையே நீக்கியே பார். (46)

(முற்றுப் பெறவில்லை.)

(கு-பு)—

இந்நூல் "பிரம்மமுனி சூத்திர வெண்பா" என்னும் பெயர்த்து. இதில் 46 வெண்பாக்களுள. முற்றுப் பெறவில்லை. வைத்திய நூல் வகையினைச் சார்ந்தது. வெண்பா விலக்கணப்படி யில்லை. சில எழுத்துப்பிழைகளுள.

R. No. 2285.

தட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம்.

DAKṢIṆĀMŪRTTI PŪRAṆA SŪTTIRAM.

Foll. 22—65. Extent, 1,100 granthas.

Complete.

This is a work on medicine and astrology by some unknown author.

Beginning :

கார்செறி மெய்யன் வெண்மை
கடவுளுங் காணாப் பாதம்
பேர்பெரு முண்மை தன்னைப்
பூரண நூலில் ஒத்தாய்
தார்செறி கொண்டை சூடி
தாயாய் சரச்சுவதியே கந்த
ஞர்சீத வானைப் பிள்ளை
யார்பாதம் காப்புத் தாமே. (1)

ஒன்றான பூரணமு மாறு தாரம்
உரைத்ததொரு மேலாறு தொண்ணூற்றுறு
பண்டான தீட்சைவிதி நோன்றுரெட்டி
பத்துடனே முப்பத்தி ரண்டுதீட்சை
உண்டான சமாதிகற்பம் வாசிநேர்மை
உறப்பான சிவயோகம் பிராணயநதான்
நன்றான வாதத்தின் தீட்சையோடு
நலமான சவுக்காரம் திறவுகோலே. (2)

திறவுகோல் முன்னுரைத்த நூல்களெல்லாம்
செப்பாகம் கைப்பாகம் தீட்சைபாகம்
அறைகிறேன் சரிதையொடு கிரிகைமார்க்கம்
அப்பனே முனிசித்தர் நூல்களெல்லாம்

மறைவுகளாய்ச் சொன்னதெல்லாம் வெளியாய்ப் பாடி
மாட்டினேன் பூரணசூத் திரத்தில் காணும்
மயிரளவும் தப்பில்லை கருமறையில்லை
இருநூற்றொரு பத்தாறின் னூல்காணே. (3)

காணப்பா இந்நூல்போல் ஒருநூலுமில்லை
காசினியில் இந்நூலைக் கண்ணில காட்டார்
பூணப்பா யன்பருக்குள் பூநீர் வித்தை
பூட்டினேன் வைத்தியத்தில் புகழோ மெத்த
நாமப்பா இருநூற்று அம்பதுக்குள்
நலமான சூத்திரத்தை நாட்டினேன் பாரு
வேணப்பா முந்நூற்றில் கர்மதர்மம்
பேசினேன் தீட்சைவிதி இருநூற்றுக்குள்ளே. (4)

End :

ஆமிந்த இருநூற்றுப் பதினாறுக்குள்
அடைத்துவைத்த பொருளையெலாம் வெளியாய்ச் சொன்
[னேனே
நாமிந்த உலகத்தில் இந்நூல் இட்டில்
உலகத்தில் சித்ததிக முண்டாய்ப் போச்சு
நாமிந்த சூத்திரத் தைச் செனியார்க் கீந்நால்
தலைதெறித்துப் போகுமடா சத்தியம் சொன்னோம்
நாமிந்த சாத்திரத்தை யோகிக்கீவாய்
நலமான பூரணசூத் திரந்தான் முற்றே. (206)

(முற்றும்.)

(கு-பு)—

இந்நூல் " தட்சிணா மூர்த்தி பூரண சூத்திரம் " என்னும் பெயர்த்தாய் வைத்தியத்தையும் இரசவாதத்தையும் பற்றிக் கூறுகிறது. முற்றுமுளது. எழுத்துப் பிழைகள் உள.

R. No. 2286.

போகர் ஏழாயிரம் (சொச்சம்).
BŌGAR ELĀYIRAM (Coccam).

Foll. 66—87. Extent, 530 granthas.

Incomplete.

This work contains verses from a particular portion " Kaḷangam Pūnīṟu Cunnam " of the collection of 7,000 verses of Bōga Nāyanār.

Beginning :

போகர் ஏழாயிரத்தில் சொச்சம். களகம்.

மாத்தெழு காணுகாணு வண்மையாங் காவியுப்பு
கிறங்கு பாரு நறுக்கியே முன்களங்கில்
நாகங்கூட்டி நலமான பச்சைரசம் பாகஞ்சேர்த்துத்
தருக்கியே நாலொண்ணு தங்கங்கூட்டி

சார்ந்த தெல்லாம் பொற்றலையின்
சாற்று லாட்டே. (1)
ஆட்டியே அயச்சிமிளில் அடைத்து வைத்து
அசகாமல் மேல்மூடி மண்ணைச் செய்தும்
மாட்டியே மணல்மறைவில் புடத்தைப்போடு
மகத்தான பன்னிரண்டு புடந்தான அப்பா
காட்டியே கற்பங் களங்கமாகும்
கனமான மதிதனிலே நூற்றுக்கொண்டு
பாட்டியே பத்தரையே வயதுகாணும்
பணவிடைதான் பாலிலுண்ணக் கதிர்போலாமே. (2)

கதிருக் களங்கமொன்று சொல்லக்கேளு
கரும்புசெம்பூ விரண்டுமொக்கக் கிண்ணி வாத்து
நதிராக நாலுபல மதிறுத்துக் கொண்டு
நலமாகப் பருஞ்சேச்சா ருயம்பலந் தானிரண்டு
வெதிராக வெள்ளை யென்ற பாஷாணந்தான்
மீக்கான குதிரைபல மிருதாரு சிங்கி
கதிராக அரிதாரம் சிலையும் வீரம்
தயவகாத கெவுரியொடு அந்தசணக் கல்தானே.

கொல்லுநீர் ஆசையினால் பெண்ணுவள் கூடி
கூறுத வாதத்தைப் பாதத் தானால்
மல்லுகிறீர் மயககத்தி லழிந்து போவான்
மாண்ட பீனீறு நரகமெய்தும் பிறவிதோறும்
செல்லுகீர் குசவனுட கிரிகை போல
செகச்சாலத் தேகமூன்று சிறுத்துப் போவான்
வெல்லுகீர் பூரணத்தில் மேவி நின்றால்
வேண்டியதோர் சித்திபெலா மாடலாமே. (126)

(களங்கம் பூனீறு சுன்னம் முற்றும்.)

(கு-பு)—

இந்நூல் போக நாயனார் இயற்றிய ஏழாயிரம் பாட்டிலுள்ள "களங்கம் பூநீறு சுன்னம்" என்ற பகுதியினை மட்டும் எடுத்துக் கூறுகிறது. இப்பகுதி முற்றுமுளது. ஏழாயிரம் என்ற பெரும்பகுதி காணக்கூடவில்லை.

R. Nos. 2287—2292 (one codex).

Palm leaf. 11½ × 1¼ inches. Foll. 1—114. Lines, 9, 10 on a page. Tamil, much injured. Old. Extent, 2,945 granthas.

Purchased, in 1949-50, from Sri A. M. Gopala Iyer, No. 28, Boag Road, Mambalam, Madras.

R. No. 2287.

கருவூரார் சூத்திரம்.
KARUVŪRĀR SŪITTIRAM.

Foll. 1—19. Extent 575 granthas.

Complete.

This is a work on Rasavāda. This is same as that described under R. Nos. 192 and 911.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 192, 911-ஆம் எண்களின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமுளது. அதன் குறிப்பையுங் காண்க. இது இரசவாத சம்பந்த முடையதொரு நூலாகும்.

R. No. 2288.

கருவூரார் பலதிரட்டு முந்நூறு.
KARUVŪRĀR PALATIRAṬṬU MUNNŪṚU.

Foll. 20—70. Extent, 1,200 granthas.

Complete.

This is a collection of verses on miscellaneous topics like medicine and astrology. Author is not known.

Beginning :

பாடுகிறேன் பலதிரட்டு முடிவை யெல்லாம்
பதறாமல் சிதறாமல் பண்பாய் மக்காள்
பாடுகிறேன் சாத்திரமுஞ் சூத்திரமுந் தேர்ந்து
பாகை யெல்லாம் சுருங்கி யொரு மாலையாக
பாடுகிறேன் கருக்கிடையுங் குறுக்கிடையும் பார்த்து
பராபரத்தின் நிலைமுதலாம் பத்தியாக
பாடுகிறேன் வேதாந்த முடிவை யெல்லாம்
பராபரை மறைகணேசன் பதத்தைப் பார்த்தே. (1)

பார்த்திடவே நந்தீசர் மூல மூர்த்தி
பண்பான அகத்தீசர் சட்டை நாதர்
கோர்த்திடவே பதஞ்சலி வியாக்கிர பாதர்
கோரக்கர் கமலமுனி கூன்றக் கண்ணர்
கார்த்திடவே யிடைக்காடர் சண்டி கேசர்
கைலாசப் போகரொடு சிவவாக்கியர் சித்தர்
போற்றிடவே காலாங்கி புண்ணாக் கீசர்
புகழ்மச்சர் கொங்கணர் காப்புத் தானே. (2)

தானென்ற சரிதையிலே நின்று நேரில்
சார்ந்து நின்ற கிரிகையிலே சாரப் பண்ணும்
நேனென்ற கிரிகைமுத்தி உரைந்துட் காணில்
தேவியுட மோகத்தில் சேரப் பண்ணும்

மானென்ற யோகமுத்தி யுறைந்த தானால்
மவுனமாம் ஞானமென்ற வரையில் வைக்கும்
ஊனென்ற சடத்துக்கு அடுத்த வாறு
உத்தமனே யிவைதாண்டி உரைத்தி டாயே. (3)

End :

குறையாத சத்திசிவங் கார சாரங்
கொத்தோடே நீராச்சு சீனஞ் சேரில்
நிறையாகச் சரக்கெல்லாம் கட்டிப் போகும்
நேரான பூநீறு கூடித் தானால்
நுரையாக முறைகோடி தொந்தங் கோடி
நரிசாகக் கூட்டி வைக்கும் சொல்லப் போகா
மறையாகம் மறைத்திட்டார் பெரியோ ரெல்லாம்
மறைந்ததெல்லாம் காண்பதற்கு வழங்கி னேனே. (300)

வழங்கினதோர் சாத்திரமும் சூத்திரம் பார்த்து
மைந்தனே பலகலைநூல் சூத்திரமுந் திரட்டு
விளங்கினதோர் கருவெல்லா மென்நூலில் சொன்னேன்
வேறொன்றும் மொழியவில்லை விரும்பிப் பாரு
அளங்கினதோர் மனத்தோடே பலநூல் தேடி
அலையாமல் பூசித்து அமிர்தம் கொண்டு
தளங்கினதோர் மனத்துடனே கற்பங் கொண்டு
சாதகமாய் ஏறிடுவர் திரட்டு முற்றே. (301)

(முற்றும்.)

(கு-பு)—

இந்நூல் கருவூரார் பலதிரட்டு என்னும் பெயர்த்தாய் இரசவாதம், வைத்தியம் முதலியவைகளைப் பற்றிக் கூறிச் செல்கிறது. முற்றுமுளது. சிதலமாயது.

R. No. 2289.

கொங்கணர் கற்பம் நூறு.
KONKAṆAR KAṞPAM NŪṞU.

Foll. 71—85. Extent 360 granthas.

Complete.

This is same as that described under R. No. 2273.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2273-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங்காண்க. முற்றுமுளது.

R. No. 2290.

இராமதேவர் விநோதப் பட்சிணி.
IRĀMADEVAR VINŌTHAP PAṬCIṆI.

Foll. 86—101. Extent, 480 granthas.

Complete.

This is same as the work described under **R. Nos. 197** and **174.**

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 174, 197-ஆம் எண்களின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமுளது. அதன் குறிப்பையுங் காண்க. இதற்கு வேதாந்த பட்சிணி என்றும் விநோதப் பட்சிணி என்றும் இரு பெயர்கள் உள போலும்.

R. No. 2291.

இராமதேவர் அட்டாங்கயோகப் பட்சிணி—ஐம்பது
IRĀMADĒVAR AṬṬĀṄGA YŌGAP PAṬCIṆI—AIMPATU.

Foll. 102—109. Extent, 210 granthas.

Complete.

This is same as the work described under R. Nos. 201 and 275.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 201, 275-ஆம் எண்களின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்று முளது.

R. No. 2292.

உரோம ரிஷி சூத்திரம் (அண்டவித்தை)
URŌMARIṢI SŪTTIRAM (Aṇḍavittai).

Foll. 110—114. Extent, 120 granthas.

Complete.

This contains 53 stanzas. It is very brief.

Beginning :

அண்டவித்தை.

பூரண மானதோர் பொன்னடி மூலங்
காரண மான கருவிந்து நாதம்
வாரண மான துக்கிட வண்டந்தான்
பேரண வித்தைபாற் பேசுங் கிளிஞ்சியே. (1)

கிளிஞ்சிக் குடப் பூச்சுக் கெடியாகச் சொல்கின்றேன்
தெளிந்திடு மண்டஞ் சிறுநீர் பூவிட்டு
அளிந்து சுண்ணாம்பிட் டனலிற் குறுக்கிடு
நெளிந்திடு முட்டைதா னேரா யவியுமே. (2)

அவிஞ்சப் பருவம் அறிந்தே யெடுத்திடு
குவிநதிடு முட்டைக் குடுமற் பூச்சுக் கூறுவேன்
எவன்தா னறிந்தவன் முட்டை நீராக்கச்
சிவவிந்து வீரஞ் சிணம்வெடி யுபபே.

End :

வாறுன குண்டலிக் குள்ளேமுக் கோணத்துள்
பேறுன சந்திர வட்டத்துள் சிங்கியாங்
காறுன சத்திக் கொழுந்தியாம் வல்லபை
யாறுன வீடும் அவளா யிருபபளோ. (52)

(முற்றும்.)

(கு-பு)—

இந்நூல் உரோமரிஷி அண்டவித்தை என்னுபம பெயர்த்து. 53 பாட்டுக்க ளடங்கியுள. முற்றுமுளது. சிதலமாயது. பிழையுளது. சுருக்கமான தோர் நூலாகும்.

R. Nos. 2293—2294 (one codex).

Palm leaf. 11 × 1 5/16 inches. Foll. 1—41. Lines, 7 on a page. Tamil, injured, Old. Extent, 550 granthas.

Purchased, in 1949–50, from Sri A. M. Gopala Iyer, No. 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2293.

வைத்திய நூல்.
VAIDDIYA NŪL.

Foll. 1—5. Extent, 50 granthas.

This is same as that described under D. No. 2425. This has been already printed.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2425-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டுளது. அச்சியற்றப் பெற்றது.

R. No. 2294.

அகத்தியர் கரிசல் முந்நூறு.
AKATTIYAR KARIŚAL MUNNŪṞU.

Foll. 6—41. Extent, 500 granthas.

Incomplete.

This is another work on medicine attributed to the sage Agastiya. It deals with various medicines and tablets. This will be very useful to the medical practitioner.

Beginning :

அகத்தியர் கரிசல் முந்நூறு

பூரணி மாமலை மகடரு புதல்வன்
காரணி மாமத கரியடி பணிவாம்.

வஸ்த்து வணக்கம்

அமுர்த மதியணி சடையினர் விடையுரே
மதமடி கனிரிணை யடிபணி வாம்.

குருளினர் வணக்கம்

சூரனங் குமைமா வேலாற் குகமயில்
வீர னறுமுக னிணையடி பணிவாம்.

ஈசுவரி வணக்கம்

எதிர்பதி துணைவியே என்னிருதய மதுறை
பதிபர தேவியை மனமதில் நினைவாம்.

குரு வணக்கம்

மாமுனி தென்பொதி வாழ்முனி முத்தமிழ்
பாமுனி பொனனுரை பதமலர் பணிவாம்

*　　　*　　　*

*　　　*　　　*

பாதரச பற்பம்

பார்புக ழினியொரு சேபோடு சுத்திசெய்
நீரமு ழுப்பொடு செங்கலி விட்டெரி
மேலிடு கடமெரி சுடுதழல் தணிவொடு
சாலிடு நீரிணை யெடுசரி நிரையே
எடுவிடு சங்கநீ ரதிலே யரைாவி யிலவை
கடுமதி நிற மதுகா சரை யிருகால் நீர்தனி
லிடுநா ளொழுதில் வெகுரணம் வேற்
கெடுமி றணை சூலைகள் வெடிசூலை கள்தின்
படுமருக் கிரந்திகள் பல்வகை சேர்புண்
படுரெண விப்புருக்கள் பிளவைகள் வாதம்
படுவண்டுண்டு மரையாப்பு விதமான மேக
முதிர்வாய்வுகள் நெஞ்சடை வலிபணம் வயிர்வலி
தேயுந் துடைரணம் சிரைாரண முதலாம்
ரணமதில் வருநோ யறுநூறும் வெகு
குணமிகு பாத ரசமதை உள்ளிட காளி
கடுகரு வேல் கரு நெலிஞ வல்வலி
தீளரி நீர்வைத் திடுகொப் பளிவாய்
வேக மத்துவிடும் வைத்திடு மருகு
இயாழ நீர்முள குடனிட்டு வெண்ணெயை
அதிலிடு குடிரச வேகமது அடிபடும்
பதிகுண பாதரச பற்ப மதற்கே.

End :

சன்னி ஆனந்த பயிரவம்

அண்டமதிர் சன்னி வயிரவ உண்டையை
தனைவு ரைக்கப் பொறிஞதம் சிவப்பு
இஞ்சியுடன் திப்பிலி ஐயிந்து மூவப்பு
மேடப் பாலுற வரைமுச் சாமம்
கொடுவேலி காய்நீ ரிதிலரை முச்சாம
மலைக்குண்டி போலுண்டை வையத் துலர்த்திட்டு
மூலைப்பாலி லிஞ்சிச் சார மிட்டுவே
ரண்டகொம்பி ணீர்க்கடு வுள்ளி நீர்முருங்
கப்பட்டை நீரி னிலிட பதினெண் தோடம்போம்
அனுபான முன்ன திலிட் டிடவாத சுரமறும்
அபிநாந் திரிதோடச் சன்னி பொருந்த
எட்டுவித சன்னி யேங்கி யொளித்திடு
மட்ட வயிரவ சன்னி ஆனந்தமாமே.

—64.

(முற்றுப் பெறவில்லை.)

(கு-பு)—

இந்நூல் "அகத்தியர் கரிசல் முந்நூறு" என்னும் பெயர்த்தாய் வைத்திய சம்பந்தமான மாத்திரை, பற்பம், சுண்ணம் முதலானவைகளைப் பற்றிக் கூறிச் செல்கிறது. முற்றுப் பெறவில்லை. சிதலமாயது. ஆசிரியப் பாக்கள் போன்று பாடப்பட்டுள்ளன. ஆனால் மோனை, எதுகை பொருந்தக் காணப்படவில்லை. அனுபவத்திற்குகந்த நூல்.

R. Nos. 2295—2296 (one codex).

Palm leaf. 14 × 1 5/16 inches. Foll. 1—266. Lines, 9 on a page. Tamil, much injured. Old. Extent, 5,778 granthas.

Purchased in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2295.

சட்டைமுனி நிகண்டு.
ŚAṬṬAIMUNI NIGHAṆṬU.

Foll. 1—101, Extent, 2,462 granthas.

Complete.

This is same as the works described under D. Nos. 252 & 1927.

(கு-பு)—

இந் நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 252, 1927-ஆம் எண்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்று முளது. அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2236.

சட்டைமுனிவாதம் ஆயிரம்.
ŚAṬṬAIMUNI VĀTAM ĀYIRAM.

Foll. 102—266. Extent, 3,316 granthas.

Complete.

The work is written in an elegant style. This is same as that described under R. Nos. 254 and 262.

Beginning :

அகண்டபரி பூரணமா முமையாள் பாதம்
அப்பிறத்தை நிறைறதொரு அய்யர் பாதம்
புகன்றுநின்ற கணேசனொடு நாராக்கள் பாதம்
புகழான வாக்குடைய வாணி பாதம்
நிகண்டனவே யெனையாண்ட குருவின் பாதம்
நிறைநிறையா சொரூபத்தின் நின்றோர் பாதம்
முகண்டுனனை யீன்றெடுத்த சின்மயத்தின் பாதம்
மூவுலகு மெய்சுதற்குக் காப்புத் தானே. (1)

நிற்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சன முமாகி
நேராகப் பூரணமாய் மனமெட்டாத
சற்குணமாய்ச் சமரசமாய்த் தானும் தாண்டிச்
சச்சுதா னந்தவெளிக் கப்பால் நின்ற
தற்குணமாய் எனையாண்ட சின்மயத்தைப் போற்றி
சமரசமாய் வேதாந்த வாதஞ் சொல்வேன்
நற்குணமாய் செனகாதி ரிஷிகள் பாதம்
நலம்பெறவே நாவில் வைத்துப் பாடுறேனே. (2)

பாடுகிறேன் பராபரமே யகண்ட வித்து
பண்பாக அதுகடுக்கா பறையினுட வெளிதான்
நீடுகிறே னதுகடுக்கா ஆகாய வெளிதான்
நேரான வதின்கீழே வாயு வாச்சு
நாடுகிறே னதின்கீழே வன்னி வன்னி
நலமாக வதின்கீழே சலமு மாச்சு
ஊடுகிறே னதின்கீழே பூமி யாச்சு
ஓகோகோ சீவனெல்லா முதித்த வாறே. (3)

End :

தெரியல்லா மரபினுட சாத்திரங்க ளெல்லாம்
திறமறிந்து..... ....தேவியைத் தான்கேட்டு
யெறியல்லோ மூலத்தில ஞானதீபம்
யீன்றெடுத்த தாயோடு தந்தையும் நான்கேட்டு
............ணத்தில் மறந்து நின்ற
தாயான உன்மனையக் கேட்டு நன்றாய்
தெரியல்லோ யண்டரண்ட மதங்க ளெல்லாம்

(கு-பு)—

இந்நூல் சட்டைமுனி வாதம் ஆயிரம் என்னும் பெயர்த்து. இதில் வாத சம்பந்தமான பல கருத்துக்களைத் திரட்டிப் பாடியுள்ளார். நன்றான நடையாகும். மிகவும் சிதலமாயது. முற்றுமுளது. இது மூவருடக் காட்லாக்கு 254, 262-ஆம் எண்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

R. Nos. 2297—2299 (one codex).

Palm leaf. 9⅞ × 1¼ inches. Foll. 1—40. Lines, 7 on a page. Tamil, much injured. Old. Extent, 421 granthas.

Purchased in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2297.

கொங்கணர் வாத நூல்.

KOṄGAṆAR VĀTANŪL.

Foll. 1—7. Extent, 170 granthas.

Complete.

The first nine verses describe the preparation of Gold powder. Then it deals with medicinal topics. The work is exalted as a very important treatise on medicine.

Beginning :

அதிசயமாய்ச் சொல்லுகிறேன் அத்தங்க வித்தை
ஆடவென்றால் பாங்கிவித்தை ஆணிக்காகும்
அதிசயமாய்க் கட்டியதோர் நாக மொன்று
அப்பனே இருபத்து நாலுத் தங்கம்
அதிசயமா யுருக்கிடவே கடுங்கார மேத்திப்பாரு

* * *

துதிசெய்வேன் ஒன்பதே முக்கா லாணி
துரைதுரைகள் எனக்காகச் சொன்னவாறே. (1)

சொன்னவித்தை யல்லாமல் மற்றோர் வித்தை
சொன்னதிலே நீ கழன்றால் சுணங்குவாய்
என்னவித்தை மற்றதெல்லாம் இதுபோதாதோ
இருபத்தி னலிலொன்று விளையு(ம)ந் தங்கம்
சன்னவித்தை பாகுசெம்பு காரீ யங்கள்
சரக்குவகை புகைகளிலே மயங்க வேண்டாம்
அன்னவித்தை வெள்ளிசெம்பொன் பீளைபோ லுண்டாம்
அரநாளை வேதைமுகம் ஆகும் பாரே. (2)

End :

பாரேது குருமுறையைச் சொல்லக்கேளும்
மன்னனாய் நீயிருந்து வாழ லாகும்
வேரேது பலங்கள்இரு பத்து நாலு
விளங்கிநின்ற ஒன்பதே முக்காலாணி

கூரேது நீரவையில் கட்டு நாகம்
கூட்டியொரு பலஞ்சேரு உருகக்கொண்டு
சோறேது வேணுமென்றால் அலையவேண்டாம்
சோதியுபபு செய்நீரில் தொட்டு வாட்டே. (9)
முற்றிற்று.

(கு-பு)—

இந்நூல் "கொங்கணர் வாத நூல்" என்னும் பெயர்த்தாய் தங்க வித்தை செய்யும் முறைமையினை ஒன்பது செய்யுட்களால் எடுத்துக்கூற வல்லதாய் இறுதியில் கைம்முறை குருவித்தை செய்நீர் அம்மானை என்பதை உரை நடையில் கூறவல்லதாய் கைகண்ட முறை யெனக்கூறிச் செல்கிறது. அனுபவமுறையில் செய்தால் மன்னருய வாழலாம் என இது எடுத்துக் காட்டுகிறது. முற்றுமுளது.

R. No. 2298.

மூலிகை விபரம் அறுபத்துநான்கு.
MŪLIKAIVIPARAM AṞUPATTUNĀNKU.

Foll. 7 (b)—9. Extent, 35 granthas.

Incomplete.

This appears to be a treatise on medicine describing the medicinal herbs. But all the folios herein are lost except the first and the last. The latter describes a medicine called pūraṇam, an antidote of poisons.

Beginning :

வசீகர மூலிகையாவது—சீதேவியார் செங்கழுநீர்வேர், நிலவூமத்தை வேர், வெள்ளெருக்கன்வேர், வெள்ளைவிட்டுணு கிரந்திவேர், கருத்தப்பூச் செம்பைவேர், வெள்ளைக்கண்ணிவேர், பொடுதலைக் கையானந்த கீரைவேர், செந்நாயுருவிவேர் ஆக வசீகர மூலிகை எட்டு.

மோகினி மூலிகை

மோகினி மூலிகையாவது—பொன்னூமத்தைவேர், வெள்ளூமத்தை வேர், மருளூமத்தைவேர், கஞ்சாச்செடிவேர், கோரைக் கிழங்கு, ஆலம் விழுது, கிராம்பூ, நன்னாரிவேர் ஆக மோகினி மூலிகை எட்டு.

End :

பூரணம் ஒன்று.

* * * *

பாரப்பா சலமது இட்டாதே போனால்
வந்தவரை தாநடிக்க விஷம் வாங்கிப்போகும்
தாமப்பா இதைநீ நம்பிச் செயித்தா யாகில்
நவலோகம் புவலோகம் நடுங்கி ஓடும்
போமப்பா விஷங்க ளெல்லாம் பொய்யேயில்லை
புகழ்பெரிய ஈச்வரனார் சொன்ன வாக்கு
காமப்பா சத்தியமே சொன்னேன் சொன்னேன்
தப்பாமல் விஷம்நஞ்சும் சத்துருவும் தவிடாய்ப்போமே.

(கு-பு)—

இந்நூல் 64 மூலிகை விபரம் என்னும் பெயர்தது. இருப்பினும் இதில் முதலும் இறுதியுமாகிய இரண்டேட்டைத் தவிர இடையிலுள்ள பிற ஏடுகள் காணக்கூடவில்லை. இறுதிக்குப் பிறகு ஒரேட்டில் பூரணம் ஒன்று கூறபபட்டிருக்கிறது. அது விஷம் நீங்க உதவும் எனத்தோற்றுகிறது.

R. No. 2299.

கருவூரார் பலதிரட்டு.
KARUVŪRĀR PALATIRAṬṬU.

Foll. 10—42. Extent, 216 granthas.

Incomplete.

This is same as the work described under R. No. 2288.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2288-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. இதில் 117 பாட்டுக்களே உள. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2300.

யாகூப் வைத்தியம் எழுநூறு.
YĀKŪP VAITTIYAM EḺUNŪṞU.

Palm leaf. 13½ × 1 7/8 inches. Foll. 1—132. Lines 8 on a page. Tamil, Injured. Old. Extent, 4,000 granthas.

Purchased, in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Complete.

This is a work on medicine by one Yākūb who appears to be the same as Rāmadēvar. This contains 744 verses and is complete. This stanzas are taken from different works on medicine.

Beginning :

பூரணியின் பெற்றெடுத்த வனுகந் தன்னைப்
　　போக்கோடே ஆறுமுக மாக்கி வைத்துக்கொண்ட
காரணமாய்க் கையைந்து முகந்தான் தன்னைக்
　　கற்பகத்தின் செல்வனைத்தான் கருத்தி லெண்ணி
நாரணனுன் மருமகனை நவின்று கூறி
　　நற்பாதம் சிரசில் வைத்துப் பணிந்துபோற்றி
பார்புகழும் பண்டிதத்தைப் பலநூல் பார்த்து
　　பார்த்தறிந்து சிந்தையினுல் பாடி னேனே. (1)

சிகையில்மதி யமுதத்தை யணிந்த வீசன்
    சொல்பெரிய விடையேறி நின்ருேன் றன்னை
தகையான மழுவெடுத்த பெரியோ னைத்தான்
    தன்மையாய்க் காளியுடன் வாது செய்தோன்
துகையாக மானிடரைப் படைத்தோ னைத்தான்
    தொன்மைதரு நகைசெய்து எறித்தோ னைத்தான்
யுகமகிழும் சிவனுடைய பாதந் தன்னை
    இணையடியைத் தொழுதுபணி யியல்புள் ளோமே. (2)

* * * * *

* * * * *

ஆதிமுதல் என்பேரு ராம தேவர்
    அளவாக குளிகையிட்டு மக்கா தேசம்
வீதியிலே சென்டுபுக்க சாயபு கண்டு
    விரும்பியே சாத்திரத்தில மிகவும்பேசி
நீதியாய் என்மனதில் தோற்ற மாகி
    நேராக குரானையுந் நான் நேர்ந்து பார்த்துச்
ஆதியே ஞானத்தின் செயலுங் கண்டேன்
    உற்றுணர்ந்து பிற்பாடு உறுதி யானேன். (6)

End :

முற்றுமே எழுநூற்றுச் சொச்சமாக
    முடிவான நூலெல்லாம் திரட்டிப் பார்த்துச்
சித்திக்கு மதியரசம் கட்டி யாவும்
    சீர்பெறவே உலகோரும் பென்று புகழ
பற்றுக வில்லாமல் சோதித்துச் சரி
    பார்த்திட்ட வாதமெல்லாம் சுருக்கிப் பாடி
வுற்றுமே பார்த்திட்டேன் யாகூப் பென்பேர்
    உறுதியாம் எழுநூறு குருவு மாமே,
முற்றும்

(கு-பு)— 744

இந்நூல் யாகூப் என்பவரால் பல நூல்களிலுமுள்ள வாதங்களையெல்லாம் சோதித்துப் பார்த்து அனுபவத்துக்குகந்ததானவைகளை யெடுத்து முன்னோர் பாடியவாறே 744 பாட்டுக்களில் பாடி முடிக்கப் பெற்ற "யாகூப் வைத்தியம்" என்னும் பெயர்த்து. இதில் முன்னே கூறப்படும் பாட்டுக்களால் இவர் பெயரே இராமதேவர் எனக் குறிக்கப்படுவதைக் காணலாம். முற்றுமுளது. நடை நன்ருகவுளது. சிறிது சிதலுற்றுளது.

R. No. 2301.

இரசவாதம்.

IRASA VĀTAM.

Palm leaf. 12½ × 1½ inches. Foll. 1—12. Lines 9, 10 on a page. Tamil, Injured. Old. Extent, 300 granthas.

Purchased in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

This is a work on medicine and alchemy by some unknown author. The verses are taken from different works on the topic. The work deals with the topics briefly.

Beginning :

* * * * *

* * * * *

சித்தர்கள் கவி

மாறுமாறு மன்னவன் மங்கையே
போது போது பொருந்தி வெற்றிலை
வெள்ளிக் காண்டவன் பொல்லிக் குடுத்தவன்
நாய்க்கு அவர் நன்னிக்குக் கொடு
உற்றுரைப் பெற்றுரை யாற்றிக்கொடு

என்பது.—வெடியுப்பு, சுண்ணாம்பு, சீனக்காரம், துரிசி வெண்காரம் இவை சமஎடை நிறுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, புதுக்கோழி முட்டை யாகக் கொண்டுவந்து பொத்து பரங் கழஞ்சு, கந்தகங் கழஞ்சு, பொடி செய்து போட்டு மறு முட்டையால் கொண்டு மூடி முன்னரைத்த மருந்து கொண்டு முட்டைக்குக் கவசம் பிடித்து உலர்த்தி நிலத்தில் மணல் குவித்து மணலில் முட்டை புதைத்து காய்ந்த வரட்டியில் மூன்று புடம் போடவும். ஆறவிட்டு எடுக்கச் செந்தூரமாம். சகல லோகத்திலும் பேதிக்கும் பத்துக் காணவும்.

End :

* * * * *

இந்த நீரிலே அஞ்சு விராகனெடை துரிசு கட்டியைத் தோய்த்துப் புரட்டி அந்தப் பிரப்பியும் சுண்ணாம்பும் எலுமிச்சப் பழச்சாறு விட்டரைத்துக் கவசம் பிடித்து அஞ்செருவில் புடம் போட கட்டும்.

(கு-பு)—

இந்நூல் இரசவாத சம்பந்தமான சில வகை மருந்து முறைகளைக் கூறுகிறது. பிற நூல்களிலிருந்து எடுத்தெழுதப்பட்டதாகக் கருதப்படு கிறது. சிதலமாயது. சுருக்கமானது. பிழைகள் மலிந்துள.

R. Nos. 2302—2307 (one codex).

Palm leaf. 13¾ × 1 ⅜ inches. Foll. 1—181. Lines 9 on a page. Tamil, much injured. Old. Extent, 2,475 granthas.

Purchased, in 1949–50, from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road Mambalam, Madras.

R. No. 2302.

அகத்தியர் நிகண்டு.

AKATTIYAR NIGHANṬU.

Foll. 1—148. Extent, 1,600 granthas.

Complete.

This is same as that described under R. No. 4118.

(கு-பு)—

இந்நூல் அகத்தியர் நிகண்டு என்னும் பெயர்த்து. மூவருடக் காட்லாக்கு 4118-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. இரசவாத சம்பந்தமான மூலிகைகளின் பெயர்களும் அதனுண்டாகும் மருந்துசெய் முறைகளும் முறையே ஆறு காண்டங்களாகக்கூறி ஏழாவது ஜீவரட்சணை காண்டம் என்று ஒன்று தொடுகுறிபோல் கூறப்பட்டிருக்கிறது. முற்றுமுளது. சுமார் எண்ணூறு பாக்களாலானது. சிறிது சிதைவுடையது.

R. No. 2303.

கொங்கணர் முதற் காண்டம்.

KONGKṆAR MUDAṞ KĀṆḌAM.

Foll. 149—154. Extent, 200 granthas.

Complete.

This is same as the work described under R. No. 267 (*a*) & (*d*).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 267 (a) & (d) ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுமுளது.

R. No. 2304.

கொங்கணர் நடுக்காண்டம்.

KOṄGAṆAR NAḌUKKĀṆḌAM.

Foll. 155—162. Extent, 200 granthas.

Complete.

This is same as that described under R. No. 145 (*b*).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 145 (b) ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுமுளது.

R. No. 2305.

கொங்கணர் முக்காண்டம்.

KOṄKGAṆAR MUKKĀṆḌAM.

Foll. 163—165. Extent, 75 granthas.

Complete.

This is a work on alchemy. This contains 15 verses. This is a brief resume of the work called "koṅgaṇar Mūnṟukāṇḍam"

Beginning :

கருணைதரு மூலகுரு பாதங் காப்பு
காலாங்கி காப்புகரு ஊரான காப்பு
குருவெனவே வருவுமை கொண்ட நாதன்
குலமான போகருட பாதங் காப்பு
தருவெனவே சொல்லி வைத்தேன் மூணுக் காண்டம்
தனையெல்லாம் சூத்திரமோர் பதினைந்துக் குள்ளே
பொருளை வெளியா யுரைத்தே னிந்த நூலைப்
போகர் கண்டு மெச்சியெனைப் புகழ்ந்திட்டாரே. (1)

புகழ்ந்திட்டார் மடபதியாகு சித்தர் சொன்னார்
புட்டகம் வெளியாயிப் போச்சு தென்று
மகிழ்ந்திட்டார் கருக்குருவுஞ் சொன்ன தாலே
வல்லமையி லுலைக்கு வாச்சு தென்று
மகிழ்ந்திட்டார் மூதல் காண்டம் கருவே தென்றால்
சொல்லிவிட்டேன் முடிவான சூத்திரமெல்லாம்
மகிழ்ந்திட்டார் நடுக்காண்ட மடியில் போக்கைச்
செப்பினதால் சித்தரென்று செயம் பெற்றேனே. (2)

End ;

நில்லென்றால் குருவினுட தேசத்தாலே
நீயறிந்து பாரப்பா நிலைப்போ வில்லை
கல்லென்ற உப்புக்குப் பூமிசாரங்
காயூறிட்டால் ஒன்றுமில்லை கருத்தோணாது
வில்லென்று லப்புறைக்கும் என்செய்வானல்
வியலன் வந்து உபதேச மிடுவார் ஐயா
அல்லென்று லைலப்பகலு மில்லை சித்தர்
நாவாய் அடக்கி வைத்தேன் பதினைந்தில் முற்றே.

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் "கொங்கணர் முக்காண்டம்" என்னும் பெயர்த்தாய் மூன்று காண்டம் என்னும் நூலின் சுருக்கமாய் அமைத்துப் பாடப்பட்டுள்ளது. இரசவாத சம்பந்தமானது, முற்றுமுளது. 15 பாட்டுக்கள் அடங்கியுள்ளன. சிறிது எழுத்துப் பிழையுள்ளது.

R. No. 2306.

கொங்கணர் கற்பம்.
KOṄKAṆAR KAṞPAM.

Foll. 166—169. Extent, 100 granthas.

Incomplete.

This is same as the work described under D. No. 2414. This contains only 25 verses.

(கு-பு)—

இந்நூல டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2411-ம் எண்ணில் வருணிக் கப்பட்டிருக்கிறது. அதனிடையிலுள்ள இப்பகுதி பாடங்கள் எடுத் தெழுதப்பட்டுள்ளன. பிற அதன் குறிப்புக் காண்க.

R. No. 2307.

கொங்கணர் 43 முக்கோண பூஜாவிதி.
KOṄKAṆAR 43 MUKKOṆA PŪJĀVIDHI.

Foll. 170—183. Extent, 300 granthas.

Complete.

This is a work on medicine and alchemy in 47 verses.

Beginning :

சொல்லாத நாற்பத்தி முக்கோண சக்கரம்
துரியா தீதங் கடந்த சோதியப்பா
சொல்லாதே யொருவர்க்கு வெளியாய்ச் சொல்வேன்
சொர்ணத்தின் தகடானு மெடுக்க நன்று
சொல்லாதே வெள்ளிச் செம்பி லெழுத லாங்கேள்
சித்தித்தா லஷ்டகர் மெட்டு மாறும்
சொல்லாதே பிரமாண மெவ்வளவு வாகும்
சூட்சமாய் நாற்பத்தி முக்கோணஞ் செய்யே.

End :

ஓதுநீ தூபமொடு நைவேத்தியந் தீபம்
உத்தமனே மண்டலந்தான் செய்தா யானும்
கோதிவிடும் அரவின் செயும் அக்னியும் போல்
கொடுமை மெத்தச் செய்யுமடா கூறி னேன்கேள்
பேதியா மனத்தோ ருண்மை யாகி நின்று
பிதற்றும லிப்படியே செய்தோர்க் கெய்தும்
சோதியா யென்மகனே என்றால் தாயும்
சோதிச்சு வாடினேன்காண் சூத்திர முற்றே. (47)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் "கொங்கணர் நாற்பத்தி முக்கோண பூஜைவிதி" என்னும் பெயர்த்தாய் இரசவாத சம்பந்தத்தைப் பற்றிக் கூறவல்லதாய் 47 பாட்டுக் களையுடைத்தாய் அமைந்துள்ளது. முற்றுமுளது. சிதலமாயது.

R. Nos. 2308—2311 (one codex).

Palm leaf. $12\frac{1}{2} \times 1\frac{1}{2}$ inches. Foll. 1—202. Lines, 5, 8 on a page. Tamil, Injured. Old. Extent, 2,300 granthas.

Purchased, in 1949–50, from Sri A. M. Gopala Iyer, Mambalam, Madras.

R. No. 2308.

தேரையர் ரத்னாகரம் 1001.
TĒRAIYAR RATNĀKARAM 1001.

Foll. 1—56. Extent, 700 granthas.

Incomplete.

This is same as the work described under R. No. 925. The manuscript under consideration, has 21 verses, in addition to that of R. No. 925. On the whole, this contains 538 verses, but is incomplete.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 925-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதிலில்லாத 21 பாட்டுகள் இதில் அதிகமாகவுள்ளன. 'தேரையர் வைத்தியம்' என்றும் பெயர் அதன் முகப்பில் காணப்படுகிறது. மொத்தம் இதிலிருக்கும் பாட்டுக்கள் 538. முற்றுமில்லை. பிற அதன் குறிப்பிற் காண்க.

R. No. 2309.

இராமதேவர் பூஜாவிதி சிவயோகம் இருநூறு.
IRĀMADĒVAR PŪJĀVIDHI ŚIVAYŌGAM IRUNŪṞU.

Foll. 57—93. Extent, 450 granthas.

Complete.

This is same as that described under R. No. 947 (*a*).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 947 (a) ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2310.

தேரையர் வைத்தியம் ஐந்நூறு.
TĒRAIYAR VAIDDIYAM AINNŪṞU.

Foll. 94—185. Extent, 650 granthas.

Incomplete.

This is a work on medicine by one Tēraiyar in 441 verses. It describes various medicines and tablets.

Beginning :

ஆதியாம் சிவசத்தி புதல்வா போற்றி
அரியயனுந் தேடரிய வறமே போற்றி
சோதியாம் சரஸ்வதி பாதம் போற்றி
சொற்பெரிய பொதிகைமுனி பாதம் போற்றி

அகஸ்தியர் சித்தாதி பாதம் போற்றி
மகத்தான சித்தர்கள்தம் பாதம் போற்றி
ஓதியான் வைத்த வைத்திய சூத்திரம் ஐந்நூறு
உத்தமனே தேரையன் சொல்லுறுதி பாரே.
பாரப்பா செந்தூரம் குளிகை வேது
பற்பஞ் சூரணம் கிருதயில எண்ணெய்
நேரப்பா திராவகஞ் சர்க்கரை நெய்க்கிருதம்
நேத்திரமை யஞ்சனமை மருந்து கற்பம்
கோரப்பா குழித்தயிலம் புகையாக்கி ராணங்
கூழ்ப்பாண்டந் துவரெண்ணெய்க் குடிநீர் விட்டுச்
சேரப்பா மெழுகுகண் டவிழ்தம் பத்து
செவித்தயில மூலிகையுந் தெளிந்து போற்றே. (2)

End.

எண்ணவே மாமஞ்சள் சுக்கு
இருவேலிச் சிரமாம் மதுரங்கோஷ்டம்
வன்னமே நாகரமுந் தகரமாஞ்சி
மகரம்பூ கிராம்பூ லாக்கிழங்கு
சொன்னேமே மிளகுமிந்தந் தும்பராஷ்டம்
துரப்பான கற்கடக இஞ்சி மஞ்சிட்டி
சொன்னேமே செண்பகப்பூ லவுங்கஞ்
சாதித்தி விடையம் ரோகணியுந் தேவதாரே. (441)
முற்றுப் பெறவில்லை.

(கு-பு)—

இந்நூல் "தேரையர் வைத்தியம் ஐந்நூறு" என்னும் பெயர்த்து. இதில் முற்றுமில்லை. 441 பாட்டுக்களே உள்ளன. இதில் பலவித கற்பம், எண்ணெய், இலேகியம், சூரணம், தயிலம் முதலானவைகள் கூறப்படுகின்றன. சில எழுத்துப் பிழைகள் உள. நடை நன்றாக உளது. தேரையர் என்பவரே இதற்கும் ஆசிரியர் எனக் கூறப்படுகிறது.

R. No. 2311.
அஷ்ட கர்மத் திரட்டு.
AṢṬAKARMAT TIRAṬṬU.

Foll. 186—202. Extent, 500 granthas.
Complete.
This is a treatise on alchemy by some unknown author. This contains 109 verses and this is useful for alchomists.

Beginning :

அஷ்டகர்மத் திரட்டு
கேளப்பா நமசி வாயவென்று
மாற்கெடியான் தம்பனமாம் பலகை யாலாம்
நாளப்பா திசைகிழக்குத் தாமரைக் காயமாலை
நலமான ஆசனந்தான் புலித்தோ லாகும்

வேளப்பா சிவாயநம யோகனமே யாகும்
வெள்ளலரி மேதிசை மிளகு மாலை
சூளப்பா ஆசனந்தான் கேசரித்தோ லாகும்
சொற்பெரிய சிவயநம மாரணமாகும். (1)
ஆமப்பா பலகையது அத்தியாகும்
அக்கினியாந் திசைநாவி மணிதரள மாலை
வேமப்பா ஆசனந்தான் மான்றோ லாகும்
விள்ளரிது வயநமசி யுட்சாடன மாகும்
நாமப்பா நமசிவய மென்று மாற்றான்
விளமர பலகை கேளே. (2)

End :

கரவாமல் அங்வங் சிவாய வென்று
ஓதினால் சுவாதிஷ்டான முண்மை காணும்
மறவாமல் வங்கசிங் சிவாயநம வென்று
ஓதினால் மகத்தான அனுகத்தை மகிழ்ந்து காணும்
பிறவாமல் உளம்ஓம் சிவாயநம என்றால்
வியலான விசுத்திதனை யிருப்பில் காணும்
பிறவாமல் சிங்சங் சிவாயவென்றால்
பெரியை யாக்கினைதான் காண லாமே. (109)

(கு-பு)—

இந்நூல் " அஷ்டகர்மத் திரட்டு " என்னும் பெயர்த்து. பலவித மந்திர சாதனைகளைக் கொண்டு பலவித சித்து வித்தைகளை யாடலாம் எனப் பகருகின்றது. 109 பாட்டுக்களடங்கியுள்ளது. முற்றுப்பெற்றதெனத் தோன்றுகிறது. இரசவாதம் செய்பவர்கட்கு மிகவும் பயன்படக்கூடியது.

R. Nos. 2312—2314 (one codex).

Palm leaf. 14½ × 1½ inches, Foll. 1—32. Lines, 5, 7 on a page. Tamil. Much injured. Old. Extent, 490 granthas.

Purchased in 1949-50 from Sri. A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2312.

சர நூல் (உரையுடன்).

ŚARANŪL (with Commentary).

Foll. 1—24. Extent, 250 granthas.

Incomplete.

This is same as the work described under D. No. 2285.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2285-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றுமில்லை. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2313.

சோதிடம்.
ŚŌTIḌAM.

Foll. 25—28. Extent, 90 granthas.

Incomplete.

This is same as that described under D. No. 2365. Though apparently, it seems to be a treatise on astrology, it deals with appropriate time for curing diseases.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2365-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில் சோதிடம் என்றிருப்பினும் வைத்தியம் செய்பவர் கட்குரிய காலவகையினை நிர்ணயித்துச் சொல்வதால் வைத்திய சம்பந்தமான சோதிடத்தைச் சார்ந்தது எனலாம். சிதலமாயது.

R. No. 2314.

திருமூலர் குளிகைமுறை ஐம்பது.
TIRUMŪLAR KUḶIKAIMUṞAI AIMPATU.

Foll. 29—32. Extent, 150 granthas.

Complete.

This is a collection of stanzas on medicine, Tambanam and ñānam. Ideas from different works are taken Style is good.

Beginning :

மூலர் மொழிந்தது முந்தி யெண்ணாயிரம்
மருகால் மொழிந்தது மருத்துவ மாயிரம்
பாலர் மொழிந்தது பத்தி மூவாயிரம்
சீலர் மொழிந்தது திரட்டுரே ணீராயிரம். (1)

ஆயிரம் அய்ந்நூறு அதன்பின்பு முந்நூறு
கோதி லதின்பின்பு குளிகை ஐம்பது
பேதி லதின்பின்பு எடுத்திடு முப்பது
சாயிர மூன்று தனியொன்று நீரானதே. (2)

தம்பனம் தன்னைத்தான் கட்டும் ஆறுகேள்
நம்பித் திரனிடந் தாளகந் தன்னொடு
கொம்பிச்சி மூலக் கிழங்கின் சாற்றில்
வெம்பி யேழுசாமம் விட்டரைச் சாரே. (3)

End :

காணுமே முக்கால் கடிதான மந்திரம்
காணுமே மூலங் கண்ட மெழுத்துடன்
காணுமே நாளும் கரையிந்தப் பூரணம்
காணுமே நாளுங் கரைகண்ட வாரே. (51)

வாருண பொற்குறி கைக்கு மாத்திரம்
பேருண முத்துப் பவரரி அவ்வுடன்
சேருண சவணா இழங்கையும்
வீருணா அய்யும வெட்டவெளி மூலமே. (52)

(கு-பு) —

இந்நூல் திருமூலர் குளிகை ஐம்பது எனும் பெயர்த்து. தம்பனம், வைத்தியம், ருாமம் ஆகிய மூவகைகளை விவரிக்கிறது. நடை நன்கு அமைந்துள்ளது. பல நூலினின்றும் எடுத்தாண்ட கருத்துக்களைத் திரட்டித் தந்துளதாகக் கூறப்படுகிறது. முற்றுமானது. எழுத்துப் பிழைகளுள.

R. Nos. 2315 and 2316 (one codex).

Palm leaf. 14½ × 1½ inches. Foll. 1—151. Lines, 10, 12 on a page. Tamil. Much injured. Old. Extent, 6,000 granthas.

Purchased in 1949–50 from A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2315.

தன்வந்திரி வைத்திய சிந்தாமணி அமர வெண்பா வந்தாதி.
DHANVANTARI VAIDDIYA CINTĀMAṆI AMARA VEṆPĀ VANTĀDI.

Foll. 1—77. Extent, 3,000 granthas.

Incomplete.

This is a treatise on medicine. This contains only 1,142 stanzas. It is not certain whether Dhanvantari has written the work or not

Beginning :

பரமசிவன் அயன்மால் பார்வதி கணேசன்
அரிய பராசக்தி முதலாக—விரை தெய்வம்
தம்மினைவணங் கித்துதித்துத் தன்வந்தரி பகவான்
செம்மையிரந் தத்தமிழைச் சொல்வோன். (1)

தமிழாம் வைத்திய சிந்தாமணி யென்னும் பேர்
அமரவெண்பா வந்தாதியாக—இமையவர்க்கு
சம்மதியா கப்பாகச் சங்கைகண பேதைவகைக்
கம்முறித்து பேதவழி காண். (2)

காணெந்த நூல்களுங் காணரிய சூக்குமமா
தோணுரச கெந்தத் தோஷ—நாளுப்
பரிகரித் துச்சாத் தியமும் பார்த்து
தெரியும்படிக் கவுழ்தந் செய். (3)

செய்திடிற் தோஷத்தைத் தீர்ப்பவாகரு பாகாதி
செய்தால னென்று மறை செப்புதலாற்—செயபு
வகைகார்க்கும் பிறகபாலத் திரிமூலி மையால்
தாக்கப் பெருமை வருந் தான் (4)

தானே ரசத்துக்குச் சத்த தோஷங்க ளுண்டு
மானே பதின்பேர் வகுத்துரைத்தேன—ானமாம்
நாவங்கக தோஷம்நவி லுங்கிரிமி தோஷமாகும்
வன்னிசாரந் சலியதோ ஷம். (5)

End :

அருவைக்கு.

ஒத்தசங்கு பற்பமோரு காசளவாழை யுத்தக்கனி
உள்ளில்வைத்து உண்டிடுகில்—பத்து நாள்
இப்படியே கொள்ளிலியல் வைத்தியத்திலுள்ள குவை
செப்பமுடன் கரையுந் தேர்ந்து. (1141)

பாஷாணவேகத்துக்கு.

ஆனையரு கங்கியாழங் குடித்தேங்காய்ப் பாலு
பானை யிரக்காய் கஞ்சியும்—பாகல் வேர்
பூநெருஞ்சி வேர்வெந்த நீரருந்தும் வெள்ளாட்டுப்
பாலில்நீர் கொள்ளப்பா ஷாண விஷம் நீங்கும். (1142)

(கு-பு)—

இந்நூல் " தன்வந்தரி வைத்திய சிந்தாமணி அமர வெண்பா வந்தாதி." என்னும் பெயர்த்து. இது 1,500 பாட்டுக்கொண்டதொரு பெயராயினும் இதில் 1,142 பாட்டுக்களே உள்ளன. எஞ்சிய காணப்பெறவில்லை. ஆதலின் முற்றுப்பெறவில்லை. வெண்பா வந்தாதியாகத் தொடங்கினும் வெண்பா விலக்கணம் வழுவிப் பாடப்பட்டுள்ளது. இலக்கணப்பொருத்த முறு வைத்திய மூலிகைகளின் பெயர்கள் அமைத்துப் பாட முடியாதன போலும். இதில் பல சுத்தி வகைகளையும் லேகிய வகைகளையும் இன்னும் பிறவற்றையும் கூறிச்செல்லுகிறது. நன்றாகவுளது. " தன்வந்தரி பகவான் சொன்ன தமிழைச் சொல்லுகிறேன் " எனத் தொடங்குவதால் இதன் ஆசிரியர் தன்வந்தரியோ, அல்லது அவருடைய சீடரோ என ஐயுற இடமுளது. சிதலமாகியுளது.

R. No. 2316.

தட்சிணாமூர்த்தி வைத்தியம் கடைக் காண்டம் அறுநூறு. DAṬCIṆĀMŪRTTI VAIDDIYAM KAḌAIKKĀṆḌAM AṞUNŪṞU.

Foll. 78—151. Extent 3,000, granthas.

Complete.

This is a rare and important treatise on medicine and alchemy This contains 600 verses written by Dakṣiṇāmūrtti.

Beginning :

கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்திந்த சூத்திரந்தான் கருவாய்ப் பாட
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்திந்த குருநூலாகத் திரட்டிப் பாடக்

குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
குபேரனென நிதியிருந்துங் கூடுங் கூடும்
பெருமை பெறக் கீர்த்தியுண்டாம் சித்தர்க் கெல்லாம்
பெருநூலைக் குறுக்கியிந்த அறுநூறு தானே. (1)
தானென்ற வாசிமுதல் ஞான யோகம்
தவறாது வாதமுதல் வைத்தியமுஞ் சித்தி
வானென்ற சிவயோக போகங் காணும்
வைத்தியத்துக் கிருவுயிராகாண் மருந்தின் வேகம்
நானென்ற ஆணவமும் ஆசை தள்ளி
நடந்தக்கால் இந்நூலில் மகிமை மெத்த
தேனென்ற பாற்கடலும் கர்ப்ப மாகும்
திரட்டியொரு கட்டியாய்த் தெளிந்த காப்பே. (2)

End :

அறிவார் பூபதி செந்தூரம்
அழகாய் முடிப்போ ரார்வந்தான்
பிறியா நோயும் பிணிதீரும்
பிறமா யழைத்தால் பேசிவிட்டுச்
சிறியேன் போற்றே னென்றுதொழுவார்
திறமாம் பூபதி மார்க்கமிது
குறியாம் வைத்தியர் காணாமல்
கோடிக் கொருத்தர் இருப்பாரே. (594)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல் " தட்சிணாமூர்த்தி வைத்திய கடைக்காண்டம் " என்னும் பெயர்த்து. அறுநூறு பாட்டுக்கள் கொண்டது. முற்றுமுள்ளது. வைத்தியத்தையும் இரசவாதத்தையும் பற்றிக் கூறிச்செல்கிறது. மிகவும் சிதலமாகியது. எழுத்துப்பிழைகள் மலிந்துள. மிகவும் பயன்படக்கூடிய தொரு நூல்.

R. No. 2317.

தட்சிணாமூர்த்தி வைத்திய மெய்ஞ்ஞானம்.
DAṬCINĀMŪRTTI VAIDDIYA MEYÑĀNAM.

Palm leaf. 9⅞ × 1⅜ inches. Foll. 1—293. Lines, 7—9 on a page. Tamil. Much injured. Old. Extent, 6,000 granthas.

Purchased in 1949–50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

May be complete.

This is an important treatise on medicine and alchemy by Dakṣiṇāmūrtti. This contains 1,438 stanzas. It is said in this work that one should enter the medical profession only after having attained divine inspiration.

Beginning :

சீரணமுடைய காளை சிவன்மகன் தமிழ்நிறைனை
வாரணி முலையாள் பெற்ற மதகிரி வல்லோரிருந்த
நாரணர் மருகன் செஞ்சொல் நற்றமிழ்க் குறை போனாறுறை
காரண முடைய தும்பிக் கணபதி காப்புத்தானே. (1)

காப்பறிந் துரைகள் சொல்லும்
கரிமுகன் சுப்பிர மணியன்
பூப்பணி ஆரம் பூண்ட
புனிதனே சிவனைப் போற்றி
நாற்கலைக் குடைய கந்தன்
நாலிரண்டு முகத்தோனான் பாதம்
கூப்பியே தொழுது போற்றி
குருமொழி கூறு வேனே. (2)

கூறுவேன் வீர பத்திரன்
குகன்வ யிரவன் பாலர்
நாருதி பத்திர காளி
நாயகி பாதம் போற்றி
மாருதிக் குபதே சித்த
வால்மீகி மயக்கம் தீர்த்த
ஆரண பொருளை றிந்த
அகத்தீசர் காப்புத்தானே. (3)

அகத்தியர் மெய்ஞ்ஞா னத்தை
ஆயிரத் தைந்நூறு நன்னில்
செகத்திலே யறிந்து கொண்டு
சித்தர்கள் தெளிந்து பார்க்க
உகததினில் சரக்கு வைப்பு
உறுதியாய்க் கட்டிப பார்க்க
அகத்தினில் உதவிசெய்ய
அபிராமிக் காப்புத்தானே. (4)

அபிராமிக் கடாட்சத்தாலே
அடியேனும் சித்தனாகி
தவறுமல் குருவைக்காட்டி
சதாசிவ னடி பணிந்து
கவிஞான வேதனாகி
கவடகம் முனையும் தள்ளி
சிவஞான பாடல்செப்பு
திருபுரை சரணந்தானே. (5)

* * * * * *
* * * * * *

*　　　*　　　*　　　*

*　　　*　　　*　　　*

காணப்பா பித்தசுரங் காணு மாகில்
　　கஷாயமடா தும்பைவேர் பேய்ப்புடலி னோடு
கோணப்பா கொத்த மல்லி சுக்குக் கூட்டி
　　குறையாதே பலைவிடையாய் நிறுத்துப் போடு
ஊணப்பா சிறுபருப்புத் தொட்டுக் கூட்டு
　　உரைப்பான மிளகு திப்பிலியுங் கூட்டு
நீணப்பா ஒருநிலையாய் நீர்படி மூன்றுக்கி
　　நிச்சயமாய் மூன்றுநாள் கொடுக்கப் போமே. (150)

End :

மருவியநோர் பசுவின்பால் படிதான் பத்து
　　வகையாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
மருகவே பானையிலே யிட்டு மைந்தா
　　வகையாகக் கற்கண்டு பலமு மிட்டு
மருகவே காய்ச்சட பாசரருளி கோலில்
　　மைந்தனே குருகையிலே சர்க்கரைப் போலாமே. (1420)

ஆமப்பா இதற்கெல்லாம் பூஜை வேணும்
　　வாகான திருவடியே காணவேணும்
தாரப்பா தியானத்தை மறக்கலாகா
　　தருவான குருணீறு தப்பவாகா
ஓமப்பா இப்படியே இருந்தா யாகில்
　　உத்தமனே வித்தையெலாம் உறுதிதானே. (1421)

*　　　*　　　*　　　*

காணுமடா சொல்லிவிட்டேன் மறைப்பெல்லாம் நீக்கி
　　கருக்கண்டுக் குருக்கண்டுங் கருதிசெய்ய
ஆணுவத்தை விட்டுவிடு தாயைப் பூசி
　　அப்பனே சொல்லுகிறேன் அறிந்துகொள்ளு
பாணுவென்ற பாத்திரமோ விதற்குப் பூஜை
　　பாடினேன் மெய்ஞ்ஞானம் தானே. (1428)

(கு-பு)—

இந்நூல் "தட்சிணாமூர்த்தி வைத்திய மெய்ஞ்ஞானம்" என்னும் பெயர்த்து. 1,500 பாடல்கள் என முதலேட்டில் எழுதியிருந்தும் வாழ்த்துப் பாடுக்கள் பத்தும் சேர்த்து 1,438 பாட்டுக்களுள. ஆதலின் மற்றவை எழுதப்பட்டோரால் விடப்பட்டனவோ அன்றி முழுவதும் இவைதானோ என ஐயுற இடமுளது. இதில் சிவன், சத்தி யருளால் ஞானம் பெற்றுப் பின்பு வைத்தியம் செய்யத் தொடங்கவேண்டும் என்று கூறுகிறது. வைத்தியம் இரசவாதம் இரண்டினைப்பற்றி விரிவாக யுரைக்கிறது. தட்சிணா மூர்த்தி யென்பவர் இதன் ஆசிரியர். எழுத்துப் பிழைகளுள. மிகச் சிதலமாயது.

R. Nos. 2318 and 2319 (one codex).

Palm leaf. $9\frac{1}{8} \times 1\frac{5}{6}$ inches. Foll. 1—79. Lines, 5, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 400 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Bogo Road, Mambalam, Madras.

R. No. 2318.

அகத்தியர் வாதம் நூறு.

AKATTIYAR VĀTAM NŪṞU.

Foll. 1—42. Extent, 200 granthas.

Complete.

This is same as the work described under R. No. 145 (d). This is a treatise on alchemy. The first folio wrongly gives the title as Vaittiyam instead of Vāta Sūtram.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 145 (d)-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டுளது. முற்றுமுளது. இரசவாதத்தைப்பற்றிக் கூறுவது. என்ன காரணத்தினலோ முதலேட்டின் முகப்பில் " வாதசூத்திரம் " என்பதற்குப் பதிலாக " வைத்தியம் " என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இது சுவடுணது.

R. No. 2319.

திருமூலர் வகார திரவியம் இருநூறு

TIRUMŪLAR VAKĀRA TIRAVIYAM IRUNŪṞU.

Foll. 43—79. Extent, 200 granthas.

Complete.

This is same as that described under R. No. 503 (a). The present manuscript has a different title as " Tirumūlar Vakāra Tiraviyam Irunūṟu ". It is called as Tirumūlar Sūtram Irunūṟu in the manuscript of R. No. 503 (a).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 503 (a)-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது. சிதலமாயது. அதன் குறிப்பையுங் காண்க. அதில் " திருமூலர் சூத்திரம் இருநூறு " எனப்பெயர் இடப்பட்டிருக்கிறது.

R. No. 2320.

உரோமரிஷி வாதம் ஐந்நூறு.

URŌMARIṢI VĀTAM AINNŪṞU.

Palm leaf. $11 \times 1\frac{1}{8}$ nches. Foll. 1—89. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 2,000 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 258. This contains 58 stanzas only.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 258-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முதல் 58 பாடல்களில்லை. மிகவும் சிதலமாயது. பிற அதன் குறிப்பைக் காண்க.

R. No. 2321.

மந்திரம்.

MANTIRAM.

Palm leaf. 4⅝ × 1¼ inches. Foll. 1—29. Lines, 8 on a page. Tamil. Much injured. Old. Extent, 40 granthas.

Complete.

This is a work on black-magic. The stanzas are addressed to one Michael in the assumed name of Dēsikar. The authorship is not certain.

Beginning :

கட்டுவசியம்

சீர்கொண்ட வணக்கடவுளின் ஏவல்செலுத்து கின்ற
பேர்கொண்ட அச்ச சிஷ்ட்ட மாலையின் பெருமையைப் பேசுதற்குப்
பார்கொண்ட சத்துரு சங்கார மாலையைப் பகர்ந்திடவே
கார்கொண்ட வெள்ளி மலையோனுடை திருவடி காப்பதுவே.

மனவசியம்

பெருகு மகிஷ்ட்டமிக் கெலுன்மாலையைப் பேசுதற்குத்
தருவார் வாத்திருந்சிற்பா தத்தை தயவுடனே
வருவா சினந்து வழுக்கொண்ட பேயை வ ரந்தளிக்க
வுருவாக யென்னுவில் வருவார் மிக்கே பெண்டவுத்தனே.

பிசாசை அடைக்க வசியம்

கத்தி அலரிவரும் பேய்கள் . . . . வும் கலங்கிடவே
குத்தி யிருத்தும் கதிவிசை யாலே கொடுமை செய்து
எட்டுத் திசையுமைக் கின்ற பேயை இறுககட்டி
வட்டத்துக் குள்ளே அடைபார்மிடு கலெண்டு வாழ்த்திடவே

End :

கவி—வசீகரம்

சொன்ன சொந்தக் கவியர் பெரும்பாட்டுப் பாடுவார்
என்ன சன்னக்கவி யேதுவென்று கேட்பவரை எதிர்த்தவரை
என்ன சந்தமடா டவரையே கிழித்துச்
சின்ன வினுலே அடிப்பார்ப்பர் மெக்கெல்லென்ற தேசிகனே.

(கு-பு)—

இந்நூல், மெக்கெல் என்பவரைத் தேசிகனே என்று விளித்துச் சகல வசியங்களைப் பற்றியும் சக்கரங்களோடு எடுத்துக்கூறுகிறது. மிகவும் சிதலமாயது. மெக்கெல் என்பவரை ஞானாசிரியராக வைத்துப் பாடப்பட்டிருக்கிறது. பாடியவர் இன்னாரெனப் புலப்படவில்லை. இது அனுபவத்தில் கண்டவைபோலும்.

R. Nos. 2322—2326 (one codex).

Palm leaf. $15\frac{1}{2} \times 1\frac{5}{8}$ inches. Foll. 1—45. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,260 granthas.

Purchased in 1949–50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2322.

சிருட்டி தத்துவம்.

ŚIRUṬṬI TATTUVAM.

Foll. 1—17. Extent, 475 granthas.

Seems to be complete.

This is a work on philosophy by some unknown author. Verse and prose are available in this. This must be deemed as an important treatise for philosophars and logicians.

Beginning :

லோக சிருஷ்டிப்பு, உடற்கூறு தத்துவம்.

ஆதி காலத்திலே அண்டமும் பிண்டமுந் தானாய் அரூபமாயிருந்த காலத்திலே நிர்மல மென்னும் பேர். நிர்மலமெப்படிப் போல வென்றால் அட்டமில்லை; அணுக்கமில்லை; அண்டமில்லை; பிண்டமில்லை; இருளில்லை; வெளியில்லை; சந்திரனில்லை; சூரியனில்லை; சிருஷ்டி, இரட்சை, சங்காரங் களில்லை. எல்லாந் தானாய்த் தன்னைத் தானறியாத காலையிலே தன்னைத் தாமறிய வேண்டி சிருஷ்டிக்க வேணுமென்று விசுவரூபமானார். அது விசுவரூப மென்றும் பொருந்த விசுபசிட்டையே............னையென்னில் தட்டுத் தர்ப்பர சங்கம் நரமிருகப் பட்சிகள் இதுவெல்லாம் சிருஷ்டிக்க வேண்டி..... சம்பு நிலையானார்.

End :

வாதபித்த சிலேத்தும மென்கின்ற பாரிக் காரரும் பட்டு சத்த கோடி மகாமந்திர மென்கின்ற........பயதழமும் பட்டு, அஷ்டமத யானைகளும் பட்டு நாலுவேத மென்கின்ற புரவிகளும் பட்டு, சுத்தர் அசுத்தர் என்கின்ற தேவிமாரும் பட்டு இருவினையென்கிற தேவிமாரும் பட்டு சுத்த மசுத்த மென்கின்ற இரண்டு மகற்றி வெட்டவெளியாய் வெளிக்குள் சுத்தமே வடிவாய், அச்சத்தமும் சித்தாய் அச்சித்தமும் வாழாந்தே வெளி வெளியாய், மினி மினிப் பிரகாசமாய் இருக்கும்.

*　　*　　*　　*

*　　*　　*　　*

(கு-பு)—

இந்நூல் (உலக சிருட்டிப்பு) என்னும் பெயர்த்தாய் உடற்கூறு தத்துவம் என்பது முதல் தொடங்கி பாட்டும் வசனமும் இடையிடையே கலந்து வரப் பெற்றதொரு நூல். தத்துவ வகையினைச் சார்ந்த நூல் வகையில் சேர்த்துக் கொள்ளப்படுவது. தர்க்க வாதிகட்கும் தத்துவ வாதிகட்கும் மிகவும் பயன் படுவதாகும். மிகவும் சிதலமாகியது. முற்றுப்பெற்றதாகத் தோற்று கிறது.

R. No. 2323.

நாதாந்தம்.
NĀDĀNTAM.

Foll. 18—25. Extent, 225 granthas.

Complete.

This is a treatise on the attainment of Mōkṣa or final emancipation. This is simi lar work to those of "Nādānta darisanam", "Nādānta Nōkkam", etc., of unknown authorship.

Beginning :

அஞ்செழுத்தை யறியாம லுலகிலேநாளர்
யுழன்றுதிரி மாணிடரே யுரைக்கக் கேளீர்
ஈரேழு நந்துவமும் மெழுத்து நாலெழுத்து
இயல்பான அஞ்செழுத்து மப்பாலே யில்லை
பேரெழுத்தும் பெரியெழுத்தும் அறியமாட்டார்
பெரியதொரு குருக்க ளென்றே பேசுவீர்கள்
ஈரெழுத்து மவ்வெழுத்து மறியுங் காலம்
எல்லையில்லாப் பேரொளியோ டெண்ண லாமே. (1)

சோதிகுரு நாதனென்னை நாட வேண்டி
தொல்புவியில் திருவருள் தோன்றி நின்று
நீதிகுரு கலைகாபா யன்பாய் வந்து
பேருணை ய அஞ்செழுத்தி னிலைமை காட்டி
ஆதியெனும் விந்து நாதத் நடவு தாட்டி
அப்பாலே ஓங்காரம் ரீங்காரம் காட்டி
சோதிகுரு திருவடியே அகார மாக
சொன்னபடி யாவருக்கும் சொல்லொ ணாதே. (2)

End :

அவயோகி யானவர்கள் குகையிருந்து
ஆசனத் திருந்துகொண்டு அநேக காலம்
சிவயோக மாகவே இருப்போ மென்று
செப்புகின்ற பொய்யருடன் சேர வேண்டாம்
நவயோக மானகுரு நாதன் பாதம்
நலமுடனே சென்னியின்மேல் நாடி. நின்றால்
சிவயோக மாகவே இருப்போ மென்று
சென்றடைந்து மெய்வினநில் சேர லாமே. (3)

உண்ணும்போ தீரெழுத்தா லுயிரடக்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகி
பெண்ணினம்பால் இந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணியுயிர் மேலழுங்கி யதுவே யிகந்து

திண்ணிங்கா யிலைமிளகும் அதுவே யாகி
செய்யவே ஞள்தோறுஞ் செலுத்த வல்லார்
மண்ணினங் காலினு தூளி காலம்
நள்ளருங் காலன் இரிந்தோடு மரணமாறும்.

கு-பு)—

இந்நூல் (நாதாந்தம்) என்னும் பெயர்த்தாய் மோட்சம் அடைவதற்கு வழி முறைகளை எடுத்தியம்புகிறது. ஞானத்தை யுணர்த்துகிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நாதாந்த தரிசனம், நாதாந்த நோக்கம் முதலாய நூல்கள் போன்றே அதனினும் வேறதாய்க் காணப்படுகின்றது. முற்றுப் பெற்றது போலும். சிதலமாயும் எழுத்துப் பிழையுடைத்தாயும் காணப் படுகின்றது. சிறியதோர் நூல்.

R. No. 2324.

லாட சூத்திரம்.
LĀḌA SŪTTIRAM.

Foll. 26—35. Extent, 280 granthas.

Complete.

This is a treatise on alchemy containing 32 verses by some unknown author.

Beginning :

நெஞ்சக் கரத்தில் நினைந்திடும் வண்ணம் நிரவயணம்
தஞ்சக் கரத்தை நினைமனமே வினைதா னகலும்
கஞ்சக் கரத்திரு வந்தா சிரியக் கலித்துறையின்
பஞ்சக் கரக்குஞ் சரம்போற்றி வஸ்து பலித்திடவே. (1)

பலிக்குஞ் சிவானந்த மூர்த்தியின் பாதம் பணிகவருள்
கெலிக்குங் கண்டா யருளா னந்திபாதங் கெதிமனமே
வலிக்கும் பொழுது அவனவள் பாதம் வணங்குநித்தம்
மெலிக்கின்ற நோயறும் முப்பத் திரண்டும் விளம்பிடவே. (2)

காமாலை கீழ் நெல்லி கடுபா னடுமவுரி யிலக்கம் பரிசிரொட்டித் [கருவாய்
கனைகுன்றி சீலை கோரைகறு வாங்கி நிப்புறுநி கதறிடுந் தோட்டி [மிளகால்
மாவெனத் தென்னை யமுதமா லிங்கிலை அகன்றிடும் அண்ட [வாதம்
அதிகவிஷ மானசெய் யானவன் வரைக்கிளுவை
வாம்பூப் புசுசினம் நீவுறில் பூமிதனிலே.

* * * *
* * * *

End :

ஒன்ருன தங்கமது பாணீ செய்வீர்மது
உண்ணுவு நீரிலாட்டி
ஒருமூடி வைமேனு மொருமூடி அடைசீலே
உயர்வானு கெந்தி தீபம்
பொன்ருமலெரிமத பதங்கமதி யிரவி
யொடுவயத் துச்சந் தான
பொய்யாது நாகாச கெந்தியுள வாகு
அரிப்பொடு நீரே சுறுக்கு
நன்ருன பவிமதியில் நின்ருடு தாய்நாம
ஞுதனருள வேணுமையா
நாவலரில் வேதாந்தி யானவர்கள் பொருளறிவர்
நாசமுறு வார றிவரோ
நின்ருன கருவுளது மூப்பத் திரண்டிலும்
நிலைமனது தோஷிலுப் பரியாம்
நிசபரி பிறசங்கா ரணவச பரிதுரங்
காரண நிறையதி பாங்க ரவரே. (32)

ராவென்று ரண்டபிண்டம் நாடியறி யெங்குமது
ஆவென்ருர் சிம்மா யடங்குமறி மூலமென்ருர்
ஆவென்ருர் மேலும் அதனைச்சம மெளிதஞ்செய்
ஆவென்றே வந்துமுன் னின்ருடு சித்தி முற்றே.

(கு-பு)—

இந்நூல் (இலாடசூத்திரம்) என்னும் பெயர்த்தாய், இரசவாத சம்பந்தமான சித்து முதலியவைகளைப் பற்றிக் கூறுகிறது. சிதலமாகியது. 32 பாடல்களடங்கியது. ஆசிரியர் இன்னுரெனத் தெரியவில்லை.

R. No. 2325.

அஞ்சன வகை.

AÑCANA VAKAI.

Foll. 36—40. Extent, 140 granthas.

Incomplete.

This is a treatise on medicine and describes the preparation of medicines from the particular herbs. Authorship is not known.

Beginning :

பாதாள அஞ்சனம்.

பாதாள அஞ்சனம்.—கருத்தப் பருத்திப் பஞ்சும் வெள்ளை யெருக்கன் வேரும் சிற்ருமணக் கெண்ணெய் நல்லெண்ணெய் புத்துத் தேனில் கூட்டி யிடவும். கன்னங் கறுத்த பசுவின் நெய்யிதுவிறும் காலத்தில் சிசுவாலேய மாகிலும் சுடு காட்டிலாகிலும் மைப்பற்றி விக்கவும். கைச்சாளியாக்கிக்

கொள்ளவும். சறுவமைய பூமிப் பரீட்சை சறுவ அஞ்சனம் கருத்த ஆட்டுப் பிச்சு, அசோகம் வேர் செம்பருததிப் பூவும் புத்துத்தேன் வார்த்தரைத்துக் கையிலிட்டுப் பார்க்க சர்வமும் தெரியும். கருந்துளசி விதையும் கர்ப்பூரமும் வறுத்துக் கையிலிடச் சர்வமும் தெரியும்.

End :

காட்டு மல்லிகை மூலத்துடனே பிடுங்கித் தயிர் வார்த்தரைத்துப் பூமியை மெழுகவும். மெழுகினால் வெளுத்திருந்தால் ஒன்றுமில்லை. பொன்னிறமானால் பொன்னென்றும் சிவந்திருந்தால் தாமிரமென்றும் நீலமானால் பாசாண மென்றும் அறியவும். கெந்தகம், மனோசிலை, நாமரைச் சாறு வார்த்து நிலத்தை மெழுகினால் சுவற் கெதியை விட்டு விபரீதமாயிருந்தால் உண்டென்று நம்பவும். குக்கிளமாவும் நல்லெண்ணெயும் கள்ளுங் கலந்து அந்தியும்போது மெழுகி இராத்திரி பார்த்தால் விளக்குப் போலெரியும். அவடத்திலுண்டென்றறியவும்.

(கு-பு)—

இந்நூல் "அஞ்சன வகை" என்னும் பெயர்த்தாய், பலவகை அஞ்சன வகைகளைச் செய்யும் முறைமையினைக் கூறி அதனாலுடையும் பயனையும் கூறிச் செல்கிறது. முற்றுப் பெறவில்லை. இது போன்றவைகள் வைத்திய நூல்களில் காணப்படுகின்றன. எழுத்துப் பிழைகள் உள.

R. No. 2326.

நிதி சாத்திரம்.
NIDHI ŚĀTTIRAM.

Foll. 41—46. Extent, 140 granthas.

Incomplete.

This work describes the places where treasures are to be found. This is said to be the topic on which Lord Siva instructed the sages of the Naimiśāraṇya.

Beginning :

நிதி பெருதீப மென்கின்ற சாத்திரத்தை நீலகண்டமுடைய ஈசுவரர் சொன்னதாயிருக்கும் சகலமான சாத்திரங்களிலும் சகல புராணங்களிலும் எடுத்துக்கொண்டு ஈசுவரர் சொன்னது வெவ்வேறு பிரிந்திருக்கப்பட்ட சுலோபமாயிருக்கும் மந்திரங்களை விட்டுத் தாரித்திர மென்கின்ற ஆணவத்தினாலே சிறுதாய்ப்பட்டு இருக்கும். அது தானே வென்றால் ரிஷிகள், முனிவர்கள் நிதியில்லாமலிருந்த வேளையிலே நைமிசாரண்ய வனத்திலே தேவர்கட்கு எல்லாம் தேவனாயிருக்கிற ஈசுபரனை நோக்கித் தபசு பண்ணினார்கள். கர்த்தனாயிருக்கிறவன் நமக்கு உபாயம் என்னவென்று தேவர்களும் ரிஷிகளும் கேட்க ஈசுபரர் சொல்லுகிறார். நிதி சாத்திரம் என்றொரு சாத்திரம்,

End :

உடல் மனிதருடல் போல் முகம் ஆட்டுமுகம் போலேயிருந்தால் அவ்விடத் திலே ஆயிரமுணடென்றறியவும். கையை நீட்டிக்கொண்டு கிடக்கிறது போலே யாதொரு பிரதிமை யுண்டே அதற்குப் பெலி மந்திரங் கொண்டு எடுக்கவும். மூன்று காலுள்ள பிரதிமை கையிலே பாசம் பிடித்துக்கொண்டு இருந்தால் அந்தக் கையை நீட்டின அளவுக்குங் கீழே இருக்கிற தென்றறிய வும். ஒரு விக்கினமுமில்லை யென்றறியவும்.

முடியவில்லை.

(கு-பு)—

இந்நூல் (நிதிசாத்திரம்) என்னும் பெயர்த்து ஈசுவரனுர் நைமிசாரண்ய முனிவர்கட்கும் இருடிகட்கும் உணர்த்தியதாக அமைந்துளது. முற்றுப் பெறவில்லை. சிதலமாயது. பிழைகள் காணப்படுகின்றன. நிதியிருக்கும் இடங்களைக் குறிப்பிடும் நூலாகும்.

R. No. 2327.

மந்திரமும் மாந்திரீகமும்.
MANTIRAMUM MĀNTIRĪKAMUM.

Palm leaf. $6\frac{3}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 1—92. Lines, 10 on a page. Tamil. Much injured. Old. Extent, 2,000 granthas. Folios are not seemed in the middle.

Complete.

This is work or mantrās by Śallikkaṇṇan. This gives the appropriate mantras, pronouncing of which gives one the thing desired. The last few folios contain the necessary Cakrās.

Beginning :

ஆதியாய் மாந்தரீகம் அந்நணர் முனிவர் தம்மில்
நீதிசேர் சல்லிக்கண் ணனென்பேர் நிலைத்தினிற் சொற்றநூலை
தீதறு தமிழினாலே செப்புவேன் புனைக்கை யான்றே
சேதிசேர் செம்பொற்பாதஞ் சூட்டினேன் சென்னிமீதே. (1)
செப்பியா வெழுத்தினாலும் சிறந்தமந் திரத்தினாலும்
ஒப்புரு கருவுனாலு முரைக்கநற் கரும மெட்டுந்
தப்பில் முனிவன் வாக்கால் விதிவழுக் கங்க
ளுப்பலி யறிய வேண்டி யியம்பினேன் தமிழினாலே. (2)
ஆகிய வசியமோக மந்தமா கருணைபேதம்
யோகமாம் உச்சாட ணங்கள் எட்டிணை எட்டானகருமம்
வேகமா மனதை யுன்னி விளம்பிய மாந்தரீக
மாகவே யிவைக ளெல்லா மாய்த்தவாறறி வுள்ளோரே. (3)
குருமொழி தப்பா வண்ணம் கூறிய தருமவானை
யெரியுறு கோபந் தீர்த்து எவ்வுயிர்க் கிரங்குவானு
வெருவிறு பகையுமின்றி மிகமிக வாழ்வோ னுகில்
திருவரு ளாலே சல்லியும் சித்திக்கு முண்மைதானே. (4)

End :

மேவிய சல்லி வேரை வெள்ளியின் காலை தன்னில்
ஆவியாய்க் காப்புக் கட்டி ஐந்நூறு உருச் செபித்து
தேவியை நினைத்துக் கொண்டு செப்பாதோர் பலிகொடுத்து
ஏவிய கருமமெல்லா மெனக்கு நினைருட வேணும். (93)

தினம் ஆயிரம் உரு செபித்து எட்டாம் நாள் வேரைப் பிடுங்கி பலி பூசையும் நடத்திப் பிடுங்கவும். தலைகீழாய்த் தூக்கி சசி வண்டத பிறகு உடைத்து உடைகம்பெடுத்து நெய்யில் தோய்த்திப் பதம் படுந்தி பதுனமாக வைத்துக்கொண்டு பிறகு செய்த தெல்லாம் அல்லாத்தாள் காவலாகச் சந்தி தேவியும் தொழிலுஞ் சித்திக்கும் சுவாமிக்கு இடப்பக்கமிருப்பாள், மஞ்ச ளில் திருவுருக் கொண்டு பூஜை செய்ய நினைத்த கருமம் முடியும்.

(கு-பு) —

இந்நூல் மந்திரங்கள் என்னும் பெயர்த்தாய் பற்பல காரியங்களும் சித்திக்கும் மந்திரங்களைச் செய்யும் வழிமுறைகளைக் கூறிச் செல்கிறது. இறுதியில் பெரும்பாலான ஏடுகள் அதற்குரிய சக்கரங்களை யெடுத்துக் காட்டு கின்றன. சிதலமாயது. அதன் பின்பு தம்பனம், உச்சாடனம், மாரணம் ஆகியவைபற்றிய கருத்துக்கடங்கிய நூல் ஒன்றும், இந்நூலின் பாட பேதமாக மற்றொரு நூலொன்றும் காணப்படுகின்றன. பிழைகளதிகம்.

R. No. 2328.

கௌளிக் காதல்.

GAULIKKĀTAL.

Palm leaf. $4\frac{7}{8} \times 1\frac{3}{8}$ inches. Foll. 1—34. Lines, 4 on a page. Tamil. Much injured. Old. Extent, 136 granthas.

Purchased in 1949–50 from A. M. Gopala Iyer, 28, Bogo Road, Mambalam, Madras.

This is same as the work described under D. No. 2236.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2236-ஆம் எண்ணின் கீழ் வருணிக் கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. சிதலமாயது.

R. No. 2329.

மாட்டு வாகடம்.

MĀṬṬU VĀKAṬAM.

Palm leaf. $11\frac{1}{4} \times 1$ inches. Foll, 1—11. Lines, 7, 8 on a page. Tamil. Fair. Old. Extent, 150 granthas.

Purchased in 1949–50 from A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as that described under D. No. 1980. This is a portion from a major work.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1980-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இப்பகுதி ஒரு பெரு நூலிலிருந்து சிதைவுற்றதாகக் காணப்படுகிறது.

R. No. 2330.

பிரம்மமுனி சூத்திரம்.
BRHMAMUNI SŪTTIRAM.

Palm leaf. 11½ × 1 $\frac{6}{10}$ inches Foll. 1—70. Lines, 9 on a page. Tamil. Much injured. Old. Extent, 500 granthas.

Purchased in 1949–50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 266-ஆம் எண்ணின் கீழ், வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காணக. இது மிகவும் சிதலமாகியது.

R. No. 2331.

உரோமரிஷிச் சுருக்கம் பதினாறு.
URŌMARIṢI CURUKKAM PATINĀṚU.

Palm leaf. 10½ × 1¼ inches. Foll. 1—5. Lines, 7 on a page. Tamil. Much injured. Old. Extent, 50 granthas.

Purchased in 1949–50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Complete.

This is same as that described under R. No. 280.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 280-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இது மிகவும் சிதலமாயது.

R. No. 2332.

யாகூப் வைத்தியப் பாடல்—744
YĀKŪP VAIDDIYAPPĀḌAL—744.

Palm leaf. 11⅛ × 1⅛ inches. Foll. 111. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,500 granthas. Folios are wanted in beginning and end.

Purchased in 1949–50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as that described under R. No. 2300.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2300-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிதலமாயது. இதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2333.

அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்.

AKATTIYAR VAIDDIYA RATTINAC CURUKKAM.

Palm leaf. $13\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Foll. 1—75. Lines, 6 in a page. Tamil. Slightly injured. Old. Extent, 1,500 granthas.

Purchased, in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as the work described under R. No. 941 (a). Folios are wanted in the middle and end.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 941 (a)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. சிதலமாயது. அதன் குறிப்பையுங் காண்க. இடையிலும் இறுதியிலும் ஏடுகள் தேவைப்படுகின்றன. முற்றுப்பெறவில்லை.

R. No. 2334.

யாகூப் வைத்திய சாத்திரம்—744.

YĀKŪP VAIDDIYA ŚĀTTIRAM—744.

Palm leaf. $11\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 1—145. Lines, 6 on a page. Tamil. Much injured. Old. Extent, 3,000 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is same as that described under R. No. 2332. This contains only 502 verses. Folios are wanted in the end.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2332-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இதில் 502 பாட்டுக்களே யுள. முற்றுப்பெறவில்லை. சிதலமாயது.

R. No. 2335.

அகத்தியர் ரணவைத்தியம் நூறு.

AKATTIYAR RAṆAVAIDDIYAM NŪṚU.

Palm leaf. 9½ × ⅞ inches. Foll. 1—34. Lines, 5 on a page. Tamil. Much injured. Old. Extent, 200 granthas.

Purchased in 1949-50 from Sri A. M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

Incomplete.

This is another work on medicine written by the sage Agastiya. This describes various methods of medicines prepared from different medicinal herbs.

Beginning :

சாம்பிராணி துருசு நுத்தம் சாத்தும் கருத்த குங்கிலியம்
விரித்த வகைகள்தான் கழஞ்சி விளங்கும் பச்சை வெட்டுடனே
அழுந்த பழமுந்நா றென்று அறிவாக லவ மீதிட்டுத்
திருந்தக் காய்ச்சி யெள்ளெண்ணெய்க் குழம்பா யரைத்துத் தண்ணிவிடே. (1)

விட்டே கழுவி மேல் வழித்து வேணருஞ் சீலை தனிலூட்டி
நட்டே றெணங்கள் சிறுகிதனைத் தீரா ரோகந்தனைத் தீரும்
. . . . டா அசுவம் புறச்சிங்கிக் கல்லு பறங்கிக் கால்புத்தும்
மட்டார் குழலின் மடமா. .கு மாண்டு விழுந்து போயவிடுமே. (2)

போமே மருந்து வெள்ளைப்பத்து போ. . . . . .ந்துந் தாரங் காசொன்று
ஆமே துருசு யீரொன்று அறிவாஞ் சுனன்மூன் மூவிரெண்டு
தாமே சிவந்த குங்குலியம் தரிக்க யிருநா ளுடன்கூட்டி
மாமே யரைப்பா ரெள்ளெண்ணெய் மதிக்கத் தண்ணீர் தனில் கழுவே. (3)

End :

இருவி லிங்கம் அரிதாரம் இதமா குக்கில் கரும்பவளம்
குருவாம்பினி பெருங்காயம் கொடிதாய் அரைக்குந் திருகுகள்ளி
அருவா புள. . . .த்திரமும் ஆண்கட்டி யரைப்பூ
குருவாஞ் சூலை பதினெட்டுங் கொண்டு. . . . . .தாமே. (90)

(கு-பு)—

"அகத்தியர் ரணவைத்தியம் நூறு" என்னும் பெயர்த்தாய்ப் பலவகைப் பட்ட ரணவியாதிகட்கும் மூலிகைவகைகளாகிய வைத்திய முறைகளைக் கூறிச் செல்கிறது. மிகவும் சிதலமாயது. முற்றுப்பெறவில்லை. தலையேட்டில் அகத்தியர் செய்ததாக வுளது.

R. Nos. 2336 and 2337 (one codex).

Palm leaf. 11⅛ × 1⅜ inches. Foll. 1—50. Lines, 6, 7 on a page. Tamil. Much injured. Old. Extent, 1,350 granthas.

Purchased in 1949-50 from Sri A M. Gopala Iyer, 28, Boge Road, Mambalam, Madras.

R. No. 2336.

உரோமரிஷிவாதம் ஐந்நூறு.
UROMARIṢI VĀTAM AINNŪṞU.

Foll. 1—26. Extent, 700 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 258 (b).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 2581 (b)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டிருககிறது. அதன் குறிப்பையுங் காண்க. 126 பாட்டுக்களே யுள. முற்றுப்பெறவில்லை. சிதலமாயது.

R. No. 2337.

அகத்தியர் வைத்தியம் இருநூறு.
AKATTIYAR VAIDDIYAM IRUNŪṞU.

Foll. 27—52. Extent, 650 granthas.

Incomplete.

This is same as that described under R. No. 275 (c).

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 275 (c)-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பட்டுளது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுப்பெறவில்லை.